
# அகஸ்தியர்
# ாந்திரிக காவியம்



தாமரை நூலகம்
சென்னை-600026.

# பதிப்புரை

'அகஸ்தியர் பன்னீராயிரம்' என்னும் தமது பெரு நூல் காவியத்தில் 1. வாத காவியம், 2. ஞான காவியம் 3. பூரண காவியம், 4. மாந்திரீக காவியம், 5. லட்சண காவியம் என்னும் ஐந்து காவியங்களை வகைக்கு ஆயிரம் பாடலாக இயற்றியுள்ளதாக அகஸ்தியர் பெருமான் கூறுகிறார்.

பிற்காலத்தில் என்ன காரணத்தாலோ மாந்திரீக காவியம் மறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக வைத்திய காவியம் என்று ஏற்கெனவே இருந்த ஒன்று சேர்த்துக் கொள்ளப்ப்ட்டது.

ஆக மாந்திரீக காவியம் என்ற இந்த நூல் பொது மக்களுக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டது.

அகஸ்தியர் நூல்கள் பெரும்பாலும் வழி வழியாகத் தலைமுறை தலைமுறையாக வாய் மொழியாக வழங்கப்பட்டுப் பின்னர் ஏடுகளில் எழுதப்பட்டமையால், கிராமியச் சொற்கள் மலிந்து நாட்டுப் புற வழக்கிலேயே உள்ளன.

ஆயினும் இந்நூல்களிலுள்ள அரிய கருத்துக்களின் சிறப்பும் ஆழமும், நுட்பமும், உண்மைத் தன்மையும் காரணமாகவே இன்றும் அழியாமல் நிலை நின்று வருகின்றன.

சோதிடம், மாந்திரீகம் முதலான நுண் கலைகள் பகுத்தறிவுக்குப் பொருந்தாதவை என்று அறியாமையால் சிலர் தூற்றி வருகின்றனர். ஆயின், இவை அறிவியலுக்குப் பொருத்தமானவையே என்பதும், பரிசோதனைகளால் மெய்ப்பிக்கப்படக் கூடியவை என்பதும் உலகம் ஏற்றுக் கொள்ள வேண்டிய காலம் வெகு தொலைவில் இல்லை என்று உறுதியாகக் கூறலாம்.

இக்காவியங்கள் அடியோடு மறைந்து விடாமல் காப்பாற்றும் பணியில் அர்ப்பணித்துக் கொண்டு தமிழ் மக்களின் நல் ஆதரவையும் ஆசிகளையும் கோருகிறோம்.

எஸ். பி. ராமசந்திரன்
பதிப்பாசிரியர்.

## மகாமகத்துவம் பொருந்திய

## அகத்திய முனிவர் அருளிச் செய்த

# மாந்திரீக காவியம்

மூன்றாவது



நான்காவது

ஐந்தாவது

ஏழாவது



எட்டாவது

ஒன்பதாவது

விநாயகர் துணை

மகாமகத்துவம் பொருந்திய
அகத்திய முனிவர் அருளிச் செய்த

# மாந்திரீக காவியம்

## முதலாவது

## அட்டாங்க யோகச்சருக்கம்

அகண்ட பரிபூரணமாம் ஐயர்பாதம்
அப்பனே மனோன்மணியாள் பாதம்போற்றி
புகன்றுநின்ற கணபதியுஞ் சித்தர்பாதம்
புங்கசித்தி எட்டுடைய ரிஷிகள்பாதம்
நிகண்டது போலென்தேவர் அசுவனியார்பாதம்
நித்தியமுமவர் பதத்தில் நின்றோன்பாதம்
முகன்றிடவே என்பாட்டன்தன் வந்திரிபாதம்
மூதுலகில் யோகிசிவ காப்புதானே. 1

காப்பான காவியமா மைந்துசொன்னேன்
காவலனே பஞ்ச காவியந்தானாகும்
பூப்பான காவியந்தான் வாதகாவியம்
புகழான காவியமும் ஞானகாவியந்தான்
தாப்பான காவியந்தான் பூரணமேயாகும்
தண்மையுள்ள பெருநூலாம் இலட்சண காவியம்
ஆப்பான காவியந்தான் இந்தநூலாம்
அப்பனே மாந்திரீக காவியமுமாச்சே. 2

ஆச்சப்பா புலஸ்தியனே புண்ணியபாலா
அப்பனே காவியங்கள் ஐந்துக்குள்ளே
மூச்சடங்கி மூதுலகில் சிலதுகாலம்
முயன்றுமே அடியேனும் மனதுவந்து
ஏச்சலது கொள்வதற்கு இடந்தாராமல்
இன்பமுடன் பாடிவைத்தேன் மாண்பதாக
வீச்சுடைய காவியந்தான் இந்தநூலாம்
வித்தகனே மாந்திரீக மாயிரந்தானாச்சே. 3

ஆயிரமாங் காவியந்தான் இந்தநூலாம்
அப்பனே காவியத்தில் ஐந்தாம்பாகம்
பாயிரமாம் பனுவலது சருக்கம்பத்து
பாருலகில் மாணாக்கள் பிழைப்பதற்கு
ஞாயிறுதான் உதித்ததுபோல் தம்பிரானே
நாயகனே திரட்டிவைத்தேன் மாந்திரீகம்
தாயினது அம்பாளின் பதாம்புயத்தை
தன்மையுடன் அடிவணங்கிச் சாற்றுவேனே. 4

சடலக்-கூறு

சாற்றுவேன் சடலமது உற்பவித்துச்
சாங்கமுடன் சொல்லுகிறேன் தகைமையோனே
நாற்றமென்னுஞ் சடலமது வந்தவாறு
நாயகனே கூறுகிறேன் நளினவானே
வேற்றுமைகள் இல்லாத சடலமப்பா
வேதாந்தத் தாயாரு மனதுவந்து
ஆற்றமுடி கொள்ளாமல் அசுவனிக்கு
அன்போடு உரைத்த வண்ண மகிமைகேளே. 5

கேளப்பா புலஸ்தியனே பூபாலாகேள்
கவனமுடன் உரைக்குகிறேன் கேண்மையோடு
தாளப்பா அசுவனியார் எந்தமக்கு
தகைமையுடன் உரைத்தபடி உந்தமக்கு
வேளப்பா எரித்தநெற்றிக் கண்ணா கேண்மோ
தேவாந்தத் தாயினது கிருபையாலே
ஆளப்பா ஆயுறுவேதங் கொண்டு
அப்பனே திரட்டிவைத்த பெருநூலாமே. 6

பெருநூலாங் காவியத்தில் ஐந்தாம்நூலாம்
பேசரிய குருநூலாம் மாந்திரீகந்தான்
ஒருநூலும் இன்னூல் போல் கூறினாரோ
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
சிறுநூலு மாந்திரீக அதர்வணங்கள்
சிறப்புடனே கூறினது லக்கோயில்லை
சொரூபமுள்ள நூலிதுதான் அதர்வணந்தான்
சூட்டினேன் லோகபதி மாண்பருக்கே. 7

மாண்பான புலஸ்தியனே மன்னாகேண்மோ
மாநிலத்தில் சித்தர்முனி சாஸ்திரங்கள்
ஆண்மையுடன் பாடினதோர் கணக்குண்டோசொல்
அப்பனே கைமறப்பு அதிகஞ்சொன்னார்
ஏண்மையுடன் உந்தமக்காய்ப் பாடிவைத்தேன்
எழிலான காவியமாம் பெருநூலப்பா
தாண்மை கொண்டேன் சித்தர்முனி நாதர்மெச்ச
தண்மையுடன் இயற்றினதோர் பனுவலாமே. 8

## தத்துவசரீரம்

பனுவலாம் தத்துவ சரீரமப்பா
பாலகனே மாணாக்கள் அறியவேண்டி
மனுவுடனே லோகபதி மாண்பர்க்காக
மன்னவனே விற்பனங்கள் கூறலுற்றேன்
தனுர்போன்ற தேகமது பிரிதிவின்கூர்
தண்மையுடன் உரைக்கின்றேன் தரணியோற்கு
கனுவுடைய தேகமதை நிலைநிறுத்தக்
காவலனே உபவாசங் கூறுவேனே. 9

கூறுவேன் சடலமது என்னவென்றால்
குருபரனே எலும்பதனைக் காலாய்நாட்டி
மாறுபடா எலும்புக்கு துவாரமிட்டு
வண்மையுடன் நரம்பினால் வலித்துக்கட்டி
தேறுதலா யிரத்தமதை உள்ளேஊத்தி
தேற்றமுடன் அதன்மேலே தோலைமூடி
ஆறுதலாய் ஆவிதனை உள்ளடக்கி
அப்பனே தேகமென்ற கூறுண்டாச்சே. 10

## பஞ்சகர்த்தாள்

கூறான தேகமது ஏதென்றாக்கால்
கொற்றவனே பஞ்சபூதம் என்னலாகும்
தேறான பூதமது பிரிதிவாய்வு
தேற்றமுள்ள அப்புவென்றுந் தேயுவென்றும்
தாகான ஆகாசக் கூறுவென்றுஞ்
சாற்றினார் பஞ்சகர்த்தாள் ஆடுங்கூத்து
வேறான சடலமது இவ்வாறாக
வேர்பிரித்துக் கூறிவிட்டார் அதீதந்தானே. 11

## பஞ்சகர்த்தாள் அட்டாங்க ஒழுக்கமறிய

தானான பஞ்சகர்த்தாள் ஆறாதாரஞ்
சாற்றுகிறேன் ஒடுக்கநிலை அடுக்கு கேண்மோ
கோனான எனதையர் அசுவனியாந் தேவர்
கொற்றவனார் எந்தமக்கு உரைத்தநீதி
மானான அடுக்குமுறை தத்துவபோத
மகத்தான வகுப்புகளை மாறல்கூர்வாம்
தேனான கபாடவழி மாற்கஞ் சொல்வேன்
தெளிவுடனே மனதுவந்து வினையங்கொள்ளே. 12

கொள்ளவே வினையமது ஏதென்றாக்கால்
கொற்றவனே கபாடவழி அங்கவாசல்
தெள்ளமிர்த மானதொரு பூட்டகத்தை
தெளிவுடனே உரைக்குகிறேன் இன்னங்கேண்மோ
வள்ளலுயர் தெள்ளுதமிழ் வன்மாராகேள்
வகுப்பலங் காரமுடன் உண்ணலொப்பாய்
விள்ளவே வேதாந்தத் தாயின்பாதம்
வித்தகனே மனதுவந்து வகுப்பேன்பாரே. 13

பாரப்பா கபாடமதின் கும்பவாசல்
பாலகனே யடிமுடியாம் யேணிமாற்கம்
நேரப்பா யேணிவழி சென்றபாதை
அப்பனே யப்பாதை முப்பாழாகும்
ஆரப்பா முப்பாழுங் கண்டபோதே
நெடிதான பாதைக்குத் தடமுங்காணும்
தேரப்பா தடமதுவைக் கண்டபோதே
தெளிவுடனே கியான தலங்காணலாமே. 14

காணலாங் கருதிபெருஞ் சுருதிகாண்பாய்
கபாடவழி அந்தரங்கம் பாதைகாண்பாய்
பூணலாங் கொடிமுடி கைலாசங்கள்
புகழுடனே கண்டதுபோல் காட்சிகாண்பாய்
தோணலாந் துறையேறிப் படித்தளங்கள்
தோற்றமுடன் படிகடந்து சென்றாரானால்
வேணபடி ஆயிரமாம் எட்டண்டம்
வேண்டியே காண்பதற்கு ஆளாவாயே. 15

## சிவாலயப் பெருமை

ஆளவே ஆயிரத் தெட்டுவண்டம்
அப்பனே கண்டவுடன் சிவாலயங்கள்
மாளவே போகாது கண்ணுமில்லை
மகத்தான வெளிதடங்கள் கண்போற்றோன்றும்
சாளவே அந்தரங்க வட்டந்தோன்றும்
சார்புடனே நூற்றெட்டுப் பதியுங்காண்பாய்
வீளவே சந்தேக மாற்றம்நீங்கும்
வித்தகனே பஞ்சபூதக் கோட்டைகாணே. 16

கோட்டையென்றால் கோட்டையதுசொல்லப்போமோ
கொற்றவனே காயாபுரிக் கோட்டையப்பா
ஆட்டெல்லாம் பஞ்சபூதத் தாட்டுமாச்சு
அப்பனே சின்மயத்தின் ஆட்டையெல்லாம்
நாட்டமுடன் கும்பகத்தில் வெளியே வீசும்
நடனமிடு மேலொலிவு நடந்து காட்டும்
தேட்டமுடன் கும்பகமாங் குண்டலியைப்பற்றி
தெளிந்து மிக வாகாசந்தனைக் காண்பீரே. 17

காணவே வாகாசந்தன்னைக் கண்டால்
காவலனே கைலாசங் காணலாகும்
பூணவே கபாலமென்ற கைலாசந்தான்
புங்கசித்தி எட்டுரியோன் காண்பான்பாரு
பாணம்போல் சிவயோகங் கொண்டமாண்பர்
பாலகனே காண்பதுவு மில்லையப்பா
ஆணவங்கள் தானொடுங்கி அட்டசித்து
அப்பனே கொண்டவனே காண்பான்பாரே. 18

## மௌனயோகி மார்க்கம்

பாரப்பா புலஸ்தியனே தம்பிரானே
பாலகனே கபாடவழி கொண்டயோகி
ஆரப்பா சிவாலயங் கொண்டமாண்பர்
அப்பனே அவனிதனில் உரைத்ததுண்டோ
நேரப்பா கண்டதொரு சித்துமாண்பர்
நெடியவுலகந் தனக்குநிக ருண்டோசொல்
தேரப்பா சடையுடைய தம்பிரானே
தேர்வேந்தே கண்டறிந்து உரைத்திட்டேனே. 19

## இந்நூலடக்க மாந்திரீக சித்தறிக

உரைத்தேனே இன்னமொரு மார்க்கங்கூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் உரைக்கவில்லை
திரைகடலுந் தேசம்வெளி நாடெல்லாந்தான்
தீர்க்கமுடன் தான்திரிந்து வந்தேன்யானும்
கரைபோன்ற மாந்திரீகங் கோடியுண்டு
காவலனே உண்மைமொழி சொன்னதுண்டோ
பரைபோலே அடியேனு மனதுவந்து
பாலகனே சாற்றினேன் மெய்யுமாமே. 20

மெய்யான மாந்திரீகம் ஏதென்றாக்கால்
மேதினியாய் சித்தர்மொழி அனேகமுண்டு
வையகங்கள் தானறிக மாந்திரீக
மதிப்புடனே கடவுள்பதந் தனைவணங்கி
துய்யவே தன்புத்தி தெய்வமாயும்
துப்புரவாய் சாற்றுகிறேன் உண்மையாக
வெய்யவே கடவுள்பதம் முன்னேநிற்க
வேதாந்தப் புலஸ்தியனே கூறுவேனே. 21

கூறுவேன் சார்வாகம் பொய்யுமாமோ
குருபரனே கடவுள்பதம் பொய்யுமாமோ
வீறுறவே கடவுளில்லை யென்னலாமோ
வித்தகனே சகலகலை அறிதல்பொய்யோ
மீறவே மோகனங்கள் பொய்யுமாமோ
வேதாந்தப் புலத்தியனே எல்லாம்மெய்தான்
தீறவே வசியமது பொய்யுமாமோ
தீர்க்கமுள்ள வாதமது மெய்யுமாமே. 22

மெய்யான மெய்யிதுதான் இன்னங்கூர்வேன்
வேதாந்தப் புலத்தியனே வீறுள்ளானே
துய்யவே உச்சாடனம் பொய்யுமாமோ
துப்புரவாய் தேவதைகள் தானுமப்பா
வையகங்கள் தானறிய வருதல்பொய்யோ
மன்னவனே தேவர்செப்பும் வித்தைபொய்யோ
பையவே தூலமது விட்டுநீங்கி
வித்தகனே பாயுவது பொய்யொண்ணாதே. 23

ஒண்ணாது பொய்யாது மெய்தானப்பா
உத்தமனே புலஸ்தியனே புனிதவானே
நண்ணான கெசகரண வித்தையப்பா
நானிலத்தில் மெய்யாகும் பொய்யேயல்ல
பெண்ணான மாதருக்குக் குளிசங்கட்டல்
பேருலகில் பொய்யல்ல மெய்யேயாகும்
தண்ணமுடன் நம்பினோர்க் கெல்லாம்மெய்யே
சத்தியமாய் நடந்தவற்கு எல்லாஞ்சித்தே. 24

சித்தான சித்ததுவும் இன்னமுண்டு
திக்கெங்குங் கண்டறிந்து அடுப்பாயானால்
வெற்றியுண்டு மெண்போக மிகவுமுண்டு
மேன்மையுடன் காசினியில் சித்தனாவாய்
பத்தியுள்ள பூபாலா எல்லாமெய்யே
பாருலகில் நம்பினோற்கு மெய்யாய்க்காட்டும்
புத்தியுள்ள உந்தமக்கு லபியிருந்தால்
புகழுடனே கிட்டுமடா பதவிதானே. 25

பதவியா முலகோற்கு லௌகிகந்தான்
பாலகனே மற்றவர்க்கே யெல்லாம்பொய்யாம்
நிதமுடனே உலகபதி ஆசையற்றோர்
நிர்மலமாஞ் சமுசார வாழ்க்கையற்றோர்
கதமுடைய வீராதி வீரனுந்தான்
காசினியில் தன்னைத்தான் அறிவானோசொல்
சதங்கொண்ட ராவணனும் தசரதன்றான்
தாரணியில் யாரேனுங் கண்டிலாரே. 26

## தன்னைத் தானறிதல்

கண்டிலார் வெகுகோடி மாண்பரப்பா
காசினியில் பிரமலபி கடந்தோனென்றும்
விண்டிடவே சன்மார்க்க சார்புகொண்டு
வீறான வேதாந்தக் கடலைதானும்
சண்டமா ருதம்போலச் சிக்கறுத்து
சதுர்யுகமுங் கொண்டறிந்த யோகிபோலுந்
தண்டுடனே மாத்திரையுங் கோலுங்கொண்டு
தாரணியில் தான்திரிவார் கோடியாமே. 27

கோடியாம் வேஷமது கொண்டிட்டாலும்
குவலயத்தோர் தான்மதிக்கத் திரிந்திட்டாலும்
நீடியே உபவாச முள்ளடக்கி
நிஷ்களங்க சிவயோகி வேடம்பூண்டு
ஆடியே அம்பலர்முன் யோகம்பூண்டு
அமர்ந்தாலும் வையகத்தை வெறுத்திட்டாலும்
தேடியே தன்மனதை உள்ளடக்கி
தேற்றமுடன் இருந்தாலு மொன்றுங்காணே. 28

காணவே தன்னைத்தான் அறிந்தோன் போலுங்
காவலனே வெகுவார்த்தை மிகவுங்கூர்வான்
தோணவே மெய்ஞ்ஞானி போலேயப்பா
தோறாமல் இடும்புமிகச் சொல்வான்கேளு
நாணவே பலபேரும் நகைக்கவல்லோ
நாணயங்கள் மிகக்கூர்வான் நளினவானே
மாணவே புலஸ்தியனே மன்னாகேண்மோ
மானிலத்தில் ஞானவான் என்பான் பாரே. 29

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாருலகில் வெகுகோடி மாண்பரப்பா
தேரப்பா தத்துவத்தில் மிகுந்துபேசி
தெளிவுடனே தேகநிலை கண்டோன்போலும்
ஆரப்பா சர்வரூபக் கியானன்போலும்
அப்பனே பதிபாசங் கண்டோன்போலும்
நேரப்பா கட்டறுத்து வார்த்தை கூர்வார்
நேர்மையுடன்நடக்கையெல்லாம் பொய்யுமாச்சே 30

பொய்யான வாழ்வுக்கு அனேகம்பேர்கள்
பொங்கமுடன் பூவுலகில் கோடிமாண்பர்
மெய்யான வாழ்வதனை விட்டுநீங்கி
மேன்மையுடன் தவப்பலத்தை அடைந்தாற்போல
துய்யவே சிவமயத்தை அடையலாகி
துப்புரவாய் தேகமதை உள்ளடக்கி
வையகங்கள் தாமறிய வழிபாடோடு
வண்மையுடன் உலகாசை யொழித்திட்டாரே. 31

## சிதம்பர ஆட்டம்

ஒழிக்கவே இன்னமொரு உறுதிகூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தசேதி
விழிக்கவே யாறுவரை நெடுக்கேகீறி
உத்தமனே யாறுவரை குறுக்கேகீறி
செழிக்கவே வரைதோறுஞ் சூலங்கிறி
செம்பவள வாயானே மகிமைகூர்வேன்
மூழிக்கவே வரைதோறும் வீடமர்த்தி
மூதண்ட வக்ஷரத்தை மாறுவாயே. 32

| | | | | |
|---|---|---|---|---|
| ய | ந | ம | சி | வ |
| வ | ய | ந | ம | சி |
| சி | வ | ய | ந | ம |
| ம | சி | வ | ய | ந |
| ந | ம | சி | வ | ய |

மாறுவாய் நடுவணையைப் பிடித்துமாறு
மகத்தான ரவிபீச மேதென்றாக்கால்
கூறுவேன் யநமசிவ வென்றுவோதி
குறிப்பான வட்சரத்தை மாறியென்ன
தேறுடைய வயநமசி வென்றுவோதி
தேற்றமுடன் மந்திரத்தை செபித்துயென்ன
மாறுடனே சிவயநம வென்றுசொல்வி
மகத்தான வட்சரத்தைக் குறித்துமென்ன
ஆறுடனே மசிவயந வென்றுவோதி
அப்பனே யுச்சாடஞ் செய்தார்பாரே. 33

செய்தாரே நமசிவய என்றுஓதி
செபித்தாரே லட்சங்கள் கோடாகோடி
துய்யநல்ல செபதபங்கள் கோடிசொன்னார்
துப்புரவாய் மந்திரங்கள் லக்கோயில்லை
வையகங்கள் தான்முழுது மிந்தமாற்க
மகத்தான வட்சரத்தை யோதினார்கள்
பையவே திருவெண்ணீர் தான்றரித்து
பாலகனே எழுத்துமுறை யோதினாரே. 34

ஓதினார் பிரணவங்கள் லக்கோயில்லை
உத்தமனே லக்கமதை மாறிமாறி
நீதியுடன் சடாட்சரமா மட்சரத்தை
நிலைகொண்டு கிறியல்லோ உபதேசிப்பார்
ஆதியென்னு மட்சரத்தை அறியாமூடர்
அப்பனே சிதம்பரத்தை அறிந்தேனென்றும்
வீதியாம் நெடுந்தோறும் வேஷம்பூண்டு
வீறான காஷாயம் பூண்டார்தானே. 35

தானான காஷாயம் பூண்டுமென்ன
சதகோடி மந்திரமுங் கற்றுமென்ன
தேனான மனோன்மணியை அடுத்துமென்ன
தேசாந்திர சன்யாசி ஆகியென்ன
பானான பராபரியை அடுத்தோன்போலும்
பாலிப்பான் ருத்ராட்ச மாலைகொண்டு
கோனான குருவருள் பெற்றோன்போலுங்
குவலயத்தி லிருந்தார்கள் கோடியாமே. 36

கோடியாம் சந்நாசி வேஷங்கொண்டு
குவலயத்தில் பேர்பெற்று வாழ்ந்துமென்ன
பேடிபோல் சிதம்பரத்தை மார்வே னென்பான்
பேசரிய யோகநிலை கொள்வே னென்பான்
நாடியே எட்சணிகள் செய்வே னென்பான்
நாதாந்த வாலைதன்னைக் கண்டே னென்பான்
வாடியே திரிந்தலைந்து மதியுங்கெட்டு
வாணாளை வீணாகக் கழிப்பார்தாமே. 37

தாமான கழுவல்லால் மாந்திரிகம்
தாரணியில் செய்பவர்கள் யாரேனுந்தான்
பூமான்கள் யோகரிஷி சித்துமுண்டோ
பூவுலகில் யாரேனுங் கண்டதுண்டோ
சீமான்போ லிருந்தார்கள் கோடிமாண்பர்
செகதலத்தில் கருவில்லா மாந்திரிகம்
சாமான்ய மாகவேதான் செய்வாருண்டோ
தாரணியில் ஒருவருந்தான் செய்யார் பாரே. 38

## மாதர் கை மசக்கு

பாரப்பா புலத்தியனே பண்புள்ளானே
பாருலகில் சதகோடி மாண்பருண்டு
ஆரப்பா யெனைப்போல சொன்னாருண்டு
அப்பனே உந்தனுக்காய் மனதுவந்து
நேரப்பா கருவிகர ணாதியந்தம்
நேர்மையுடன் யானுரைத்தேன் தெளிவதாக
சீரப்பா இவ்வுலகில் மாண்பரப்பா
சிற்பரனே செய்கின்ற மசக்கைகேளே. 39

கேளப்பா மாண்பர்கட்கு வசியமாற்கம்
கேண்மைகொண்டு நெடுந்துறையாம் வனங்கள்
பூண்டு
தாளப்பா சின்மயத்தி னருளினாலே
தயாபரனே சாபமதை நிவர்த்திசெய்து
ஆளப்பா மூலிகைக்கு காப்புகட்டி
அப்பனே மந்திர முச்சாடணித்து
சூளப்பா கிராணமது நாளேகொண்டு
சுந்தரனே காடுவன மேகுவாரே. 40

ஏகுவா ரடவிவனங் காட்டகத்தில்
எழிலான வண்டர்முனி கானாநாடு
போகுவார் துலைதூரம் வனாந்திரங்கள்
பொங்கமுடன் ரிஷியிருக்குங் கானகந்தான்
ஆகுடனே ரிஷிபதத்தைத் தாள்வணங்கி
அன்புடனே யவர்பணிக்கு ஏவலாகி
சாகுவா ரவருடனே நெடுங்காலந்தான்
சேட்டமுடன் கூடிருந்து பணிகொள்வாரே. 41

கொள்வாரே வரைகோடி காலமப்பா
கொற்றவனே நற்சீஷ னென்றுரைக்க
தெள்ளமிர்த மானதொரு சீஷனென்று
தேசத்தில் கிட்டாத பாலனென்றும்
உள்ளபடி உபதேசக் காளனென்றும்
உத்தமனே அவர்பணிக்கு முன்னாய்நிற்பார்
கள்ளமில்லாச் சீஷனென்று ரிஷியார் தாமுங்
காவலனே உபதேச மருள்கொள்வாரே. 42

வாரான உபதேசங் கொள்ளும்போது
வளமுடனே தேசாதி மாண்பரப்பா
கூரான குருமுகமாய்ப் பணிந்துபோற்றி
குருபரனே யென்தேவா எந்தனாதா
தேரான வசியமென்ற மூலிக்காட்டைத்
தேர்வேந்தே யெந்தமக்கா யருளவேண்டும்
பாரான மூலிதன்னை அடியேனுக்குப்
பாலிக்க வேண்டுமெனப் பணிவார்காணே. 43

## குருசீஷனுக்கு மூலியுபதேசம்

காணவே உபதேசங் கொள்ளவந்த
காவலனே கண்மணியே கவிராஜேந்திரா
பூணவே தென்வடக்காம் யோசனைதூரம்
புகழான வனமொன்று காண்பாயப்பா
தோணவே வடகோடி கானகத்தில்
தோறாத வடகிரியா மகமோபக்கல்
நீணவே குளிகைகொண்டு சென்றாயானால்
நேரான காட்டகத்தைக் காணலாமே. 44

காணலா மூலியுண்டு வுதகமுண்டு
காவலனே செல்லுகைக்குத் தடமுமுண்டு
பூணலா மூலியது வலுமையுண்டு
புகழான மகுத்துவங்க ளனேகமுண்டு
ஆணவங்கள் தானொடுங்கி யங்கேசென்றா
லப்பனே உந்தனுக்கு எல்லாம்வாய்க்கும்
வேணபடி செல்வதற்கு குளிகைவேண்டும்
வித்தகனே இல்லாவிட்டால் போகொண்ணாதே 45

## குருசீஷனுக்கு குளிகைகொடுத்தல்

ஒண்ணாது புலத்தியனே புனிதபாலா
ஓகோகோ நாதாக்கள் மகிமைமெத்த
கண்ணான குளிகையது உந்தமக்கு
காவலனே தான்தருவார் குளிகைதன்னை
திண்ணான குளிகையது வாங்கிதன்னை
தீற்கமுடன் வாய்தனிலே யிட்டுமைந்தா
தண்ணமுடன் கானகத்திற் சென்றாயானால்
தாக்குடனே மிருகமெல்லாம் பணியுந்தானே. 46

பணிந்ததுவுங் கோபாலர் தன்னைக் காண்பீர்
பாலகனே கருவான மூலிதன்னை
துணிவுடனே இருக்குமிடம் ஸ்தானங்கேளு
துப்புரவாய் தடமதனை சொல்வார்பாரு
மணியான வசியமூலி கேழ்ப்பாயானால்
மன்னவனே உந்தமக்கு தருவார்பாரு
கணிதமுடன் மூலிதனை வாங்கிமைந்தா
காவலனே உள்ளடக்கங் கொள்வீர்காணே. 47

காணவே புலத்தியனே மைந்தாகேண்மோ
கருவான மூலியினால் வசியஞ்செய்வார்
பூணவே கைமசக்கு ஈடோகோடி
புங்கசித்தி யெட்டுரிய வசியஞ்செய்வார்
தோணவே வசியமென்ற மூலிதன்னால்
தோறாமல் லோகமெல்லாம் வசியங்கொள்வார்
மாணவே சகலசித்து மதனாலாகும்
மன்னவனே வசியமென்ற மூலிதேடே. 48

தேடவென்றால் நற்குருவைத் தன்னைக்காரு
தேற்றமுட னவர்பாதம் பணிந்துநின்றால்
கூடவே தான்வருவார் சித்துதாமும்
குளிகையது தான்கொடுத்து குறிப்பங்கொள்வார்
நீடவே வழிதடமுங் காண்பாயப்பா
நெடிதான சேர்வையது காணலாகும்
மூடவே யிருள்கண்ட குகைகளெல்லா
மூதுலகில் காண்பதற்கு மார்க்கமாமே. 49

மார்க்கம் மின்னமொரு வதீதங்கூர்வேன்
மன்னவனே காவியந்தா னைந்துமாகும்
தீர்கமாய் இலட்சணமாங் காவியந்தான்
திடமுள்ள நாதாக்கள் வகுப்புமாற்கம்
ஏற்கவே முறைகண்டு பாடுகண்டு
யெழிலான லட்சணங்கள் குணபாடமெல்லாம்
ஆற்கவே முடித்துவிட்டே னிந்தநூலில்
அப்பனே யின்னூல்போ லொன்றுங்காணே. 50

## பதினெண்சித்தர் வருந்தல் விண்ணப்பம்

காணவே இன்னமொரு வதீதங் கூர்வேன்
காவலனே புலஸ்தியனே கண்ணுள்ளானே
தோணவே மாந்திரிய பூட்டகத்தை
துறையோடு முறையோடும் புகழ்வேனப்பா
நாணவே நாதாக்கள் மறைத்த தெல்லாம்
நானிலத்தி லடியேனு முந்தமக்கு
பானம் போலுபதேசஞ் செய்யலானேன்
பாலகனே யின்னூல்தான் குருநூலாச்சே. 51

ஆச்சப்பா நாதாக்கள் பெயர்கள்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
மூதுலகில் செய்ததொரு வண்மையெல்லாம்
பாச்சலுட னிதிகாசந் தானறிந்து
பாலகனே உந்தமக்கு உபதேசங்கள்
ஆச்சலுடன் பேரதிக மனதுவந்து
வித்தகனே யென்மனதி லெண்ணலாச்சே. 52

எண்ணவே நாதாக்கள் பெயர்வகுப்பேன்
எழிலான போகமுனி கும்பர்தாமும்
நண்ணவே நந்திமுனி புஜண்டரப்பா
நாதாந்த கோரக்கர் மூலர்தாமும்
வண்ணமுள்ள கோரக்கர் புலிப்பாணிதானும்
மகத்தான தேரையர் யூகிதாமும்
தண்ணமுடன் மச்சமுனி புண்ணாக்கீசர்
தாக்கான யிடைக்காடர் பூனைக்கண்ணே. 53

கண்ணான சிவவாக்யர் சண்டிகேசர்
கருவான ரோமரிஷி சட்டநாதர்
தண்ணமுள்ள காலாங்கி பாதம்போற்றி
தகைமையுடன் மாந்திரீகஞ் சொல்லலுற்றேன்
வண்ணமுட னஷ்டதிசை யோர்கள்போற்ற
நாதாக்க ளடிபணிந்து கூறலுற்றேன்
மண்ணதனி லாவதும்பால் தந்தாற்போல்
மாட்டினேன் மாந்திரீக மாட்டினேனே. 54

## நூலுக்குச் சாபம்

மாட்டினதோர் நூலுக்குச் சாபந்தந்தார்
மகத்தான பதினெண்பேர் கோடிசித்தர்
தாட்டிகமாய் பெருஞ்சாபந் தன்னைத்தந்தார்
தயாபரனே பதினெண்பேர் சித்தர்தம்மை
நாட்டமுடன் மனதுவந்து வினயங்கொண்டு
நலமுடனே பெருஞ்சாபந் தன்னைநீக்க
வாட்டமுட னவர்மனதை தேற்றங் கொண்டேன்
வண்மையுட னுத்தரஞ் சொல்லார்காணே. 55

காணவே சித்தர்பதங் கூறாதாலே
கருவான வசுவனியார் தன்னைத்தானும்
பூணவே யவர்பாதம் வணங்கிநின்றேன்
புகழுடனே யவரெனக்குச் சாபம்நீக்கி
ஆணவங்கள் தானொடுங்கி யிருக்கவென்றும்
அப்பனே சாபமதை தவிர்த்தாரையா
பாணம்போ லிந்நூலை துணிவுகொண்டு
பாலித்தேன் லோகபதி மாண்பர்க்காச்சே. 56

ஆச்சப்பா புலஸ்தியனே வன்புள்ளனே
அறிவுள்ள கண்மணியே பொதிகைமெச்சும்
மூச்சடங்கி நெடுங்கால மிருக்கவென்று
மூதுலகில் தேவரிஷி சித்தனென்றும்
பாச்சலுட னஞ்சாத வரமுங்கொண்டு
பாருலகில் சித்தனென்றும் பெயர்வகித்து
வீச்சுடனே யாசீர்மந் தந்தாரையா
விருப்பமுட னுந்தமக்கா யோதினேனே. 57

ஓதினே னின்னூலை வெளிவிடாதே
ஓகோகோ நாதாக்கள் மறைத்தாரல்லோ
ஆதியே யின்னூலை பதனம்பண்ணு
அப்பனே விதியிருந்தால் கிட்டும்பாரு
சோதியே யிந்நூல்போ லாருஞ்சொல்லார்
சுடரொளியே கைபாக மிதற்குள்ளாகும்
பாதிமதி சடையணிந்த தம்பிரானே
பட்சமுடன் சாற்றியதோர் நூல்தானாச்சே. 58

நூலான நூலிதுதான் கர்மகாண்டம்
நுட்பமுடன் மாந்திரீக சகலசித்தும்
காலான சித்தாம் ரிஷிகள்தேவர்
கருவான நூலனைத்தே வனேகஞ்செய்தார்
பாலான நூலிதுதான் பஞ்சநூலாம்
பாலித்தே னைந்தாவது காவியந்தான்
மேலான பதினெண்பேர் நாதர்தாமும்
மேதினியில் மறைத்ததெல்லாம் வெளியிட்டேனே 59

இட்டேனே மறைப்புமுதல் கருவுமார்கம்
எழிலான பேய்பில்லி சூனியங்கள்
கட்டறுத்து யிந்நூலில் கருவாய்ச் சொன்னேன்
காவலனே வரைகோடி சித்தர்தாமும்
சட்டமுடன் மறைத்துவைத்த கருமானத்தை
சாற்றினேன் கருவிகர ணாதியந்தம்
திட்டமுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
தீர்க்கமுட னுபதேசங் கூறலாச்சே. 60

## சீடனுக்கு ஆசான் உபதேச உண்மை

கூறுவேன் புலத்தியனே புண்ணியபாலா
புகழான யோகநிலை பூசைமார்கம்
வீறுடனே செபந்தனிலே நிற்கும்போது
வித்தகனே சந்திரனை உள்ளமர்த்தி
மாறுபடாத் தன்மையது கொண்டுமல்லோ
மன்னவனே சூரியனில் சார்ந்துகொண்டு
ஆறுதலங் கோட்டையது அகழிவாசல்
அப்பனே மனத்தெளிவில் சாதிப்பாயே. 61

சாதிக்கும் போதையிலே சுழினைகொண்டு
சாங்கமுட னாரதா ரத்தில்னின்று
சோதித்துப் பிரணவத்தை உச்சரித்து
சுந்தரனே கணிக்குடனே யுருவையோதி
வாதித்துப் பின்கலையால் சுழினைமாறி
வளமுடனே கபாடமென்னும் பாதைகண்டு
ஆதித்தன் போலாக வட்டசித்தை
அய்யனே உச்சரித்தால் லயிக்கும்பாரே. 62

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாவலனே நாவலனே பகர்வேனப்பா
ஆரப்பா யெனைப்போல சொல்வாரப்பா
அப்பனே உந்தமக்காய் வெளியாய்ச் சொன்னேன்
தேரப்பா மாந்திரிய யீட்டைப்பா
தேசத்தில் யாரேனுஞ் சொல்லமாட்டார்
காரப்பா கருவாளி கண்டுகொள்வான்
காவலனே கர்மிட்கு கிட்டாதென்றே. 63

நீதி நெறியறிய

அன்னான புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே மாந்திரிய சிவயோகிக்கு
குன்றான குருவருளு மிருக்கவேண்டும்
கூர்மையுள்ள புத்தியது மிகவும்வேண்டும்
வென்றிடவே பொய்கொலை களவுமாற்கம்
வேதாந்தக் கண்மணியே நீக்கல்வேண்டும்
தென்றிசையாம் குருமொழியை மகுடமாகத்
தேற்றமுடன் கொள்பவனே சித்தனாமே. 64

சித்தனாய்ப் பெயர்கொண்டு வகுத்திட்டாலும்
சிதாபாசக் களையனைத்தும் மறந்திட்டாலும்
முத்திபெற நல்வழியைக் கண்டிட்டாலும்
மூதுலகை கிக்கறுத்து நடந்திட்டாலும்
சத்தியத்தை மனந்தனிலே யெண்ணாமற்றான்
சாதுரியப் பிராணகலை யறிந்துமென்ன
பத்தியுடன் பரமநிலை காணாதற்கு
பாருலகில் யாதொன்றும் வாய்க்காதன்றே. 65

வாய்க்காது யிந்நூலைப் பாபிகட்கு
வாகுடனே தான்கொடுத்து உபதேசித்தால்
வாய்க்காது மோட்சநிலை பதவிகாணா
வாகுடனே கர்மமது கிட்டும்பாரு
வாய்க்காது பாபிகட்கு யொன்றுமில்லை
வளமையுட னிருந்ததொரு புண்ணியோற்கு
வாய்க்காது போகுமடா வஷ்டசித்தும்
வண்மையுடன் வாய்ப்பதற்கு வளவுகேளே. 66

கேளப்பா புலஸ்தியனே கிருபையோனே
கிளிமொழியாள் மனோன்மணியா ளருளும் வேண்டும்
தாளப்பா பராபரியின் கிருபைவேண்டும்
தயாபரனே திரிபுரையின் கடாட்சம்வேண்டும்
நாளப்பா போகாமல் பதாம்புயத்தை
நண்ணினால் சகலசித்து மாடலாகும்
தேளப்பா கொட்டியதோ ரிந்தநூலாம்
தேற்றமுடன் யோதிவைத்தேன் புண்ணியற்கே. 67

## சித்தாட்டல் விதிபாடு

புண்ணியனே புலஸ்தியனே கருணைவானே
புகலுகிறேன் விதிபாடு முறைபாடலெல்லாம்
திண்ணமுட னுபதேசங் கூறுமாற்கம்
தீற்கமுடன் யானுரைப்பேன் கருவுள்ளானே
அண்ணலார் சொல்லதுவும் வழுவாமற்றான்
அப்பனே காயத்ரி வட்சரந்தான்
நண்ணவே பஞ்சமென்ற பூதமப்பா
நலமான வட்சரத்தின் பெருமைதானே. 68

தானான வட்சரமா மைந்துக்குள்ளே
தாரணியி லஷ்டசித்து மாடலாகும்
கோனான குருவெழுத்தா லைந்துபூஜம்
குவலயத்தில் நாதக்க ளாடுங்கூத்து
தேனான மனோன்மணியாள் நின்றபீஜம்
தேற்றமுடன் றுறைகாணார் கோடிமாண்பர்
பானான பூரஞ்சுடரா மிந்தபீஜம்
பார்தனிலே நாதாக்கள் பீஜமாச்சே. 69

## ஸ்தானபீடம்

ஆச்சப்பா நிலைநிற்கும் பீடமப்பா
அப்பனே வலக்கையாம் பீடமாகும்
மூச்சுடனே நிலைகொண்ட பீடந்தன்னி
லுத்தமனே பஞ்சாட்சரம் பிறிதலாகும்
பாச்சலது னேராது உளவுஞ்சொன்னேன்
பாலகனே வந்தரத்தின் தியானஞ்சொன்னேன்
மாச்சலது நேராது யோகிமாற்க
மன்னவனே திக்குசெயங் கொள்வீர்காணே. 70

## செப வழிபாடு

கொள்ளவே செபிப்பதற்கு தேவபாடு
கொற்றவனே குணபாடு முறைமைகேண்மோ
தெள்ளமிர்த மானதொரு பூசைக்கப்பா
செப்புகிறே னாராட் சிமணியும் வேண்டும்
உள்ளதொரு வாகனங்க ளேதென்றாக்கால்
உத்தமனே கலைமானின் தோல்தான் வேண்டும்
கள்ளமில்லா பஞ்சபாத் திரமும்வேண்டும்
காவலான பஞ்சலோகத் தட்டுதானே. 71

தட்டான தட்டோடு தூபதீபம்
தாக்கான பதுமையென்ற மணிவிளக்கு
முட்டான நவபட்டை யாலேசெய்த
முனையான செப்பென்ற பாத்திரந்தான்
கட்டான பூக்குடலை பஞ்சலோகம்
பாங்கான வர்ச்சனையால் கரண்டிதானும்
திட்டமுள்ள ருத்திராட்ச மாலைவேண்டும்
தீர்கமுள்ள கைச்சபந்தான் முகந்தானாறே. 72

ஆறான ருத்திராட்சம் கமலபீடம்
அப்பனே தலைமகுடம் பட்டுக்குல்லா
திறான வஸ்திரந்தா னாறுசங்கம்
தீர்கமுடன் உத்திரந்தான் பட்டுவேண்டும்
கூறான பூநூலாம் தாமரையுமாகும்
குருபரனே நெய்விளக்காம் சமர்த்தும்வேண்டும்
சேறான தேன்வேண்டு மஞ்சள்நெல்லி
சிறுபயறு மெலுமிச்சை கந்தம்தானே, 73

கானான கந்தமுடன் சந்தனந்தான்
காவலனே கதம்பமென்ற பொடியும்வேண்டும்
கோனான கற்பூரம் சாம்பிராணி
கொற்றவனே குங்கமுடன் திருவெண்ணீறும்
மானான தேங்காயுங் கதலிவேண்டு
மகத்தான புஷ்பமுதல் பாரிசாதம்
மோனான வடைபருப்பு நெய்யும்வேண்டு
முன்னவன்ன பஞ்சகலிதம் வேண்டும்பாரே. 74

பாரப்பா பச்சரிசி பூநூல்வேண்டும்
பாலகனே கும்பமென்ற கலசம்வேண்டும்
தேரப்பா மாவிலையா மட்சதையும்வேண்டு
தேற்றமுள்ள நவதானியந் தானும்வேண்டும்
காரப்பா பீடமது பலாவின்பீடம்
கொற்றவனே யெட்டியுட பீடமாகும்
ஆரப்பா யித்தனையு மடைதல்வேண்டும்
அப்பனே யோகிக்கு விதிபாடாச்சே. 75

விதியான பாடதுவு மேதென்றாக்கால்
வித்தகனே புலஸ்தியனே விதுரவானே
மதியான மதியோடு உருவுகொண்டு
மகத்தான வட்சரத்தை யோதுவீராய்
துதியான பூசைமுகம் வாறாதாரம்
துப்புரவாய் தந்தனக்குப் பொலிவுதோன்றும்
கதியான மோட்சமென்ற பாதைகாட்டும்
கண்மணியே புலஸ்தியனே யின்னங்கேளே. 76

## வசிய யோக சிவராச சித்து

கேளப்பா புலஸ்தியனே வசியயோகம்
கேண்மையுடன் நாதாக்கள் கூறாதெல்லாம்
தாளப்பா வசுவனியார் கிருபையாலே
தாரணியில் மறைத்ததொரு கருமானத்தை
வேளப்பா யெரித்தநெற்றி சிவந்தன்னாலே
வேட்கையுடன் முறைபாட்டை வகுத்துக்கூர்வேன்
மீளப்பா வாறுவரை நெடுக்கேகீறி
மிக்தாணி வாறுவரை குறுக்கேகீறே. 77

சிறவென்றால் இருபத்தைஞ் சறையுமாச்சு
கெடியான வரைதோறும் பீடங்கேளு
தீறவே முதல்வரையில் நாற்கோணந்தான்
தேற்றமுடன் மறுவரையில் திரிகோணந்தான்
தீறேதான் கூறுகிறேன் பக்கந்தன்னில்
திறமான மட்டமறைப் போடுபோடு
கூறேதான் மூத்தவரை யைங்கோணந்தான்
குருபரனே நடுமையம் வாசல்தானே. 78

தானான வாசலது பக்கல்வீதி
தாக்கான பின்னணையை பிடித்துமாறு
கோனான பின்னணையை மாறும்போது
கொற்றவனே நடுமையம் பீஜவீடு
தேனான மனோன்மணியா ளிருக்கும்வீடு
தேவிதிரி லோத்திரந்தான் துதிக்கும்வாசல்
பானான பராபரியா ளமர்ந்தவீடு
பாலகனே பதிவாசல் பீடந்தானே. 79

பீடமாம் வரைதோறு மாறிக்கொள்ளு
பேரான வயநமசி யென்றுமாட்டு
நீடவே நடுவணையை மாறிக்கொள்ளு
நிர்மலமாப் ஸ்ரீங்காரம் றீயும்போடு
தேடவே றீங்காரம் வசியமாட்டு
செப்புகிறேன் அகாரமதில் ஐயும்போடு
ஆடவே யறுபத்து நாலுசித்தும்
ஆடுமடா புலஸ்தியனே யின்னங்கேளே. 80

அறுபத்துநாலு சித்தாட வசியயெழுத்து

கேளப்பா வறுபத்து மாட
கெடியான வட்சரங்க ளேதென்றாக்கால்
ஆளப்பா புலஸ்தியனே வன்புள்ளானே
அப்பனே பீசமது செப்பக்கேண்மோ
மீளப்பா சிகாரமதில் சௌவும்போடு
மிக்கான ஒ—அ—இ—உ—மாட்டு
சூளப்பா வகாரமதில் வங்கென்றோதி
சுந்தரனே என்சீஷா யின்னம்பாரே. 81

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே கண்மணியே கவிராஜேந்திரா
தேரப்பா யகாரத்தில் சௌவும்கிலியும்
செப்புவொண்ணா நகாரத்தில் ஐயும்கிலியும்
கூரப்பா கிலியுடனே மகாரமப்பா
கூறுகிறேன் சிகாரத்தி லகாரந்தானும்
சீரப்பா பஞ்சாட்சர பீஜந்தன்னை
சிற்பரனே யொவ்வொன்றாய் மாறுமாறே 82

மாறப்பா புலஸ்தியனே யட்டாங்கத்தை
மன்னவனே நவிலுகிறேன் மைந்தாகேண்மோ
கூறப்பா வட்டாங்க மோதும்போது
கொற்றவனே சகலசித்து மதிலடக்கம்
தேறப்பா சிவயோகம் வெளயிற்காணும்
சிற்பரனே வறுபத்து நான்குமாற்கம்
வேறப்பா யிவ்வெழுத்தால் பார்க்கலாகும்
வேதாந்தக் கடலதுவு மிதற்குள்ளாச்சே. 83

ஆச்சப்பா கடலதுவு சித்துமாற்கம்
அப்போதே சிதம்பரத்தில் னாட்டமப்பா
மூச்சடங்கி சிவயோக நிலையிற்சென்று
மூதுலகில் வெகுமாண்பர் வேஷம்பூண்டு
பாச்சலுடன் பதிபாச வலையிற்சிக்கி
பாருலகில் பீசநிலை கண்டோர்போலும்
மாச்சலது கொள்ளாமல் வாசிபூண்டு
மன்னவனே யோகநிலை புரிந்திட்டாரே. 84

## பஞ்சாட்சர விபரம்

புரிந்தாரே நடுவணையி லிருந்துக்கொண்டு
புகழாக முன்போல மாறிக்கொண்டு
திரிந்தாரே நடுவணையைப் பிடித்துமாறி
தேசத்தி லதிசயங்காண் பித்தோன்போல
சொரிந்ததொரு குறுதியது பாபமென்று
சுந்தரனே வடவெழுத் தாணிகொண்டு
பரிந்துமே குத்திடுவார் பட்சமூன்றி
பால்கனே இரத்தமது சொரியுந்தானே. 85

தானான இரத்தமது சொரியுமப்பா
தண்மையுடன் ஓங்கார சிகாரமிஞ்சி
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேகமது பரவசமாய்க் காட்டல்போலும்
கோனான சிதம்பரத்தி னுச்சாடந்தான்
கொற்றவனே பலபேரு மறியக்கண்டு
மானான நடுவணையைப் பிடித்துமாறு
மன்னவனே யஷ்டசித்து யாடுவாறே. 86

## சக்கரம்—51

ஆடுவா ரின்னமொன்று வரையக்கேளும்
அப்பனே வன்பத்தோ ரிலக்கமப்பா
கூடுவா ரன்பத்தோர் வீட்டிலப்பா
கொற்றவனே பனிரெண்டாம் வீடுபக்கல்
ஊடுவார் பதினைந்தாம் வீட்டிலப்பா
வுத்தமனே முதல்வீடு பாகம்பூண்டு
நாடுவார் பதினொறாம் வீட்டிலப்பா
நாயகனே வொன்பதிலே நாட்டிப்பாரே. 87

நாட்டியே மறுவரையில் வைந்துபோடு
நலமுடனே நாலதனில் நேர்பக்கந்தான்
கூட்டியே லக்கமதை ராசியாக்கி
குருபரனே நாலாவது வரைதான்கேளு
நீட்டமுடன் நான்காவது வரையைமாறி
நிஷ்களங்க மாகவேதான் மாறிக்கொள்ளு
வேட்டமுடன் வரைகண்டு பதியுங்கண்டு
வேதாந்தத் தாய்தனையே மனதிலுன்னே. 88

உன்னவே மனம்புத்தி சித்தங்கொண்டு
வுத்தமனே பூரணத்தி லமர்ந்துக்கொண்டு
நன்னயமாய் தன்புத்தி தெய்வமாக
நாதாந்த வாலைமிகப் பூசைகொண்டு
நன்மையுடன் பதிபாச நிலையிற்சென்று
நாட்டமுடன் யந்திரத்தை மாறியொப்பாய்
பன்னவனே சின்மயத்தில் மதிவுபூண்டு
பாலகனே சிவானந்த நிலையில்நில்லே. 89

நில்லப்பா மன்வுறுதி கொண்டாயானால்
நீதியுள்ள புலஸ்தியனே நிமிஷவானே
புல்லறிவால் திக்குசெயங் கொள்ளலாகும்
பூதலத்தில் யுனைப்போல சித்துமுண்டா
கல்லென்றால் கரையுமடா யுந்தன்மந்திரம்
காசியினில் யுனைப்போல சித்துமுண்டோ
வெல்லவே மாந்திரீக காவியந்தான்
வேதாந்தத் தாயெனக்கு யுரைத்தார்பாரே. 90

## பூசைமுறைபாடு

பாரப்பா புலஸ்தியனே தம்பிரானே
பகருகிறேன் முறைபாடு தேவபாடு
நேரப்பா குணபாடு வழிபாடப்பா
நேர்மையுடன் போக்குவழி புகலக்கேளீர்
தேரப்பா மண்டபந்தான் சலவைக்கல்லாம்
தேற்றமுடன நாற்பக்க மறையும்வேண்டும்
ஆரப்பா கோணமது பதினாராக
அப்பனே தடமிருக்க மாளியொன்றே. 91

ஒன்றாக சமைந்தவுடன் வந்தரங்கம்
வுத்தமனே நடுமையம் கூடுமாகும்
தென்றிசையா புலஸ்தியனே தேவமாரா
தேற்றமுடன் முறைபாடு யேதென்றாக்கால்
வென்றிடவே கூடுக்குச் சன்னல் நீளம்
வித்தகனே வகலமது சான்மூன்றாகும்
குன்றிடவே நீளமது சாணான்காகும்
குருபரனே யெழுகுவலைக் கொண்டுமூடே. 92

மூடவே மையமது பலகையப்பா
முக்குந்தா புலஸ்தியனே முதிர்வல்லோய்கேள்
சாடவே யெட்டியுட பலகையாகும்
சதாசிவனார் வீற்றிருந்த மந்திரபீடம்
நீடவே யொருபக்க மனுமன்பீடம்
நிகரான பீடமதற் கெதிரிலப்பா
தேடவே வைரவன்றன் பீடமாகும்
செப்பரிய வாமியிட பீடந்தானே. 93

தானான பீடமதற் கெதிரிலப்பா
சாற்றவே வாலையிட பீடம்போடு
கோனான மறுபக்க மூலை நன்னில்
கொற்றவனே புவனையிட பீடம்போடு
தேனான பீடமதற் கெதிரிலப்பா
தேவியாந் திரிபுரையின் பீடந்தாக்கு
பானான தென்பக்க மூலையப்பா
பாலகனே வீரபத்திரன் பீடந்தாக்கே. 94

தாக்கவே வடமேரு யிடபாகந்தான்
தகைமையுடன் காந்தனிட பீடந்தாக்கு
நோக்கமுடன் வடவாசல் கீழ்ப்பக்கந்தான்
நேரான புவனையிட பீடந்தாக்கு
வாக்கழியா கறுப்பண்ணன் மாடனப்பா
மன்னவனே பீடமது தாக்கிக்கொள்ளு
தூக்கமது துகழ்நீக்கி சுந்திராகேள்
சுத்தமுடன் வடமேரு மேற்குதானே. 95

மேற்கான மூலையது சாத்தான்மூலை
மேன்கையுள்ள ஜின்னுயென்ற பீடந்தாக்கி
ஆற்கான பீடமது யெதிரிலப்பா
அப்பனே பீடமது பதினெட்டாகும்
கூற்கவே குஞ்சரந்தான் கெசேந்திரந்தான்
குருபரனே தலைகீழால் மாறல்செய்து
தீற்கமுடன் பதிநிலையை விருதுநாட்டி
திட்டமுடன் செய்வதுவே முறைபாடாமே. 96

முறையான பாடதுவு மின்னங்கேளு
மூதண்ட புலஸ்தியனே மொழிவல்லோனே
கறையான சிவயோக பூசையோற்கு
காவலனே வாயுதமாம் பறணிகூர்வேன்
துறையேற முகைதனிலே வுத்திராட்சம்
துப்புரவாய் மாலையது வறுபத்து நான்கு
திறைநீக்கு மாலையது கழுத்திலப்பா
தீர்க்கமுடன் முப்பத்திரண்டு தானுமாச்சே. 97

ஆச்சப்பா புலஸ்தியனே வனிமாறாகேள்
அப்பனே சிரசதனி லுத்திராட்சம்
ஏச்சலில்லா வறுமுகன்றா னுத்திறாட்சம்
எழிலுடனே வன்பத்தி வொன்றுமாகும்
மாச்சலில்லா தலைமகுட மாலையப்பா
மன்னவனே விதிபாடு முறைபாடப்பா
மூச்சுடனே பட்டலங் காரமப்பா
முசியாத லங்கோடு கொறடுதானே. 98

தானான புலித்தோலை மேலேபூண்டு
தன்மையுடன் திருவெண்ணீர் தாமணிந்து
கோனான திருவோடும் பாரிசாதம்
கொற்றவனே கையிலேந்தி சூலமூன்றி
தேனான மனோன்மணியை மனதிலுன்னி
தேற்றமுடன் செபந்தினிலே வினையம்பூண்டு
பானான பராபரியை சதாகாலந்தான்
பட்சமுடன் துதித்தாலே வசியமாமே. 99

ஆமேதான் புலஸ்தியனே யறிவுள்ளானே
அப்பனே கண்மணியே கருவேகேண்மோ
வேமேதா னுடல்பொரு ளாவியந்தம்
வேதாந்தக் கண்மணியே விளக்கஞ்செய்தேன்
நாமேதான் சொன்னபடி நாட்டிலப்பா
நாயகனே நடத்துபன் யேகசித்து
தாமேதான் மனவுறுதி கொண்டுமல்லே
தயங்காதே யூசைவிதி யாடிக்கொள்ளே. 100

கொள்ளவே யாகதொகை பாடலப்பா
கொற்றவனே பாடலது நூத்தொன்றாகும்
விள்ளவே சருக்கமது ஒன்றுக்குள்ளே
விட்டகுறை மந்திரமா மட்சரந்தான்
தெள்ளமிர்த மானதொரு சருக்கந்தன்னில்
திரட்டிவைத்தேன் பூசைவிதி மாற்கனந்தம்
விள்ளவே யிரண்டாவது சருக்கந்தன்னில்
வீரான சதுர்வேத மாற்கந்தானே. 101

முதலாவது சுருக்கம் முற்றுப் பெற்றது,

ஆகதொகை பாடல் - 101

கடவுள் துணை

## இரண்டாவது

## சதுர்வேத மந்திரச் சருக்கம்

தானான சருக்கமது சண்டதாகும்
தன்மையுள்ள சதுர்வேதந் தனையாராய்ந்து
கோனான சதுர்வேத மாந்திரீகம்
கொற்றவனே உலகத்தார் பிழைக்கவென்று
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேஜொளிவி னசுவனியார் பாதத்தாலும்
மானான மகதேவ ரருளினாலு
மாசற்ற தீசம்போல் மாட்டினேனே. 1

மாட்டினேன் பிரகாச மானதேவா
மன்னவனே புலஸ்தியனே மகிமைவானே
பூட்டுகிறேன் வைந்தடுக்கா யுபதேசங்கள்
புங்கசித்தி தன்னுடனே புகழ்ந்துபாரீர்
நீட்டவே வதர்வனங்கள் மகிமையெல்லாம்
நேர்மையாம் நால்வேதந் தன்னிலுண்டு
கூட்டமிட்டு சித்தாதி ரிஷிகள்தேவர்
குவலயத்தி லனேகமுண்டாய்ப் பாடினாரே. 2

பாடினார் குருமகா ரிடிகள்தேவர்
பாலகனே அடுக்கடுக்காய் உபதேசங்கள்
கூடியே சித்தரெல்லாம் கூட்டமிட்டு
குவலையத்தி லதர்வனத்தை மாறலொப்பாய்
தேடியே பலபலவாம் நூல்கள்தன்னில்
தேட்டமுடன் பீஜமென்ற பிரணவத்தை
மூடியே சாபமது மிகவேதந்து
மூதுலகில் காவியத்தில் மறைத்திட்டாரே. 3

மறைத்தாரே பிரணவங்கள் கோடாகோடி
மானிலத்தில் சித்தர்முனி நாதரெல்லாம்
குறைத்துமே நூல்தோறும் பிரணவத்தை
குறிப்பகற்றி மாறல்கொண்டு வேறதாக்கி
நிறைத்ததொரு சாத்திரங்கள் புராணகீதம்
நிஷ்களங்க மானதொரு புனையந்தன்னை
மறைத்துமே பாடிவிட்டார் கோடிசங்கம்
மன்னவனே மறைப்பகற்றிப் பாடினேனே. 4

## சத்தியவாக்கால் பிரணவமந்திரம் பலிக்கும்

பாடினேன் புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே மாந்திரீக காவியந்தான்
நீடியே பலநூலுங் கண்டாராய்ந்து
நேர்மையுடன் கருவிகர ணாதியந்தம்
வாடியே திரியாமல் மைந்தாகேண்மோ
வகுப்புடனே சருக்கமது பத்துக்குள்ளே
கூடியதோர் பிரணவங்க ளட்சங்கள்
குருபரனே திரட்டிவைத்தேன் பெருநூலாச்சே. 5

ஆச்சப்பா யென்தேவ ரசுவனியார்தாமும்
அன்புடனே யெந்தமக்கு உபதேசித்த
பாச்சலென்னு முடல்பொருள்க ளாதியந்தம்
பாலித்தேன் மாணாக்கள் பிழைக்கவென்று
மாச்சலது நேராமல் வைகுந்தத்தில்
மன்னவனே யானறிந்த உளவுமார்க்கம்
ஏச்சலது நேராமல் துய்யபாலா
யெழிலாக உந்தமக்கு யோதலாச்சே. 6

ஓதவென்றால் நாவேது பாவமேது
உலகுதனில் நாதாக்கள் மறிக்கப்போமோ
நீதமுடன் பிரணவத்தால் மாந்தர்தம்மை
நிசிதமுடன் மாரனத்தால் கொல்வதற்கு
தோதமுட னட்சரங்கள் மாரியென்ன
சொல்லுலகில் யாரேனு மாள்வருண்டோ
சாதகமாய்ப் பொல்லாங்கு செய்யும்பாவி
சதுருகத்தில் மாள்வாரோ மாளார்காணே. 7

காணவே துன்மையென்ற பாவிகட்கு
　　காசினியில் மாரனத்தால் மரிக்கப்போமோ
பூணவே கடவுள்பதம் தனைநினைந்து
　　புகமுடனே விஷவாக்கா லட்சரத்தை
நீணவே பெயர்கூறி மனதுகந்து
　　நிஷ்டித்தால் கடவுள்பத முன்னதாக
ஆணவங்கள் தானொடுங்கி யாண்மைகுன்றி
　　அப்பனே கைலாய மேகுவாரே. 8

ஏகுவார் பலபலவாம் பிணிகள்பூண்டு
　　யெழிலான ரோகமென்ற சாகரத்தில்
போகுவார் சடலமது நாற்றமாகி
　　பூதலத்தில் புழுபுழுத்து தேகம்வற்றி
சாகுவார் பலவிதமாம் ரோகத்தாலே
　　சட்டமுடன் தாரணியை மாற்றுமேதான்
ஆகுவார் நரகமென்ற பெருங்குழிக்கு
　　அப்பனே ஆழ்த்துவது மெய்யுமாமே. 9

மெய்யான சாபமென்ற வாக்கினாலும்
　　மேதினியில் மடிந்தவர்கள் கோடியுண்டு
பொய்யான வாழ்வனைத்து மெய்யென்றெண்ணி
　　பூவுலகில் வெகுமோச பாபராகி
துய்யநல்ல வழியைவிட்டு திம்பிற்சென்று
　　துப்புரவாய் மனதுசஞ் சாயமாகி
அய்யனிட பதஞ்சேர்ந்தா ரனேகமான்பர்
　　அப்பனே மாண்டவகை கண்டுதேறே. 10

கண்டுமே புலஸ்தியனே கருவுள்ளானே
　　காவலனே சாத்திரத்தில் மாந்திரீகம்
தொண்டுசெய்து பெற்றவர்கள் கோடியுண்டு
　　தொல்லையென்று விட்டார்கள் கோடியுண்டு
விண்டுமே தெரிந்ததுவும் கோடியுண்டு
　　விட்டகுறை பட்டவர்கள் கோடியுண்டு
சண்டமாரு தம்போல் மந்திரத்தை
　　தாரணியில் கற்றவர்கள் கோடியாமே. 11

கோடியாம் மந்திரத்தை யறிந்துமென்ன
கொற்றவனே யவன்பெயரை மாறியென்ன
நீடியே நெடுங்காலம் செபங்கள்செய்து
நிட்சயமாய் கருவதனா லனேகங்கொண்டு
தேடியே கானகத்தில் மாறதும்பூண்டு
தேற்றமுடன் மூலிவகை யனேகம்பூண்டு
ஓடியே தான்திரிந்து வையகத்தில்
உத்தமனே யிருந்தென்ன வொன்றுங்காணே. 12

காணவே புலஸ்தியனே கவிவல்லோனே
காவலனே மாந்திரீக மெய்யேயாகும்
பூணவே—மெய்யதுவு மேதென்றாக்கால்
புத்திரனே சிகாமணியே செப்பக்கேண்மோ
ஆணவங்கள் தானொழித்து அன்புள்ளானே
ஆண்டவனைத் தியானித்து யெதிரிபேரில்
ஊணவே தீங்கொன்றும் நினையாமற்றான்
வுத்தமனே செபித்தாலே பலிதமாமே. 13

பலிதமது பலிப்பதற்கு முகாந்திரங்கள்
பாலகனே சத்தியநெறி தவறாவண்ணம்
நலிதமுடன் பொல்லாங்கு செய்தபேரை
நானிலத்தில் தேவனைமன் றாடிக்கொண்டு
சலிதமது கொள்ளாமல் யெதிரிபேரை
சாத்தியே பிரணவத்தை மாறிநின்றால்
வலிதமுடன் பொல்லாங்கு நேர்ந்துமேதான்
வல்லிடிபோ லாகாத வியாதிதானே. 14

தானான் ரோகமது சனிப்பதென்றால்
தயாபரனே சதாசிவமே தம்பிரானே
கோனான கடவுள்பதம் வணங்கிநின்று
கொற்றவனே யுச்சாடல் கொண்டபோது
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேற்றமுடன் பொல்லாத ரோகங்கொண்டு
ஊனான தேகமது நாற்றமுண்டாய்
வுத்தமனே தீநரகுக் காளாவாரே. 15

ஆவாரே மானிலத்தில் மாந்தரப்பா
அப்பனே அவர்செய்த கருமத்தாலும்
ஆவாரே அவர்செய்த வினையின்தீங்கால்
அய்யனே பலவாறாய் தீங்குண்டாகி
ஆவாரே பில்லியென்றும் சூனியமென்றும்
அண்ணலே பலபலவாய் நாமரூபம்
ஆவாரே வையகத்தில் கோடிமாண்பர்
ஐங்கரனே மாந்திரீக மென்றலைந்திட்டாரே. 16

## மூலமந்திரவசியம் பிரணவம்

அலைந்தாரே புலஸ்தியனே அறிவுள்ளானே
அப்பனே ஓம்றீயும் ஐயும்கிலியும்
குலைந்தாரே—சவ்வுடனே வயநமசியென்று
கூறுவார் சர்வ லோகாவசியா
நிலைந்தாரே சராயாவகாவென்று வுருவோலட்சம்
நீனிலத்தில் கோடிசப் மந்திரங்கள்
விலைந்துமே பூசைமுகம் பால்பழங்கள்
வித்தகனே சர்க்கரையும் புஷ்பமாமே. 17

புட்பமாம் அவலுடனே கடலைதானும்
புகழான சத்திமுத்தி தேங்காய்தானும்
நிட்கமுடன் மாவிளக்கு கலசகும்பம்
நிகரான நவதானிய சமுத்துதாமும்
சுட்கமுடன் தாம்பூல கற்பூரந்தான்
சுகமான சாம்பிராணி தூபவாடை
நட்கமலம் வீற்றிருக்குஞ் செந்தாமரைதானும்
நாயகனே யிவையாவும் வேண்டுந்தானே. 18

## வசியமந்திரப் பிரணவம்

தானான யெந்திர மேதென்றாக்கால்
தாக்கான வீடுரைப்பேன் தம்பிரானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்தநீதி
மானான விருபத்தஞ் சறையினுள்ளே
மன்னவனே வசிய மந்திரமுரைப்பேன்
தேனான வசியமது யேதென்றாக்கால்
செப்புகிறேன் வழிபாடு தேர்ந்துக்கொள்ளே. 19

கொள்ளவே முதலாவது வீட்டிலப்பா
கொற்றவனே வலம்நீயு மென்றேபோது
மெள்ளவே யிரண்டாவ தரையிலப்பா
வித்தகனே சௌவும்றீயும் னாமென்றோது
தெள்ளமிர்த மானதொரு மூன்றிலப்பா
தேசொளியின் ஐயும்றீ யென்றோது
வள்ளலுயர் சதுர்பாகம் வீட்டிலப்பா
மன்னவனே ஏம்கிலிசவ் வென்றோதே. 20

ஓதவே வைந்தாவது வீட்டிலப்பா
உத்தமனே நம்சவ்வு மென்றேயோது
நீதமுட வாறாவது வீட்டிலப்பா
நிகரான ஐம்ஐயும் என்றேயோது
சாதகமா மேழாவ தறையிலப்பா
தப்பாது ஈம்கிலியு மென்றேயோது
தோதமுடன் யெட்டாவ தறையிலப்பா
சொற்பெரிய நம்சவ்வு மென்றேயோது. 21

ஓதவே வொன்பதாவது வீட்டிலப்பா
உத்தமனே யம்வலம் யென்றேயோது
நீதமுடன் பத்தாவ தறையிலப்பா
நீமகனே யசௌவு மென்றேயோது
கோதமுடன் பதினோரா மறையிலப்பா
கொற்றவனே சிகம்மு யென்றேயோது
ஆதமுடன் ப்னிரெண்டா மறையிலப்பா
அப்பனே வயசிவங் கென்றேயோதே. 22

என்றான பதின்மூன்றா மறையிலப்பா
யெழிலான பிரணவங்க ளேதென்றாக்கால்
குன்றான வட்சரமா மயங்சிங்காகும்
குறிப்பான பதினான்கா மறையிலப்பா
தென்றிசையா புலஸ்தியனே புண்ணியபாலா
தேற்றமுடன் றீங்சவ்வு மென்றேயோது
வென்றிடவே பதினைந்தா மறையிலப்பா
வேதாந்தக் குணக்குன்றே விளம்பக்கேளே. 23

கேளப்பா ஓங்காரங் கொண்டுமல்லோ
கொற்றவனே ரீரீ யென்றேயோது
பாளப்பா போகாமல் சோடசத்தில்
பாலகனே ராராரா வென்றேயோது
தாளப்பா பதினேழாம் வீட்டிலப்பா
தயாபரனே வட்சரமா மேதென்றாக்கால்
கோளப்பா ரம்ரம்ரம் மென்றேயோது
கொற்றவனே வட்சரத்தில் வசியந்தானே. 24

தானான பதினெட்டா மறையிலப்பா
தயாபரனே புலஸ்தியனே தம்பிரானே
கோனான வெனதைய ரசுவனியாந்தேவர்
குருபரனா ருரைத்தமொழி வட்சரந்தான்
தேனான பீசமது யேதென்றாக்கால்
செப்புகிறேன் டங்—லங் கங்—கென்றோது
பானான பராபரியை மனதிலுன்னிப்
பாலிப்பாய் வட்சரத்தை பாலிப்பாயே. 25

பாலிப்பாய் பத்தொன்பதாம் வீட்டிலப்பா
பரிவான குருபீச மேதென்றாக்கால்
ஆலிப்பா யருள்மோன வட்சரந்தான்
அப்பனே பம்பம்பம் பென்றோது
தேலிப்பா யிருபதாம் வீட்டிலப்பா
தேற்றமுள்ள வட்சரங்க ளேதென்றாக்கால்
சாலிப்பாங் குருபீடம் பிரணவந்தான்
சாதகமாய் சாற்றுகிறேன் தண்மையோனே. 26

தண்மையாம் சுங்சுங்சுங் கென்றேமாறு
தார்வேந்தா புலஸ்தியனே தருமவானே
உண்மையா மிருபத்தோர் மாளிதன்னில்
வுத்தமனே பீசாட்சர மேதென்றாக்கால்
கண்மையாம் சிங்சிங்சிங் கென்றேயோது
காவலனே வட்டசித்து மிதற்குள்ளாகும்
திண்மை மிருபத்தி ரண்டாம் வீட்டில்
தீர்க்கமுடன் மாறுகிற பிரணவத்தைபாரே. 27

பாரப்பா பிரணவங்க ளேதென்றாக்கால்
பாலகனே டிம்டிம்டிம் மென்றேயோது
சீரப்பா யிருபத்தி மூன்றாம் வீட்டில்
சிற்பரனே மாறுகிற வினையங்கேளு
ஆரப்பா லூலூலூ வென்றேயோது
அப்பனே வசமாகும் பத்துநாலு
நேரப்பா யிருபத்தைஞ் சறையிலப்பா
நெடிதான வட்சரத்தைக் கேளுகேளே. 28

கேளப்பா வாவாவா வென்றபோது
கெவனமுட னறுபத்து நான்குசித்தும்
தேளப்பா கொட்டியதோர் விஷத்தைப் போல
தேற்றமுடன் சகலசித்து மாகும்பாரு
தாளப்பா பிரணவத்தால் சதாகாலந்தான்
சாற்றுகிறேன் சகலகலைக் கியானமெல்லாம்
பாளப்பா போகாமல் வரை கோடி காலம்
பாருலகி லிருப்பதுவே திண்ணமாமே. 29

## பட்சிவசிய மந்திரம்

திண்ணமா மின்னமொரு மாற்கங்கூர்வேன்
தீர்க்கமுள்ள புலஸ்தியனே தீரமாரா
வண்ணமாம் பட்சியிலே பட்சபட்சி
வளமான மானுடர்க் குபதேசங்கள்
கண்ணமுடன் எதிராளி பேரைக்கூறி
காவலனே தானழைக்கப் பட்சிதானும்
தண்ணமுட னடவணங்கி யுறக்கங்கொண்டு
தகைமையுடன் பட்சியது சோருந்தானே. 30

சோருமே யெந்தவகை பட்சிதானும்
சொற்பெரிய பேரதனை மாறுங்காலம்
வீருவே விடாய்தீர்த்து யுறக்கங்கண்டால்
வித்தகனே பொருத்தமுள்ள பட்சியாகும்
தீருமே பேர்மாறி பட்சிதன்னை
தீர்க்கமுடன் றாடைத்து மாற்கமெல்லாம்
சாருமே மானிடற்கு வமைக்குமல்லால்
சாங்கமுடன் மற்றவர்க்கு வாய்க்காதன்றே. 31

## மூலிகை வசியச் சக்கரம்

அன்றான குருபரனே புலஸ்தியாகேள்
அப்பனே மூலிகையின் மாற்கங்கூர்வேன்
குன்றான மூலிகைகள் கோடியுண்டு
கொற்றவனே வசியமென்ற மூலிதானும்
வென்றிடவே மூலியது யேதென்றாக்கால்
வித்தகனே முதற்பட்சி மூலிகேண்மோ
தென்றிசையாம் பட்சியிட மூலியெல்லாம்
தேற்றமுடன் யாமுரைக்க தெளிவாய்க்கேளே. 32

தெளிவான சாபமென்ற மூலிதானும்
தெளிந்துரைப்பேன் மாணாக்கள் பிழைக்கவென்று
நெளியான சாபமென்ற தழைதானப்பா
நேர்மையுடன் கூறுகிறேன் நேர்ந்தமட்டும்
பளியான வசியமடா கரும்பகளைதானும்
பாலகனே சிவந்தகொடி வேலிதானும்
வெளியான சிறியானின் நங்கைதானும்
வித்தகனே வசியமென்ற மூலிகாணே. 33

காணவே றழையதுதா னேதென்றாக்கால்
காவலனே கண்மணியே கவிராஜேந்திரா
பூணவே பெருங்குமிழி வல்லாரையாகும்
புகழான சிறுநங்கை பெரியநங்கை
மாளவே கருந்தும்பை கரிசல்தானும்
மகத்தான பெருந்தும்பை பூனக்காலி
பாணமா மிருவேலி நத்தைச்சூரி
பதிவான கவுழ்தும்பை முசலுமாமே. 34

ஆமேதான் சாபமென்ற மூலியப்பா
அப்பனே யின்னமுண்டு வரையக்கேண்மோ
நாமேதான் சொன்னபடி நாட்டிலப்பா
நாயகனே காணாத மூலியப்பா
தாமேதா னஷ்டசித்து மூலியப்பா
தகைமையுடன் தழையினது சாபங்கேண்மோ
ஆமேதா னசுவனியார் சொன்னநீதி
அப்பனே அசுவனியா லுரைக்கலாச்சே. 35

ஆச்சப்பா புலஸ்தியனே வறிவுள்ளானே
அகிலமெலாந் தான்பகட்டும் வசியமூலி
மூச்சடங்கி நெடுங்கால மிருக்குமூலி
மூதண்ட மூலியப்பா வாணமூலி
பாச்சலுடன் யோகமதை யுறுதியாக்கும்
பாலகனே சாபமென்ற மூலிகேணமோ
ஆச்சரிய மானதொரு மூலிதானும்
அருமூலி பெருமூலி யருமையாரே. 36

பாரப்பா வசுவனியார் பேராகேண்மோ
பதிவான மூலிகுரு மூலிதானும்
நேரப்பா விடைதாங்கி சிவனார் வேப்பு
நெடிதான பசுமூலி சிவதையாகும்
சாரப்பா தென்பொதிகை சார்பிலப்பா
தயாபரனே கருங்குவளை சாரைமூலி
ஆரப்பா நடுமைய முச்சிதன்னில்
அப்பனே தானிருக்கும் பொன்முசுட்டைதானே. 37

தானான முசுட்டையது சிவந்தமூலி
தண்மையுள்ள மூலியது பஞ்சவர்ணம்
தேனான மனோன்மணியாள் தானிருக்கும்
தெளிவான சித்திர பாலாடையாகும்
கோனான ராசாதி ராசமன்னர்
கொண்டணைக்கு மூலியது கோபுரமாமூலி
மானான மூலிமக தேவரப்பா
மானிலத்தில் வீற்றிருந்த மூலிதானே. 38

காணவே தழையான தழையுமாகும்
கானகத்தில் சித்தர்முனி ரிஷிகள்தேவர்
பூணவே கருவறிந்து தான்மறைத்தார்
புகழான மூலியது கோடியுண்டு
ஆணவங்கள் தானொடுங்கு மூலிதானும்
அப்பனே காயாதி மூலியாகும்
பாணம்போல் மூலியது சித்தர்கண்டு
பார்தனிலே தான்மறைத்தார் கோடியாமே. 39

கோடியாம் ஞானப்பா லூறுமூலி
கொடிதான மூலியது சொர்ணமூலி
பேடியா யிருந்தவரை மிரட்டுமூலி
பேரான மூலியது காயகற்பம்
தேடியே தானறிந்து வருந்துமூலி
தெளிவான மானிடரை மயக்குமூலி
வாடியே யலைந்தாலுங் கிட்டாமூலி
வளம் பெரிய நாதாக்கள் மூலிதானே. 40

தானான மூலியது யாற்குக்கிட்டும்
தயர்பரனே தண்மையுள்ள யோகிகாண்பான்
கோனான குருதேவ னருளிருந்தால்
குருபரனே யவர்தமக்குக் கிட்டும்பாரு
தேனான மனோன்மணியா ளருளிருந்தால்
தேசொளியின் சின்மயமா மூலிதோன்றும்
பானான பரஞ்சுடரி னருளினாலே
பார்தனிலே சிவன்மூலி காண்பார்பாரே. 41

பாரேதான் விட்டகுறை யிருந்ததானால்
பார்தனிலே தானமையும் பண்புள்ளானே
நேரேதான் வேதாந்தத் தாயின்பாதம்
நெடுங்கோடி காலம்வரை காணலாமே
சிரேதான் பாபிகட்கும் காமிகட்கும்
சிற்பரனே வசியமென்ற மூலிதானும்
தீறேதா னொருக்காலுங் கிட்டாதையா
திருமேனிக் காவலனே யுன்னிப்பாரே. 42

பார்க்கையிலே சிவயோகி காண்பான்பாரு
பதிவான தவயோகி காமியானால்
ஏர்க்கவே யொருபோதுங் காணமாட்டான்
யெழிலான சாபமென்ற மகிமைமூலி
தீர்க்கவே விதியிருந்தால் கிட்டும் பாரு
திகழ்பெரிய சித்துமுனி யானாலுந்தான்
மூர்க்கமுள்ள மூலியது காணப்போமோ
மூதண்ட மூலியது பெருமைகாணே. 43

## சத்துமூலிமகிமை

காணவே புலஸ்தியனே கருவுள்ளானே
காவலனே கண்மணியே கலிவல்லோய்கேள்
தோணவே சத்துவென்ற மூலிமாற்கம்
தொறைகோடி முறைகோடி தொந்தங்கோடி
மாணமருங் கல்வியுள்ள சித்துதாமு
மகதேவ ரிஷிமுதலோர் காண்பார்பாரு
ஆணவங்கள் தானொடுங்கி யிருந்தோர்க்கெல்லாம்
அப்பனே சத்துமூலி யமையும்பாரே. 44

பாரப்பா புலஸ்தியனே பாவலோய்கேள்
பாங்கான ஞானப்பா லுண்டகோவே
தேரப்பா விஷ்ணுவென்ற மூலிதானும்
தேற்றமுள்ள வுபரசமாம் வங்கமூலி
ஆரப்பா வறிவுடைய திருவுள்ளானே
அப்பனே கருங்கோவை மூலிதானும்
சீரப்பா செம்பினிட சத்தேயாகும்
திகழ்பெரிய தழையினுட மாற்கந்தானே. 45

தானான தழையதுதா னேதென்றாக்கால்
தன்மையுள்ள பனிநாக்கு தழைதானாகும்
கோனான தழையதுதான் சூதச்சத்து
கொற்றவனே வங்கமதை புரியுஞ்சத்து
தேனான தழையதனால் வங்கநீரை
தேற்றமுடன் றானிழுக்குந் தழைதானாகும்
பானான மூலியினால் வங்கந்தன்னைப்
பாருலகில் வெள்ளியது செய்வார்காணே. 46

செய்யவே தழையினது மூலிவேதம்
செப்பரிய யுபரசத்தைக் காட்டுமூலி
துய்யநல்ல வெள்ளிதனைக் காட்டுமூலி
துப்புரவாய் நாதாக்க ளறிந்தமூலி
வையகங்கள் தன்மதிக்குஞ் சித்தர்மூலி
வரணமுள்ள தழையதுதான் காரமெத்த
உய்யவே தென்சாரல் பதியிலோங்கும்
வுற்றகுரு நாதனிட மூலிகாணே. 47

காணவே பொன்னி னூமத்தைமூலி
கருவான மூலியடா கந்தர்மூலி
பாணமாம் பச்சையது தழையினாலே
பாருலகில் சொர்ணமதைக் காணலாகும்
தோணவே சாரதனைப் பிழிந்துமல்லோ
தோராமல் ரவிதனிலே காயவைத்து
மாணவே செம்புருக்கிக் கிராசமீய
மன்னவனே பசுமையடா தங்கந்தானே. 48

தங்கமா மூலியது தழைதானாகும்
சாங்கமுடன் சொர்ணமென்ற பீசமாகும்
சிங்கமதைத் தான்மயக்குந் தழைதானாகும்
சிற்பரனே யானைமுதல் வசியமாகும்
புங்கசித்தி யெட்டுரிய தழைதானாகும்
புகழான காயாதி யிதற்கொவ்வாது
எங்கேனுந் தேடியுழைந் தலைந்திட்டாலும்
என்மகனே விதியாளி காண்பான்தானே. 49

காண்பானே தழையினது மகிமையாலே
காவணத்தின் வசிக்குகின்ற மிருகமெல்லாம்
ஆண்பான மதமடங்கி தன்முன்னாக
அப்பனே யெதிர்வணங்கி பணியும்பாரு
சாண்பாம்பே யானாலு முந்தமக்குச்
சட்டமுடன் யேவலுக்கு முன்னாய்நின்று
வீண்பாக முறையாம லடிவணங்கி
வித்தகனே முறைபாடாய் நடக்கும்பாரே. 50

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே சிறுசோபை பூண்டேயாகும்
நேரப்பா பூண்டிவிட நேர்மை சொல்வேன்
நெடிதான மகிமையது யேதென்றாக்கால்
ஆரப்பா வெள்ளியிட சத்தேயாகும்
அப்பனே வப்பூண்டை பொடித்துமேதான்
சேரப்பா செம்பதனை யுருக்கிமைந்தா
செம்மலுடன் கிராசமது தருவாய்தானே. 51

தருவாயே மூலியது மகிமைமெத்த
தகைமையுடன் கொண்டவதற்குப் பெலுனுண்
டாகும்
குருவான பூண்டதுதான் தென்சாரலப்பா
குடிலமுட னடிவாரந் தன்னிலெல்லாம்
உருவான கல்நடுவில் மலையோரததில்
வுத்தமனே பெருகிருக்கும் பேணிப்பாரு
அருவான கானாறு மோடையுண்டு
அப்பனே யவ்விடத்தில் விளையாதன்றே. 52

## சுக்கான்பெருமை சித்தர் மறைப்பு

அன்றான யின்னமொரு போக்குகூர்வேன்
அருண்மைந்தா புலஸ்தியனே அறிவுள்ளானே
குன்றான தேசமப்பா சோழநாடு
குறிப்பான பாலநிலம் பகரக்கேண்மோ
தென்றிசையா சித்தர்முனி தேவர்தானும்
தேர்ந்தெடுத்த சுக்கானின் மார்க்கமெல்லாம்
வென்றிடவே நாதாந்த ரிஷிகள்தேவர்
வேட்கமுடன் கண்டதொரு பெருநாடாமே. 53

நாடான நாடதுவும் சோழநாடு
நாதாக்கள் கண்டறிந்த பெருநாடாகும்
காடான காடதுவும் பாலைபூமி
காவலனே சுக்கானின் வனமேயாகும்
தாடான கருஞ்சுக்கான் வெண்சுக்கான்றான்
தன்மையுள்ள செஞ்சுக்கான் மஞ்சசுக்கான்
கோடான படிகக்கல் குழாங்கல்லாகும்
கூறுவே னின்னமுந்தான் கூறுவேனே. 54

கூறுவேன் சுண்ணாம்புக் கல்போலாகும்
குறிப்பான வடுக்கான படிகக்கல்லாம்
தேறுடைய கருங்கல்போ லுதிருங்கல்லாம்
தேற்றமுள்ள செங்கல்போல் திரண்டிருக்கும்
மாறுடைய பூங்காவி பற்ப்பம்போலா
மன்னவனே பூவுதிருங் கல்போலாகும்
வீறுடைய கல்லுதா னென்னகூர்வேன்
வித்தான வேதாந்தக் கல்லுமாமே. 55

கல்லான கல்லதுவும் பெருமைமெத்தக்
காவலனே நாதாக்கள் மறைத்தகல்லாம்
புல்லான புல்லதுவும் வினையாபூமி
புகழ்பெரிய சித்தாந்தக் கல்லென்பார்கள்
வல்லமையால் பாலைவனங் கண்டபோதே
மகத்தான சுக்கானைக் காணலாகும்
தில்லைவனஞ் சென்றாலுங் காணமாட்டார்
தீர்க்கமுள்ள கல்லினிட பெருமைகேளே. 56

கேளப்பா புலஸ்தியனே பூபாலாகேள்
கெவனமுடன் பூம்பாரை பூமியெல்லாம்
தேளப்பா விஷம்போல் சுக்கான்மாற்கம்
தெளிவுடனே கண்டறிந்து வேதைமாற்கம்
ஆளப்பா செய்தாலே யதிதமாகும்
அப்பனே காயாதிக் குறுதிகாண்பாய்
மீளப்பா யோகநிலை காணவென்றால்
மிக்கான சுக்கானைத் தேடிக்கொள்ளே. 57

கொள்ளவே சுக்கானைக் கண்டபோதே
குவலயத்தி லறுபத்து சித்துமாகும்
தெள்ளமிர்த மானதொரு தேவிபாதம்
தேற்றமுடன் காண்பதற்கு யிடமுண்டாகும்
வள்ளலுயர் தெள்ளுதமிழ் முனிவர்நாதர்
வளம்பெரிய பதாம்புயத்தைக் காணலாகும்
கள்ளமில்லாச் செந்திருவே கன்னிநாதா
கருவான தடமதனைக் கண்டுகொள்ளே. 58

கண்டவுடன் ரிஷிபாதா காவலோனே
காசினியில் சித்துமுனி ரிடிகள்தேவர்
அண்டர்முனி ராட்சதர்கள் மாண்பரெல்லாம்
அப்போதே பார்த்தவுடன் யுனைமதிப்பார்
தண்டகா ரணியமெனும் பாலைநாடு
தகைமையுள்ள முப்பூவும் பூர்க்குநாடு
கொண்டல்வண்ண னச்சுதனுங் கண்டநாடு
கொற்றவனே லபியிருந்தால் கிட்டுந்தானே. 59

தானான புலஸ்தியனே தம்பிரானே
தகைமையுடன் பலநூலுங் கண்டாராய்ந்து
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்தவார்போல்
தேனான மனோன்மணியா ளருளினாலும்
தேசொளியின் சின்மயத்தின் கடாட்சத்தாலும்
பானான பராபரியின் கிருபையாலும்
பாலித்தேன் காவிய மாந்ரீகந்தானே. 60

திரியமாம் காவியந்தி லைந்தாம்பாகம்
தீர்க்கமுடன் யானுரைத்தேன் தெளிவதாக
உரியதொரு கருவிகா ணாதியந்தம்
உத்தமனே கருக்குருவைக் கண்டாராய்ந்து
சரியான முறைபாடு வழிபாடோடும்
சாற்றினேன் குணபாடு தேவபாடு
துரியமுள்ள வத்துவித ஞானமந்திரம்
துப்புரவாய் தான்மதித்து துலக்கலாச்சே. 61

துலக்கவே கைபாகஞ் செய்பாகந்தான்
துப்புரவா யடியேனுந் துகளகற்றி
கலக்கமது நேராமல் பலநூல்கண்டு
கண்மணியே மாணாக்கள் பிழைக்கவென்று
வலக்கரமா மடக்கோலை கோர்வைபூண்டு
மகத்தான ரகசியந்தா னதர்வணந்தான்
பெலக்கவே மானிலத்தில் பிழைநேராமல்
பேருடனே பாடியதோர் காவியமுமாச்சே. 62

ஆச்சப்பா நாதாக்க ளனந்தம்பேர்கள்
அவனியிலே வெகுநூல்கள் பாடியேதான்
மூச்சடங்கி நெடும்வரையாங் கோடிகாலம்
மூதுலகில் சமாதிமுகம் பூண்டுகொண்டு
மாச்சலது கொள்ளாமல் யுகாந்தகால
மன்னவனே தாமிருந்து நூல்மறைத்தார்
பாச்சலது நேராமல் பாவலோய்கேள்
பாருலகில் பாடிவைத்தேன் பெருநூலாச்சே. 63

பெருநூலாங் குருநூலா மாந்திரிகந்தான்
பேரான காவியந்தா னதர்வணந்தான்
ஒருநூலு மிந்நூலுக் கொவ்வாதையா
உத்தமனே சடக்கறிந்து தாள்கொண்டேதான்
கருநூலாம் பூட்டுமுகந் திறந்துகாட்டி
காசினியில் மாணாக்கள் பிழைக்கவென்று
குருநூலாம் பதப்பொருள்கள் மறைப்புமாற்கம்
குறிப்புடனே விரித்துரைத்தேன் கூர்மைபாரே. 64

## வனமூலி மந்திர உபதேசம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே வனத்திலுள்ள மூலியெல்லாம்
நேரப்பா சாபமதை நீக்கியல்லோ
நேர்மையுடன் வாரமது நாளுங்கண்டு
தேரப்பா மந்திரமா முபதேசங்கள்
தேற்றமுடன் தூப நைவேத்தியங்கள்
ஆரப்பா மூலிக்கு காப்பணிந்து
அப்பனே செய்பவனே யோகியாமே. 65

## கவுதும்பை சாபம்

ஆமேதான் புலஸ்தியனே புனிதபாலா
அப்பனே தென்சாரல் பதியோனேகேள்
தேமேதான் கவுதும்பை உபதேசத்தை
செப்புகிறேன் மாணாக்க ளறியவேண்டி
நாமேதான் சொன்னபடி ரிங்ரிங்கென்று
நாயகனே நானூறு வுருவுதாக்கு
போமேதான் காப்புமீயக் கட்டியேதான்
பொங்கமுடன் சாபமதை நீக்கிடாயே. 66

## தும்பை சாபம்

நீக்கியே தும்பைக்கு உபதேசங்கள்
நீணிலத்தில் செப்புகிறேன் நீதிவானே
ஆக்கமுடன் டங்டங்டங் கென்றேயோது
அப்பனே நூல்கட்டி சாபம்நீக்கி
தூக்கமது தான்விழித்து பாதிராவில்
துப்புரவா யுபதேசம் வெண்ணூறாகும்
ஊக்கமுடன் பூமிருந்து பிரணவத்தை
உச்சரித்தால் வசியமது காணலாமே. 67

## நின்றுசிணுங்கி சாபநிவர்த்தி

காணலா மின்னமொரு கருவைக்கேளும்
காவலனே புலஸ்தியனே கவிவல்லோய்கேள்
பூணவே சிணுங்கிக்கி உபதேசங்கள்
புகலுகிறேன் மன்னாதி ராசர்முன்னே
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அரிஅரி அரிஅரி யென்றேயோதி
நீணவே யெண்ணூறு வுருதான்போடு
நீமகனே வசியமது மெய்யுமாமே. 68

## அண்ணெரிஞ்சான் பூண்டு சாபம்

மெய்யான யின்னமொரு மூலிகேண்மோ
மேதினியி லண்ணெரிஞ்சான் பூண்டேயாகும்
துய்யவே சாபமதை நீக்கியல்லோ
துப்புரவாய் ஓமென்ற பிரணவத்தை
வையகங்கள் தானரிய வாயிரந்தான்
வாகுடனே நூல்கட்டி யுருவேபோடு
வெய்யபுகழ் மானிடர்க ளறியவேண்டி
வித்தகனே பிரணவத்தைக் கூறலாச்சே. 69

## சிறுபுள்ளடி சாபம்

ஆச்சப்பா புள்ளடியின் சாபங்கேண்மோ
அப்பனே புதவாரங் காப்பணிந்து
மூச்சடங்கி மோனநிலை கொண்டுமேதான்
மோனமென்ற உயிரெழுத்தை லட்சமோது
பேச்சடங்கி யெதிராளி பகைவரெல்லாம்
பேரின்ப சாகரத்தை மனதிலுன்னி
பாச்சலுட னுனைப்பணிவார் பொருளுமீவார்
பாலகனே நீயுமொரு சித்தனாமே. 70

## பொன்முசுட்டை சாபம்

சித்தனா மின்னமொரு முறைமைகேண்மோ
செகதலத்தில் பொன்முசுட்டை மூலிமாற்கம்
வித்தகனே சாபமறு நீக்கவேதான்
வீரான பிரணவங்க ளேதென்றாக்கால்
முத்தர்மனம் போலிருந்து மூர்க்கம்நீங்கி
மூண்டதொரு ஆங்கார பிரணவத்தை
சுத்தமுடன் லட்சமுரு ரண்டேயாகும்
சுந்தரனே தானோத வசியந்தானே. 71

## நத்தைச்சூரி சாபம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
சதகோடி சூரியன்போல் பிரகாசிப்பாய்
தேனான நத்தையின் சூரிசாபம்
தெளிவுடனே செப்புகிறேன் தேர்ந்துபாரு
மானான பிரணவங்க ளேதென்றாக்கால்
மன்னவனே சூசூசூ வென்றேயோது
பானான வுருவது நான்குலட்சம்
பாலகனே காப்புடனே வோதுவோதே. 72

## சூரியகாந்தி சாபம்

ஓதவே யின்னமொரு வினோதங்கேளீர்
உத்தமனே சூரிய காந்திசாபம்
நீதமுடன் பிரணவங்க ளேதென்றாக்கால்
நிஷ்களங்க வுருவதுதான் வாவாவாவாகும்
தோதமுடன் லட்சமுரு செபித்தாயானால்
தோராமல் மூலியின்றன் சாபநீங்கி
ஆதமுடன் வையகத்தில் கோடிகாலம்
அப்பனே தப்பாது வொப்பதாமே. 73

## விஷ்ணுகாந்தி சாபம்

ஒப்பான யின்னமொரு முறைமைகூர்வேன்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தசேதி
செப்பவே விஷ்ணுவாங் காந்தசாபம்
செம்மலுடன் மாணாக்க ளறியவேண்டி
தப்பாது பிரணவங்க ளேதென்றாக்கால்
தயாபரனே சிம்சிம்சிம் மென்றேயோது
எப்படியும் லட்சமுரு செபித்தாயானால்
யென்மகனே லோகசித்த னாகுவாயே. 74

## குப்பைமேனி சாபம்

ஆகுவா யம்பலவா புலஸ்தியாகேள்
அப்பனே பூனைதாள் வளங்குமேனி
வாகுடனே சாபமதை நீக்குதற்கு
வளம்பெரிய பிரணவங்க ளேதென்றாக்கால்
சாகுடைய வட்சரமாம் தூதூவாகும்
சதுரமன்னர் தான்மயங்குந் தழைதானாகும்
நாகுடனே லட்சமுரு வோதுவோது
நாயகனே நாடெல்லாம் வசியந்தானே. 75

## ஆனைவணங்கி சாபம்

தானான புலஸ்தியனே தருமவானே
தயாநிதியே சங்கநிதி சார்பேகேண்மோ
கோனாண வானையென்னு மூலிசாபம்
கொடுஞ்சருக்குப் பிரணவங்க ளேதென்றாக்கால்
மானான வட்சரமாம் றீங்ரீயுமாகு
மகத்தான வுருவதுதான் லட்சமோது
பானான படைமன்னர் கோடிபாகம்
பாலகனே தலைவணங்கு மூலிதானே. 76

## சோதிவிருட்ச சாபம்

தானான சோதியென்ற மூலியப்பா
தயாபரனே வடமேரு சாரலோரம்
மானான பதியாகும் கானாறாகு
மகத்தான குண்ணுவென்ற குகைதானாகும்
பானான குகைநடுவில் விருட்சமப்பா
பாலகனே தானிருக்கும் சித்தர்காண்பார்
கோனான விருட்சமது சாபம்நீக்க
கொற்றனே பிரணவங்கள் கூறுவேனே. 77

கூறுவேன் பிரணவங்க ளேதென்றாக்கால்
குருபரனே ரிஷிமுனியே நாதாவென்பாய்
மாறுபடா லட்சமுரு வோதுவோது
மகதேவா கமுகாவென் றாயிரந்தான்
வீறுடனே யுச்சாடஞ் சோதிக்கப்பா
வித்தகனே காப்பணிந்து நைவேத்தியங்கள்
ஆறுதலாய் பூசைவிதி தானமர்த்தி
அப்பனே அறுபத்து நான்குமாடே. 78

ஆடலாம் செகசால மாந்திரீகசாலம்
அப்பனே மைப்போக்கு வசியமார்க்கம்
காடலாங் கண்டுமிகத் திரியலாகும்
காவணதின் மிருகமெல்லாம் வசியங்கொள்வார்
பாடலாம் ரூபமின்றிப் பாடலாகும்
பாருலகம் பிரமிக்கச் செய்யலாகும்
தேடலாம் நவகோடி திரவியங்கள்
திக்கெட்டுங் கொண்டாட பேர்கொள்வாரே. 79

## தலைச்சுருளி சாபம்

கொள்ளவே யின்னமொரு கூர்மைகூர்வேன்
குவலயத்தில் நாதாக்கள் மறைத்தசேதி
தெள்ளமிர்த மானதிரு களியப்பா
தேசொளிவின் மூலிகைக்குச் சாபங்கேண்மோ
வள்ளல்பெரு பிரணவங்கள் யேதென்றாக்கால்
வளமுடனே ரிம்ரிம்ரிம் மென்றோது
கள்ளமிலா வுருவதுதான் லட்சமாகும்
காவலனே காப்பணிந்து வுருகொள்வீரே. 80

கொண்டாலே யுலகுபதி மாண்பரெல்லாம்
கோடிதல முனைப்பணிவார் அதீதமெத்த
கண்டாலு மிருகமெலா முன்னைத்தானும்
காலைத்தான் வணங்கும்கவி ராஜேந்திரா
விண்டதொரு மூலிகையின் மகிமைதன்னை
விண்ணுலகில் சித்தரெல்லாம் மறைத்துவைத்தார்
சண்டமா ருதம்போலக் காவியந்தான்
சாற்றினே னுலகுபதி பிழைக்கத்தானே. 81

## செந்தொட்டி சாபம்

தானான யின்னமொரு போக்குச்சொல்வேன்
தயாநிதியே புலஸ்தியனே தம்பிரானே
தோனான செந்தொட்டி சாபங்கேண்மோ
செங்கமலக் கண்ணானே செந்தேனேகேள்
மானான மந்திரமா மேதென்றாக்கால்
மகதேவா ரும்ரும் மென்றோது
பானான வுருவதுவு லட்சமாகும்
பாலகனே காப்பணிந்து செபித்திடாரே. 82

## கொல்லைப்பல்லி சாபம்

செபித்திடவே யின்னமொரு மார்க்கம்பாரு
தேசிகனே செம்பவள வாயாதூயா
குவித்திடவே கொல்லையென்ற பல்லிசாபம்
கொற்றவனே கூறுகிறேன் குமுதவனே
தயித்திடவே முனைக்கு சாபங்கேண்மோ
தயாபரனே ராராரா வென்றேயோது
நயித்திடவே பிரணவத்தை உச்சரித்தால்
நாயகனே மூலியது வசியந்தானே. 8[illegible]

வசியமா மூலியப்பா செகவசியமாகும்
வளம்பெரிய நாதாக்கள் மறைத்தார்கண்டீர்
நிசிதமென்ற பதினெண்பேர் சித்தர்தாமும்
நீடாழி யுலகுட மாண்பற்கெல்லாம்
உசிதமென்ற மூலிகைத்தான் காண்பாரானால்
உத்தமனே செகமெல்லாம் வசியங்காண்பார்
பசிதமுடன் சாபமது தன்கொடாது
பாலகனே தான்மறைத்தார் சித்தர்காணே. 84

## விடதாரி சாபம்

காணவே யின்னமொரு கருமானங்கேள்
காவலனே கண்மணியே கலிவல்லோய்கேள்
பூணவே விடதாரி மூலிசாபம்
பொங்கமுடன் புகலுகிறேன் புனிதபாலா
மாலவே பிரவணங்க ளேதொன்றக்கால்
மன்னவனே சிம்சிம் மென்றோது
தோணவே லட்சமுரு வோதும்போது
தோயுமே மூலியது தோயுமாமே. 85

தோயுமே சாப்பணிந்து உச்சரித்தால்
தொல்லுலகில் மூலியது சித்திக்கும்பார்
பாயுமே கனலேறி சுவாசங்கொண்டால்
பாலகனே காயசித்தி யதற்குள்ளாகும்
மாயுமே லோகமெல்லாம் வசியங்கொள்வார்
மகத்தான மிருகமெல்லா மும்மைக்காணும்
தாயுடனே கன்றுமுத லும்மைக்கண்டு
தயாபரனே பரதவிக்கும் பான்மைபாரே. 86

## குடிக்குச்சகுனி சாபம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் தென்பொதிகைக் கரசேகேண்மோ
ஆரப்பா குடிசகுனி சாங்கூர்வேன்
அப்பனே பிரணவங்க ளேதென்றாக்கால்
தேரப்பா உம்உம்உம் மென்றோது
தெளிவுடனே மூலிக்குக் காப்பணிந்து
மாரப்பா லட்சமுரு போடுபோடு
மகத்தான மானிடரும் வசியந்தேறே. 87

## ஆகாச கெருடமூலி சாபம்

தேறவே யின்னமொரு தேற்றங்கூர்வேன்
தென்பொதிகைத் தானமர்ந்த சிங்கவேறே
மீறவே கெருடனிட மூலிசாபம்
மிக்கவே கூறுகிறேன் பிரணவத்தை
ஆறவே டங்டங்டங் டங்கென்றோது
அப்பனே வுருவதுவும் லட்டசமாகும்
கோறவே யுச்சாடஞ் செய்தாயானால்
கொற்றவனே யுலகுபதி உனக்குள்ளாச்சே. 88

ஆச்சப்பா மூலிகைக ளின்னங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அறிவுள்ளானே
மூச்சடங்கி நெடுங்காலம் பொதிகைதன்னில்
முனிவர்முதல் நாதாந்த ரிஷிகள்தேவர்
பாச்சலுடன் சமாதிமுகம் யோகம்பூண்டு
பாங்குடனே மூலிகைக்குச் சாபங்கொண்டார்
ஏச்சலது நேராம லென்றன்தேவர்
எளிதுடனே சாபமதை நீக்கிட்டாரே. 89

## வடபொதிகை மூலிசாபம்

நீக்கவே யின்னமொரு மாற்கங்கூர்வேன்
நீனித்தில் வடபொதிகை மூலிசாபம்
போக்கினளர் யிவ்வுலகில் பார்த்தானுண்டோ
பொங்கமுட னெதையா ரசுவனியாந்தேவர்
ஆக்கவே மூலியிட சாபந்தன்னை
அம்மலையில் தாநீக்கி யருள்கொண்டாரே
குக்கமெனுந் தூலமதை தானெழுப்ப
துப்புரவாய் மூலியது கண்டிட்டாரே. 90

## தேவதாவிருட்ச மூலிசாபம்

கண்டாரே வடபொதிகை காவனத்தில்
காவலனே வடமேரு சித்தரெல்லாம்
விண்டதொரு மூலிகையின் யாபமெல்லாம்
வீறுடனே நிவாத்திமிகச் செய்துமேதான்
அண்டர்பிரான் முன்னிலையாய் தோஷம்நீக்கி
அன்புடனே சாபமதை நிவர்த்தி செய்து
சண்டமா ருதம்போலே தரணியில்யாற்கு
சாற்றினார் மாந்திரீக காவிரந்தனாச்சே. 91

ஆச்சப்பா தேவதா விருட்சசாபம்
அறையுகின்றேன் மானிடர்கள் பிழைக்கவென்று
மாச்சலுடன் விருட்சமாம் காப்பணிந்து
மன்னவனே பிரணவங்கள் கூறவேண்டும்
பாச்சலுட னுபதேச மேதென்றாக்கால்
பாலகனே தூம்தூம்தூ மென்றேயோது
கூச்சலுடன் வுருவதுவும் லட்சமாகும்
குருபரனே யோதிடவே வசியந்தானே. 92

## திகைப்பூண்டு சாபம்

தானான மச்சகேந்திரா புலஸ்தியாகேள்
தயாநிதியே பரஞ்சுடரே தம்பிரானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் வடிபொதிகை சென்றகாலம்
மானான மூலிகையின் சாபமெல்லா
மன்னவனே நிவர்த்திசெய்து மானாக்கற்காய்
தேனான தென்மலையில் சமாதிகொண்டார்
தேசொளினின் சின்மயத்தின் கடவுளாரே. 93

கடவுளாந் திகைப்பூண்டு மூலிசாபம்
காவலனே கூறுகிறேன் கருவுள்ளானே
அடவான கானகத்தில் விளையும்பூண்டு
அப்பனே சாபமதை நீக்குதற்கு
தடமானே பிரணவங்க ளேதென்றாக்கால்
சதாகிலமே கற்பகமே சாசாசாசா
சடமான சாபமதை வாசிபூண்டு
சந்திரனே லட்சமுரு வோதுவோதே. 94

## கஞ்சாங்கோரை சாபம்

ஓதவே யின்னமொரு முறைமைசொல்வேன்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
நீதமுடன் கஞ்சாவின் கோரைசாபம்
நேர்மையுடன் போக்குதற்கு நெளிவைக்கேண்மோ
தோதமுடன் பிரவணங்க ளேதென்றாக்கால்
தோறாமல் குருகுரு வென்றேயோது
ஆதமுடன் லட்சமுரு வோதுவோது
ஐங்கரனே சாட்சியாய் சித்தியாமே. 95

சித்தியா மின்னமொரு சீர்மைகூர்வேன்
சிற்பரனே திருக்கடலே தேனேகேண்மோ
முத்தியா வூமத்தையிட சாபங்கேளீர்
மூதுலகில் நாதாக்கள் மறைத்துவைத்தார்
வெத்தியுள்ள பிரணவங்க ளேதென்றாக்கால்
மேதினியில் யாமுரைப்போ முறுதிபாரீர்
சத்தியமாய் ரங்ரங்ரங் கென்றேயோது
சதாசிவமே லட்சமுரு போடுபோடே 96

## பெருவாகை சாபம்

போடவே யின்னமொரு பொறுமைகூர்வேன்
பொன்னுலக புலஸ்தியனே புனிதவானே
நாடவே பெருவாகை மூலிசாபம்
நாட்டிலே நாதாக்கள் மறைத்தாரல்லோ
தேடவே யடியேனு மனதுவந்து
தேசொளிவின் சின்மயத்தி னருளினாலே
நீடவே யடியேனும் பிரணவத்தை
நீதியுடன் கூறுகிறேன் கேளுகேளே. 97

கேளப்பா மௌனநிலை கொண்டுமேதான்
கெவனமுடன் ஓம்நம சிவயவென்று
தாளப்பா லட்சமுரு வோதும்போது
தாரணியில் மூலியின்றன் சாபந்தீர்ந்து
மீளப்பா யுந்தமக்கு வசியங் கொள்வீர்
மிக்கான சத்துருக்கள் பணிவார்பாரு
ஆடப்பா யுனைப்போல சித்தமுண்டோ
அவனியிலே நீயுமொரு நாதனாச்சே. 98

## காசாமூலிசாபம்

ஆச்சப்பா யின்னமொரு மூலிகூர்வேன்
அப்பனே காசாவின் மூலிசாபம்
மாச்சலென்னும் பிரணவங்க ளேதென்றாக்கால்
மன்னவனே கூகூகூ வென்றேயோது
பாச்சலெனும் வுருவதுவே லட்சமோது
பாலகனே சகலமுந்தான் வசியமாகும்
பாச்சலுடன் சமாதிமுகம் பூண்டுகொண்டு
பாங்குடனே மௌனநிலை சாதிப்பாயே. 99

சாதிப்பாய் சருக்கமது ரண்டுக்குள்ளே
சாங்கமுடன் மூலியிட பிரணவங்கள்
பேதிக்க பாடலது யிருநூறுக்குள்
பேசினேன் மந்திரமா மதர்வணங்கள்
வாதிக்க சித்தாதி முனிவர் தாமும்
வாகுடனே மடைதிறப்பை திறந்துவிட்டேன்
ஆதித்தன் சந்திரன்போல் பாடல்நூறு
அப்பனே சருக்கமது ரண்டுமுற்றே. 100

சதுர்வேத மந்திரச்சருக்கம் முற்றுப்பெற்றது

ஆக தொகை பாடல்—201

கடவுள் துணை

## மூன்றாவது

### குருபீடவதர்வணச் சருக்கம்

முற்றான மூன்றாங்கால் சருக்கமப்பா
மூவுலகும் தான்மதிக்கு முனிவல்லோய்கேள்
சற்றான காயாதி கற்பமூலி
சதுரான பிரணவத் தொகுப்பையெல்லாம்
கற்றதொரு முனிநாதர் தேவர் தாமும்
காசினியில் தான்மறைத்தார் லக்கோயில்லை
வெற்றியுட னசுவனியார் பாதங்கொண்டேன்
வேதாந்தத் தாயாரு மருள்கொண்டாரே. 1

### வடபொதிகை காயகற்பமூலி

கொண்டாரே யின்னமொரு மகத்துவங்கள்
கோடான வுட்கருவு கோடாகோடி
அண்டமுனி ராட்சதர்க ளறியாமூலி
அப்பனே குருமூலி யாடுமப்பா
தண்டகா ரணியமென்னும் காவணத்தே
தயாபரனே தானிருக்கு மூலியப்பா
தொண்டர்களுங் காணாத சாபமூலி
தோராத காயகற்ப மூலியாச்சே. 2

ஆச்சப்பா யின்னமொரு சித்தர் தாமும்
அப்பனே மனதுவந்து சொன்னதுண்டோ
மூச்சடங்கி நெடுங்கால மிருப்பதற்கு
முதன்மையாம் வாசிமுகங் கொண்டதற்கும்
பாச்சலெனும் காயகற்ப மூலிப்பேரை
காவலனே கண்டறிந்து யுபதேசிப்பேன்
மாச்சலது நேராத மாயாமூலி
மன்னவனே விபரமது செப்பக்கேளே. 3

## பொன்னாங்கண்ணி காயகற்பம்

செப்பவென்றால் யின்னமொரு கூர்மைகூர்வேன்
செகதலத்தில் நாதாக்கள் மறைத்தமூலி
ஒப்பவே வடபொதிகை தன்னிலப்பா
வுத்தமனே நடுமையம் தெற்குபாகம்
கெப்பான கிளையுடனே சிவந்தபுஷ்பம்
கெடியான யிலையதுவு மஞ்சள்வர்ணம்
தப்பாது சதுர்த்திருக்கும் தழைதானப்பா
தகைமையுடன் கண்டறிந்தால் சித்தனாமே. 4

சித்தனாம் கண்ணியது புஷ்பங்கொண்டால்
தேசொளிவின் சின்மயத்தி நருளிநாலே
பத்தனர்ய் வருடமது முன்னூறுக்குள்
பாலகனே லோகமதி லிருக்கலாகும்
சத்தான மூலியிட இலையுமுண்டால்
சதாசிவம்போல் முன்னூறு வருடமட்டும்
வித்தகனாய் காயாதி கொண்டபோது
விருப்பமுடன் தேகமது கற்றூணாமே. 5

## பொன்னாவாரை கற்பம்

கல்லான தூணதுவு மென்னகூர்வேன்
காவலனே புலஸ்தியனே மச்சகேந்திரா
புல்லான வடபொதிகை குன்றுமேலே
புகலுகிறேன் நாதாக்கள் மறைத்தகூத்து
வல்லாண்மை கொண்டதொரு காயமூலி
வளமான மூலியடா பொன்னாவாரை
சொல்லவே போகாது சொர்ணமூலி
சுந்தரனே பூவதுவும் நீலமாமே. 6

நீலமாம் பூவதுவும் நான்கதாகும்
நிஷ்களங்க மானதழை மஞ்சளாகும்
மூலமாம் நிறமதுவுங் கறுப்பேயாகு
முத்தமனே மொக்கதுவும் வெளுமையாகும்
ஆலமாம் விதையதுவுங் கடுகுபோலாம்
அப்பனே கொண்டவற்கு வயதுகூர்வேன்
தாலமதி லிருப்பதற்கு காயகற்பம்
தயாபரனே யிம்மூலி வேகங்கேளே. 7

கேளப்பா பூவதுவை யுண்டபேர்க்கு
கெடியான வயததுவோ வைந்நூறாகும்
தாளப்பா தழையதுவை யுண்டபேர்க்கு
தன்மையுடன் வயததுவு முன்னூறாகும்
தேளப்பா மூலமதை யுண்டபேர்க்கு
தேற்றமுடன் வயததுவு மறுநூறாகும்
ஆளப்பா மொக்கதுவை யுண்டபேர்க்கு
அப்பனே வயததுவும் நானூறாமே. 8

ஆமேதான் வித்ததுவை யுண்டபேர்க்கு
அப்பனே வயததுவு மெண்ணூறாகும்
நாமேதான் சொன்னபடி காயகற்பம்
நாயகனே நாமுரைத்தோம் நளினவானே
போமேதான் மூலியிட மகுத்துவத்தைப்
பொங்கமுடன் மாணாக்கள் பிழைக்கவென்று
வேமேதான் காவியமா மிந்தநூல்தான்
விருப்பமுடன் பாடியிந்த நூலுமாச்சே. 9

## செங்கடுக்காய் கற்பவிருட்சம்

நூலான நூலிதுதான் வைந்தாம்பாகம்
நுட்பமுடன் பாடியதோர் பஞ்சநூலில்
பாலான காவியமா மத :வணந்தான்
பாலகனே மாந்திரீக காவியமுமாகும்
சேலான காவியத்தில் காயகற்பம்
செப்பினேன் சடக்கறிந்து நடக்கை கொள்வீர்
மேலான நூலுண்டோ காவியந்தில்
மேன்மையிது பொய்யாது மெய்யுமாமே. 10

மெய்யான செங்கடுக்கா மகிமைகூர்வேன்
மேன்மையுள்ள புலஸ்தியனே மச்சகேந்திரா
வையகங்கள் தானறிய வடபாகத்தில்
வளம்பெரிய வடபொதிகை சாரல்காண்பீர்
துய்யநல்ல குன்னுண்டு குகைதானுண்டு
துப்புரவா யண்ணார்ந்து பார்த்தாயானால்
மெய்யான சோதிபோல் வெளிச்சமொன்று
மேன்மையுடன் கண்ணுக்குத் தோற்றும்பாரே. 11

பார்க்கையிலே விருட்சமது காணும்பாரு
பாலகனே விதியிருந்தா லுனக்குக்கிட்டும்
ஏர்க்கவே குன்றருகே சென்றாயானால்
யெதிராக முன்னிற்பார் ரிஷிகள் கோடி
தீர்க்கமுட னவர்பாதங் காண்பாயானால்
தீவிரமாய் யுன்னையவர் வேண்டிகேட்பார்
ஆர்க்கவே யடியேனு மும்மைக்காண
அய்யனே வந்தனென்று அடிகொள்வீரே. 12

கொள்வதுதா னேதென்று வினவிக்கேட்பார்
கொற்றவனே யடியேனு மூலி கற்பம்
தெள்ளமிர்த மானதொரு காயகற்பம்
செந்திருவே செங்கடுக்காய் வேண்டுமென்று
கள்ளமிலா மனதுடனே கலங்கியேதான்
கண்மணியே கேட்டவற்குக் கிட்டும்பாரு
வள்ளலே யுந்தமக்கு கற்பந்தந்து
மானிலத்தில் போகவென்று வரமீவாரே. 13

வாறான கற்பமது செங்கடுக்காய்
வாகுடனே தாம்வாங்கு மண்டலந்தான்
கூறான முறைபோல கொண்டபேற்கு
குவலயத்தி லாயிரமா மாண்டுமட்டும்
வீறுடனே யிருப்பதற்கு வையமுண்டோ
வித்தகனே காயாதி நெடுங்காலந்தான்
தேறுதலா யிருந்துமல்லோ மகிமையெல்லாம்
தெளிவுடனே கண்டறிந்து தெளியலாமே. 14

தெளியலா மனவாக்கு பஞ்சபூதம்
செகந்தனிலே யுள்ளளவு மளவுகாண்பார்
சுளியதுவுங் கனல்கொண்டு மேலேறாது
சுந்தரனே முறைபாடு விதிபாடோடும்
நெளிவுடனே யிந்திரன்போல் சட்சித்துண்டு
நெடுங்கடலா மஷ்டதிக்குங் காணலாகும்
அளியாமல் நெடுங்கால மிருந்துக் கொண்டு
அஷ்டாங்க சமாதிமுதல் கொள்ளுவீரே. 15

## கருங்கடுக்காய் விருட்சம்

கொள்ளவே யின்னமொரு முறைமைசொல்வேன்
கூரான வடபாகம் கீழ்ப்பாகந்தான்
தெள்ளமிர்த மானதொரு குகைதானுண்டு
தேற்றமுள்ள குகைநடுவில் சோலையப்பா
விள்ளவே நடுமையங் கருங்கடுக்காய்
வுத்தமனே விருட்சமது வொன்றுகாண்பீர்
முள்ளான மரமதுதான் கருங்கடுக்காய்
உத்தமனே தானிருக்குங் கண்டுபாரே. 16

பாரப்பா புலஸ்தியனே கடுக்காய்கற்பம்
பாவலனே கொண்டாக்கால் நரையும் போச்சு
தேரப்பா நரைதிரையு மற்றுப்போச்சு
தெளிவான தேகமது கற்றூணாச்சு
ஆரப்பா காயாதிக் குறுதியாச்சு
அப்பனே வரைகோடி நெடுங்காலந்தான்
நேரப்பா சமாதிமுக மிருந்துக் கொண்டு
நெடுங்கடலா முலகபதி யிருக்கலாமே. 17

இருக்கவென்றால் சுவாசமது மேலேறாது
யெளிதான மேனியது வண்டுபோலாம்
திருக்கமலம் வீற்றிருக்குந் தாயார்பாதம்
தீர்க்கமுட னென்னாளு முறுதிகொள்வீர்
பொங்கமுட னாயிரமா மாண்டுமட்டும்
பேருலகில் தாமிருந்து வசிக்கலாகும்
ஒருத்தருமே மைக்கண்டா லையாகேளிர்
ஓகோகோ யிவர்மாயா சித்தென்பாரே. 18

சித்தான சித்தெல்லாம் பேசலாகும்
சிற்பரனே லோக கைலாசமென்பார்
முத்தான முனிவரென்றும் ரிஷிதானென்பார்
மூதுகைக் கட்டறுத்த சிவமேயென்பார்
சத்தான கடலேழுஞ் சுத்திவாத
சதாசிவமே யிவரென்பார் தரணிமீதில்
வித்தான கருங்கடுக்க மகிமையப்பா
விண்ணுலகில் கண்டவனே சித்தனாமே. 19

## செங்கொடுவேலி கற்பம்

### மண்டலச் சிறப்பு

ஆமேதா னின்னமொரு வதிசயங்கேள்
அப்பனே சிகாமணியே ஒளியே கேண்மோ
நாமேதான் சொன்னபடி யெந்தன் தேவர்
நாதாந்த சித்தொளிவாம் நளினவானே
தாமேதான் சொன்னமொழி தவறிடாமல்
தடமான வடபொதிகை சாரலோரம்
போமேதான் சென்றவழி தடமுங்கண்டு
பொங்கமுடன் சென்றாலே கானாறாமே. 20

ஆறான வாற்றருகே சென்றபோது
அய்யனே புலஸ்தியனே அறிவுள்ளானே
கூறான தடமொன்று மண்டபந்தான்
குருபரனே லட்சங்கால் என்னலாகும்
நீறான சுண்ணாம்பு பூமியாகும்
நிஷ்களங்க மானதோர் மண்டபந்தான்
வீறான மண்டபத்தி னம்பலத்தை
வித்தகனே சொல்வதற்கு நாவொண்ணாதே. 21

ஒண்ணாது சேடனா லுரைக்கலாகா
ஒகோகோ நாதாக்கள் கூறவில்லை
அண்ணார்ந்து பார்த்தாலு மண்டபந்தான்
அப்பனே கண்ணுக்கு தோன்றலாகா
மண்ணாளும் வேந்தர்முதல் ராசர்தாமு
மாநிலத்தி லாரேனுங் கண்டதுண்டோ
விண்ணாடர் கண்டதல்லால் வேறேயார்தான்
வித்தகனே கண்டதில்லை விளம்பிட்டேனே. 22

விளம்பினேன் மண்டபந்தான் சுற்றிலோரம்
வித்தகனே கொடுவேலிக் காடேயாகும்
தளம்பெரிய காவணத்தில் ரிஷிகள்சித்தர்
தயாபரனே கூட்டமிட்டு நாட்டங்கொள்வார்
சளமதுவும் வாறாத சித்துகூட்டம்
சங்கரனே சதகோடி ரிஷிகளப்பா
உளந்தெரிந்த கூட்டமதைக் கண்டாலல்லோ
வுத்தமனே யுந்தமக்கு சேர்வையாமே. 32

சேர்வையாம் புலஸ்தியனே தியபாலா
செங்கமலர் கண்ணானே செப்பக்கேண்மே
நேர்மையுடன் தேவரிஷி பதங்கண்டு
நெடிதான கொடுவேலி கற்பங் கேட்டால்
தேர்மையுட னுனைப்பார்த்து வினையங் கொண்டு
தேற்றமுட னாரென்று கேட்பார்பாரு
கோர்வையாய் நீர்தானும் கழரும்வார்த்தை
கோமகனே யாமுரைப்போம் பண்பாய்த்தானே. 24

பண்பான மொழியதுவு மேதென்றாக்கால்
பாலகனே தன்வந்திரி மூன்றாம்பேரன்
திண்பான வசுவனிக்கு சிஷியனாகும்
தீர்க்கமுள்ள வகஸ்தியநா ரெந்தநாதர்
கண்பான வகஸ்தியர்க்குச் சீஷனென்றும்
காவலனே வசுவனிக்குப் பேரனென்றும்
உண்மையுடன் றானுரைக்க ரிஷிகளெல்லா
முத்தமனே யுனையுவந்து கொள்ளுவாரே. 25

கொள்ளவே கொடுவேலி கற்பந்தன்னை
கொற்றவனே தாமிவார் தடையுறாது
எள்ளளவும் பிரகாது வேலிகற்பம்
எங்கேனுஞ் சென்றாலும் கிட்டிடாது
தெள்ளமிர்த மானதொரு முலியாகும்
தேசொளிவின் சின்மயத்தின் கற்பமாகும்
கள்ளமிலாக் கற்பமிதைக் கொண்டாயானால்
காசினியில் வரைகோடி யிருக்கலாமே. 26

இருக்கலாம் நெடுங்காலந் தேகந்தானும்
இருகுமே கற்றூணா மேனியாகும்
திருக்கமலம் வீற்றிருக்கு மம்பார்பாதம்
தேசொளிவின் சின்மயத்தி னருளுங் காண்பீர்
பெருக்கமுட னஷ்டதிக்குங் காணலாகும்
பேரின்பக் கடலதனை பெருக்கச் செய்யும்
ஒருத்தருமே யுனக்கிடு யுரைக்கப்போமோ
ஓகோகோ மொருக்காலு முரையாதன்றே. 27

## வடபொதிகை தான்றி கற்பம்

அன்றான யின்னமொரு மாற்கங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தென்றிசையா காவலனே தேர்வேந்தேகேள்
தெளிவான கருவிலமே காவலோனே
வென்றிடவே வடபொதிகை தென்மேற்காகும்
வேதாந்தத் தாயிருக்கும் சாரலோரம்
குன்றான குன்றதுவு மேதுரைர்வோம்
குருபரனே தேவரிஷி கிரியுமாமே. 28

கிரியான கிரியதுவு மகிமைமெத்த
கீழ்த்திசையாம் சூரியனைக் காணாமேரு
கிரியான கிரியதனின் வடபாகந்தான்
கெவனமுள்ள சந்திரனை மறைக்கமேரு
கிரியான கிரியதுவுங் குணபாகந்தான்
கீர்த்தியுள்ள நட்சத்திரம் இருபத்தேழும்
கிரியான கிரிதனிலே காணமாட்டார்
கெடியான கிரிமகிமை கூறலாச்சே. 29

ஆச்சப்பா வக்கிரியில் சென்றாயானால்
அப்பனே தேவரிஷி யிருப்பாரங்கே
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
முனையான தேவரிஷி கோடாகோடி
மாச்சலில்லா முனிகூட்ட மனந்தசித்து
மகாதேவர் கூறுதற்கு நாவொண்ணாது
பாச்சலுடன பதிகடந்து தடங்கடந்து
பாலகனே சென்றானே பலங்கண்டீரே. 30

காணலாம் காயாதி கற்பமூலி
கண்மணியே புலஸ்தியனே கவிராஜேந்திரா
தோணவே தான்றியிட கற்பமப்பா
தொல்லுலகில் யார்கண்டார் விதியாளிகாண்பான்
பூணவே காயாதி காண்பானானால்
புகழான இந்திரனா மென்பார்பாரு
மாணவே கொண்டவற்கு யெல்லாஞ்சித்தி
மகாதேவா மற்றவர்க்குக் கிட்டாதன்றே. 31

## சிகப்புகுமரி கற்பம்

அன்றான யின்னமொரு மர்மங்கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
குன்றான பர்வதமே கோவேகேண்மோ
குவலயத்தில் எனதையர் சொன்னநீதி
தென்றிசையாம் வடபொதிகை சாரலோரம்
தேன்மொழியாள் வீற்றிருக்கும் நாடகந்தான்
வென்றிடவே குளிகைகொண்டு சென்றாயானால்
வித்தகனே தடவழியுங் காணலாமே. 32

காணலாம் காட்டகத்தே சென்றபோது
கருவிளனே காவலனே கண்ணேகேண்மோ
தோணவே வழிதடங்கள் கண்டபோதே
தோற்றுமடா குகையொன்று குண்டானொன்று
பாணம்போ லவ்விடத்தில் சென்றபோது
பாலகனே பார்த்திடலாம் கோடிசித்தர்
ஆணவங்கள் தானொடுங்கி வன்பாய்த்தானும்
அப்பனே பார்த்தவுடன் மனங்கொள்வாரே. 33

கொள்வாரே யுந்தன்மேல் மனதுவந்து
கோபாலா யுன்னைத்தான் வினவிக்கேட்பார்
தெள்ளமிர்த மானதொரு சித்துபாலா
தேசொளிவி னற்புதமே சரணமென்பீர்
கள்ளமில்லா மனதுடனே மனதுவந்து
கண்மணியே கேட்டதெல்லா முனக்கேயீவார்
வள்ளலுயர் தான்றியது கற்பந்தன்னை
வாகுடனே கேட்டாலே தருவார்பாரே. 34

பாரப்பா தான்றிகற்பங் கொண்டாயானால்
பாவலனே வாசியது மேலேறாது
ஆரப்பா காயாதிக் குறுதியாச்சு
அம்பலவா யருண்மைந்தா அறிவுள்ளானே
தேரப்பா கற்பமது கொண்டபோது
தேசொளிவின் கடாட்சமது கிருபையாலே
சாரப்பா தேகமது கற்றூணாகும்
சடாயுவைப்போல் சதுர்கால மிருக்கலாமே. 35

இருக்கலாம் வருடமது யெண்ணூறாகும்
என்மகனே நீயுமொரு சித்தனாவாய்
திருக்கமலம் வீற்றிருக்குந் தாயார்பாதம்
சிற்பரனே யுன்மீதில் கிருபைகொள்வார்
உருக்கமுடன் சித்தரெல்லா முந்தன்பேரில்
வுத்தமனே மனதுவந்து தேசங்கொள்வார்
குருக்கள்முதல் ரிஷிமுனிவர் மன்னரெல்லாம்
கொண்டனைப் பார்லோக பதிமாண்பர்காணே. 36

## கையாந்தகரை கற்பம்

காணவே யின்னமொரு கற்பங்கேண்மோ
கரியமால் கொப்பான கவிராஜேந்திரடா
பாணம்போ லுந்தனது மதிதனக்கு
பார்த்திபனே யென்னசொல்வேன் பதுமவேளே
மாணமருங் கல்வியுள்ள மருங்குளானே
மகதேவா வடபாகம் தென்னலோரம்
தோணவே வாய்க்கால் மண்டலந்தான்
தோறாத கானாறு சுற்றிலாயே 37

சுற்றியே பாற்கையிலே சித்தர்கூட்டம்
சுந்தரனே சிவக்கடலே தெளிவே கேண்மோ
பற்றியே கையானின் கற்பந்தன்னைப்
பாங்குடனே தானுண்டு சுவாசம் கொள்வார்
நெற்றிக்கண் தான்படைத்து சிவன்போலப்பா
நேர்மையுடன் சதாகாலம் காவல்கொள்வார்
வெற்றிபெற காவல் கொண்ட சித்தர்தம்மை
வேண்டியே மூலிகற்பம் கேட்பீர்தானே. 38

தானான கையானின் தகரையப்பா
தார்வேந்தர் கொண்டவுடன் காயசித்தி
மானான மகுதுவங்கள் மெத்தவுண்டு
மன்னவனே தேகமது கற்றூணாகும்
பானான சதகோடி சூரியன்போல்
பாங்குடனே வறுநூறு வாண்டுமட்டும்
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேசொளிவின் சின்மயத்தைப் பார்க்கலாமே. 39

## வடபொதிகை மிளகுகற்பம்

பார்க்கலா மின்னமொரு பக்குவங்கேள்
பாலகனே புலஸ்தியனே தம்பிரானே
தீர்க்கமுடன் வடபாகம் பொதிகையப்பா
திசைகாணா நாடதுவும் தேவக்கூட்டம்
ஆர்க்கவே போகாது அன்புள்ளானே
அரிகரிகள் தானிருக்கும் சித்தர்நாடு
ஏர்க்கவே குளிகைகொண்டு சென்றாயானால்
யெழிலான காட்டகத்தைக் காணலாமே. 40

காணலாம் சிங்கமது யுலாவும்நாட்டை
காவலனே தான்கடந்து வப்பாற்சென்றால்
பாணம்போல் சித்துமுனி வளர்க்கும்யானை
பாங்குடனே யும்மையது கண்டிட்டாலே
மாணமருங் கல்வியுள்ள சித்துபாலா
மருவியே யுனைப்பணிந்து சிரமேற்கொண்டு
காணவே சித்தர்பதம் கொண்டுசென்று
கண்மணியே யுமையிரக்கிக் காட்டுந்தானே. 41

தானான யானையது யுமைப்பிரிந்து
தாழ்மையுடன் சித்தர்பதம் தாள்பணிந்து
கோனான சித்தரது விடையுங்கொண்டு
கொற்றவனே தரமிருக்கு மவனமேபுக்கும்
பாறனே பரஞ்சுடரை சித்துதம்மை
பாங்குடனே நீர்பணிந்து கற்பங்கேட்பீர்
மானான மகாதேவர் கடாட்சத்தாலே
மன்னவனே யுந்தமக்கு வமைக்கும்பாரே. 42

பாரேதான் கற்பமது தருவார்பாரு
பாலகனே நீயுமொரு சித்தானவாய்
நேரேதான் சித்துமுகம் கண்டபோதே
நெடிதான காயமது கற்றூணாகும்
சேரேதான் வாசியது பிலக்கும்பாரு
செந்தணலு முந்தமக்கு வணுகாதப்பா
வீரேதான் நெடுங்கால மிருக்கலாகும்
வித்தகனே காயாதிக் குறுதியாச்சே. 43

## கருநெல்லிக்கற்பம்

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அருட்கடலே தேனமுருத அரியபாலா
மூச்சடங்கி எனதையர் சிலதுகாலம்
மூதுலகி லிருந்தாள் வரைபாடக்
பாச்சலுடன் குளிகைகொண்டு சென்றநாட்டை
பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
மாச்சலது கொள்ளாது சென்றநாடு
மகாதே வாயறிந்தமட்டு முரைக்கலாச்சே. 44

உரைக்கின்றேன் வடபாகம் நெடுங்கானந்தான்
உத்தமனே மேருகிரி சாரலோரம்
திரைகடலை தான்தாண்டி சென்றாயானால்
தீர்க்கமுள்ள மலையொன்று குன்றுமொன்று
வரைபாடாய் தடம்வழிகள் கண்டுணர்ந்து
வாகுடனே சென்றாக்கா லடையாளங்கள்
நிரையான மாடமாளிகைகள்போல
நீதியுள்ள மண்டபந்தான் தோன்றும்பாரே. 45

பாரப்பா மண்டபத்தைக் கிட்டிச்சென்றால்
பாலகனே சுற்றோரம் வோடைகாண்பீர்
ஆரப்பா வோடையது கண்டபோது
அட்சணமே கருநெல்லி விருட்சந்தோன்றும்
சாரப்பா விருட்சமது யடிவாரத்தில்
சாந்திருப்பார் கும்பலது சித்தர்கூட்டம்
நேரப்பா யுமைக்கண்ட போதேயல்லோ
நேர்மையுட னெதிர்சென்று துதிகொள்வாரே. 46

துதிகொள்வார் பதிகொள்வார் யார்நீயென்பார்
துப்புரவா யசுவனிக்குப் பேரனென்றும்
மதிகொண்ட வகஸ்தியற்குச் சீஷனென்று
மானிலத்து சித்தர்கட்கு அடிமையென்றும்
பதிகடந்து தங்களிட பாதங்காண
பாலகனும் வந்தேனென் றுருதிகொண்டு
துதிகொண்டு மன்னவனே வணங்கிநின்றால்
துப்புரவா யுந்தமக்கு தருவார்தாமே. 47

தருவாரே கருநெல்லிக் கற்பமப்பா
தயாபரனே மனதுவந்து கற்பந்தந்து
குருபோல யுபதேசங் கொண்டபின்பு
கொற்றவனே யுபதேசங் கொள்வாரையா
அருளான கருநெல்லி தான்றிகற்பம்
அப்பனே கொள்ளென்பா ரதீதமெத்த
பொருளான பொருளதுவை யுண்டபோதே
பொன்னவனே வாசிக்கு நோக்குந்தானே. 48

தானான பிரகாச மானபூபா
தயாபரனே பரம்பொருளே தாருளானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் கடாட்சமது கிருபையாலே
தேனான பரகதியை யடையலாகும்
தேயமதில் வரைகோடி காலமப்பா
பானான பரஞ்சுடர்போ லிருக்கலாகும்
பார்லோக முந்தமக்கு நிகரொண்ணாதே. 49

### வெள்ளானை கற்பமூலி—கறுப்பு ஆலை கல்லால விருட்சம்

ஒண்ணாது யின்னமொரு மகிமைகூர்வேன்
ஒகோகோ நாதாக்கள் மறைத்தகூத்து
வண்ணமாம் வடமேரு கீழ்ப்பாகந்தான்
வளம்பெரிய நாதாக்கள் செல்லாநாடு
திண்ணமுடன் கோடி யோசனையாந்தூரம்
திட்டென்று பூங்காவு மொன்றுதோன்றும்
நண்ணவே குளிகை கொண்டு சென்றாயானால்
நாதாந்த சோலைதன்னைக் காணலாமே. 50

காணலாம் சோலையது அற்புதந்தான்
கண்டதுவு மவ்விடத்தில் வசிக்குஞ்சித்தர்
பாணம்போ லும்மையவர் வினாவிக் கேட்பார்
பட்சமுட னசுவனியார் பேரனென்றும்
நாணவே வகஸ்தியற்குச் சீஷனென்றும்
நாதாந்தச் சித்தொளிவா மென்றுகூறு
தோணவே கறுப்பாலை விருட்சகற்பம்
தோராம லுந்தமக்கு போதிப்பாரே. 51

போதிப்பார் கல்லாலை கறுப்புகற்பம்
பொங்கமுடன் றான்கொடுத்து யுபதேசிப்பார்
ஆதித்தன் போல யிராவதத்தில்
அங்ஙனமே தேடிவந்த கரிதனக்கு
சாதித்துக் கறுப்பாலை மூலிதன்னை
சட்டமுடன் யானைக்குத் தான் கொடுத்து
சோதித்து மண்டலமு மூன்றதாகும்
தோதமுடன் யானையது கொள்ளலாச்சே. 52

ஆச்சப்பா யானையது மூலிகற்பம்
அப்பனே மும்முறைதான் கொண்டபோது
பாச்சலெனு மதவானை கறுப்புமாறிப்
பாலகனே வெள்ளானை தானுமாச்சு
மாச்சலெனுங் காயாதி கற்பமூலி
மண்டலத்தி லார்கண்டார் சித்தர்கண்டார்
ஆச்சரிய மானதொரு கற்பந்தன்னை
அப்பனே யுந்தமக்கு வருள்கொள்வாரே. 53

அருள் கொள்வார் யானையுண்ட கற்பந்தன்னை
ஐங்கரனே புலஸ்தியனே அறிவுள்ளானே
மருளான கறுப்பாலை வித்துமூலி
மன்னவனே யுந்தமக்கு வருளே கொள்வார்
இருளான மயல்நீங்கி காயகற்பம்
ஏற்றமுடன் மண்டலந்தான் கொண்டாலப்பா
தெருளான கற்பமதாய் தேகந்தானும்
தேற்றமுள்ள காயாதி கற்றூணாமே. 54

கல்லான தூணதுவை யென்னகூர்வேன்
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
புல்லான தேகமது கற்றூணாகும்
புங்கசித்தி யெட்டெட்டுந் தாமே கொள்வீர்
வல்லாண்மை தாம்படைத்து வவனிதன்னில்
வளம்பெறவே யுலாவிவர வாயுளுண்டாம்
செல்லாது வாசியது மேல் நோக்காது
செந்திருவே நீயுமொரு சித்தனாச்சே. 55

சித்தனாம் நெடுங்கால மிருக்கலாகும்
சிதாபாசங் களையனைத்தும் அறுக்கலாகும்
பத்தனாய்ப் பரமனிடம் பாதுகொண்டு
பாலகனே யவர்பாத மடுக்கலாகும்
முத்தனாய் முனியனா யிருந்திட்டாலு
மூதுலகில் விட்டகுறை யிருந்தால்கிட்டும்
வெத்தியுடன் திருவெண்ணீர் தாமணிந்து
வெண்போகப் பதநிலையி லிருக்கலாமே. 56

இருக்கலாஞ் சிலகோடி தவமே கொள்வீர்
யெழிலான யுகநான்குங் காணலாகும்
திருக்கமலம் வீற்றிருக்கு மம்பாள்பாதம்
திருவடிக்கு சதாகாலந் துதியே கொண்டு
பெருக்கமுடன் சிவயோக வாசிபூண்டு
பேரின்ப சாகரத்தி லழுந்தியேதான்
அருட்கடலே சமாதிமுகங் காவல்கொண்டு
அப்பனே யோகவழி சமாதி கொள்ளே. 57

## தன்மனம் தடுத்தாட் கொள்ளல்

கொள்ளாமல் சமாதிமுக மிருந்துமென்ன
குவலயத்தி லனேகவித கற்பங் கொண்டு
தெள்ளமிர்த ஞானப்பா லருந்திச்செனன
தேசொளிவின் சின்மயத்தைப் பெற்றுமென்ன
கள்ளமிலா மனதுடனே காயங்கொண்டு
காசினியில் நெடுங்காலம் வாழ்ந்துமென்ன
விள்ளாமல் மனக்கடலை யழுத்தியென்ன
வெட்டவெளி யம்பரத்தி லொன்றுங்காணே. 58

## கட்டறுத்தல்

காணவே சித்தாதி சித்துமாற்கம்
கைலையங்கிரி நாதரைத்தான் கண்டுமென்ன
தோணவே சதுருகமாம் நான்குபாகம்
தோராமல் காயாதி கொண்டுமென்ன
ஆணவமா மாய்கைதனை யொழித்துமென்ன
அப்பனே யருட்கடலை கொண்டு மென்ன
பாணம்போல் யாகமுக மிருந்துமென்ன
பாருலகில் யொன்றேனும் பலந்தான்காணே. 59

பலனேது யொன்றுமிலை வையகத்தில்
பாலகனே புலஸ்தியனே மச்சகேந்திரா
நலமாக செனனமது கொண்டுமேதான்
நாடதனில் சிலகால மிருந்துகொண்டு
தலமான பிரிதிவுக்கு யிடமுங்கண்டு
தாரணியில் செல்வதுவே பெரியயாகம்
கலமதுவும் நேராமல் காவலோனே
கழறினேன் மாந்தி ரீகந்தானே. 60

தானான காவியத்தின் பெருமைகூர்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே நன்குமாரா
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுபதேசித்த
பானான யுபதேசப் படியதாக
ப்பாலகனே யுந்தமக்கு யோதலாச்சு
மானான காவியமா மைந்தாம்பாக
மகதேவா யுந்தமக்கு வோதலாச்சே. 61

## சதாவேரி கற்பம்

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே மச்சகேந்திரா மதிவல்லோய்கேள்
மூச்சடங்கி நெடுங்காலம் சமாதி கொண்டேன்
மூதுலகில் சிலகாலஞ் சென்றபின்பு
பாச்சலுடன் மறுபடியும் வந்தேனையா
பாலகனே தென்பொதிகை சென்றிருந்தேன்
மாச்சலது கொள்ளாம லடியேனுக்கு
மகதேவர் தாமுரைத்த வாக்குகேளே. 62

வாக்கான வாக்கதுவு மேதென்றாக்கால்
வடமேராம் வடபாகந் தென்கீழப்பா
நோக்கமுடன் சதாவேரி விருட்சந்தன்னை
நுட்பமுடன் கண்டறிந்து யெனக்குரைக்க
ஆக்கமுட னடியேனு மனதுவந்து
அன்புடனே வசுராக்கள் கூட்டத்தோடு
தாக்குடனே தடம்வழியுங் கண்டுமேதான்
தயாபரனே யவ்வனத்தே சென்றிட்டேனே. 63

இட்டேனே புலஸ்தியனே யின்னங்கேண்மோ
யெழிலான தடங்கண்டு சென்றாயானால்
விட்டகுறை யிருந்ததொரு தன்மையாலும்
வேதாந்தத் தாயினது கிருபையாலும்
கிட்டுமே யுந்தமக்கு லபிக்குமப்பா
கெவனமுடன் குளிகை கொண்டு சென்றாயானால்
பட்டமரம் போல் துளுத்த விருட்சங் காண்பீர்
பாவலனே யுந்தமக்கு வாய்க்கும்பாரே. 64

பாரப்பா சதாவேரி கற்பந்தன்னை
பாங்குடனே விடைகொண்டா லுமக்குக்கிட்டும்
நேரப்பா சித்தர்மனம் பெருகவேதான்
நேர்மையுடன் மனதுவந்து கேட்பீரானால்
ஆரப்பா மனங்கசிந்து தருவார்பாரு
அப்பனே கற்பமதை வாங்கியுண்டால்
தேரப்பா நரைதிரையு மற்றுப்போச்சு
தெளிவுடனே வாசியது கீழ்நோக்குந்தானே. 65

தானான வன்னூறு வாண்டுமட்டும்
தயாபரனே லோகமதி லிருக்கலாகும்
கோனான ராசாதி மன்னர்தாமும்
கொற்றவனே சித்தர்முதல் மதிப்பார்பாரு
தேனான மனோன்மணியி னருளே கொள்வார்
தேசொளிவின் கடாட்சமது யுமக்குண்டாகும்.
பானான பரஞ்சுடர்போல் லோகமெல்லாம்
பாவித்து யென்னாளும் வாழ்குவீரே. 66

## கறுப்பு அல்லிகற்பம்

வாழ்கவே யின்னமொரு வயணங்கூர்வேன்
மகதேவா புலஸ்தியனே மதிவல்லோய்கேள்
தாழ்கவே வடமேரு தெற்குபாகம்
தடமான தடமொன்று குண் ணொன்றுண்டு
ஏழ்கவே குண்ணருகே சென்றாயானால்
யெழிலான வாய்க்காலு மண்டபந்தான்
மூழ்கவே மண்டபந்தான் கிட்டிச்சென்றால்
யெழிலான ரிஷிகூட்டங் காணலாமே. 67

காணலாம் தேவரிஷி கூட்டமப்பா
காவலனே புலஸ்தியனே கவிவல்லோய்கேள்
தோணவே யவரிடமே சேர்வைகண்டால்
தோயாத கற்பமது கிட்டும்பாரு
மாணவே கற்பமது கொண்டாயானால்
மன்னவனே வாசியது கீழ்நோக்காகும்
பாணம்போல் திக்கெட்டுந் திரிந்துமல்லோ
பார்லோகம் சதாகாலம் வசிக்கலாமே. 68

வசிக்கலாம் யெண்ணூறு வாண்டுமட்டும்
வாகுடனே சமாதிமுகம் யேகலாம்பார்
பொசிக்கலாங் காயாதி கற்பத்தாலே
பொன்னுலகஞ் சென்றாலுஞ் செல்லலாகும்
நசிக்கவே லோகபதி யிருந்துமென்ன
நாடாண்டு வையகத்தை யாண்டுமென்ன
பசிக்கவே கற்பமது கொண்டிட்டாலும்
பாலகனே லோகபதி யொன்றுங்காணே. 69

## சகலமிருகவசியம்

காணவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
கைலாச புலஸ்தியனே கவிராஜேந்திரா
தோணவே வடமேரு கிரிதானப்பா
தொல்லுலகில் நாதாக்கள் காணாநாடு
பாணம்போ லவ்விடத்தில் சென்றாயானால்
பாலகனே தடமொன்று காணலாகும்
மாணவே சித்தாதி ரிஷிகள்கூட்டம்
மகாதேவர் கோடிபேர் காணலாமே. 70

கோடியாம் கெவுனசித்தர் லக்கோயில்லை
கொற்றவனே யவ்விடத்திற் சென்றபோது
நாடியே யவர்பாதங் கண்டுமல்லோ
நாதாந்த ரிஷியாரைக் கண்டிட்டாலே
வாடியதோர் மனோலயத்தைக் கண்டாராய்ந்து
மன்னவனே யாரென்று வினயங்கேட்பார்
தேடியே யவர்பதத்தைப் போற்றியேதான்
தெளிவுடனே சிரங்குனிந்து தெரிசிப்பீரே. 71

தெரிசிக்க நாதாந்த சித்தர்தாமும்
தேற்றமுடன் யாரென்று கேட்பார்பாரு
பரிசுத்த மானதொரு யெந்தநாதர்
பகவானு மசுவனியார் பேரனென்றும்
வரிசித்த வகஸ்தியர்க்குச் சிஷனென்றும்
வளம்பெரிய நாதருக்கு வடிமையென்றும்
அரிசித்துத் தங்களது சேர்வைகாண
ஐங்கரனே வந்தே னடிகொள்வீரே. 72

கொண்டவுட னுபதேச வுண்மையெல்லாம்
கொடுஞ்சுருக்கா மூலியது மிருக்குமிடம்
அண்டர்முனி தேவரிஷி மறைத்தமூலி
அப்பனே யுந்தமக்கு வருளலாகும்
தண்ட காரணியமெனு ம்வனத்துமூலி
தயாபரனே யிருங்குமிடங் காட்டலாகும்
சண்டமா ருதம்போல தழைகளெல்லாஞ்
சாற்றுவார் போற்றுவார் சருகுதானே. 73

சருகுமுதல் கொடிபடர்ந்த மூலிமாற்கம்
சட்டமுடன் விருட்சமுதல் பூண்டுதானும்
அருகுடனே காய்ப்பதங்கள் புட்பமெல்லா
மடவான பட்டைமுதல் வித்தனைத்தும்
மெழுகான பால்வகையும் பிசினோடொக்க
மேதினியில் நாதாக்கள் மறைத்ததெல்லாம்
இருளடைந்த குகைமூலி யாமனைத்தும்
என்மகனே யுபதேசம் புரிவார் பாரே. 74

பாரப்பா யுபதேச மூலிமாற்கம்
பாலகனே புலஸ்தியனே பளிங்குள்ளானே
நேரப்பா மிருகமது வசியமாக
நெடிதான மூலியது நேர்மைகேண்மோ
ஆரப்பா சாட்டரனை கொல்லைமூலி
அப்பனே யுச்சாடம் ஸ்ரீஓம்—ஓம்—ஓம்
சேரப்பா செகமூலி தும்பைநத்தை
செயலான மூலியது ரீம்—ரீம் -ரீமாமே. 75

ஆமேதான் பிரமராட் சதைதானப்பா
அப்பனே கம்—சிம்—கம் சிம்மென்றோது
போமேதான் பொடுதலையு மூலியப்பா
பொங்கமுடன் டிம்—டிம்—டிம் மென்றோது
சாமப்பா குழல் முருக்கி சிணுக்கியப்பா
சார்பான வட்சரமாம் பூ—பூ—பூ
காமப்பா கருவேலி வெள்வேலியப்பா
நாமகனே பிரணவத்தை யோதுவோதே. 76

ஓதவே வட்சரமாம் கிலிகிலியாகும்
ஒகோகோ நாதாக்கள் மறைத்தமூலி
நீதமுடன் பொன்முசுட்டை பொன்னாவாரை
நிஷ்களங்க பிரணவங்க ளேதென்றாக்கால்
தோதமுடன் டண்—டண் வென்றேயோது
தொல்லுலகில் மிருகமது வசியமாகும்
ஆதமுடன் கருங்குவளை மூலியப்பா
அப்பனே பிரணவங்கள் க—க—க—வென்றோதே77

ஓதவே சகலமா மிருகமெல்லாம்
வுத்தமனே யுச்சாடஞ் செய்யும்போது
நீதமுடன் மிருகமெலாம் வசியமாகும்
நிஷ்களங்க மானதொரு பிரணவத்தால்
தோதமுடன் கூப்பிட்டு அழைக்கும்போது
தொடர்ந்துமே வழிகடந்து கூடயேகும்
பாதமுடன் பின்தொடர்ந்து பாதைகாட்டும்
பாலகனே வசியவென்ற மூலிதானே. 78

பட்சியும், மாரால் நகரும் ஊர்வனவும்
இம் மூலியால் வசியமாகும்
மாடன் மந்திரம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தயாபரனே மணிமார்பா தருமவானே
கோனான ராசனென்று மாடனப்பா
கொற்றவனே வஷ்டவித மாந்திரீகம்
தேனான கருமான சூட்சமானம்
தேசொளிவின் றாண்மாயத் தோற்றங்கொண்டு
மானான மனோலய மந்திரத்தை
மன்னவனே யுபதேசங் கொள்ளுவீரே. 79

கொள்ளுவீர் பிரணவங்க ளேதென்றாக்கால்
கொற்றவனே புலஸ்தியனே கெவுனமாரா
தெள்ளமிர்த மானதொரு பிரணவங்கள்
தேற்றமுட னட்சரங்க ளே நன்றாக்கால்
எள்ளளவும் பிசகாது யெந்தன்பாலா
யெழிலான கருவெழுத்தைக் கருதக்கேண்மோ
வள்ளலுயர் வுயிரெழுத்தை மாறிக்கொண்டு
மகாதேவா யுச்சாட மாடுவீரே. 80

ஆடுவீர் சுமுகாசு மாறிமாறி
அப்பனே வேங்கடா பாபா பாபா
ஓடுவீர் ஒளி பிறந்த நாதா மாடா
ஓகோகோ—சூ—சூ தூ தூ தூ தூ
பாடுவீர் கெங்காயா கெவுனவாளி
பளிங்கான சமுதாய சாரவாரி
மூடுவீர் மூஷிக சுலட்சண பூ—பூ
மூதண்ட மடசரக்கு ரிசிபேருமாமே. 81

பூசங்கித பரிபாஷை மந்திர உச்சாடனம்

பேரான சகந்தகா சர்வரூபாவாவா
பேரான லட்சகா சங்கரமாறா
ஆரான லட்சர குட்சரணபாலா
ஹரிபால ருத்திராக் ரெணபூதா
தூரான மயேஸ்வரி துர்க்கைகாளி
துப்புரவாம் வீரபத்திர கரணபூபா
மாறான மண்சாத்தி குட்டிசாத்தி
மகாதேவா படைசாத்தான் வாவென்றோதே. 82

ஓதயிலே வஷ்டமாஞ் சக்கிசாராணி
ஓகோகோ வலங்காரி ரத்தவீரி
ஆதயிலே சயித்தனங்கே முன்னிற்பானோ
அப்பனே கருங்கொள்ளி குட்டிச்சாத்தான்
பாதையிலே தெருச்சந்தி முச்சந்தியப்பா
பாங்காக காத்தவன் சங்கிலியாகும்
தோதமுடன் சண்டியென்னும் வீரிமாரி
தோற்றாத சக்கலா தேவியாமே. 83

தேவியென்ற மாடனது பிரணவத்தை
தேசொளியின் சின்மயத்தி னருளினாலே
காவியுடன் காஷாயந் தாமணிந்து
காவலனே மசானமது பூசைகொள்வீர்
ஆவியுடல் கருவிபொரு ளாதியந்தம்
அப்பனே யுடலெழுத்தை யோதும்போது
மாவுடன் தேங்காய் பழங் கற்பூராதி
மன்னவனே நைவேத்தியம் வேண்டுந்தானே. 84

தானான பூசைமுகம் செய்ய வேண்டும்
தாக்கான மேதைபொலி தலிகவேண்டும்
பானான பரஞ்சுடரை நண்ணலொப்பாய்
பாலகனே சித்தர்பதங் கொள்ளல் வேண்டும்
மானான மகதேவர் பூசைவேண்டும்
மசானத்தில் தீட்சைவிதி நண்ணல் வேண்டும்
கோனான குருவென்னும் பூசைவேண்டும்
கொற்றவனே வஸ்து முதல் வேண்டுந்தானே. 85

வேண்டுமே பிரணவ வுச்சாடனங்கள்
வித்தகனே லகிரியால் எழுத்தைமாறி
தீண்டுமே சுடரெழுத்தை மாறிமாறி
தீப்பற்றுஞ் சுடர்போல துஞ்சிப் பார்க்கில்
ஆண்டுமே வருடமது பதினாறுக்குள்
அப்பனே யுச்சாட மாடலாகும்
கூண்டதுவு மழியாத காலமட்டும்
குவலயத்தில் வசியகரு வாடலாமே. 86

ஆடலாம் செகசால மிந்திரசாலம்
அப்பனே கோகரண கெஜகரணந்தானும்
கூடலாம் பிரியலாம் ஸ்தம்பிக்கலாகும்
குருபரனே வித்வேஷண முறையுங் கொள்வீர்
தேடலாம் வயசிராத்தம் நிலாதார்த்தங்கள்
தேற்றமுடன் கூடுவிட்டுக் கூடுபாய்வீர்
பாடலா மோகனங்கள் தேவதார்த்தம்
பாலகனே சகல சித்து மாடலாமே. 87

சித்தான சித்ததுவு மின்னமுண்டு
செகதலத்தில் நாதாக்கள் கூறாவண்ணம்
முத்தான தேவர்களை வரவே செய்வீர்
மூதுலகில் செப்பிடுமாம் வித்தைகோடி
சத்தான வாக்ருஷண மனந்தங்கோடி
சதாசிவமே மெய்வாதம் பொய்வாதங்கள்
வித்தான வினயங்க ளனந்தங்கோடி
விரித்திட்டேன் மாடனுச் சாடந்தானே. 88

மாடனா லதீதவித்தை கோடியந்திர
மகத்தான சக்கரங்க ளுயிர்மெய்யாகும்
சேடனால் மந்திரங்கள் பிரணவங்கள்
செகதலத்தில் கோடியுண்டு குறிக்கப்போமே
கூடதுவு மொழியுமட்டும் எந்திரங்கள்
குறிப்பித்தார் சித்தர்முனி கோடாகோடி
மாடனது மந்திரமோ பிரணவங்கள்
மானிலத்தில் கண்டறியார் கோடியாமே. 89

கோடியோ பாணமது யெந்திரங்கள்
குவலயத்தில் நாதாக்கள் ரிஷிகள் தேவர்
வாடியே வஷ்டதிசை காடனைத்தும்
வளம்பெரிய லோகமெலாந் தான்திரிந்து
பேடிபோ லுயிரெழுத்தை யறியாமற்றான்
பேருலகில் பலரும்போய்த் துஞ்சினார்கள்
நாடியே குருவணக்கம் சிலபேர் கொண்டு
நாதாந்தப் பிரணவத்தை யறிந்திட்டாரே. 90

## சக்கலாதேவி மந்திராட்சரம்

இட்டாரே யின்னமொரு மகிமை கூர்வேன்
யெழிலான புலஸ்தியனே மச்சகேந்திரா
தொட்டகுறி போலாக யெந்திரங்கள்
தேராத கருவுடனே யெய்துமார்க்கம்
சட்டமுடன் சக்கலா தேவிமந்திரம்
சார்புடனே யாமுரைப்போம் தருமவானே
விட்டகுறை யிருந்ததினால் லபிக்கலாச்சு
வீரான பிரணவத்தை விளம்பக்கேளே. 91

கேளப்பா சக்கலா தேவிமந்திரம்
கெடியான வுயிரெழுத்தைக் கூறக்கேண்மோ
தாளப்பா ஓம்கிரீம் சவ்வுமாகச்
சார்புடனே ரீம்கிரீம் யென்றேயோது
பாளப்பா வாவாவா வென்றேயோது
பாலகனே சிரீம்சிரீம் சிரீமென்றோது
ஏளப்பா ஓங்கார பீடங் கொண்டு
எதிராக லகிரிகொண்டு ஓதுவாயே. 92

ஓதுவாய் புலஸ்தியனே மச்சகேந்திரா
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
தோதமுடன் பிரணவங்கள் சொல்வேனையா
தோராத கருவெழுத்தை மாறிமாறி
நீதமுடன் பூசை நைவேத்தியங்கள்
நிஷ்களங்க மானதாம் பூசைமாற்கம்
சூதமுடன் செய்பவர்க்கு யெல்லாஞ்சித்தி
அப்பனே மற்றவர்க்கு வாய்க்காதன்றே. 93

## சாமளாதேவி மந்திரம்

அன்றான யின்னமொரு முறைமைகூறுவேன்
அப்பனே சாமளா தேவிமந்திரம்
குன்றான வெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு உபதேசித்த
தென்றிசையா பிரணவங்க ளேதென்றாக்கால்
தேற்றமுடன் ஓம்பிரணவம் ஓமென்றோது
வென்றிடவே யூதரி சாமளாங்கி
வேதாந்த சுடலைகரி யென்றேயோதே. 94

ஓதவே யுச்சினிமாங் காளிவாவா
ஓகோகோ யெல்லைவனம் காத்தாவாவா
நாதர்தொழும் தில்லைமாங் காளிவாவா
நளினமிடும் சுயபத்திர காளிவாவா
சோதனைக்கு யடங்காத நீலிவாவா
சோர்தண்டு மகாகாளி வாவா
பேதமிலா பெண்ணணங்கே கடுகி வா-வா
பேசொண்ணா வாயடைக்கும் கபாலிவாயே. 95

வாவென்று பிரணவத்தை யோதும்போது
மசானபிதிர் பூதமுதல் சுழன்றேயாடும்
போவென்றால் வனத்தைச் சுற்றிகார்கும்
பொங்கமுட விடுகாட்டின் புரங்காட்டையெல்லாம்
ஏனென்றால் யெல்லைமுதல் மசானபாதை
யெழிலற்ற வூறுணிகள் தோப்புமாற்கம்
சாவென்றால் கொல்லைமுதல் விருட்சம்யாவும்
சட்டமுட னுலாகொடுத்து தயங்கும்பாரே. 96

## ஏவல் பிசாசுப் பிரணவம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே யேவலென்ற பில்லிமாற்கம்
நேரப்பா வாயுளது முடியாவண்ணம்
நெடிதான வமிர்த்து வதத்தினாலே
காரப்பா வூறுணியாங் குளமடுக்கள்
கட்டழிந்து கெட்டழிந்து தடுமாறாகி
கூரப்பா விழுந்திருந்த வாத்மந்தானுங்
குருபரனே முடிவுநாள் வருமட்டாமே. 97

மட்டான வாயுளு முடிவுமட்டு
மகாதேவா பூவுலகில் மந்ரவாதி
சட்டமுடன் பிரணவத்தை மாறியல்லோ
சாங்கமுடன் தன்வசமே செய்துமேதான்
திட்டமுடன் யேவல்பணி காவலுக்கு
தீர்க்கமுடன் கைவசங்கள் செய்துகொண்டு
அட்டதிசை தான்புகழ்ந்த பூதந்தன்னை
யாக்கினைக்கு மஞ்சலுட னடிகொள்வாரே. 98

கொள்வாரே மாந்திரிக னானபாலன்
குவலயத்தில் மானிடரை நடுங்கச்செய்வான்
தெள்ளமிர்த மானதொரு மாந்தர் தம்மை
தேற்றமுடன் பிரணவத்தை மாறலாக்கி
வள்ளலுயர் கருமானு பாவந்தன்னை
வளநாடி கர்மிகளு மறியாமற்றான்
உள்ளநல்ல வழியைவிட்டு தீயராசி
உத்தமனே சண்டாளத் தடஞ்சென்றாரே. 99

தடமான தடமதுவுந் தாமறிந்து
சதுரான பூவுலகில் பாபகர்மம்
சடமான பிரிதிவுக்கு நேருங்கர்மம்
சாங்கமுடன் கண்டறிந்து யறியார்போலும்
உடனுடனே பஞ்சபூத வைக்கியத்தில்
உத்தமர்கள் தானொடுங்கி நடவாமற்றான்
திடமான மௌனநிலை யறியாமற்றான்
தீவினைக்கு யாளாகித் திடங்கெட்டாரே. 100

கெட்டாரே சருக்கமது மூன்றுமாச்சு
கெடியான பாடலது முன்னூறாகும்
அட்டதிசை பதினெண்பேர் ரிஷிகள்நாதர்
அடக்கிவைத்தார் மாந்திரீக பிரணவத்தை
திட்டமுடன் சித்தாதி முன்னதாக
தீர்க்கமுட னடியேனு மனதுவந்து
சட்டமுடன் சருக்கமதில் சாற்றினேனே
சாற்றினேன் பதினெண்பேர் போற்றினேனே. 101

குருபீட வதர்வணச் சருக்கம் முற்றுப் பெற்றது.

ஆகதொகை பாடல்—301

உ

கடவுள் துணை

## நான்காவது

### மந்திரகிரிச் சருக்கம்

போற்றினேன் சருக்கமது நாலுமாகும்
பொங்கமுட னசுவனியாந் தேவர்தாமும்
ஆற்றுதலாய் மனதுவந்து வடியேனுக்கு
அன்புடனே தான்போதித்த காவியந்தான்
தூற்றுதற்கு யிடமதுவும் நேராமற்றான்
துப்புரவாய் லோகபதி மாண்பருக்கு
சாற்றுதலாய் காவியங் களைந்ததாக
சாதித்த மாந்திரீக காவியமுமாச்சே. 1

### நீலாஞ்சனக்கிரி சித்தர்பிரணவ மகுத்துவம்

ஆச்சப்பா யின்னமொரு வதிசயங்கேள்
அப்பனே யசுரர்க ளிருக்கும்ஸ்தானம்
மாச்சலில்லா நீலாஞ்சனக் கிரியுமாகு
மகத்தான தேவரதி யசுராள்கூட்டம்
பாச்சலுடன் பிரணவத்தை மாறலாகி
பாங்குடனே நடுமையம் வட்டமேரு
கூச்சலில்லா மவுனமுடன் யோகம்பூண்டு
குருபரனே சென்றவர்க்கு வினையங்கேளே. 2

வினையமென்றால் வினையமது யேதென்றாக்கால்
வித்தகனே விட்டகுறை யிருந்தால்கிட்டும்
தினையளவு கர்மானு பாவங்கண்டால்
தீர்க்கமுட னொருக்காலுங் கிட்டாதையா
பனையளவு ஞானப்பால் கொண்டாலுந்தான்
பாலகனே கர்மிகட்கு லபிக்குமோசொல்
துனையருகே சென்றாலே மகுத்துவங்கள்
துப்புரவாய்க் கண்டிடலாந் தூய்மையோனே. 3

தூய்மையா மஞ்சனக் கிரியில்வாழுந்
தூய்தான சித்தாதி ரிஷிகள்கூட்டம்
வாய்மையாய் கிரிமேலே மௌனம்பூண்டு
மன்னவனே யோகாதி சமாதிகொண்டு
மாய்மையாய் சதாகாலந் தவமிருப்பார்
மகாதேவர் தரிசனங்க ளடைந்தபேர்க்கு
ஆய்மையா உபதேசங் கிடைக்கலாகும்
அப்பனே உந்தமக்குக் கிட்டும்பாரே. 4

## உபதேசப் பிரணவம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே மச்சகேந்திரா பதுமவேளே
நேரப்பா ரிஷியாரைக் கண்டபோது
நேர்மையுடன் யாரென்று வினையங்கேட்பார்
தீரப்பா வசுவனியார் பேரனென்றும்
திட்டமுட னகஸ்தியற்குச் சீஷனென்றும்
ஆரப்பா வுத்தாரங் கொண்டாயானால்
அப்பனே பிரணவங்க ளோதுவாரே. 5

## பிரணவம்

ஓதுவார் பிரணவங்கள் ஏதென்றாக்கால்
ஓகோகோ நாதாக்கள் கூறவில்லை
தோதமுடன் லட்சணமா முயிரெழுத்து
தோராய மானதொரு பீசமாகும்
நாதமுடன் பட்சணியா மெட்சணியுமாகும்
நாதாந்த தில்லைவன பீசமாகும்
கீதமெனும் சௌராஷ்டிக கிராவணமுமாகும்
கிர்த்தியுள்ள மௌனரச கீதமாமே. 6

ஆமேதா னட்சரங்கள் சித்தமார்க்கம்
அப்பனே சைதன்னிய பிரமபீடம்
தாமேதான் ஓங்கார பதிகொண்டேகி
தகைமையுடன் ஆங்கார சிகாரமாகும்
நாமேதா னுத்தார வளவுபீசம்
நலமான ரீங்கார பீசமாகும்
போமேதான் பிரணவத்தை மாறிமாறி
பொங்கமுட னுச்சாடஞ் செய்குவீரே. 7

செய்யவே சித்தர்முனி நாதரெல்லாம்
செம்மலுட னுந்தமக்கு வசியமாவார்
துய்யவே யெதுகேட்கி லுந்தமக்கு
துப்புரவாய் தான்கொடுப்பார் மச்சகேந்திரா
வையகங்க ளுள்ளவர்க ளடிமையாக
வாகுடனே கேட்டதெல்லாம் யிவார்பாரு
நையவருங் கோபமதை யகற்றியேதான்
நாதாந்த பதிமுகத்தில் நில்லுவாயே. 8

## குறளி மந்திரம்

நில்லுவாய் புலஸ்தியனே மச்சகேந்திரா
நிஷ்களங்க மானதொரு குறளி மந்திரம்
புல்லறி வாலடியேனு மனதுவந்து
புங்கசித்தி யெட்டுடனே புனைதலாகி
வல்லமையாய் குறளியிட பிரணவத்தை
மகத்தான வுருவோடும் கருவினோடும்
சல்லாப பூசைநை வேத்தியங்கள்
சட்டமுடன் தானமர்த்தி யிடங்கொள்வீரே. 9

கொள்வீரே மூலமந்திர மேதென்றால்
கொற்றவனே வட்சரங்கள் கூறுவேன்யான்
தெள்ளமிர்த மானதொரு வுடலெழுத்தை
தேற்றமுடன் கூறுகிறேன் குறிதான் பாரு
விள்ளாதே காட்டேரி குறளிவாவா
வீறான மசான சாத்தானே வா—வா—
மெள்ளவே ரத்தகாட் டேரிவா—வா
மேதினியி லடங்காத குறளிவாயே. 10

வாவென்று கோஷ்டியுடன் சுடலைகாத்தான்
வயிராக்கிய வீரமுத்து வாடாவா—வா
ஆவென்று நத்சிங்கா குமரிசிங்கா
அஷ்டாங்க கருவெடுத்து மாடுசிங்கா
நாவென்று நளினமுடன் ஓங்காரத்தை
நானிலத்தில் பயமிட்டு கெர்சித்தேதான்
போவென்று போற்றியிரு கையைக்கூப்பி
பொங்கமுடன் டாங்கினியே யென்று போற்றே. 11

போற்றியே நிற்குல மசானருத்திரா
பொலிவான முப்பொலிவுங் கொண்டு சாற்றி
தூற்றியே மயிர்க்குறளி முண்டைக்கண்ணாய்
துப்புரவாய் அலங்கோல தூபவாடை
மாற்றியே யேர்நெற்றி சடைசாமுண்டி
மகத்தான பூஜகண்டி வீரசண்டி
ஆற்றியே வரை சிலங்கை தலைவிரிச்சான்
அபயமிடும் ருத்திரனார் சண்டினாயே. 12

## யமுக நையாண்டி வடக்கு மந்திரம்

சண்டிசண்டி மொண்டி மொண்டி தட்டுதட்டுதட்டு
சாங்கமுடன் மசானவழி நோக்குநோக்குநோக்கு
மொண்டிமொண்டி கெண்டிகெண்டி மேக்குமேக்கு
மோகனமாம் மோகவமாம் வசிவசியென்றோது
கண்டிகண்டி விண்டிவிண்டி ஒண்டிஒண்டிஒண்டி
காற்சிலங்கை கைவிலங்கு கற்பூபிபூபி
பண்டிபண்டி உண்டிஉண்டி பாடைபொரிகாத்தான்
பாவாடை சாத்தானும் பகவதியென்றோதே. 13

ஓதயிலே புலஸ்தியனே மச்சகேந்திரா
வுத்தமனே குறளியென்ற சாத்தான்தானும்
நீதமுட னடிவணங்கி முடிகள் சாய்த்து
நிஷ்களங்க வபயமுடன் கைகுவித்து
சோதனைக்கு முள்ளதாக குறளிதானும்
சொற்படியே யேவல்பணி யடிமையோடு
ஆதமுடன் லலாடமதில் வெண்ணீர்பூண்டு
அப்பனே யடுமைக்குள் ளாகுந்தானே. 14

## மசான புரி பிரணவ மந்திரம்

தானான புலஸ்தியனே கருமாரார்த்தஞ்
சாற்றுகிறேன் மசானமென்ற வீரிதானும்
கோனான ருத்திரனாம் பில்லியோடும்
கொடியதுஷ்ட சக்கலா தேவியோடும்
பானான வைசூரி மாரியோடும்
பாங்கான வுத்திரமாங் காளியோடும்
தேனான யெல்லையென்ற பிடாரியோடும்
தேசொளிவின் கரைகண்ட நீலியாமே. 15

நீலியாம் பிரணவ மந்திரத்தை
    நிஷ்டையிலே யிருந்து நேமம்பூண்டு
காலியாம் வொண்டிதனி யாகவேதான்
    காவலனே பிரணவத்தை யோதும்போது
வாலிபளாய் சிறுமங்கை ரூபியாக
    வந்துநிற்பாள் பாவையரு மகிட்சியோடும்
சூலிகபாலி கையேந்தி சொர்ணம்பூண்டு
    சுலட்சணமாய் யெதிர்வந்து காண்பாள்தானே. 16

காணலாம் வீரியென்ற மசானபூமி
    காமாட்சி சித்தாட்சி கமலிஞானி
பாணமாம் பிடாச்சி காட்டெல்லை சூலி
    படும்பாட்டை ஆடையென்ற முதாரிவீரி
வாணர்புகழ அடவிரணக் கன்னிதாமும்
    வகுப்பான கோடையிடி பூதந்தானும்
ஆணவங்கள் தானொடுங்கி அன்பர்பாதம்
    அப்போதே கட்டுண்டு வடைதலாமே. 17

### மஞ்சள் மந்திரம் ஸ்ரீகளுக்கு

அடையவே யின்னமொரு வதீதங் கூர்வேன்
    அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
தடையறவே மஞ்சள் மந்திரத்தைக் கேளீர்
    சார்வான பிரணவங்க ளேதென்றாக்கால்
கடையான மஞ்சணாத்தி கண்பூளிச்சி
    காரிகைகே வழகுடைய மாதுபோகி
உடைபூண்ட மஞ்சளபி குணவிவாவா
    உத்தமனே திருஷ்டியது நீங்கும்பாரே. 18

பாரப்பா யிம்மொழியை நூற்றெட்டோது
    பாலகனே கண்திருஷ்டி பறந்து போகும்
நேரப்பா மார்பினிட கலசக்கட்டி
    நேர்மையாம் ஸ்தனக்கட்டி பால்கட்டேகும்
திரப்பா மார்குடைச்சல் மார்சிலந்தி
    தீப்பறந்து போகுமப்பா மாதருக்கு
கூரப்பா மஞ்சளதை யோதியேதான்
    கொற்றவனே மேற்பூசிஸ் நானஞ்செய்யே. 19

செய்யவே ஸ்நானமது பிணியும்நீங்கி
செயலான சிலந்திகட்டி மாறிப் போகும்
துய்யநல்ல வெள்ளாடை மேலணிந்து
துப்புரவாய் சூரியனார் பூசை செய்து
வையகங்கள் தான்புகழ மஞ்சளோதி
வாகுடனே தந்தவற்கு மோட்சங்கிட்டும்
நையவே மனதுவந்து செய்யுமாண்பர்
நானிலத்தில் தானுமொரு சித்தென்பாரே. 20

## தேங்காய்ப் பிரணவ மந்திரம்

பாரேதான் புலஸ்தியனே பத்மநாபா
பார்தனிலே முக்கண்ணி னுபதேசங்கள்
சீரேதான் பிரணவங்க ளேதென்றாக்கால்
சிற்பரனே முக்கணனே முகந்தநாதா
ஊரேதான் சோலைபுரி தூலபூபா
வுத்தமனே சடைநிறைந்தடு மாட்டைமன்னா
பேரேதான் திருஷ்டிக்கு முதன்மைமைந்தா
பேரான சிரசுடைய முகங்கொண்டோனே. 21

கொண்டானே வா—வா—வா— வென்றோது
கோபுரத்து ராசருக்கு யுகந்தசீஷா
கண்டாலும் விடுகார்கள் தேவநாதர்
காசினியில் விருட்சமென்ற சோலைமார்பன்
தொண்டுமிகச் செய்துமல்லோ கால்நீர் கொண்டோன்
தோராமல் சிரசதனி லாபமீவோன்
பண்டிதர்கள் சித்தர்முனி நாதர்தாமும்
பாரினிலே தாத்பரியம் பகருவாரே. 22

பகரவே யுச்சாட மொழிகள்தம்மை
பார்தனிலே தேங்காயைக் கையிலேந்தி
நிகரமுட னுபதேசப் பிரணவங்கள்
நீதியுட னாயிரமா முருத்தானோது
அகரமுடன் ரீங்காரப் பிரணவத்தை
அப்பனே கலைமாறி பூரணத்தில்
சகடுடனே வடமுகமா மீசான்யத்தில்
சாற்றுவீர் உபதேசம் போற்றுவீரே. 23

## இராசகனிவித்து பிரணவ மந்திரம்

போற்றுவீ ரின்னமொரு புதுமைகூர்வேன்
புகழான புலஸ்தியனே புனிதமாரா
சாற்றுகிறேன் பிரணவங்க ளேதென்றாக்கால்
சதுரமா மஞ்சள்வர்ண புளித்தமாறி
ஆற்றுதலுக் கொப்பான ரத்தவீரி
அழகான ராசகன்னி வீரிமாரி
காற்றுபடா வாடைமணங் கொண்டபூபி
காவலனே நிஷ்டமாரி வாவென்றோதே. 24

ஓதவே பெருமூச்சு வலங்கோலந்தான்
வுத்தமனே தெருநான்கு திஷ்டிகொண்டோன்
நீதமுட னஷ்டதிசை திஷ்டிபோக்கி
நெடிதான மதமூர்ச்சை ரிமிஷபத்திரி
சீதமெனும் பித்தனா சனியாங்கன்னி
சிதம்பரத்தின் பூசைமிகக் கொண்டவேதை
ஆதமுட னந்தணர்கை யாடுங்கன்னி
ஆகாயக் கன்னியென்னும் திஷ்டிமாதே. 25

மாதென்று பிரணவ்த்தை மாறிமாறி
மகாதேவா லட்சமுரு போடும்போது
தீதென்றால் கொடுமையது நீங்கியல்லோ
தீபறக்கும் திஷ்டிமுதல் கண்முன்னிற்கா
வேதமென்னும் பிரணவ மந்திரத்தை
வீறுடனே யுச்சாடஞ் செய்தபேர்க்கு
நீதமெனும் சாலோப சாரூபந்தான்
நிஷ்களங்க சாயுச்ய மடைவார்காணே. 26

## திருவெண்ணீற பிரணவம்

காணவே யின்னமொரு கருவைக் கூர்வேன்
காவலனே கண்மணியே கவிவல்லோய்கேள்
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அப்பனே திருவெண்ணீர் மந்திரத்தை
பூணவே ருத்திராட்சந் தாமணிந்து
புகழுடனே பஞ்சபூத யத்தினோடும்
பாணம்போல் பஞ்சாட்சர வுருவைமாறி
பாவலனே துதிக்கும்வரு முறைமைகேளே. 27

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெவனமுட னுச்சாட மேதென்றாக்கால்
ஆளப்பா பஞ்சாட்சர வுருவைமாறி
அப்பனே நடுமையம் பிரணவத்தை
தேளப்பா கொட்டியதோர் விஷம் போலாக
தேற்றமுடன் கருக்குருவின் முறைமையோடும்
பாளப்பா போகாமல் பதமுங்கண்டு
பாலிக்கு மானிடரே சித்தனாமே. 28

சித்தனாம் தீபறக்கும் வினையும்போகும்
சிதாபாசக் களையதுவும் பொருந்திநிற்கும்
பத்தனாய் பரமனாய் முனிவன்போலும்
பவக்கடலை விட்டகன்ற தருமிபோலும்
நித்தனுமாய் பதிமிஷனாய் நீதியோனாய்
நெடுங்கடல்சூழ் சத்தியனாய் நேர்மைதோன்றும்
முத்தனாய் சதாகால முகிவுகொண்டு
மூதுலகில் பிரணவனாய் பெயர்கொள்வாரே. 29

கொள்வாரே திருவெண்ணீற் பட்டபோது
கொற்றவனே பேய்பில்லி சூனியங்கள்
தெள்ளமிர்த மானதொரு திருவெண்ணீறால்
திசையெட்டு மதர்வணங்கள் சிதைந்துவோடும்
வள்ளலுயர் சுப்பிரனு மாயன்றானு
மகாதேவா திருவெண்ணீற் கண்டபோதே
மெள்ளவே மெய்நடுங்கி திருவெண்ணீற்றை
மேலெங்கும் பூசிமிக மணங்கொள்வாரே. 30

மனங்கொண்டு திருவெண்ணீர் மகிமைகூர்வேன்
மானிலத்தில் ராசாதி ராசமன்னர்
சினங்கொண்ட யெதிராளி மாண்பர்தாமும்
சிதாபாசக் களையுடைய சித்துதாமும்
கனங்கொண்டே சதாகால மர்ச்சித்தேதான்
காசினியில் தேவரிஷி தேவகோஷ்டி
தனங்கொண்டு மலர்சாற்றி நைவேத்தியங்கள்
தகைமையுடன்கொண்டணியும் வெண்ணீறாமே. 31

வெண்ணீறா மெத்தலங்க ளெத்தலங்கள்
மேதினியி லுண்டாமஉ தெய்வங்கோடி
மண்ணினாலே மன்னாதி மன்னர்கூட்ட
மானிலத்தில் தான்படைத்த தேவஸ்தானம்
கண்ணினிலே பார்ப்பதற்கு லக்கோயில்லை
காசினி யெலாமுழுந் திருவெண்ணீறாம்
அண்ணலார் பதம்பணியும் வெண்ணீறப்பா
அப்பனே கண்ணீரொழிய வறைந்திட்டேனே. 32

## வேப்பிலைப் பிரணவம்

இட்டேனே யின்னமொரு உபதேசங்கள்
யெழிலான வேப்பிலையின் மந்திரந்தான்
தொட்டகுறி போலாக பிரணவத்தை
தோராமல் மாறுதல மதியங்கேண்மோ
அட்டதிசை நடுமையம் முக்கோணத்தி
லன்புடனே சக்கரத்தை மாறிமாறி
எட்டணியாய் தடபாகங் கொண்டறிந்து
யெழிலுடனே பிரணவத்தை யோதுவீரே. 33

ஓதிடவே பிரணவத்தா லாடுங்கூத்து
ஓகோகோ நாதாக்கள் மறைத்தார்காண்பீர்
ஆதியிலே பிடாரிமுகம் ஓசனப்பா
அப்பனே வயிற்பிழைக்க வாடுங்கொள்ளை
நீதியுட னுச்சினிமாங் காளிவா—வா
நிமிஷ்மாரி வதிகோரி மூலிவா—வா
சோதியுடன் மொளிபிடாரி வா வா
சுத்தகங்கை மாரிமாரி வாவென்றோதே. 34

ஓதயிலே சகலவித பிணிகளெல்லா
முத்தமனே சடம்விட்டு கடலேபுக்கும்
நீதமுடன் வேப்பிலையி னுபதேசந்தால்
நிஷ்களங்க மானதொரு பூதமெல்லாம்
தோதமுடன் கைநடுங்கி கால்நடுங்கி
தோத்தரிக்கும் பிரலபிக்குந் தோற்றாதோடும்
மாதருட மதிமயங்கி பிரலாபங்கள்
மன்னவனே மதிகொண்டு திடங்கொள்வாரே. 35

## பிரசவப்பிரணவம் முக்கூட்டெண்ணை

கொள்வாரே யின்னமொரு கூர்மைகூர்வேன்
கோவிந்தா புலஸ்தியனே குணமுள்ளானே
தெள்ளமிர்த மானதொரு பெண்பாலப்பா
தேற்றமுடன் மதலையது யீனும்போது
கள்ளமிலா பிரசவத்தில் வேதைமெத்தக்
காணுகிற மங்கையற்கு முக்கூட்டெண்ணை
விள்ளுகிறேன் பிரணவமே தென்றாக்கால்
வித்தகனே ஓம்சிங்கலகு வாவென்றோதே. 36

வாவென்ற பிரணவமாம் பொறு—பொறு—பொறு
வளமான வேதனையைத் தீருதீரு
பாவென்ற பாஷையா லானதத்தைப்
பாவலனே உச்சரித்து வேதனையாம்தீர்ப்பாய்
நாமென்ற பீசாட்சரம் நடுவணையில்மாறு
நாயகனே சர்வாத ரோகம்போக்கு
தானென்ற வுருவதுதா னூற்றெட்டாகும்
தயாபரனே வாகாயந் தன்னிலோதே. 37

தன்னிலே கலைமாறி யோதுமெண்ணை
தமைமையுடன் கெற்பிணிக்கு வயிற்றின்மேலே
கன்னிக்குத் தளமிடவே வேதைநீங்கி
காவலனே மதலையது யீணலாகும்
என்னவே பிரணவத்தின் யெண்ணைதன்னை
யெழிலாகக் கண்டவுடன் வினைதான்போகும்
நன்னயமாய் சித்தாதி யெண்ணைதன்னை
நலமுடனே பிரயோகஞ் செய்குவீரே. 38

## கூழ்ப்பாண்ட திருஷ்டிப் பிரணவம்

செய்யவே யின்னமொரு புதுமைகூர்வேன்
செயலான கூழ்ப்பாண்ட திருஷ்டிகூர்வேன்
தொய்யவே நாற்சந்து பயந்தபேர்க்கும்
துப்பரவாய் வண்ணமார் கன்னிமார்கள்
பையவே யெதிர்ப்பட்ட தோஷத்திற்கும்
பாவலனே கிரகமென்ற தோஷத்திற்கும்
வையகத்தில் பிணியாளர் சாந்திக்குந்தான்
வாகுடனே பிரயோகஞ் செய்வர்தானே. 39

தானான நடுச்சாம வேளைதன்னில்
தகைமையுட னனேகவித தோஷத்திற்கும்
மானான மாடமாளிகை தனக்கு
மாசற்ற பாலரிட தோஷத்திற்கும்
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேசொளிவின் சின்மயத்தின் பிரணவத்தை
கோனான கருவெழுத்தை யுருவினோடு
கொற்றவனே மாறுகிற வினையங்கேளே. 40

கேளப்பா புலஸ்தியனே மாந்திரீகா
கெடியான காவியத்திற் குரியதேவா
தாளப்பா மூலமந்திர மேதென்றாக்கால்
தண்மையுடன் பிரணவத்தின் மாறல்கேண்மோ
பாளப்பா போகாமல் ரீங்காரத்தில்
பாலகனே ஓங்கார நடுமையத்தில்
ஆளப்பா நின்றநிலை மையங்கொண்டு
அப்பனே தத்துவத்தின் போதங்காணே. 41

காணவே போதமது யேதென்றாக்கால்
சருவான கருவிகர ணாதியோடும்
மாணவே மாந்திரீக உச்சாடனத்தை
மௌனநிலை பதியமர்ந்து யுருவேகொள்வீர்
நீணவே யுருவதுவு மேதென்றாக்கால்
நிஷ்களங்க மானதொரு கருவெழுத்தாம்
தோணவே யவ்வெழுத்தும் சவ்வெழுத்தும்
தோறாத மவ்வெழுத்தில் வுருதானூறே. 42

நூறான மூல மந்திரத்தினோடும்
நுட்பமுள்ள பெயரதனை மாறிமாறி
காறான ஓங்கார சப்தத்தோடும்
காவலனே தலைகீழாய் மாறிமாறி
ஆறா நைவேத்திய வுருவினோடும்
அட்டாங்க மாறலொடு யோகம்பூண்டு
வீறான வுறுதிமொழி யாயிரந்தான்
வித்தகனே யோதுவது கருமந்தானே. 43

தானான வுருவதுதா னாயிரந்தான்
தாக்கான முறையோடும் வழிபாடோடும்
கோனான யெனதையர் சொன்னநீதி
கொற்றவனார் வாகுடனே மதியங்கொண்டு
தேனான செபமந்திர பரிபாஷத்தால்
தோற்றமுடன் வுறுதிநிலை மௌனம்பூண்டு
மானான வுச்சாடஞ் செய்தாயானால்
மகாதேவா திருஷ்டியது கழியும்பாரே. 44

## நவக்கிரகசாந்தி பிரணவ மந்திரம்

பாரப்பா யின்னமொரு மருமங்கூர்வேன்
பாலகனே புலஸ்தியனே கருவின்மாறா
ஆரப்பா பில்லி சூனியத்திற் றோற்கும்
அரும்பிணிகள் கொண்டதொரு மாண்பருக்கும்
தேரப்பா நவக்கிரக சாந்திபாகம்
தேற்றமுட னாமுரைப்போம் தெளிவதாக
காரப்பா பிணியாளர் பண்டிதற்கும்
காவலனே நடத்துமுறை பான்மைகேளே. 45

பான்மையாஞ் சாந்தியது யேதென்றாக்கால்
பகருகிறேன் மாணாக்க ளறியவேண்டி
மேன்மையா மெனதைய ருரைத்தநீதி
மேவிடவே நாவதுவும் பாவுமில்லை
கான்மையாய் பதினெண்பேர் சித்தர்தாமும்
காவலனே வுட்கருவை மறைத்துமேதான்
பான்மையுட னதர்வணத்தை மாறலாக்கி
பாலித்தார் செகமதனில் பாலித்தாரே. 46

பாலித்தார் முக்கனிதான் நவமுமாகும்
பாங்கான கலசமது நவமுமாகும்
ஆலித்த யெலுமிச்சங் கனிதானப்போ
அப்பனே நவமாகும் பண்புள்ளானே
மாலித்த தானியமு நவமுமாகும்
மன்னவனே யீர்க்கதுவு முப்பத்தாறு
கோலித்த யீர்க்கதுவை யாடைசுத்தி
சுந்தரனே நெய்தனிலே தோய்த்திடாயே. 47

தோய்த்துமே குச்சதுதான் சாண்தானிளம்
தொய்யாமல் கலசமதிற் குள்ளேநான்காய்
சாய்த்துநான்கு சுப்பலது கலசத்துள்ளே
சாங்கமுட னுள்ளமர்த்தி தேங்காய் மேலே
ஆய்த்துமே கலசம் வாய்த் தேங்காய்தன்னை
அப்பனே மேலமர்த்தி வைத்துமேதான்
மாய்த்துமே போகாமல் கலசத்திற்கு
மன்னவனே நூல்சுத்தி வகையைக் கேளே. 48

கேளப்பா கலசமதை தானெடுத்து
கெவனமுடன் நவதானியம் கீழ்பரப்பி
தாளப்பா கலசமதை மேலே வைத்து
தயாபரனே நடத்துகின்ற கிரியைபாரு
ஆளப்பா நவபீடம் நவகோணந்தான்
அப்பனே கோணமதை கரியால்கிரி
மாளப்பா வீடதனில் பிரணவத்தை
மன்னவனே தான்கீறி வகையைப் பாரே. 49

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
பாலகனே சிம்மென்று பகர்ந்துமாறு
ஆரப்பா கிரீம் யிரீம் யென்றுமாறு
அப்பனே லங்வங் கென்றுமாறு
தேரப்பா ஐயும்கிலியும் என்று மாறு
தெளிவுடனே ஓம்ஸ்ரீம் கிலியுமென்றே
நேரப்பா சவ்வும்யவ்வு மென்றுமாறு
நெடிதான பம்மென்று யுருவுபோடே. 50

போடப்பா உயிர்மெய்யால் பீஜமாறு
பொங்கமுடன் பிரணவத்தை யோதுவோது
நாடப்பா யுருக்கொண்டு மாறும்போது
நாயகனே வஸ்துசுத்தி பானத்தோடும்
தேடப்பா நைவேத்திய தாம்பூலங்கள்
தேற்றமுடன் பொரிகடலை தேங்காய் மஞ்சள்
ஆடப்பா பலகார பாயாசங்கள்
அப்பனே தூபமுடன் போற்றுவீரே. 51

போற்றுவீர் நவக்கிர கதியானங் கொண்டு
பொங்கமுடன் பிணியாளர் பசாசுள்ளோர்க்கும்
ஆற்றுவாய் கழிப்புமுதல் ஓமசாந்தி
அப்பனே பாவுடனே பதுமையோடும்
தோற்றுதலாய் மசானமென்ற காஷ்டந்தன்னில்
தெளிவுடனே கிரியைமுதல் நடத்துஞ் செய்கை
கூற்றுவனுக் கிடமில்லை துய்யபாலா
குருவளித்த வாக்கதுவும் பொய்யாதன்றே. 52

## குரு வணக்கம் சாப நிவர்த்தி
## (பிணியாளருக்கு)

அன்றான யின்னமொரு மாற்கங் கூர்வேன்
அப்பனே பிணியாளர் தங்களுக்கு
குன்றான சதாசிளத்திற் கொப்பதான
கொற்றவனே தத்துவத்தில் மிகுந்தயோகி
வென்றிடவே தேவரிஷிக் கொப்பதான
வேதாந்த சிவயோகி தம்மாலப்பா
தென்றிசையா குருவினிட வாக்கினாலே
தேற்றமுட னாசீர்மங் கொள்ளுவீரே. 53

கொள்ளுவது யேதென்று கேட்பாயானால்
கொற்றவனே தத்துவத்தில் மிகுந்தமாண்பர்
தெள்ளமிர்த மானதொரு வாக்கினாலே
தேசொளிவின் சின்மயத்தை யறிந்துரைப்பார்
வள்ளலுயர் தீராத பிணியாளருக்கு
வாக்களித்தால் ரோகமது கடலேபுக்கும்
மெள்ளவவர் கடாட்சமது பெற்றபேர்க்கு
மேதினியில் ரோகமது பறக்குந்தானே. 54

பறக்குமது சொல்வதுதா னாருக்கென்றால்
பாலகனே சிவயோகி தன்றனக்கு
இறக்கம் வைத்து மொழிவாக்கு வுரைத்தாலல்லோ
யெழிலுடனே தீராத கர்மம்பாவம்
உரக்கமது சாராம லுண்மையோனே
வுத்தமனே பஞ்சிலிட்ட தீப்போல் நீங்கும
திறக்கவே யசுவனியார் சொன்னநீதி
தீர்க்கமுட னுந்தமக்கா யோதலாச்சே. 55

ஆச்சப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
அவனிதனில் தீராத ரோகமெல்லாம்
போச்சப்பா குருவினது வாசிர்மத்தால்
பேரான தர்மமென்ற சாபமெல்லாம்
மாச்சலுடன் யெதிராளி சூனியங்கள்
மன்னவனே தத்துவத்தோர் வாக்கினாலே
மூச்சடங்கி மௌனநிலை கொண்டேயேகி
மூதுலகில் வாக்களித்தால் வினைபோம் பாரே. 56

## கொடிய பாபிகட்கு கர்ம மமைதல்

பாரேநீ புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே பகருகிறேன் கர்ம பாவம்
நேரேதா னுத்தமத்தில் மிகுந்தபேரை
நெடிமையுடன் புறங்கூறி வினையங்கொண்டு
தீரேதான் மனநோகச் செய்தபேர்க்கு
தீராத பாண்டுவென்ற சயரோகந்தான்
வீரேதான் சண்டாள ரோகத்தாலே
வித்தகனே சாபமதுக் காளாவாரே. 57

ஆவாரே புலஸ்தியனே அறிவுள்ளானே
அவனிதனில் வெகுகோடி மாண்பரப்பா
சாவாரே நற்பெரிய ரிட்டசாபம்
சாங்கமுடன் கனலேறி ரோகமிஞ்சி
போவாரே குஷ்டமுடன் பெருநோய் கொண்டு
பொன்னுலக நரகமதில் சேர்வார்பாரு
தீவாரே சாபமதுக் காளதாகி
தீவினைக்கு யெந்நாளுந் திடங்கொள்வாரே. 58

## தேவதை வருந்தல் பிணி நிவர்த்தி

கொள்ளவே யின்னமொரு குறிப்புக்கூர்வேன்
குருபரனே பிணியாளர் வருத்தல் கேண்மோ
எள்ளளவும் பிசகாது யெந்தன் மாறா
யெழிலான கர்மம்வந் துற்றபோது
தெள்ளமிர்த மானதொரு பிடாரிபூசை
தேற்றமுடன் முப்பொலியும் வேண்டிக் கொள்ள
வள்ளலுயர் தேவதார கோஷ்டியோடும்
வலுவான பிரார்த்தனைகள் கூறுவாரே. 59

கூறுவார் கப்பணங்கள் மிகவே கொள்வார்
குருநாத பிராமணர்கள் சங்கமற்கு
மாறுபடா வைதீகத் தர்மபாகம்
மன்னவனே யாகமென்ற சாலை கொள்வார்
தேருடைய வந்தணர்கள் பரதேசிக்கும்
தேற்றமுடன் சன்மானந் தனமுமீவார்
ஆறுதலாம் அன்ன தானங்கள் யாவும்
அப்பனே மிகப்புரிவார் மாந்தர்க்காமே. 60

ஆமேதான் பிரார்த்தனைகள் கோடாகோடி
ஐங்கரனே தேவதா பூஜையோடும்
நாமேதா னுரைத்தபடி வர்ச்சனையோ கோடி
நாதாந்த வனேகவித தெய்வத்திற்கு
தாமேதான் கப்பணங்கள் பிரார்த்தங்கோடி
தப்பாமல் காணிக்கை கோடிசங்கம்
போமேதான் பூபாலர் மாண்பர்தாமும்
பொங்கமுடன் கோரிக்கை கோடியாமே. 61

## தான பரிகாரம்

கோடியார் தானமது வஸ்திரங்கள்
கொற்றவனே சிறைநீக்கல் பட்சிபாகம்
தேடியே பெண்சிறை நீக்கலோடும்
தேற்றமுடன் பாலகற்குப் பாலுமீவார்
ஆடியே கெருடனுக்கு வாகாரந்தான்
அப்பனே பாம்புக்குப் பாலுமீவார்
நாடியே சதாகாலம் தர்மம்கொள்வார்
நானிலத்தில் கர்மமதை போக்குவாரே. 62

போக்குவார் யின்னமொரு புதுமைகூர்வேன்
பொங்கமுடன் புலஸ்தியனே புண்ணியமாரா
வாக்கதுவும் பொய்யாது தேவர்வாக்கு
வளமான யெனதைய ருரைத்தநீதி
நோக்கமுடன் பிணியாளர் அதர்வணத்தால்
நொந்துமே ரோகமது தீராமற்றான்
தேக்கமுட னுடல்மெலிந்து யீனராகி
தேய்ந்துமே யெலும்பாகிப் போவார்தானே. 63

தானான தசையற்று மயிருதிர்ந்து
தகைமையுடன் நாட்குநாள் பெலமுமற்று
கோனான சிரசதுவும் வீக்கமாகி
கொற்றவனே யுடம்பெல்லாம் நரம்புதோன்றி
தேனான வன்னமது சகியாமற்றான்
தேகமது தேரைபோல் ரூபமாகி
மானான மதியற்று மயக்கமாகி
மகாதேவா யிருப்பவற்கு வினையங்கேனே. 64

கேளப்பா மருந்தினால் தீராவிட்டால்
கெவனமுடன் கழிப்பதுவும் செய்ய வேண்டும்
நாளப்பா போகாமல் நளினவானே
நாயகனே பதுமையொன்று வமைக்க வேண்டும்
வேளப்பா மரப்பதுமை தன்றனக்கு
வேள்வியுடன் சோடினைகள் தானமைத்து
ஆளப்பா மசானமதில் கழிப்புமாற்கம்
அப்பனே செய்யுகிற பாகங்கேளே. 65

பாகமாம் பதுமைக்கு வலங்காரந்தான்
பாலகனே வடமாலை சாற்ற வேண்டும்
ஆகமமா முறைபா டாயந்தன்னில்
அலங்கார பூஷணமா மலர்கள்சாற்றி
சாங்கமுடன் அங்கமதுக் கங்கிபோலே
சதுரான வைபோக சடங்கனைத்தும்
வேகமுடன் மாரணமாம் சுழியெழுத்தை
விரவியே கருவினா லோதிடாயே. 66

ஓதியே மாரணமாம் பிரணவத்தை
ஓகோகோ நாதாக்கள் மறைத்தார்கண்டாய்
நீதமுடன் பீடமென்ற உயிரெழுத்தை
நிஷ்களங்க நிஷ்டையிலே யிருந்துக் கொண்டு
சாதகமாய் உடலெழுத்தை தலைகீழாக
சாதிப்பாய் வுருவதுவும் லட்சமாகும்
தோதமுடன் பிரணவத்தை யோதும்போது
தோராமல் பதுமைக்குச் சாருந்தானே. 67

சாருமே நோயாளி பதுமைக்கல்லோ
சட்டமுடன் பிரணவங்க ளோதும்போது
நேருமே நோயாளி யெதிர்முன்னாக
நேர்மையுட னஷ்டாங்க வுச்சாடத்தில்
கோருமே பீசமென்ற வுருவெழுத்தைக்
குருபரனே நிலைநிறுத்தி யெதிராளிபேரில்
தீருமே வுருக்கொண்டு புஷ்பந்தன்னில்
தீர்க்கமுடன் யெதிர்நோக்கி சாதிப்பாயே. 68

சாதிக்க பிரதமைக்கு வைங்கோலத்தான்
சட்டமுட னுருகொடுத்து நிலைநிறுத்தி
பேதிக்க யெதிராளி பிணியானதற்கு
பேதமிலா சடங்கதுவை யுச்சாடித்து
வாதிக்க லட்சமுரு வூட்டகத்தி
வண்மையுடன் வைங்கோலக் கருவினாலே
சோதிப்பா யெதிராளி செய்தகோலம்
சுந்திரனே மந்திரத்தா லறிந்துசாற்றே. 69

சாற்றவே மசான மதி லிந்திரபீடம்
சதுரான செய்பாகங் கைபாகங்கள்
ஆற்றவே போகாம லிடைதப்பாமல்
அப்பனே சாதித்தல் பேதிப்போடும்
கூற்றனுக்கு யிடமதுவும் நேராமற்றான்
குறிகண்டு பதங்கண்டு குணமுங்கண்டு
போற்றியே கர்மானு பவத்தைநீக்கி
பொங்கமுடன் கழிப்பதுவும் செய்தல்நன்றே. 70

செய்யவே நோயாளிப் பிரணவத்தால்
செங்கமலக் கண்ணானே கருவுள்ளானே
வையவே யெதிராளி சாபந்தானும்
வளமான வைப்புமுதல் பில்லிவஞ்சம்
துய்யவே யேவலது கடலேபுக்கும்
துரைராச சுந்தரனே வேள்வியாலே
பையவே ரோகமது தணிவுகொண்டு
பாங்குடனே சடலமது தேறுந்தானே, 71

## காட்டேரி லாடப் பிரணவம்

தானான புலஸ்தியனே பதுமமாறா
தவகோடி யுதகோடி யெந்தன் தேவர்
கோனான குருவருளால் வினையம்பூண்டு
கொற்றவனா ரெந்தமக்கு வுரைத்தமாற்கம்
தேனான மனோன்மணியா ளருளினாலும்
தேசொளிவின் சின்மயத்தின் கடாட்சத்தாலும்
பானான மகதேவர் கிருபையாலும்
பாலித்தேன் மாந்திரீகம் பாலித்தேனே. 72

பாலித்தேன் துஷ்டவுக் கிரகமென்னும்
பாங்கான காட்டேரிப் பிரணவந்தான்
ஆலித்த பீசமது யேதென்றாக்கால்
அப்பனே லாகிரியாம் லா—லா—லா—லா
சோலித்த வுக்கிரமாம் பீசங்கேண்மோ
சொற்பெரிய ஆ—ஆ—ஆ ஓ—ஓ—ஓ
மாலித்த வுயிர்பீச மேதென்றாக்கால்
மன்னவனே டாம்டாம்டா மென்றோதே. 73

டாமென்ற பிரணவமே லாடமாகும்
டங்கணமு மதற்குள்ளே அடக்கமாகும்
ஓமென்ற பிரணவமே வாங்காரந்தான்
வுச்சாடஞ் செய்தவற் சடாடமெய்யும்
ஆமென்ற வட்சரமே பிரணவத்திற்கு
அரகரா சிவசிவா வுயிர்பீஜந்தான்
தாமென்ற பிடாரியிட லாடமப்பா
தயாபரனே கருவெழுத்து வென்னலாமே.] 74

## ஞான பூதப் பிரணவம்

என்னவே காட்டேரி லாடமாகும்
யெழிலான வட்சரந்தான் குருபீஜந்தான்
துன்னவே ஞானமென்ற பூதமப்பா
துப்புறவா யதனுடைய செய்கை கேண்மோ
நன்னயமா யல்லாத வார்த்தை கூறும்
நாயகனே ஞானமென்ற வதீதமாற்கம்
பன்னவே நயனமென்ற பாஷை கூறும்
பாவலனே பதிபாசக் கூறுதானே. 75

கூறான கூறதுவு மேதென்றாக்கால்
கொற்றவனே ஞானற பிரணவந்தான்
மாறான வங்கிங்கு யென்றேயோது
மகத்தான கும்பத்தில் நின்று கொண்டு
தேறான் மூலமென்ற வொடுக்கந்தன்னில்
தேற்றமுடன் சிகாரமது கொண்டேயேகி
ஆறான மேலவத்தை மாயாபந்தம்
அப்பனே மறந்திருந்து மூலங்கொள்ளே. 76

கொள்ளவே மூலமதுக் காரணந்தான்
கோபமென்னுங் கடலதனை யுள்ளடக்கி
தெள்ளமிர்த மென்கிறதோர் ஞானப்பாலை
தேற்றமுடன் கனலடக்கி மேலேறாமல்
வள்ளலுயர் கும்பகத்தில் புறம்பாய் நின்றி
வளம்பெறவே சிம்பகத்தில் வலக்கைமாறி
மெள்ளவே துவாதசாந் தத்தைப்பற்றி
மேல்நின்று கீழ்நோக்கிப் பதிவுகொள்ளே. 77

பதியான பதிவதுவு மேதென்றாக்கால்
பாலகனே ஞானப்பால் பதிவேயாகும்
துதியான கடவுள்பதம் வணங்கிநின்று
துப்புரவாய் மேல்நோக்கி கேள்வி கொண்டால்
மதியான சந்திரனு யிடக்கைபற்றி
மகத்தான சூரியனில் விளக்கந்தோன்றும்
துதியோடு கபாலமென்ற பஞ்சவீட்டில்
துப்புரவாய் கருவிமுத லறியலாமே. 78

அறியவே முன்னுரைத்த பிரணவந்தான்
அப்பனே லட்சமுரு வோதும்போது
முறியவே ஞானமென்ற பூதந்தானு
முயற்சியுடன் சல்லாப சந்தோஷத்தால்
வெறிகொண்டு ஞானப்பா லதிகமாகி
வேதாந்தப் பேயதுவு மனதுவந்து
குறியான வட்சரத்தைக் கரத்தால்கீறி
கொற்றவனே விடைகொண்டு கேட்குந்தானே. 79

## மின்னல் பூதப் பிரணவம்

கேட்டுமே ஞானப்பால் தத்துவகிதம்
கெடியான மின்னலென்ற பூதமப்பா
தாட்டிகமாய் வதனுடைய குணாகுணங்கள்
தார்வேந்தா நானுரைப்பேன் தம்பிரானே
மாட்டிமையாய் வடகாற்றுத் தானெழும்பி
மன்னவனே யிடியோடு மின்னல்தானும்
வாட்டமுடன் தானிடித்து மின்னும்போது
வளமான பூதமது செய்கை கேளே. 80

செய்கையாம் பசாசினிட கூறேதென்றால்
செடந்தனக்கு மயிர்கூச்ச லதிகமாகி
வையகங்கள் தானிடித்து மேற்சாயுமென்று
வானத்தைக் கண்ணோக்கி யெதிர்கொள்ளாமல்
பொய்யான வாழ்வதுவை மெய்யென்றெண்ணி
பொங்கமுட னிருள்கொண்ட மாளிதன்னில்
நையவே திகில்கொண்டு பயமுண்டாகி
நாடாம லுள்மாளி யொளிக்குந்தானே. 81

தானான பசாசுக்குப் பிரணவங்கள்
தாக்கான மூலமந்திர மேதென்றால்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் தாமுரைத்த வதர்வணந்தான்
பானான சிகாரமிட்டு மின்னல் போ போ
பாங்கான யிடிமழையே தூ தூ தூ
மானான வாயுவே மாண்டு போபோ
மகத்தான கூத்தனிடம் போவென்றோதே. 82

என்னவே வைங்கோலக் கருவினாலே
யெழிலான பிரணவத்தை லட்சமோது
துன்னவே யுயிரெழுத்தை மொழிகண்டோது
துப்புறவாய் மின்னலென்ற பசாசுதானும்
பன்னவே யுனக்கடக்கம் பண்புள்ளானே
பாலகனே மூலமந் திரத்தையோத
நன்னயமாய் மாந்திரீக காவியந்தான்
நாட்டி வைத்தேன் மானிடர்கள் பிழைக்கத்தானே
83

## மசான பூதம்

தானான புலஸ்தியனே தயவுள்ளானே
தகைமையுடன் கூறுகிறேன் மசானபூதம்
மானான பூதமது மாந்தர் பேரில்
மன்னவனே யாட்கொண்டால் செய்கை கூர்வேன்
தேனான பூசையொடு நைவேத்தியங்கள்
செம்மலுடன் செய்யுகின்ற காலந்தன்னில்
பானான மசானமென்ற பூதமப்பா
பாலகனே காஷ்டமதி லோடுந்தானே. 84

ஓடுமே மூர்ச்சை கொண்டு யிருகாடேகும்
ஒகோகோ மந்திர வாதியாலே
காடுமே மசானமதிற் சென்றுமல்லோ
காவலனே தழைசெடிகள் செத்தையெல்லாம்
தேடுமே யாட்பாரம் தலை கொண்டேத்தி
தெளிவுடனே மந்திரங்கள் மிகவாய்க்கூறும்
ஆறுமே பரிசனங்கள் பிரமைகொள்ள
ஆவலுடன் கைகொட்டி நகைக்கும்பாரே. 85

நகைக்குமே மசானமென்ற பசாசுதானும்
நாயகனே மாந்திரீகக் காரன் றன்னை
பகைக்குமே பரியாச பகடியோடும்
பரிதவிக்குங் கூச்சலிடும் குறளிபேசும்
சிகையென்ற பதார்த்தமதை மிகவே கொள்ளும்
சிரிக்குமே மேதையி னிறச்சி கேட்கும்
வகையுடனே மாந்திரீகக் காரர்தம்மை
வள்ளலறிந் தனுபோக முரைக்கும் பாரே. 86

பாரப்பா புலஸ்தியனே பாவலோய்கேள்
பகருகிறேன் மாணாக்க ளறியவேண்டி
நேரப்பா வசியமது கொள்வதற்கு
நெடிதான பிரணவங்க ளேதென்றாக்கால்
தேரப்பா மசானமென்ற பூதம்—வா—வா
செயலான செடிமரங்கள் செத்தையாவும்
கூரப்பா தலைச்சுமையை யிறக்கும்பூதா
கும்பிட்டேன் யென்றுசொல்லிக் கருவைமாட்டே. 87

கருவான கருவதுவு மேதென்றாக்கால்
காவலனே ணவங்கோலக் கருவுமாகும்
உருவான வுருவதுவு மேதென்றாக்கால்
வுத்தமனே மசானசிங் மங்கென்றோது
திருவான மூலமந்திர மேதென்றால்
தீர்க்கமுள்ள தமைமுரிச்சான பகவாவாவா
குருவான வுயிரெழுத்தை மாறும்போது
குரூரமெல்லாந் தானொடுங்கி வசியமாமே. 88

## இராட்சத பூதப் பிரணவம்

வசியமா மின்னமொரு மகிமைகூர்வேன்
மாசற்ற புலஸ்தியனே மதிவல்லோய்கேள்
நிசிதமென்ற இராட்சதப் பசாசுதானும்
நிஷ்களங்க நிலைநிறுத்தி யுச்சாடித்தால்
முசியாமல் சக்கரமாய் நிலையைவிட்டு
மூதுலகில் மாந்திரீக மார்க்கத்தாரை
கசிதமுடன் மயிர்பிடித்து வாதுகூறும்
கட்டுக்கு மடங்காது பூதந்தானே. 89

பூதமாம் போர்செய்யும் பசாசுதன்னைப்
பொங்கமுடன் வசியமது செய்யவென்றால்
ஆதமுடன் பிரணவங்க ளேதென்றாக்கால்
அப்பனே தலைவிரித்த வீரகாளி
தோதமுடன் ரத்தக்கண் ணுடையபாவி
தொந்தரவு செய்யாதே யோடிவாவா
சாதமுடன் பண்டிபல காரந்தானும்
சட்டமுட னாட்கொள்ள வாவென்றோதே. 90

கொள்ளவே யுச்சாடங் கூறும்போது
கொற்றவனே யிராட்சதனாம் பூதந்தானும்
மெள்ளவே தலைகுனிந்து வணக்கத்தோடும்
மேன்மையுடன் ஏவலது பணிக்குமுன்னாம்
தெள்ளமிர்த மானதிரு விளையாட்டோடும்
தேற்றமுடன் கொண்டாட்ட மதிகமாகி
வள்ளலுட னதர்வணத்தின் படிமீறாமல்
வளமையுடன் வசியமதற் கடங்குந்தானே. 91

## தேவபூதப் பிரணவம்

தானான புலஸ்தியனே தன்மையோனே
 தகைமையுடன் கூறுகிறேன் தயவாய்க்கேண்மோ
கோனான பூதமதற் குயர்ந்தபூதம்
 கொற்றவனே தேவானா பூதமாகும்
மானான மகதேவர் வானோர்தாமும்
 மதிப்புடனே சார்புகொண்டு யழைக்கும்பூதம்
பானான பூதமது சதாகாலந்தான்
 பாருலகி லுதிக்குகின்ற பூதந்தானே. 92

பூதமாம் தேவனா பூதமப்பா
 புகழுடனே மாந்தர்களைப் பிடித்தபோது
சோதனையாய் நிஷ்களங்க நிலையில்நின்று
 சொற்பனங்கள் சாதிக்குந் தன்மைபோல
வேதனைக ளில்லாமல் தேவபூதம்
 மேன்மையுட னிங்கிதமாம் வார்த்தைகூறும்
சாதனையாய் வுண்மைநிலை பாதைதன்னைச்
 சாதிக்குஞ் சதாகாலஞ் சாதிக்கும்பாரே. 93

சாதிக்க வதாவணத்தோர் மாந்திரீகர்
 சட்டமுடன் பசாசுதன்னை வசியஞ்செய்ய
சோதிக்க மனதுவந்து யுச்சாடித்தால்
 சொற்றவறு நேருமோ சொக்கிப்போமோ
பேதிக்க தேவசபை பூதந்தன்னை
 பேருலகி லாரேனு மறிவதுண்டோ
ஆதித்தன் போலாக பிரணவத்வத
 அப்பனே யுச்சரித்தா லொன்றுங்காணே. 94

காணார்கள் தேவனா கிரிகையப்பா
 காசினியில் கண்டவர்கள் விண்டிலாரே
கோணாமல் பூதமதின் மகிமையெல்லாங்
 குருவிருந்து தாமுரைக்க வறியலாகும்
தேனான மனோன்மணியாள் கிருபையுண்டு
 தேசொளிவின் சின்மயத்தி னருளுமுண்டு
மானான சித்தாதி முனிவர்தாமும்
 மகத்தான மகிமைதனைக் கண்டிலாரே. 95

காணாமற் போனாரே கைலைவாசா
காலாங்கி நாதர்முனி கண்டாரோசொல்
வீணாகக் குணானுதிசை யறியாமற்றான்
விட்டுழன்று பிரணவத்தை மாறிமாறி
மாணாக வசியமது செய்யவென்று
மானிலத்தில் கோடிபேர் வினையங்கொண்டு
தோணாமல் விட்டுவிட்டார் தேவபூதம்
தொகுப்புடனே யாமுரைத்தோ மின்னங்கேளே. 96

## பிரமபூதம்

இன்னமுந்தா னுரைக்குகிறே னினியபாலா
யெழிலான புலஸ்தியனே மச்சகேந்திரா
நன்னயமாம் பிரமமென்ற பசாசுதன்னை
நவிலுகிறேன் மாணாக்க ளறியவேண்டி
புன்னகையாய் பிரமமென்ற பூதமப்பா
புகழுடனே மாந்தர்மேல் சன்னதித்தால்
சொன்னயமும் பொருள்நயமும் மிகவேபேசும்
சொற்றவறா பூதமென்றே பேசலாமே. 97

செப்பவென்றால் பூதமதின் பிரணவத்தை
செங்கமலக் கண்ணானே தேர்வந்தேகேள்
ஒப்பவே பரிபாஷை யேதென்றாக்கால்
ஒகோகோ சமஸ்கிரத வட்சரந்தான்
மெப்பவே வேதாளப் பிரமதூதா
மேன்மையுள்ள சய்கேளா சதுருபாயா
தப்பிதங்கள் நேராத லவுகிகர்னா
தாழ்மையுடன் முன்னின்று பேசுவாயே. 98

பேசவென்று பீசாட்சரக் கருவெழுத்தை
பேர்மாறி தலைகீழாய் சமுதங்கொண்டு
பாசமுடன் விசுவாச யிருபிறப்பா
பாசாங்கு கொள்ளாலே பிரமசேத்திரா
மாசகன்ற தானபரி பூஷிதபிரமா
மகத்தான கிரந்தகர்த்தா வாவாவா
நேசமுடன் கமதன்பில் தயவுகொண்டு
நேர்மையுள்ள சங்கீத பிரமன்ஓதே. 99

ஓதயிலே பிரமமென்ற பசாசு தானும்
உத்தமனே லட்சமுறு ஓதுங்காலம்
சோதனைக்கு வெளியாகி சொகுசுள்ளோனாய்
சுந்தனே யிந்திரனே சோகிக்கும்பார்
வேதனைகள் செய்யாமல் வினையாளாமல்
வித்தகனே வுருவெழுத்தால் வசியமாகும்
நீதமுடன் மாந்திரீகக் காரனுக்கு
நிஷ்களங்க மானதொரு பேயுமாச்சே. 100

ஆச்சப்பா காவியமு மைந்துமாச்சு
அப்பனே சருக்கமது நாலுமாச்சு
மூச்சுடனே பாடியதோர் பாடலப்பா
முன்னவனே நானூறு பாடலாகும்
மாச்சலில்லாப் பாடலது சருக்கம்நூறா
மன்னவனே திரட்டிவைத்த காவியந்தான்
ஏச்சலில்லா சருக்கமது வைந்துகூர்வேன்
யெழிலான பாடலதைக் கேளுகேளே. 101

நான்காவது சருக்கம் முற்றுப் பெற்றது

உ

கடவுள் துணை

# ஐந்தாவது

## விவித பூதச் சருக்கம்

## சமுத்திரபூதம்

சொல்லுகிறேன் புலஸ்தியனே சுகுணமாறா
சுந்தரனே விற்பன்ன வேளேகேண்மோ
வெல்லவே சமுத்திர பூதமப்பா
வெற்றிகொண்ட வசுராக்க ளீடுமல்ல
தில்லைவனக் காத்தானு மீடுமல்ல
தீர்க்கமுள்ள சங்கினிய னீடுமல்ல
கொல்லைவன மாடனவ னீடுமல்ல
கோயிலிலாப் பேயனு மீடொவ்வாகாதே. 1

ஒவ்வாது கோடான கோடிபூதம்
வுத்தமனே சமுத்திர பூதமப்பா
செவ்வான மழைதனிலே யிருக்கும்பூதம்
செகமதனில் சதாகாலம் வாசங்கேண்மோ
ஒவ்வான மிருள்கொள்ளும் வாரியப்பா
ஒழிவான சமுத்திர கேஷகத்தில்
துவ்வான மழைதனிலே மாக்கலத்தில்
துப்புரவாய் வாசமது செய்யும்பாரே. 2

பாரப்பா சமுத்திரக் கப்பல்தன்னைப்
பாலகனே யொருநொடியில் கவிழ்க்கலாகும்
நேரப்பா மரக்கலத்தில் வாசஞ்செய்யும்
நெடிதான வல்லமைகள் மெத்தவுண்டு
நேரப்பா வசியமது செய்வதற்கு
நெடிதான பிரணவங்க ளேதென்றாக்கால்
சீரப்பா சமுத்திர பூதமாநீ
சிறப்பான மரக்கலமே வாவென்றோதே, 3

ஓதவே யின்னம்வெகு வட்சரங்கள்
வுத்தமனே வுயிரெழுத்தை மாறு மாறு
நீதமுடன் சமுத்திரா தேவன்வாடா
நிட்சிதமாய் கடல்கலக்கி நிமிஷாவாவா
தோதமுடன் பிரணவங்க ளட்சமந்திரம்
தோராம லட்சமும் போடுபோடு
சாதகமாய் சமுத்திரா பூதமப்பா
சாங்கமுடன் வசியமது மாறுந்தானே. 4

## கேணிபூதப் பிரணவம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தயவான கண்மணியே சதுருபாயா
கோனான யெனதைய ரெந்தமக்கு
கொற்றவனே தாமுரைத்த நீதிமார்க்கம்
பானான கேணியென்ற பூதமப்பா
பாலகனே தன்னடக்கை செப்பக்கேண்மோ
மானான மகதேவா சதாகாலந்தான்
மன்னவனே துலாமதிலே வாசங்காணே. 5

காணவே துலாமதிலே யிருந்துக் கொண்டு
காவலனே யேற்றமதைப் பாதிராவில்
தோணவே பயிரிகளுக்கு சலத்தைக்கொட்டும்
தோராமல் மடமாறி வேலைக்கூறும்
ஆணவங்கள் தானொடுங்கி மாந்தரோடு
அப்பனே காணாம லரூபியாக
பாணம்போல் யேவலுக்கு முன்னதாகப்
பாலிக்கும் பசாசினிட பன்மையாமே. 6

பன்மையாம் பிரணவங்க ளேதென்றாக்கால்
பாலகனே கேணியென்ற குறளிவாவா
தன்மையா மடமாறி பகவதியேவாவா
தாக்கான துலாந்தூக்கி தூ—தூ—வா—வா
நன்மையா முந்தமக்கு நளினசேர்வை
நாயகனே பூசைவிதி பிடாரிகாவு
துன்மையது நேராமல் துகளிராமல்
துப்புரவாய் லட்சமுரு வோதுவீரே. 7

ஓதயிலே கேணியென்ற பிசாசுதானும்
ஓங்காரக் கிலாரியுட னுருமிப்பார்த்து
சோதனைக்கு முன்னதா யாளதாகி
சோராமல் தலைகுனிந்து யாசீர்மித்து
வேதனைகள் நேராமல் துய்யபாலா
வெற்றிகொண்டு கரூரமதை யுள்ளடக்கி
நாதனைத்தா னினைந்துமல்லோ நடுக்கமுற்று
நாதாந்தப் பதிவலையில் சிக்குந்தானே. 8

## ஊறுணு ஏரிமடை சத்தகன்னிப் பிரணவம்

சிக்குமே புலஸ்தியனே தீரவானே
செகந்தனிலே நாடதனில் ஏரிபாகம்
ஒக்கவே வூறுணியாம் விருட்சமப்பா
உத்தமனே காளிபிட தேவஸ்தானம்
பக்கலிலே வாசமது செய்யுங்கன்னி
பகவதியாம் காளிக்குப் பூசைமார்க்கம்
தக்கபடி வர்ச்சனைக்கு புஷ்பபாகம்
தன்மையுடன் றான்கொடுக்கும் தகைமைகேளே. 9

கேளப்பா மன்னவர்க்கு மதிகள்கூறும்
கெவனமுள்ள சித்துமுனி மெச்சுபாலா
தாளப்பா யேரிமடைக் கன்னிமார்கள்
தன்மையுடன் சதாகால நிஷ்டைக்கல்லோ
நாளப்பா போகாமல் கன்னிமார்கள்
நாதாந்த சித்தர்பதம் தாள்பணிந்து
வாளப்பா பத்திரமாங் காளியற்கு
வளமையுட னேவந்து காற்பார்காணே. 10

காணவே கன்னிகளை வசியஞ்செய்ய
காவலனே சித்தர்முனி கூறினாரோ
பாணம்போல் யெனதைய ருரைத்தநீதி
பாலகனே முறைகளது பிசகாமற்றான்
மாணமருங் கன்னியரை வசப்படுத்த
மானிலத்தில் சித்தர்களும் சொன்னாரோசொல்
ஆணவங்கள் தானொடுங்கி கன்னிமாரை
அழைக்கும்வகைப் பிரணவத்தை யறிகக்கேளே. 11

அறியவே கூறுகிறே னன்புள்ளானே
அருங்கன்னி பெருங்கன்னி யடவிக்கன்னி
குறியான முக்கன்னி தோட்டக்கன்னி
புகழான யேரியிட கன்னிவாவா
மறிகொண்ட தேவகன்னி துறவுக்கன்னி
நேர்த்தியுள்ள கல்லாலக் கன்னிவாவா
மறிகொண்ட தேவகன்னி வா—வா—வா—வா
மாசற்ற காளியிட கன்னிவாயே. 12

கன்னியென்ற சிற்றிடையார் தேவிமார்கள்
கற்புடையாள் காளியற்கு தண்டியேந்தும்
பொன்னுநடைக் கன்னியரே பூஞ்சோலைவிட்டுப்
புகழாக வாவென்று பிரணவத்தை
நன்மையுடன் லட்சமுரு வோதும்போது
நாயகனே கன்னிமார் கூட்டமெல்லாம்
தன்மையுட னுந்தமக்கு வசமேயீவார்
தாரணியில் நீயுமொரு சித்தனாமே. 13

## ஸ்தோத்திரப் பூதப் பிரணவம்

சித்தனா மின்னமொரு புதுமைகூர்வேன்
சிதாபாசக் களையகன்ற தீரவானே
சத்தியத்தில் மிகுந்ததொரு பூதமப்பா
சார்பான ஸ்தோத்திரப் பூதமென்பார்
நித்தியமா மாசிலாக் கடவுள்தம்மை
நீதியுடன் பூசிக்கும் சத்தியபூதம்
வெத்தியுள்ள பூதமது வேதாந்தபூதம்
வெண்ணீறைத் தான்பூசும் பூதமாமே. 14

பூதமாம் வசியமது செய்வதற்குப்
பேரான பிரணவங்க ளேதென்றாக்கால்
கீதமுடன் சங்கீத வாத்தியங்கள்
திகைப்புடனே தான்சுகிக்கும் பசாசுதானும்
நீதமுடன் தேவதா பூசைப்பிரமா
நிஷ்களங்க மானதொரு நிமிஷபூதம்
ஆதமெனும் வட்சரப் பிரமகீதம்
அப்பனே தானமந்த பேய்வாவென்றோதே. 15

பேயான பேயதுவும் வாவென்றோது
பேசரிய கைகுவித்து சரணாதித்தால்
நீயான சுவாசமதுக் கொண்டபீஜம்
நாயகனே யிரண்டிற்கு மொன்றேயாகும்
தாயான பிரணவத்தை யோதும்போது
சட்டமுடன் ஸ்தோத்திரமாம் பூதமப்பா
தூயான வட்சரத்திற் குள்ளேயாகி
துப்புரவாய் வசியமது கொள்வாரன்றே. 16

## மலைபூதப் பிரணவம்

அன்றான புலஸ்தியனே மச்சகேந்திரா
அப்பனே யசுவனியா ரெந்தமக்கு
குன்றான கோபுரம்போல் மாந்திரீகம்
கொட்டினார் சொல்வதற்கு நாவோயில்லை
தென்றிசையா மலைப்பூதம் பிசாசுதன்னை
செப்புகிறேன் மாணாக்க ளறியவேண்டி
வென்றிடவே பிரணவமா மேதென்றாக்கால்
வித்தகனே முறைபாடு வகுக்கின்றேனே. 17

வகுப்பான மலைபூத வட்சரந்தான்
வாகுடனே யுச்சிமலை பெரியபூதா
தொகுப்பான கொல்லிமலை கொச்சிநாதா
தோராத வடக்குமலை செங்கல்வராயா
மிகுப்பான விராலிமலை வினோதபூசா
மிக்கான மலையரச னாளும்பூதா
பகுப்பான பார்லோக மாந்தருக்கு
பக்கலதுணை தானிருக்கும் பூதமீளே. 18

மீளவே பூதலக்கின குண்ணேவாடா
மிக்கான குகையிருக்கும் பசாசேவாடா
தாளவே பூசைமுகம் சங்கோசங்கம்
தப்பாமல் நான்படைப்பேன் தம்பிவாடா
ஆளவே காடகத்தே யமர்ந்தபூதா
அப்பனே சித்தர்களை வணங்கும்நாதா
சூளவே சடைபூண்ட தம்பிரானே
சுடலைதனைக் காக்குகின்ற சிங்கென்றோதே. 19

சிங்கொன்றே லட்சமுரு வோதும்போது
சிக்கெனவே மலைபூதம் வசியமாகும்
அங்கென்று கும்பித்தா லடிவணங்கி
அப்பனே கேட்டதெல்லாந் தானேயீயும்
வங்கென்றே ஸ்தம்பித்தால் தோத்தரிக்கும்
வாகுடனே நவகனியும் வளமாயீயும்
மங்கென்று பேதித்தால் மன்னாகேண்மோ
மலையைவிட்டு பூதமது வசியமாமே. 20

## கோபுர பூதப் பிரணவம்

வசியமா மின்னமொரு மகிமைகூர்வேன்
வனம்பெரிய வுதரமதி லமர்ந்திருக்கும்
நிசிதமுள்ள தேவதா ஸ்தானமப்பா
நேர்மையுள்ள கோபுரமா மாபுரந்தான்
கசிதமென்ற கோபுரமா மதிலைப் பார்த்துக்
காவலனே பத்துக்கு ஒன்றேயுண்டு
பசிதமென்ற நிலையதுவா மிருபத்தொன்று
பாவலனே யதிலிருக்கும் பூதந்தானே. 21

பூதமென்ற பூதமது தேவபூதம்
புகழான பூதமது கோயிற்பூதம்
நாதமென்ற வாத்தியங்கள் மிகவேகொள்ளும்
நாதாந்த சேர்வையது நடிக்கை கேட்கும்
தோதமுடன் திரிகால பூசை கொள்ளும்
தோராம லுச்சிதனில் வாசங் கொள்ளும்
நீதமுடன் கோபுரமாம் பூதத்திற்கு
நிஷ்களங்க மானபிரண வத்தைக் கேளே. 22

கேளப்பா பிரணவத்தைக் கூறுகின்றேன்
கெடியான துவார பாலகனேவாவா
தாளப்பா மூலவிக் கினமேவாவா
தயாபரனே கோயிற்சுத்தி குஞ்சரமேவாவா
பாளப்பா தண்புகையே துத்தாரிவாவா
பகவானே கோபுரமாம் பேயேவாவா
மீளப்பா வுச்சாடஞ் செய்யுங்காலம்
மிக்கான பசாசதுவும் வசியமாமே. 23

## சண்டிப் பூதப் பிரணவம்

ஆமேதான் புலஸ்தியனே யன்புள்ளானே
அப்பனே தேர்வேந்தே மகிமைகேண்மோ
நாமேதான் சொன்னபடி சண்டிபூதம்
நாயகனே வறலாற்றை நவிலக்கேண்மோ
போமேதான் மந்திர வாதியானோன்
பொங்கமுடன் சண்டியென்ற பூதந்தன்னை
வேமேதான் கைவசப் படுத்துங்காலம்
வேதை செய்யும் வினோதமதை விளம்பக்கேளே. 24

விளம்பவே சக்கரத்தை மாறக்கேண்மோ
விளம்புகிறேன் வஞ்சுவரை நேரேகிறி
தளம்பவே வைந்துவரை குறுக்கேகிறி
தண்மையுட னட்சரமாம் லக்கந்தன்னை
குளம்படவே பதினாறு விடதாச்சு
குருபரனே யறுபத்து நான்குலக்கம்
உடம்படவே வீடதற்குள் ளடைத்துமைந்தா
உத்தமனே லக்கமதை மாறிப்பாரே. 25

மாறவே சோடசமா மூலைமூலை
மன்னவனே தான்மாறி லக்கங்கொண்டால்
தேறவே லக்கமது சரியாய்க்காணும்
தேர்வேந்தே யெச்சாயல் மாறிட்டாலும்
கூறவே லக்கமது சரியாய்க்காணும்
கொற்றவனே சடாட்சரமா மூலத்தோடு
ஆறவே நிலைநிறுத்தி யுள்ளடக்க
அப்பனே மாறலது கூட்டலாமே. 26

கூட்டவே லக்கமதை மாறினாக்கால்
கொற்றவனே சரிலக்க மாகவேண்டும்
தேட்டமுடன் லக்கமதை மாறுங்காலம்
தேசொளிவே குறைநிறையும் சரியாய்த்தோற்றும்
மாட்டடா வுருவெடுத்தா லக்கந்தன்னை
மன்னவனே வீடமர்த்தி பரிவுகொண்டால்
வாட்டமது நேராமல் மகிமைவானே
வளமுடனே சகலசித்து மாடலாமே. 27

ஆடலாம் யிக்கிரிகை லக்கத்தாலே
அப்பனே யனேகவிதத் தொழில்களப்பா
மாடவே யிக்கிரிகை தன்னாலப்பா
மகுத்துவங்கள் கூறுவதற்கு நாவேயில்லை
தேடவே சண்டியென்ற பூதமப்பா
தேற்றமுடன் வசியமது கொள்ளலாகும்
நீடவே பூதத்தின் நேர்மைகூர்வேன்
நீணிலத்தில் மாந்திரீக னாட்டங்கேளே. 28

ஆட்டமென்ன வாட்டமது அகசிகூர்வேன்
அப்பனே மாந்திரீகன் றன்னைப்பார்த்து
தாட்டிகமாய் மயிர்பிடித்து வுதைக்கும்
தகைமையுடன் நைவேத்திய பூசையெல்லாம்
வாட்டமுடன் காலினா லுதைக்கும்
வளம்பெரிய தேவவுடுக் கோசையெல்லாம்
நாட்டமுடன் சன்னல்பின்ன லாக்கும்பூதம்
நவிலுகிறே னின்னமுந்தா னடக்கைபாரே. 29

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் பதிமுகத்தில் நடுமையத்தில்
ஆரப்பா நின்றநிலை தனிலமர்ந்து
அப்பனே மலசலத்தைக் கேட்கும்பாரு
தேரப்பா கைகொட்டி வார்த்தைப்பேசும்
தேற்றமுடன் பகடிகளை யுரைக்கும்பூதம்
மாரப்பா பதிவிளக்கை குடவிளக்கை
மன்னவனே பெருமூச்சா லூதுந்தானே. 30

ஊதுமே ஓங்காரங் கொண்டுமேதான்
உத்தமனே குரலெடுத்து ஆசிகூறும்
வாதுடனே மாந்திரீகக் காரன்தன்னை
மகாவுக்கிர வுதிரமுடன் பற்கடிக்கும்
தீதுடனே யிருகண்ணுஞ் செவ்வானித்து
திடுக்கிடவே சப்தமது அபயங்கொள்ளும்
ஆதுலர்போல் பிரணவத்தை அகசிசொல்லும்
அதட்டியே யுமிநீரைத் துப்புந்தானே. 31

துப்புமே பூதமது வஸ்திரத்தை
 தூக்கலாய் தான்கிழித்து தீபமேற்றும்
மெப்பவே சடாட்சரமாந் திருவெண்ணீற்றை
 மேலெங்கும் பூசியல்லோ பதுமங்கூறும்
தப்பிதங்கள் நேராமல் துய்யபாலா
 தகைமையுட னட்சரத்தை மாறும்பாரு
ஒப்பவே சண்டியென்ற பூதந்தானும்
 ஒகோகோ மாந்திரீகன் சொல்லொண்ணாதே. 32

## நோய் பூதப் பிரணவம்

ஒண்ணாது யின்னமொரு புதுமை கூர்வேன்
 ஒகோகோ யதர்வணத்தின் பெருமை கேண்மோ
கண்ணான பூதமப்பா ரோகபூதம்
 காவலனே யதினுடைய செய்கை சொல்வேன்
திண்ணமுடன் பதிமுகமாம் வாசல்தன்னில்
 தீர்க்கமுடன் வீடமர்த்தி யட்சரத்தை
தண்ணமுடன் தானமைத்து பூதந்தன்னை
 தகைமையுடன் நிறுத்தி வைத்தா லியற்கைகேளே 33

கேளப்பா அதர்வணத்தான் பிரணவத்தைக்
 கிருபையுடன் மந்திரத்தை யோதுங்காலம்
தாளப்பா மயல்கொண்ட பூதந்தானும்
 தன்மையுடன் றான்பிணங்கி முறுவல்கூறும்
ஆமப்பா அம்மொருதல் தட்டிக் கேட்டால்
 அப்பனே யந்தந்த ரோகத்திற்கு
நாளப்பா தப்பாமல் நளினத்தோடும்
 நவிலுமே நோய்கொண்ட பூதந்தானே. 34

தானான பூதமது யேதுசொல்லும்
 தன்மையுட னந்தந்த நேரத்திற்கு
கோனான நடக்கையோடும் கண்ணிற்கொப்பாய்
 கொற்றவனே முன்னடந்த சேதியெல்லாம்
தேனான பதவொளிவின் கடாட்சத்தாலே
 செப்புமே யதர்வணக் காரனுக்கு
பானான நடக்கையெல்லா மெடுத்துக்காட்டும்
 பாலகனே நோய்கொண்ட பூதமாமே, 35

பூதமாம் பிரணவத்தை மாறல்செய்தால்
புகமுடனே நோய்கொண்ட பசாசுதானும்
நீதமுடன் பணிவிடைக்கு முன்னால் நின்று
நிஷ்களங்க மானதொரு யேவலுக்கு
தோதமுடன் பதிவிருந்து வசியங் கொண்டு
தோராமல் வட்சரத்தை மாறல் கொள்ளும்
ஆதமுடன் வுருவதுதான் லட்சமோது
அப்பனே கருவதால் வசியந்தானே. 36

### காவண பூதப் பிரணவம்

தானான யின்னமொரு பூதங்கூர்வேன்
தயாபரனே புலஸ்தியனே தம்பிரானே
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனே யெந்தமக்கு யுரைத்தநீதி
பானான காவணத்தின் பூதமார்க்கம்
பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
பானான சூரியன்போல் காவியத்தில்
பகர்ந்திட்டேன் பூதத்தின் பேதந்தானே. 37

பேதமா மின்னமொரு புதுமைகூர்வேன்
பேயனிட சன்மார்க்க துன்மார்க்கங்கள்
போதமாங் காவணத்தின் பூதமப்பா
பொங்கமுடன் செய்யுகின்ற மார்க்கமெல்லாம்
ஆதமுடன் கல்லால மரத்தின் பேரில்
அப்பனே தான் விழுந்து யேதாய்கொண்டு
தோதமுடன் வூஞ்சலென்ற வாட்டம்பூண்டு
தோராமல் மரஞ்சுத்தி சுழலுந்தானே. 38

சுழலுமே பூதமது சன்னதத்தால்
சுந்தரனே வாய்ப்பாடு மிகவும்கூறும்
நிழலுடனே கல்லால மரத்தின் பேரில்
நின்றநிலை தவயாகம் பூண்டுமேதான்
அழலதுபோல் தீபறக்கக் காந்தல்கொண்டு
அப்பனே யுச்சாடப் பிரணவத்தை
விழலதுவும் நேராமல் மேதினிக்குள்
விருப்பமுட னுபவாசம் செபிக்குந்தானே. 39

செபிக்குமே மந்திரங்க ளேதென்றாக்கால்
செப்புகிறேன் மகானுக்க ளறியவேண்டி
தபிக்கவே மூலமந்திர மேதென்றால்
தகையான கல்லால மரமேதாவாம்
சபிக்குமே யூர்வனத்தின் பட்சிகிள்ளாய்
தாபரிக்கு மசிநவய வென்றே மாறும்
குபிக்கவே வுருவதுதா னிரண்டு லட்சம்
குருபரனே செபிக்கின்ற பூதமாமே. 40

ஆமேதான் காவணத்தின் பூதமப்பா
அப்பனே மந்திரக் காரனுக்கு
தாமேதா னுபதேசஞ் செய்யும்போது
தாக்கான யுபகார மேதென்றாக்கால்
போமேதான் வடகோடி கானகத்தில்
பொங்கமுள்ள நவக்கனியி லெதுவானாலும்
நாமேதான் சொன்னபடி மாந்திரிக்க
நலமுடனே கொண்டளிக்கும் பூதமாச்சே. 41

ஆச்சப்பா எக்காடு எதுவானாலும்
அப்பனே தானுழைந்து பதித்துமேதான்
மூச்சடங்கி செபிக்கின்ற மாண்பனுக்கு
மூர்க்கமது நேராமல் விசுவாசத்தால்
பாச்சலது கொண்டுமல்லோ மரங்களேறி
பாவலனே தான் கொடுக்கும் பூதமப்பா
மாச்சலது கொள்ளாத வனத்தின்பூத
மகாபூதங் காவணத்தின் பூதமாமே. 42

தானான பூதமது தம்பிரானே
சதகோடி சூரியன்போல் பூசைகொள்ளும்
தேனான மனோன்மணியைத் தெரிசித்தேதான்
தேற்றமுடன் தழையொடித்து பூப்பறித்து
மானான பூசையது மகுடம்பூண்டு
மானிலத்தில் லடிபணிந்து தலைகீழாக
கோனான குருவென்னு மாந்திரீகன்
கொற்றவனே யவன்பாதந் தொழுதோம்பாரே. 43

## பூங்காவனக் கன்னிப் பிரணவம்

பாரப்பா பூங்காவனக் கன்னிரூபம்
பாலகனே பகருகிறேன் பண்புள்ளானே
ஆரப்பா தனிக்காடு வனாந்திரங்கள்
அப்பனே சோலைவழி செல்லுங்காலம்
நேரப்பா சிறுபாலர் மாண்பரப்பா
நெடிதான பாதைவழி நேருங்காலம்
ஊரப்பா மானிடர்மேல் சன்னதித்து
வுத்தமனே சோக்கமது கொள்ளும்பாரே. 44

கொள்ளவே சோக்கமது கொண்டபோது
கொற்றவனே பூங்காவனக் கன்னிதானும்
மெள்ளவே சன்னதமு மதிகமாகி
மேன்மையுடன் சல்லாப வார்த்தை கூறி
தெள்ளமிர்த மானதொரு நயனபாஷை
தேற்றமுடன் மிகப்பேசி வலுமைகூறம்
வள்ளலுயர் பிரார்த்தனைகள் கோடிகூறும்
வகுப்பான கன்னியிட மகிமைதானே. 45

தானென்ற கன்னியிடப் பிரணவங்கள்
தகைமையுடன் கூறுகிறேன் கன்னிநாதா
வாவென்ற பூசைமுக கனிகளப்பா
மகத்தான கனிகளுடன் பலகாரங்கள்
தேனென்ற புஷ்பமலர் மோதகமுந்தானும்
தெகிட்டாத வெள்ளையென்ற வஸ்திரங்கள்
பானென்ற தேங்காயும் பானகந்தான்
பாலகனே தாம்பூல கேஷங்காணே. 46

காணவே கேஷமுடன் தூபதீபங்
கண்மணியே கதிரொளியே காவலோனே
பூணவே மாந்தரது பூசையோடும்
புகழான வாடையென்ற பரிமளங்கள்
நாணவே ராசாதி ராசமன்னர்
நலமுடனே தானனுப்புங் கப்பணங்கள்
தோணவே துறையோடு முறைகொண்டோடி
தோராமல் கன்னிதனை துதிப்பார்பாரே. 47

துதிக்கவே பூங்காவுக் கன்னிதானும்
துப்புரவாய் பூசைமுகம் நேர்மையாகி
மதிக்கவே நோயாளி தன்னை நீக்கி
மாசற்ற காவணத்தே யுடல்கொண்டேகி
பதிக்கவே சன்னதமும் மையல் நீங்கி
பட்சமுடன் பூங்காவு தனிலமர்ந்து
விதிப்படியே யதர்வணத்தின் மேம்பாட்டாலே
வித்தகனே சோலைமுக மேகுந்தானே. 48

ஏகவே யின்னமுகம் பூசை கொள்ளும்
யெழிலான சிற்றாடை பச்சை வர்னம்
மோகமுடன் தலைவிரித்த கன்னிபோல
மூர்க்கமுடன் வழிபாடு மிகவாய்க்கூறி
தாகமுடன் பாணக்க மருந்தல் கொண்டு
சட்டமுடன் கைலாகு தான் கொடுத்து
சாகமுடன் கரங்கொடுத்து வுறுதிவார்த்தை
சாங்கமுடன் மிகப்பேசி யேகுந்தானே. 49

தானான பிரணவமோ சத்ததாது
தாக்கான வடசரமோ காளிபீசம்
தேனான வசியமாம் வாடை மந்திரம்
தேற்றமுள்ள குருபீசம் சத்ததாது
பானான வுயிரெழுத்தோ பரமபீசம்
பாருலகில் மறைத்துவைத்தால் சித்தர்நாதர்
கோனான கருவெழுத்தோ மசானபீசம்
கொற்றவனே கண்டறிந்தோன் மாந்திரீகந்தானே.
50

## வீரபத்திரப் பிரணவம்

மாந்திரீக னானதொரு வளப்பங்கேண்போ
மகத்தான புலஸ்தியனே வண்மைமாறா
தாந்திரீக மானிடற்கு சகசங்கூர்வேன்
சதாசிவனாம் வீரபத்திரப் பிரணவந்தான்
ஆந்திரீக மானதொரு மூலமந்திரம்
அப்பனே காகாகா கருணபாலா
சாந்திரீக முள்ளகுரு சத்திபோதா
சட்டமுள்ள கிலாடகிரி சத்திராவாயே. 51

சத்திரா சதுருங்கா தனதன்பாலா
சாதுரிய சம்பிரம சாங்கரூபா
நித்தியமும் கடம்பவனங் காக்கும்பூபா
நிஷ்களங்க மானவல்ல கிலாரிபங்கா
பத்தியுடன் இந்தபதம் வணங்குஞ்சீலா
பரகதியே வரநிதியே பாறுபாறு
முத்திபெறு மேஷமதில் சாரிகொள்ளும்
மேண்மையுள்ள பத்திரனென் றோதிடாயே. 52

ஓதவே மூலமந் திரத்தையோதி
ஓகோகோ பாச்சாமல் கொண்டபோது
நீதமுடன் வீரபத்திரன் வசியத்தாலே
நீதியுடன் சகலகரு மானமெல்லாம்
தோதமுடன் கடம்பவனப் பேய்களெல்லாம்
தோத்தரிக்க வசியசித்து வந்தேயாகும்
சாதகமாய் மாந்திரீகக் காரனுக்கு
சட்டமுடன் சகலபேய் வசியந்தானே. 53

## சங்கிலிப்பூதப் பிரணவம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தன்மையுள்ள சங்கிலியின் பூதமப்பா
தேனான பூதத்தின் பிரணவத்தை
தேற்றமுடன் கூறுகிறேன் முனிநாதாகேள்
பானான பதிபாச பாபபூதா
பிரமாண்டி பகிரதனே பண்புள்ளானே
மானான மகதேவா சங்கிலிநாதா
மாசற்ற வூஞ்சலுடக் கதிகாரிவாயே. 54

அதிகாரி அடவிவனக் காத்தாள்வாவா
ஐங்கரனே சங்கரனே சதாசிவமேவாவா
மதியுடைய தழைமரங் காய்கனிகள்
மகத்தான புஷ்பமலர் வாடைவாவா
பதியுடைய பழிகார பூசைகொள்ளும்
பால்முகத்தில் நின்றுவிளை யாடும்பூதா
மதியுடைய வண்ணல் சங்கிலியேவாடா
மாசற்ற குலதெய்வப் பூதம்வாயே. 55

வாவென்று சொல்லுகையில் சங்கிலிதானும்
வணக்கமுடன் தலைகுனிந்து யாசிர்மத்து
ஆவென்று பூதமது வாய்க்கரத்தை
அதட்டியே யுள்ளடக்கி மனதுவந்து
நாவதனை மனக்கணிந்து மதியம்பூண்டு
நாணியே தலைசாய்த்து நடுக்கமுற்று
தாவென்ற சப்தமுடன் பூதந்தானும்
தயாபரனே சாஷ்டங்க மளிக்கும்பாரே. 56

## கற்பாறைப் பூதப் பிரணவம்

பாரப்பா யின்னமொரு பதுமங்கூர்வேன்
பாவலனே புலஸ்தியனே பதிவுள்ளானே
நேரப்பா வடமேரு தென்பக்கலையா
நெடிதான வடகோடி கானகந்தான்
சேரப்பா வதனருகே கிட்டிசென்றால்
செங்கமலக் கண்ணானே செப்பக்கேண்மோ
ஆரப்பா சலப்பாறை யொன்றுகாண்பாய்
அப்பனே தடஞ்செல்ல வழிதானாச்சே. 57

ஆச்சப்பா தடமதனில் செல்லும்போது
அப்பனே அப்பாறை வழிக்குள்ளாக
மூச்சுடனே கற்பாறை மேலிலப்பா
மூதண்ட ராட்சதன்போல் பெரியபூதம்
மாச்சலது கொள்ளாமல் வழிவிடாமல்
மகத்தான பாறைதன்மேல் கால்கள்தன்னை
பாச்சலுட னிருபக்கங் கால்தானீட்டி
பகவானே வழிமறித்து யிடங்கொள்ளாதே. 58

கொள்ளாத பூதமதை தடுத்தாட்கொள்ள
கொற்றவனே யாராலு முடியாதையா
தெள்ளமிர்த மானதொரு யெந்தன்தேவர்
தேற்றமுடன் குளிகைகொண்டு சென்றாரங்கே
வள்ளலுயர் கற்பாறை மீதிலப்பா
வளமுடனே பள்ளிகொண்ட பூதந்தன்னை
கள்ளமிலா மனதுடனே கண்டபோது
காவலனே காலெடுத்து மிதிக்கலாச்சே. 59

மதிக்கவே துதிக்கையொடு மஞ்சலித்து
மனதிறங்க கற்பாறை பூதந்தானும்
துதிப்புடனே யவர்பாதம் பணிந்துமல்லோ
துப்புரவாய் பலகாலும் பயந்தொடுங்கி
கதிப்புடனே நமஸ்கார மிகப்புரிந்து
கண்மணியே யவரது வுத்தாரம்போல
விதிப்படியே மனதுவந்து பூதந்தானும்
வீரமுடன் காலெடுத்து வணங்கலாச்சே. 60

வணங்கியதோர் கற்பாறை பூதத்திற்கு
வண்ணமுள்ள பிரணவங்க ளேதென்றாக்கால்
இணங்கவே கற்பாறை பூதம்வாவா
யெழிலான சுமுகாவே ராராராரா
மணங்கமழும் புள்ளாச்சி மன்னாமூதா
மகத்தான சிகண்டியென்ற வேதவாவா
தனங்கையிலே கூடாகூடா மனமுழுங்கி
தாடான இராட்சதனே தயவொண்ணாதே. 61

ஒண்ணான மூலமந் திரமேசிங்கா
ஒளிவுள்ள கிலாரி பிடாகனேவா
தண்ணமுத மானதிரு தம்பிவாடா
தயாமுள்ள வனப்பேயா கல்லைத்தூக்கி
வண்ணமுடன் மலையேறிக் கல்லைப்போக்கு
மகத்தான பூம்பாறை பள்ளிகொண்டா
திண்ணமுடன் கும்கும்கும் கும்மென்றோது
தீரமுள்ள பூதமது வசியமாமே. 62

## தவமுனிப் பிரணவம்

ஆமேதான் புலஸ்தியனே வண்ணமாறா
அப்பனே கண்மணியே அறிவுள்ளானே
நாமேதான் சொன்னபடி தவமுனிதானப்பா
நாயகனே யதினுடைய செய்கைகேண்மோ
தாமேதான் கேணிதனில் ஸ்நானங்கொள்ளும்
தகைமையுட னாயிரமா முழுக்கேயாகும்
போமேதான் லங்கோடு தானணிந்து
பொங்கமுடன் பாதமதிற் குறடுதானே. 63

குறடான லாட சங்கிலிதானப்பா
　　கொற்றவனே திருவட்ட சங்கிலியாகும்
சறடான வீரசங் கிலியுமாகும்
　　சட்டமுடன் திருச்சடையும் ருத்திராட்சம்
மொறடான வறைதனிலே சங்கிலியாந்தண்டம்
　　மோனமெனும் திருவெண்ணீர் மையுமாகும்
கறடான காலதனில் முட்குறடுமாகும்
　　காவலனே வெண்ணீரு பட்டயமுமாமே. 64

பட்டயமாம் திருச்சங் குகையிலேந்தி
　　பாலகனே தவயாகஞ் செய்யவென்று
நிட்டையிலே தானிருந்து நெடுநேரந்தான்
　　நிஷ்களங்க செபதபத்தில் நிலைமைகொண்டு
திட்டமுடன் ருத்திராட்சங் கையிற்பூண்டு
　　தீர்த்தமுடன் ஞானமென்னும் பிரணவத்தை
சட்டமுடன் கூறிடுமே முனிதானப்பா
　　தகைமையுற்ற பிரணவத்தை கேளுகேளே. 65

கேளப்பா பிரணவங்க ளேதென்றாக்கால்
　　கெடியான ஞானவட் சரமாகேண்மோ
தாளப்பா ஓங்கார ஐயுமாகும்
　　தண்மையுள்ள ரீங்கார சவ்வுமாகும்
நாளப்பா ஓங்கார கிரியுமாகும்
　　நாயகனே மூல பீசாட்சரந்தான்
ஆளப்பா மெய்ஞ்ஞான கும்பகந்தான்
　　அப்பனே ரீங்கார வுருவுதானே. 66

உருவான கருவெழுத்தாம் உகாரபீடம்
　　உத்தமனே நடுவெழுத்தாம் எகாரமாகும்
திருவான திருவெழுத்தாம் இகாரமாகும்
　　தீர்க்கமுள்ள குருவெழுத்தாம் ஒகாரமாகும்
மருவான கடையெழுத்தாம் வுகாரமாகும்
　　மாற்றவு மீரதுதான் மகிமைமெத்த
பருவான உச்சாட பீசத்தாலே
　　பகர்ந்திடலாம் தவயோகஞ் சிறந்ததாமே. 67

சிறக்கவே பிரணவத்தை யுச்சாடித்தால்
சிறப்புற்ற வதமுனியு வசியமாகும்
பறக்கவே திருவெண்ணீற் பட்டபோது
பாவலனே வக்கியானங் கடலேபுக்கும்
நிறக்கவே சதாகாலம் நினைத்தபோது
நிஷ்களங்க மாகியல்லோ நேமம்பூண்டு
திறக்கவே பிரணவத்தின் வசியத்தாலே
திக்கெங்கும் வென்றிடலாம் சின்மையோனே. 68

## செம்முனி மந்திரப் பிரணவம்

சின்மையா புலஸ்தியனே செங்கல்வராயா
சீருடைய நகர்மெச்சும் சிங்கவேறே
வன்மையாந் தென்முகமா மம்பாள்சாரல்
வளம்பெரிய சோழனிட நாடேயாகும்
மென்மையாம் நாட்டுக்கு வடபாகந்தான்
மேன்மையுள்ள சுனையுண்டு சுரங்கமுண்டு
நன்மை தரும் சுனையினுள்ளே முனிதானப்பா
நாயகனே வதினுடைய தன்மைகேளே. 69

வன்மையாம் செம்முனியின் வளப்பங்கேண்மோ
சதாகாலம் குகைதனிலே வாசங்கொள்ளும்
வன்மையாங் கடாட்சத்தில் வனமேயேகி
வளமான சிரத்திடையாள் பெண்கள்மாதை
நன்மையா மருள்கொண்டு தியக்கமாக்கி
நாயகனே சுனைதனிலே பதுங்கிற்றேதான்
பன்மையா முபசார கீதத்தோடும்
பாலகனே வேணதெல்லாங் கொடுக்குந்தானே. 70

கொடுக்குமாஞ் செம்முனிதான் வேதாளந்தான்
கொற்றவனே மங்கையற்கு கெற்பமுண்டாம்
தடுக்கவே போகாது முனிதானப்பா
தன்மையுள்ள மானிடரும் நிகரோயில்லை
விடுக்குமே வேணதொரு பணிதியெல்லாம்
வீறுடனே தானளிக்கும் மங்கையற்கு
அடுத்துமே சதாகால முனிதானப்பா
அப்பனே காவலது கொள்ளும்பாரே. 71

கொள்ளவே வம்முனியை வசியங்கொள்ள
கொற்றவனே பிரணவங்க ளேதென்றாக்கால்
தெள்ளமிர்த மானதொரு செம்முனியேவாவா
தேற்றமுள்ள குகைவாசா தேவேவாவா
வள்ளலுயர் பிரகாச வீரமாடா
மன்னவனே ஆக்ருஷா அம்பலவாவா
எள்ளளவும் பிசகாம லெந்தன்மாரா
யெழிலான மலைவாழுங்கி யீசாவாயே. 72

வாவென்று கூறிடவே முனிதானப்பா
வளமான மூலத்தி னுபதேசத்தால்
போவென்று சொன்னாலே போகும்பாரு
பொங்கமுடன் வாவென்றால் வருகும்பாரு
ஆவென்று அருள்கொண்டால் யெல்லாஞ்சித்தி
அப்பனே சதாகால முன்னைப்போற்றும்
தூவென்று தான்பிடித்தால் ஒடுங்கும்பாரு
துப்புரவா யுந்தமக்கு வடுமையாச்சே. 73

## மரத்துமுனிப் பிரணவம்

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே கூறுகிறேன் குருவல்லோய்கேள்
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தபோது
மூதுலகி லென்தேவ ருரைத்தநீதி
மாச்சலில்லாப் பேயனிடப் பிரணவங்கள்
மன்னவனே யெனக்குரைத்தார் லக்கோயில்லை
பாச்சலுட னுந்தமக்கு செப்பலுற்றேன்
பாலகனே மாந்திரீக காவியந்தானாச்சே. 74

காவியத்தி லிந்நூலா மைந்தாங்காண்டம்
காவலனே மாந்திரீக வதர்வணந்தான்
சாவியிது காவியத்தின் குருஸ்தானபீடம்
சகலகலைக் கியானமெல்லா மிதிலடக்கம்
ஆவியுள்ள காலம்வரை பிழைத்திட்டாலும்
அப்பனே கருவிமுதல் கடையனந்தம்
பாவினையாய்க் காண்பதுவு மரிதே யாகும்
பாங்குடனே விதியிருந்தால் மேவுந்தானே. 75

தானேகேள் புலஸ்தியனே மச்சகேந்திரா
தகைமையுள்ள மரத்துமுனி செய்கைகேண்மோ
மானேதான் சதாகாலம் விருட்சந்தன்னில்
மன்னவனே தாவிருந்து யெவர்வந்தாலும்
சேனையுடன் கூட்டமுடன் திரள்கொண்டேகி
தேற்றமுடன் தானிருக்குந் திசையிலப்பா
சோனைமழை போலாக மண்ணைக்கும்பி
சோலித்து மானிடர்மேல் கொட்டும்பாரே. 76

கொட்டுமே தழைமுறித்துக் குமரர்தம்மேல்
கோபமுடன் சினங்கொண்டு பகடியாக
எட்டியே தலைபிடித்து மயிரைக்கும்மி
யெழிலாக விருட்சத்தின் மேலேயேகும்
குட்டியென்ற சிறுபாலர் குழந்தைதம்மை
கொற்றவனே தொட்டிலிலே தூங்குமஞ்சம்
திட்டமுடன் தானெடுத்து வன்புள்ளானே
தீர்க்கமுடன் கொண்டணைத்து போகும்பாரே. 77

பாரப்பா தழைவிரிந்த விருடசந்தன்னில்
பாலகனே தான்வளர்த்தி பாதுகார்க்கும்
நேரப்பா நெடுநாளாங் காலம்பார்த்து
நேர்மையுட னிதைகொடுத்துக் காப்பாற்றும்பார்
தேரப்பா மதலைதனைக் கண்டபோதே
தேற்றமுடன் கீழிறக்கித் தருகும்பாரு
மாரப்பா பிரணவத்தால் மாறும்போது
மன்னவனே அதுவுடனே வசியமாமே. 78

ஆமேதா னுச்சாடப் பிரணவத்தால்
அப்பனே மரத்துமுனி வசியங்காண்பீர்
நாமேதான் சொன்னபடி நளினவானே
நாயகனே பிரணவங்க ளேதென்றாக்கால்
தாமேதான் மரமுருச்சி மண்ணைக்கும்மி
தயாபரனே கனிதருகும் பாலாவாவா
போமேதான் புனலடவி தம்பிவாவா
பொங்கமுள்ள ஓம்முனியே வாவென்றோதே. 79

ஓதிடவே மரத்துமுனி தானுமப்பா
ஓகோகோ ஆனந்தக் கிலாரிகொண்டு
நீதியுடன் சன்மார்க்க நிலையில்நின்று
நிஷ்களங்கப் பத்திதனில் சமாதிபூண்டு
ஆதியே யுன்னைவிட வேறுண்டோவென்
றடிபணிந்து வஞ்சலித்து சிரங்குனிந்து
சோதியே யெந்தனது பிராணநாதா
சுடரொளியே பாதுகொண்டு வருகுந்தானே. 80

## வாடைமுனிப் பிரணவம்

அருளான புலஸ்தியனே யருள்கொண்டானே
அப்பனே யின்னமொரு விதிபாடப்பா
பொருளான பொருளதுவு மேதென்றாக்கால்
பொங்கமுடன் ஞானமென்ற பொருள்தானாகும்
தெருள்கலையிற் றெள்ளமுதே செந்தேனேகேள்
தேசமதில் தான்வசிக்கும் வாடைசாத்தான்
மருள்கொண்ட வாடைமுனி யென்னலாகும்
வகுப்பான செய்கைதனைச் செப்புவேனே. 81

செப்புவேன் நகரமதில் வாடைப்பேய்தான்
செகந்தனிலே மந்திர வாதியானோன்
ஒப்பவே வாடையென்ற முனியைத்தானும்
ஓகோகோ வசியமது கொள்ளமாட்டார்
தப்பிதங்கள் நேராத முனிதானப்பா
தண்மையுடன் வீதிகளில் வாடையாவும்
கொப்பெனவே பாதுகொள்ளு முனிதானப்பா
கொற்றவனே பிரணவத்தைக் கூறுவேனே, 82

கூறுவேன் பிரணவங்க ளேதென்றாக்கால்
குருபரனே தென்பொதிகைச் சிங்கவேளே
ஆறுதலங் கண்டதொரு சித்துபாலா
அரும்பொருளே சிகாமணியே அறிவுள்ளானே
தேறுடைய தென்கோவே வசுவணிக்குத்
தேர்ந்தெடுத்த பேரமையே தெளிவுள்ளானே
மாறுதிரு வில்லாத புத்திமானே
மன்னவனே யுபதேச யுண்மைகேளே. 83

உண்மையா மூலமந் திரமேதென்றால்
வுத்தமனே வீதியுலா கொடுக்கும்வாடை
திண்மையுடன் பாதுகொள்ளும் லாடகீலா
தீர்க்கமுள்ள மாளிகையி லமுதுபூசை
வண்மையுட னேர்வைகொள்ளு முனியேவாவா
வளம்பெரிய சோங்குமுனி தூம்தூம்வாவா
கண்மையுடன் குடும்பமதை யாதரிக்கும்
கண்மணியே வாடைமுனி வாவென்றொப்பே. 84

ஒப்பவே வாடைமுனி கிலாரி கொண்டு
வுத்தமனே சன்னத்தே செப்பக்கேண்மோ
நப்பவே வேதாந்த பாஷியாவர்
நாதாந்த மலையடி வாரங்காத்தான்
தப்பிதங்கள் நேர்ந்ததன் பூபாலா
சாங்கமுள்ள கிடாரநிதிக் கதிகாராவா
மெப்பவே யுலாகொடுக்கும் வேதாளம்வா
மேன்மையுள்ள மலைநிதியாமலைகிரியென்றோதே. 85

என்னவே பாதாள பூதாவாவா
யெழிலான தங்கக்கா சுடையகோவே
பன்னவே வர்ச்சுனபுரி பாதாளநிதியே
பட்சமுள்ள பங்கேயா வாவாவா
துன்னவே கோவர்த்தன கிரியாவாவா
தூய்தான பொன்கடார கபாடவாசல்
மின்னவே தான்கொண்டு திறக்கவென்று
வித்தகனே பிரணவத்தைச் சொல்லுவீரே. 86

சொல்லுகிற காலமதில் கிடாரவாசல்
சொற்பெரிய கபாடமது திறக்கலாகும்
வெல்லவே திறக்கயிலே மைந்தானீயும்
வேதாந்த நாகார்ச்சுனன் தனைநினைந்து
புல்லவே பூசைமுகம் பிரணவத்தை
புகழுடனே யோதிடுவா யுந்தமக்கு
வல்லதொரு பொருளனைத்துங் கிட்டும்பாரு
வாகுடனே பூலோக சித்தாவாயே. 87

சித்தனாய் தானிருந்து மன்னாநீயும்
சிதாபாசத் தளையனைத்து ந்தோற்றோனாக
மூத்தனாய் மூதுலகில் கீர்த்திபெற்று
மூதண்ட கர்மவழிக் காளாகாமல்
பத்தனாய்ப்'பாருலகி லிருந்துகொண்டு
பரம கைலாசருட பதமுங்கண்டு
வித்தகனாய் வினையகன்ற பாலனாகி
விட்டகுறை தப்பாமல் விண்ணாள்வீரே. 88

மாளிகையில் தனமெடுக்கப் பிரணவம்

ஆள்வீரே புலஸ்தியனே அறிவுள்ளானே
அலைகடலைத் தீர்க்கவொண்ணா அன்புள்ளானே
மாளிகையில் தனநிதிக ளிருக்குந்தன்மை
மன்னவனே யுந்தமக்கு யுரைக்கலுற்றேன்
பாளிதமாய் தனமெடுக்க விடங்கண்டாலும்
பாலகனே யஞ்சனத்தா லறிந்திட்டாலும்
மீளிதமாய் தனமெடுக்கத் தந்திரங்கள்
மிக்கவே யறிந்தாலுங் கிட்டாதன்றே. 89

கிட்டாது யென்றறிந்து கிலேசங்கொண்டு
கிருபையுடன் பொலிமுகமாம் பூசைதானும்
இட்டாலு மொன்றுமில்லை வையகத்தில்
யெழிலான சாலமிகச் செய்திட்டாலும்
தொட்டாலு மப்பொருளே தானுந்தமக்கு
தோற்றுமே கண்ணுக்கு தோற்றலாகும்
சுட்டபொருள் கிட்டாது துய்யபாலா
சுந்தரனே கிட்டும்வகை கூறுமுற்றே. 90

ஐந்தாவது சருக்கம் முற்றுப் பெற்றது.

உ

கடவுள் துணை

## ஆறாவது

## ஒட்டியஞ் சல்லியச் சருக்கம்

### புறப் பொருள் கிட்டாது இனப் பொருள் கிட்டும்

கூறுவேன் விட்டகுறை யேதென்றாக்கால்
குருபரனே தலைமுறையா யிருக்க வேண்டும்
மாறுபடாத் தலைமுறையி லெவரானாலும்
மன்னவனே நிதிபடைத்து பூமிதன்னில்
ஆறுமறியா மலல்லோ புதைகொண்டாலும்
அப்பனே வப்பொருளே தான்கிட்டுமல்லால்
வேறொருவர் பொருள் தமக்கு கிட்டுமோ சொல்
வேதாந்த நாயகனே கிட்டாதன்றே. 1

அன்றான பொருளதுதா னிருந்திட்டாலும்
அப்பனே வம்மிஷமாம் பதியோற்கல்லால்
குன்றான கோடிபொரு ளீந்திட்டாலும்
கொற்றவனே வழிபாடு குலத்தோற் கல்லால்
தென்றிசையா வழிபாடு யில்லாதாற்கு
தேற்றமுள்ளீ தனமதுவும் கிடைக்குமோ சொல்
வென்றிடவே வெகுகோடி மாண்பரப்பா
விண்ணுலகில் புதையல்கண்டு மாழ்கினாரே. 2

மாழ்கிறார் பிறர் பொருளைச் சித்திக்கவேதான்
மானிலத்தி லஞ்சனமும் வசியஞ்செய்து
மூழ்கினார் கைநிதிக ளனேகர்தோற்று
முற்றிலுமே பாழாகி வீடிழந்து
பாழ்கினார் மதிமோச வலையில் நின்று
படுமோச தந்திரமா மஞ்சனத்தில்
தாழ்கியே மதிகெட்டு பதியும்விட்டு
தாரணியில் மிடி கொண்டு வலைந்திட்டாரே. 3

## மோடி வித்தைப் பிரணவம்

அலைந்திட்டா ரின்னமொரு வழிதான் கூர்வேன்
அப்பனே அவனிதனில் மோடிவித்தை
குலைந்திடவே செகசால மோடிகோடி
கொற்றவனே செய்பவர்க ளனேக மாண்பர்
நிலைத்திடவே மோடியென்ற சாலமாற்கம்
நிஷ்களங்க மோகனமாம் பேதனங்கள்
தலைந்திடவே வித்வேஷணந் தம்பனங்கள்
தாரணியில் செய்பவர்கள் கோடியாமே. 4

கோடியாஞ் சாலமென்ற மோடிவித்தை
கூறுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
நீடியே மாடனென்ற மோடிவித்தை
நிஷ்களங்க வுண்மை யென்ன மோடிசாலம்
தேடியே செய்கிற திறமைக் கேண்மோ
தேசொளிவே மாடனுட வசியத்தாலே]
பாடியே காற்சலங்கை தாமணிந்து
பகட்டுவார் மோடியென்ற வித்தைதானே. 5

தானான வெட்டவெளி வனாந்திரந்தான்
தாக்கான ஆர்பேர்கள் மாந்தரப்பா
கோனான குருவேந்த ராசமன்னர்
கொற்றவனே யெக்கோடி வெள்ளஞ்சேனை
மாறான மகத்துகள் பிரணவாதி
மகத்தான மாந்திரியக் காரர்முன்னும்
பானான படுவேஷக்காரர் முன்னும்
பாலகனே யாடுகிற மோடிபாரே. 6

பாரப்பா மோடியென்ற சாலக்காரன்
பாரினிலே சொர்னமென்ற வராகன்தானும்
நேரப்பா பலபேர்க ளறியவேதான்
நேர்மையுடன் கைகாட்டித் திஷ்டித்தேதான்
ஆரப்பா மாந்தர்களே கண்ணியர்பாரும்
அப்பனே பூமிதனில் புதைக்கலாகும்
தேரப்பா சொர்னமதை யெடுக்கவல்லோர்
தெளிவுடனே புறப்படுங்க ளென்பார்தானே. 7

என்னவே யென்றுரைத்து புதைத்து மல்லோ
யெழிலாக கூப்பிடுமாந் தூரந்தன்னில்
நன்னயமாய்த் தான்புதைத்த சொர்னந்தன்னை
நயமுடனே மாடனைத்தான் வரவழைத்து
பொன்னையல்லோ குளக்கரையா மாற்றோரத்தில்
பொங்கமுடன் பதனமது செய்யவென்று
மன்னவனே யுத்தாரந்தான் கொடுத்து
மகிதலத்தில் பிர்மிக்கச் செய்குவாரே. 8

செய்தபின்பு மோடிவித்தைக் காரன்றானும்
செப்புவான் தந்திரமாய் பூமிதன்னில்
வையங்கள் தானறிய மோடிக்காரர்
வைத்ததொரு சொர்னமதைப் பாருமென்பான்
துய்யநல்ல சொர்னமதுக் காணோமென்று
துப்புரவாய் சீஷனவன் கூறும்போது
மெய்யான வித்தையிது பொய்யயல்ல
வோதந்தத் தாயருளால் காட்டுவேனே. 9

காட்டுவே னென்றல்லோ மோடிக்காரன்
காவலர்கள் செனக்கூட்டந் தன்முன்னாக
மூட்டுவான் மோடி கொண்டு வாவாவென்பான்
மூதுலகைக் கட்டறுத்த முனிவன்போலுந்
தாட்டிகமாம் ஆற்றோரங் குளத்தோரத்தில்
தகைமையுடன் போய்ப்பாரு மென்று கூர்வான்
தேற்றமுட னவ்விடத்தில் சென்றுமேதான்
தெளிவுடனே சொர்னமதை யெடுப்பான்பாரே. 10

எடுப்பானே பலபேர்கள் தியக்கங்கொள்ள
எழிலான சொர்னமதைத் தானெடுத்து
கொடுப்பானே மந்திரமா முபதேசத்தால்
கொற்றவனே கண்டவரும் பிரமிப்பார்கள்
தடுக்காத வித்தையிது யார்தான்செய்வார்
தாரணியில் கருவாளி செய்வான்பாரு
அடுத்ததொரு முறைகண்ட மாந்தரப்பா
அப்பனே விதிபாடு அறிவார்பாரே. 11

பாரப்பா மோடிவித்தை யதீதமாற்கம்
பாலகனே செய்துமல்லோ சாபங்கொண்டார்
நேரப்பா மோடியிலே அனந்தசாலம்
நேர்மையுடன் றான்செய்வார் கோடிமாண்பர்
ஆரப்பா செய்தவர்க ளுண்மையாக
அப்பனே யாருமில்லை வையந்தன்னில்
திரப்பா மாந்திரீக வதர்வணங்கள்
தீர்க்கமுடன் செய்பவருங் காணேன்காணேன். 12

காணவே தேவதையின் வசியத்தாலே
காசினியில் செய்பவர்கள் சிலதுமாண்பர்
தோணவே செகசால தந்திரத்தால்
தோராது செய்பவர்கள் சிலதுமாண்பர்
பூணவே வயிர்பிழைக்க வேடம்பூண்டு
புகழுடனே செய்பவர்கள் சிலதுமாண்பர்
நாணவே மோடியென்ற வித்தைதன்னை
நாடெங்கு மிப்படியே செய்வார்தானே. 13

## இரங்கம்வைத்து குறிகேட்டல்

தானான இன்னமொரு மகிமைகூர்வேன்
தயாபரனே புலத்தியனே தம்பிரானே
கோனான யெனதைய்யர் சொன்னநீதி
கொற்றவனே யாமுரைப்பேன் புனிதவானே
தேனான மங்கையர்க்கு கெற்பக்கோளால்
தேற்றமுடன் மைந்தனில்லாப் பாவத்தாலே
பானான கர்மமது தோஷத்தாலே
பாங்குடனேரங்கம்வைத்து கேழ்ப்பார்தானே. 14

கேட்பாரோ ரங்கம்வைத்து பாரிலுள்ளோர்
கெவுனமுடன் ரங்கம்வைக்கும் ஆண்டிதன்னை
நாட்கமலம் கவசமென்னு மாசிர்மத்தில்
நலமுடனே பதியிருந்து பூசைகொண்டு
மீட்கவே கைதனிலே சலங்கைவீணை
மிக்கான கமண்டலமாந் தேவஓசை
வேட்கமுடன் தேவதையை நோக்கியல்லோ
விருப்பமுடன் குறிமுகத்தில் கேட்பார்பாரே. 15

பாரப்பா பூசைமுகப் பதிவுகொண்டு
பான்மையுடன் குறிகேட்கு மங்கையர்க்கு
நேரப்பா முன்செய்த கர்மபாபம்
நேர்மையுடன் கூறுகின்ற தன்மைகேண்மோ
ஆரப்பா மும்முறையாஞ் செனனந்தன்னில்
அப்பனே செய்ததொரு பாவந்தன்னை
சீரப்பா வரைபாடா முறைகடோடுஞ்
செப்புகின்ற வன்மைதனை பார்த்திடீரே. 16

பார்க்கவென்றால் மைந்தனில்லா தோஷங்கேளீர்
பாவையரே முன்சென்மத் தோஷங்கூர்வேன்
ஏர்க்கவே பூசைமுக மாவின்பாலை
எதிராகத் தான்கறந்து மறைத்த தோஷம்
பூர்க்கவே மதலையது பார்த்திருக்க
புகழான வமுதுதன்னைக் கொடாதபாவம்
தீர்க்கமுடன் மங்கையற்கு கருவழித்து
திறமையுட னஞ்சளித்து தோஷமாமே. 17

ஆமேதான் ரெண்டாவது செனைந்தன்னில்
அப்பனே செனித்ததொரு வண்மை கூர்வேன்
நாமேதான் சென்மித்த காலந்தன்னில்
நாயகனே யாவினது வமுதுதன்னை
போமேதான் கன்றுக்கு விடாத தோஷம்
பொங்கமுடன் கர்மானு பவத்துக்காளாய்
னேமேதான் விட்டகுறை யிருந்தாலே
வீறான மங்கையரு மலடானாளே. 18

மலடானா விறந்தொரு செனனத்தாலே
மன்னவனே கூறுகிறேன் மைந்தா கேண்மோ
சலமதனைத் தான்திரட்டி ஏகுங்காலம்
சாங்கமுடன் மதலையது தண்ணீர்கேட்க
பதமதுவு மறியாத பாவத்தாலே
பாழ்வினைக்கி யாளாகி சலந்தாராமல்
நலமுடனே போனதொரு பாவத்தாலே
நாயகனே மைந்தனில்லை யென்னலாச்சே. 19

ஆச்சப்பா புலத்தியனே அறிவுள்ளானே
அப்பனே யித்தாதி தோஷம் நீங்க
பாச்சலுடன் கானகமாந் தண்ணீர்பந்தல்
பசும்பாலு மதலைக்குங் கன்றுக்குந் தான்
மாச்சலது கொள்ளாத மகிபவானே
மகிழ்வுடனே தானளித்து யிதவுகூர்ந்தால்
ஏச்சலது நேராமல் பாவையர்க்கு
எழிலுடனே மதலையது செனிக்கும் பாரே. 20

செனித்தவுடன் வங்குரைத்த ஆண்டியற்கு
செங்கமலக் கண்ணானே சேதிகேண்மோ
கனிவுடனே பூசைமுகந் தேவகோஷ்டி
பால்பூசை பரிபொங்க லாசீர்மங்கள்
நனிவுடனே செய்யவென்று விடைதான்கொள்வாந்
நாயகனே சத்தியங்கள் கூறவென்று
தொனியுடனே சபைமுகத்தில் கேழ்ப்பாரையா
தோராம லுத்தாரந் தருகநன்றே, 21

நன்றான பூசைமுக மருளாய்க் கொள்வோம்
நாதாந்த விடைப்படியே நாம் நடப்போம்
குன்றான ரங்கம்வைத்த வாண்டியர்க்கு
குருபரனே வேணவுப சாரத்தோடும்
தென்றிசையாத் தாடைப்போ மென்றுமல்லோ
தேற்றமுட னுறுதிமொழி கூறுவார்கள்
வென்றிடவே மாந்திரீக காவியத்தில்
வித்தகனே கோடிமுறை நவின்றிட்டேனே. 22

## மொக்கு குறிப் பிரணவம்

நவிலவே யின்னமொரு தன்மைகூர்வேன்
நாதாந்தப் புலத்தியனே நளினவானே
குவியவே மொக்குகுறி கூறுவார்கள்
கொற்றவனே சக்கரமா மேதென்றாக்கால்
தவியவே வறுபத்து நான்குமூலை
தகமையுள்ள பீசாட் சரமொக்கும்
சவியவே மொக்கதனில் பிரணவந்தான்
சட்டமுடன் றானமைத்து யிருத்துவாரே. 23

இருத்தியே மாதர்களைத் தானமைத்து
யெழிலாகக் குறியுரைந்து சக்கரத்தில்
நிறுத்தியே தானினைத்தக் காரியத்தை
நிசிதமுடன் தொடுகுறியாய் விரலையூன்றி
குறியுடனே லக்னமதை மாறிக்கேட்பாள்
குருபரனே வறுபத்து நான்குலக்கம்
அறிந்திடவே சோடாத்தில் மாறல் கொண்டு
அப்பனே சரிகுறியா யுரைப்பான்தானே. 24

தானான லக்கமதை மொத்தமாக்கி
தயாபரனே மிச்சமதை பெருக்கியெட்டில்
கோனான வறுபத்து நாலுமாகும்
கொற்றவனே சோடசத்தி லெல்லாமாகும்
வேனான பிரணவந்தா னுயிரேயாகு
மிக்கான வுயிரெழுத்தால் கர்மம்நீங்கும்
மானான காவியத்தில் சூட்சங்காண்மோ
மகிமையெல்லாந் தாமறிவான் மன்னாகேளே. 25

## விளக்கு குறிப் பிரணவம்

மன்னவனே விளக்கினது குறியுரைப்பேன்
மகாதேவா புலஸ்தியனே மகிமைவானே
தென்னவனே விளக்குமத் தீபமப்பா
திரளான தீபமதில் புதுமைகூர்வேன்
மன்னவனே வுடுக்கோசை தன்னிலையா
காவலனே விளக்குமூக்கு குறிகள் கேட்பாய்
பன்னவனே விளக்குமுகம் பதிந்து வோங்கி
பாலகனே நின்றெரிந்தால் குறிக்கூறாமே. 26

குறியான குறிப்புநிலை யேதென்றாக்கால்
கொற்றவனே நின்றெறியுஞ் சுடர்தானப்பா
நெறியான தீபமது மடங்கி நின்றால்
நேர்மையுட னுத்தார மில்லையென்று
முறியான தீபமதை பின்னுமல்லோ
முக்கியமாய் ஏவியே கூவிகேட்பார்
மறியான தீபமது குன்றிநின்று
மகத்தான சுருபமதைக் காட்டுந்தானே. 27

தானான தீபமதில் குறிகள் கேட்கும்
தகைமையுள்ள சண்டாள மாண்பரப்பா
கோனான பொருளிருக்கும் ஸ்தானங்காணார்
கொற்றவனே நின்றாடுந் தீபந்தன்னை
பானான சுடரதனை கேள்வி கொண்டால்
பாருலகில் யாதேனுங் கிட்டுமோசொல்
தேனான மனோன்மணியா ளருளிருந்தால்
தேசொளிவின் சின்மயத்தால் சொல்லலாமே. 28

சொல்வதுதா னெப்படியோ யேதென்றாக்கால்
சொற்சொரூப முள்ளதொரு மாய்கைபோல
மெல்லவே தீபமதில் தோற்றுமப்பா
மேன்மையுள்ள வசரீரி வாக்குபோல
பல்லவே கூறிடலாம் நினைத்தவண்ணம்
புகழான குறிக்கார மாண்பருக்கு
வல்லதொரு சிவயோகி தவயோகிக்கு
வளமுடனே சொலிக்குமது வுண்மைபாரே. 29

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாருலகில் முழுமக்கள் மந்திரவாதி
நேரப்பா நின்றநிலை யறியாமூடர்
நீனிலத்தில் நெடுமோக பாபகர்மர்
தேரப்பா குறியுரைக்கும் பாவினத்தை
தேசமதில் நம்பியல்லோ வெகுவாய் மாய்த்தார்
ஆரப்பா வயிர்பிழைக்குங் குறிதானப்பா
அப்பனே விளக்குமுகப் பதியுமாமே. 30

## பிரமபு ரட்சணிக் குறி

பதியான யின்னமொரு பாகங்கூர்வேன்
பாவலனே நாவலனே பகரக்கேண்மோ
துதியான பாடலொடும் வாசகந் நான்
துப்புரவாய் வீதிபுரம் காடுதோறும்
மதியோடு வாஞ்சையுடன் குறிப்புகண்டு
மகிதலத்தில் மானிடர்கள் மயங்கவேதான்
விதியோடும் முறையோடும் வழிபாடோடும்
வீறுடனே பிரம்பு கையி லேந்துவாரே. 31

ஏந்தியே மானிடர்கள் நினைத்தவண்ணம்
யெழிலுடனே முறைகூறி வுண்மையோடும்
காந்திமதி முகத்தோடு பூசை பூண்டு
கன்னவனே யெட்சணியைப் பிரணவத்து
சாங்கமுடன் குறியுரைப்பார் பிரம்புதன்னால்
சட்டமுடன் யெட்சணி மந்திரக் கோலாலே
வேந்தனுக்கு தாமுரைப்பார் மாந்திரீகன்
வேதாந்தக் கனிவுகொண்டு மிகக் கூர்வானே. 32

கூறுவான் கண்கண்ட பார்வை போல
கொற்றவனே முன்னடந்த காரியங்கள்
வீறுடனே தாமுரைப்பான் விண்ணில்லோர்க்கு
விட்டகுறை யிருந்தவர்க்குக் கிட்டும்பாரு
தேறுடைய கர்மிகட்கும் பாபிகட்கும்
தேர்வேந்தே யுரைத்தாலுங் கிட்டாதப்பா
ஆறுதலங் கண்டசிவ யோகிகாண்பான்
அப்பனே பிரம்புகுறி மார்க்கமாமே. 33

## அஞ்சனத்தினால் தேவாதி மன்னர் நிதியை இருப்பிடங் கூறல்-முருகன் துதி

மார்க்கமா மின்னமொரு மகிமை கூர்வேன்
மகாகணித புலஸ்தியனே வல்லோய்கேண்மோ
தீர்க்கமாந் தேவாதி மன்னர்மாந்தர்
திறைமையுடன் தேடிவைத்த நிதியனைத்தும்
பார்க்கவே யிருப்பிடமும் பதியுஞ்சொல்வேன்
பாலகனே யெனதைய ரசுவனியாந்தேவர்
ஏர்க்கவே யெந்தனுக்கு யுரைத்தநீதி
யெழிலாக யுந்தமக்கு ஓதுவேனே. 34

## முருகன் நிதி யிருப்பிடம்

ஓதுவேன் முருகனிட னிதிதானப்பா
ஓகோகோ வடபுரமாந் திருவேங்காடு
சாதுமன்னர் கொண்டாடுஞ் சர்வலிங்கம்
சார்பான மணற்பூமி குரிச்சியாகும்
தீதில்லாக் குரிச்சியது திசளர்கூட்டம்
திறமான மண்டபந்தான் யாகசாலை
நீதியுள்ள மாந்தரப்பா மண்டபத்தில்
நிஷ்களங்க காவலனார் வாசமுண்டே. 35

உண்டான வாசமது யென்ன சொல்வேன்
வுத்தமனே பளிங்குமா மண்டபத்தில்
சண்டமா ருதம்போல கணங்கள் பூதம்
தயாபரனே நிதிதனக்கு காவலுண்டு
அண்டர்கோன் தேவர்முத லாதியாக
அப்பனே கணிதவரை கூவேன்யான்
கண்டதொரு சங்கமது நாலுமாகும்
கண்மணியே வெள்ளமது யெட்டுமாமே. 36

எட்டான தில்லையது வாறுகோடி
யெழிலான களஞ்சியங்கள் கோடி நாலு
திட்டமுட னாராட்சி யோசையோடும்
தீர்க்கமுடன் அதலவித பாதாளத்தில்
சட்டமுடன் நிதியளவு கூறலாகும்
சங்கநிதி பதுமநிதி யிதற்கொவ்வாது
மட்டில்லா வான்பொருளா மென்னகூர்வேன்
மானிலத்தில் முருகர்வைத்த நிதியாம் பாரே. 37

## திருப்பதி வெங்கடாசலன் நிதி வைப்பு

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் வடக்குமலை யானும் வைத்த
நேரப்பா நிதியளவு கூறுவேன்யான்
நேர்மையுடன் கனகதிருப் பதியாம் நாடு
ஆரப்பா மலைநாடு மு ளைதானாகும்
அப்பனே தேவதா ஸ்தலமென்பார்கள்
ஊரப்பா குகைநாடு மலையாளந்தான்
வுத்தமனே சொல்லுகிறே னுண்மைகேளே. 38

## கனக திருப்பதி

உண்மையாந் திருப்பதிக்கி நடுமையந்தான்
வுத்தமனே வேங்கடனும் வைத்த வைப்பு
திண்மையா மாடமென்ற வராகனப்பா
திகழான சங்கமது வொன்றேயாகும்
வண்மையாம் வெள்ளமது முக்காலாகும்
மகத்தான பதுமமது வொன்றேகாலம்
கண்மையாங் களஞ்சியங்கள் நவமேயாகும்
காவலனே புன்னாக மெட்டுமாமே. 39

எட்டான பொருளது வைக் காணவென்றால்
யெழிலான பிரணவத்தை யியம்பக்கேண்மோ
திட்டமுள்ள மூலமந்திர மேதென்றாக்கால்
தீர்க்கமுடன் வடக்கு மலையாளபூபா
சட்டமுடன் நோய்தீர்க்கும் பண்டிவாயே
சாதுரிய பிராணகலை வாவென்றோது
நிட்டையிலே தானிருந்து சமாதி கொண்டு
நீதியுடன் பிரணவத்தை லட்சமோதே. 40

ஓதவே பிராணகலை தன்னோடொக்க
ஓகோகோ மலைக்கரநவ நிதியேவா
நீதமுடன் லட்சமுரு வோதும்போது
நிச்சிதமாய் செகசோதி யொளியே தோன்றும்
சாதமுடன் சமாதியது வசரீர்வாக்கு
சாங்கமுடன் கண்ணிற்கு தோற்றங் கேட்கும்
தோதமுடன் னுச்சாடங் கொள்ளும்போது
தோற்றுமே கனநிதிகள் தோற்றும் பாரே. 41

பார்க்கையிலே யாசையது யற்றுப்போகும்
பட்சமது வேங்கடனுக் கதிகமாகும்
ஆக்கமுடன் தேவதாஸ் தானந்தன்னை
அப்பனே கண்டவுட மிடியும் நீங்கி
தீர்க்கமுடன் சாலோப சாமீபத்தை
திட்டமுட னறிதலுக் கேதுமுண்டாம்
ஆர்க்கமலம் வீற்றிருக்கு மம்பாள்பாத
மப்பனே பணிந்து மிகத் துதிகொள்வாரே. 42

### சுப்பிரமணியன் நிதியிருப்பிடம்

துதிகொள்வா ரின்னமொரு மகிமைகூர்வேன்
துப்புரவாய் புலஸ்தியனே செப்பக்கேண்மோ
பதிகொண்ட மயிலுடைய சுப்பிரதீபம்
பாங்கான நிதியதுவு மிருக்கும் ஸ்தானம்
நதியான காவேரி நாடேயாகும்
நலம்பெரிய வுடுக்கைசுப்பிர மண்யஸ்தானம்
கதிகொண்ட தூரமது காதமாகும்
காவலனே மண்டபந்தா னொன்றுகாணே. 43

காணலா மண்டபந்தா னாயக்காலாம்
கண்மணியே மண்டபசாலை மத்தி
தோணவே நீர்மட்டம் பாதாளந்தான்
தோராத நிதியதுவும் வெள்ளங்கூர்வேன்
மாணவே வெள்ளமது நாலுமாகு
மகத்தான சங்கமது யெட்டுமாகும்
நீணவே பஞ்சமது கோடியாகும்
நிஷ்களங்க மானதொரு நிதியுமாமே. 44

நிதியான நிதியிருக்கும் ஸ்தானஞ்சொன்னேன்
நீடூழி காலம்வரை நெடுங்காலந்தான்
துதியான வசுராக்கள் கூட்டமோடு
துப்புரவாய் நிதிதனக்கு காவலுண்டு
பதியான வசுவனிக்கு யெட்டாம்பேரன்
பாலகனார் தன்றனக்கு வாய்க்குமென்று
விதியாடாய் சானமா முத்திரைபங்கம்
வீறுடனே தானமைத்தார் மணியந்தானே. 45

## அண்ணாமலையார் நிதியிருப்பிடம்

தானான யின்னமொரு தகைமைகூர்வேன்
தயாளகுண புலஸ்தியனே தம்பிரானே
கோனான யெனதையர் சொன்னநீதி
கொற்றவனே யாமுரைப்போம் குணமுள்ளானே
மானான பதியதுவு மயிலமாகு
மகத்தான மலையதுவா மடிவாரத்தில்
தேனான சின்மயத்தி னருளினாலே
தேற்றமுட னமைத்ததொரு நிதிசொல்வேனே. 46

சொல்லவென்றால் நிதியதுவு மளவுகூர்வேன்
சொற்பெரிய சங்கமது வாறுமாகும்
வெல்லவே வெள்ளமது யெட்டுமாகும்
வேந்தனாம் ராமனிட முத்திரைசொர்னம்
எல்லையா மலையனடிவாரஞ் சுத்தி
எழிலான கோடிவரை செம்பொன்னாகும்
கொல்லைமலை யடிவார மட்டதாக
கொற்றவனே தானிருக்கும் நிதிகள்பாரே. 47

பாரப்பா மாந்திரீக வஞ்சனத்தால்
பாருலகில் வெகுகோடி மாண்பரப்பா
நேரப்பா யென்னூலைக் கண்டுமல்லோ
நெடிதான மலைதடத்தை நாடிச்சென்றார்
தேரப்பா வஞ்சனமா மிகவேபூண்டார்
தேற்றமுள்ள வேதாளப் பூதமப்பா
ஆரப்பா மலையடிவாரஞ் சுற்றி
அப்பனே காவலது கொள்ளும்பாரே. 48

கொள்ளவே பூதமதை விலக்கியல்லோ
கொற்றவனே வெகுகோடி மாண்பரப்பா
தெள்ளமிர்த மானதொரு கருவியோடுந்
தேற்றமுள்ள வஞ்சனமா மையினோடும்
மெள்ளவே பிரணவத்தை யுச்சாடித்து
மேன்மையுடன் நிதியெடுக்க சென்றாரல்லோ
வள்ளல்பெறும் பூதனாதி தனைவிலக்கி
வலுமையுடன் பொருளெடுக்க முடியாதன்றே. 49

அன்றான வஞ்சனமா மாந்திரீகன்
அப்பனே நிதியெடுக்க முடியாதப்பா
குன்றான தேவமுனி ரிஷிகள்சித்தர்
கொற்றவனே நாதாக்க ளெடுக்கக்கூடும்
தென்றிசை ராசாதி மாந்தர்தாமும்
தேற்றமுடன் நிதியெடுக்க முடியாதையா
வென்றிடவே நிதியெடுக்க யுந்தமக்காய்
விருப்பமுட னுபாயவரை கூறுவேனே. 50

கூறுவே னண்ணாவி னடிவாரத்தில்
குருபரனே வஞ்சனமா மையுமுண்டு
நீறுடைய மலையானைத் தாள்பணிந்து
நீதியுட னஞ்சனத்தை விரும்பிக்கேட்டால்
வீறுபுக ழண்ணாவின் மனதிறங்கி
வித்தகனே வஞ்சனத்தைக் காட்டுவார்பார்
தேறுதலா யஞ்சனத்தை தீட்டிப்பார்த்தால்
தெளிவுடனே நிதியெல்லாம் காணுந்தானே. 51

தானான திரவியத்தைக் காணலாகும்
தகைமையுட னுந்தமக்கு வேணமட்டும்
கோனான குபேரன் போல்நிதியெடுத்து
கொற்றவனே யுலகுபதி வாழலாகும்
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேற்றமுடன் நிதியனைத்து மெடுக்கலாகும்
பானான சூரியன்போல் பாரிலப்பா
பாலகனே நெடுங்காலம் வாழலாமே. 52

## கண்ணன் நிதிப் பிரமாணம்

வாழலா மின்னமொரு மகிமைகூர்வேன்
மானிலத்தில் வடகோடி கானந்தன்னில்
தாழவே மலையோரம் பொன்னிநாடு
தண்மையுள்ள புனலாறு யோடையுண்டு
ஆழவே பொன்னகர மோடையப்பா
அப்பனே கண்ணபிரான் கண்டநாடு
சூழவே சுந்தரனார் பாட்டனப்பா
சொரூபமுள்ள வாசுதேவன் பிதாவுமாச்சே. 53

ஆச்சப்பா கண்ணனுக்கு பாட்டனையா
அப்பனே துவாபரமாம் யுகத்திலேதான்
மூச்சடங்கி யிருந்ததொரு பரவாசுதேவர்
மூதுலகில் கட்டறுத்த பிரமயோகி
பாச்சலது கொள்ளாத பரமயோகி
பாலகனே யவர்வைத்த பூஷணந்தான்
மாச்சலது கொள்ளாதமகி பாலரப்பா
மன்னவனே பாட்டருட நிதியுமாமே. 54

நிதியான நிதியதுவும் யார்க்குக்கிட்டும்
நீணிலத்தில் விட்டகுறை யுடையபேற்கும்
துதியான துதியோடு நடந்தபேற்கும்
துப்புரவாய் வையத்தை மறந்தபேற்கும்
பதியான பாபவழி கர்மந்தன்னை
பாருலகில் கட்டறுத்த புண்ணியோற்கும்
சதிசெய்யா சதானந்த மாண்பருக்குஞ்
சட்டமுடன் வாய்ப்பதுவு முண்மையாமே. 55

## இலட்சுமணர் வைத்த நிதியளவு

உண்மையா மின்னமொரு வதீதங்கூர்வேன்
உத்தமனே புலஸ்தியனே யுதாரதீரா
வண்மையுள்ள சத்தசாகரந் தானாகும்
வளம்பெரிய தென்னிலங்கைப் பதிதானாகும்
உண்மையுள்ள ராமரிட சகோதரன்றான்
உத்தமனார் லட்சுமண தேவனப்பா
தண்மையுடன் றான்தேடி சாகரத்தில்
சட்டமுடன் தானமைத்த பொருள்கூர்வேனே. 56

பொருளான பொருளதுவு மேதென்றாக்கால்
பொங்கமுடன் லட்சுமணன் சுவேதனப்பா
அருளான வருள்படைந்த வரசனாகும்
அப்பனே ராமருட சகோதரன்றான்
தெருள்கலையிற் றேர்ந்ததொரு புதல்வனப்பா
தேசொளிவின் சின்மயத்தா லுற்பவித்த
இருளகற்றி ஞானகலை யறிந்தமாண்பன்
யெழிலான சுவேதநிதி கூறுவேனே. 57

கூறுவேன் தென்னிலங்கைப் பதியினோரம்
குருபரனே யோடையென்ற யாகசாலை
பாறுபடா ரத்தினமோ களஞ்சியங்கள்
நாகமெட்டு பரிசமெட்டு வெள்ளம்நான்கு
வீறுடைய நவரத்தின வாதினங்கள்
வித்தகனே துவாபரமாம் யுகத்திலப்பா
தோறுடனே யாகமண்ட பத்தின்கீழே
தேற்றமுட னமைத்ததொரு நிதியுமாச்சே. 58

## அரிச்சந்திரன் நிதியளவு

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அருங்கிளியே வருட்கடலே தேவேகேண்மோ
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
மூதுலகைக் கட்டறுத்த யெந்தன்தேவர்
பாச்சலுட னெந்தமக்கு யுரைத்தநீதி
பாலகனே சாற்றுகிறேன் சதுர்மன்னாகேள்
மாச்சலது கொள்ளாத நாடேயாகும்
மகத்தான வயோத்திநக ரென்னலாமே. 59

என்னவே அரிச்சந்திரன் காதைகூர்வேன்
எழிலான மரபதுதா னேதென்றாக்கால்
நன்னயமாய் திரிச்சங்கு ராஜன்றானும்
நலமான கேகயரா ஜன் புதல்வி
வின்னமிலா சத்தியவதிப் பெண்ணாள்தம்மை
விருப்பமுடன் கலியாணஞ் செய்துமல்லோ
சொன்னமொழி தவறாத அரிச்சந்திரன்றான்
தோராத மைந்தனையும் பெற்றாரென்னே. 60

என்னவே வயோத்திக்கு தெற்குபாகம்
யெழிலான வனாந்திரமாம் நடுக்காடாகும்
நன்னயமாம் நடுமையங் கிரிதானுண்டு
நாதாக்க ளறியாத நாடேயாகும்
பன்னகமாஞ் சாலையது மலையோரந்தான்
பாலகனே தானிருக்கும் நாடொண்ணாது
சொன்னதொரு திருச்சங்கு மைந்தனாகும்
சொற்பெரிய வரிச்சந்திரன் நிதியுங்காண்பீர். 61

காணவே நிதியதுவு மென்னகூர்வேன்
காதலனே வெள்ளமது பதினாறாகும்
தோணவே சங்கமது நாலுமாகும்
சொற்பெரிய பதுமமது வாறேயாகும்
பூணவே நாகமது யெட்டுமாகும்
புகழான நிதியதுவுஞ் சோடசந்தான்
மாணவே கபாலமது ரண்டேயாகு
மகத்தான நிதியினிட வளவுதானே. 62

தானான நிதியளவு கூறிவிட்டேன்
தாக்கான பொக்கிஷங்க ளாருக்கென்றால்
கோனான யெனதையர சுவனியாந்தேவர்
கொற்றவனா ருரைத்தமொழி கூறக்கேண்மோ
மானான காசிபதி மன்னனாகு
மகத்தான பேரமைதான் மூலவர்க்கம்
தேனான தலைமுறையா மிருபத்தொன்றில்
தேற்றமுட னிதியெடுக்க சாபந்தானே. 63

சாபமாம் திருச்சங்கு மைந்தன் சாபம்
சாங்கமுட னமைத்திருக்க மற்றோர் தம்மால்
தாபமுடன் நிதியெடுக்க முடியாதையா
தாரணியில் வெகுமாண்பர் வினையங் கொண்டார்
சோபமது மிகவாகி வஞ்சனத்தை
சூட்டினார் காடகத்தே சென்றுமல்லோ
கோபமுடன் நிதியெடுக்கக் கூடாமற்றான்
கொற்றவனே மனங்கலங்கி நின்றிட்டாரே. 64

இட்டதொரு மாந்திரீக காவியத்தில்
யெழிலான கருவிகர ணாதியந்தம்
தொட்டகுறி போலாக வமைத்து வைத்தேன்
தோராமல் முறைபாடோற் கெல்லாங் கிட்டும்
சட்டமுடன் காவியங்க ளைந்துக்குள்ளே
சதுராக பூட்டிவைத்தேன் மாந்தர்க்காக
திட்டமுட னடந்தவற்கு வாய்க்கும் வாய்க்கும்
சிற்பரனே முனிநாதா யின்னங்கேளே. 65

## புரூரவச் சக்கிரவர்த்தி நிதிப்பிரமாணம்

இன்னமுந்தான் கூறுகிறே னினியபாலா
யெழிலான ராசாதி ராசமன்னர்
நன்னயமாய் வையகத்தை யாளுங்காலம்
நாயகனே யவர்வைத்த பொக்கிஷந்தான்
தன்மையுட னுரைக்குகிறேன் தம்பிரானே
சதகோடி சூரியனார் சாட்சியாக
மென்மையுடன் வடகாசி நகற்கு மேற்காம்
வேந்தனது நிதியளவு காணலாமே. 66

நிதியான சங்கமது நாலதாகும்
நெடிதான வெள்ளமது மூன்றதாகும்
துதியான காசமது யெட்டதாகும்
துப்புரவாய் நாகம திரண்டதாகும்
பதியான வடகாசி தன்னிலப்பா
பாலகனே மேற்பாக மண்டபந்தான்
விதியான விதிப்படியே முறைமை கொண்டு
வித்தகனே வஞ்சனத்தில் காணலாமே. 67

காணலாம் நிதியெடுக்க முடியாதப்பா
காவலனே புரூரனிட வைந்தாம் பேரன்
தோணவே பலராம சக்கிரவர்த்தி
தோற்றமுட னிதிதனக்கு வுடையனானோன்
பாணமாம் நிதியவர்க்குக் கிட்டுமல்லால்
பாருலகில் மற்றோர்க்கு கிட்டுமோ சொல்
மாணமா மதியூகிக் கினியபாலா
மன்னவனே யொருக்காலுங் கிட்டாதன்றே. 68

## நளன் நிதியளவுப் பிரமாணம்

அன்றான புலஸ்தியனே அறிவுள்ளானே
அப்பனே கண்மணியே கவிராஜேந்திரா
குன்றான வடமேரு தன்னிலப்பா
குபேரனிட பதியாகுங் குணமுள்ளானே
வென்றிடவே சுவேதகிரி யென்னலாகும்
வேதாந்தத் தாயாருங் கண்டநாடு
தென்றிசையா நாடதனி லடையாளங்கள்
செப்புகிறே னாதியந்த முடிவு கேளே. 69

முடிவான சுவேதகிரி யடிவாரந்தான்
மூதுலகில் நாதாக்கள் மறைத்த நாடு
அடிவாரம் யோசனையாஞ் சாரலப்பா
அப்பனே நிதியதுவுங் கூறக்கேண்மோ
துடியான சங்கமது ரண்டுமாகுந்
தூய்தான சங்கமது நாலுமாகும்
படியான காளமது ஒன்றேயாகும்
பாங்கான நிமிஷமது வறையுமாமே. 70

அறையான நிதியதுவு மாருக்கென்றால்
அப்பனே நளனுக்கு நான்காம் பேரன்
முறைகொண்ட ரிதுபர்னன் தத்தேயாகு
முடிகொண்ட சக்கிரனும் ராசபூபன்
கறைகண்ட மன்னற்கு தத்வபாலன்
கண்ணான கண்மணியாள் பாலனுக்கு
நிறைகொண்ட நிதியெல்லாம் வாய்க்குமல்லால்
நீமகனே மற்றவர்க்கு வாய்க்காதன்றே. 71

## பஞ்ச பாண்டவர் நிதியளவு

அன்றான யின்னமொரு வதிசயங்கேள்
அப்பனே வடமேரு வடபாகந்தான்
குன்றான மலைநாடு குபேரநாடு
குருபரனே பாண்டுவுக்கு மூன்றாம்பாட்டன்
வென்றிடவே நிதியாகஞ் செய்துமல்லோ
வேதாந்தத் தாயினது வருளினாலே
தென்றிசையா வடமேரு வடபாகத்தில்
தேற்றமுடன் கிரியதுவு மேமமாச்சே. 72

ஆச்சப்பா யேமமலை யென்றநாமம்
அப்பனே நாதாக்க ளறியாநாடு
மூச்சடங்கி யேமமலை சித்துநாதர்
மூதுலகைக் காணாத ஞானசித்து
பாச்சலது கொள்ளாத யேமசித்து
பாலகனே கிரியோரங் காவலுண்டு
மாச்சலது கொள்ளாத வானதேவர்
மதிப்படியே தானிறங்கு மலையுமாச்சே. 73

மலையான மலையதுவு மேமமாகு
மகத்தான யேமமது யாருக்கென்றால்
கலையான கலைபகுத்துக் கூறுவேன்யான்
காவலனே திக்குசெயங் கொண்டபூபன்
தலையான காண்டிபன் பேரனாகும்
தாக்கான சித்திரவில் பேரமைத்த
விலையான சீர்பால னருச்சுனற்கு
வித்தகனே யமையுமென்ற சாபந்தானே. 74

தானான யேமகிரி யவற்கேயல்லால்
தாக்கான மாண்பருக்கு கிட்டுமோசொல்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனார் தாம்கண்ட சாசனந்தான்
பானான சூரிய சந்திரர் தாமும்
பட்சம் வைத்த சாட்சிநிதி யிதுவேயாகும்
தேனான சித்தாதி ரிஷிகள்நாதர்
தேற்றமுடன் தாமறிந்த நிதியுமாச்சே. 75

## மார்க்கண்டன் நிதியளவு

ஆச்சப்பா யின்னமொரு மகிமைகூர்வேன்
அப்பனே துவாபரமாம் யுகத்திலையா
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
மூதுலகைக் கட்டறுத்த முனிவராகும்
பேச்சரியா பாலனவன் மார்க்கண்டன்றான்
பேருலகி லவதரித்த சீர்பாலன்றான்
மாச்சலுடன சதாகாலம் பதினாறாண்டாய்
மன்னவனே வரங்கொண்ட முனிவர்காணே. 76

காணவே யவருடைய நிதிகள்கூர்வேன்
கைலாச புலஸ்தியனே கவிவல்லோய்கேள்
பூணவே நவகண்ட ரிஷியார்தாமும்
புகழுடனே சமாதிகொண்ட மலைதானாகும்
தோணவே யவருடைய கிரியைகண்டால்
தோற்றுமடா வாயலுடன் கோபுரங்கள்
ஆணவங்கள் தானொடுங்கி வன்புள்ளானே
அப்பனே சென்றாலே பார்க்கலாமே. 77

பார்க்கலாம் மார்க்கண்டன் நிதிதானையா
பாலகனே யளவுமுறை கூறலுற்றேன்
ஏர்க்கவே களஞ்சியங்க ளொன்பதாகும்
யெழிலான பொக்கிஷங்கள் சோடசந்தான்
தீர்க்கமுட னிதியனைத்து மாருக்கென்றால்
திறமுடைய மார்க்கண்ட னைந்தாம்பேரன்
மூர்க்கமுள்ள பேரனப்பா யிந்திரபானு
முதன்மையுட னனுபவிக்கும் பேரன்தானே. 78

பேரனாம் யிந்திர பானுவுக்கு
பேசவொண்ணா நிதியனைத்தும் வாய்க்கும்பாரு
சூரனா மன்னாதி யானாலுந்தான்
சுத்தமுள்ள வீரனுக்குங் கிட்டாதப்பா
தீரனாஞ் சிவயோகி யானாலையா
சிற்பரனா ரொருவேளை காணலாகும்
வீரமுடன் கண்டாலுங் காணலாகும்
வித்தகனே பொருள்தானுங் கிட்டாதன்றே. 79

## திருவாலவாய் பாண்டியன் நிதி

கிட்டாது யின்னமொரு முறைமை கூர்வேன்
கீர்த்தியுள்ள புலஸ்தியனே புண்ணியபாலா
சட்டமுடன் தென்மதுரை திருவாலவாயாம்
சாங்கமுடன் பாண்டியனா ரனமத்த வைப்பு
திட்டமுள்ள சொக்கேசர் தேவஸ்தானம்
தீர்க்கமுள்ள பிராட்டியென்னு மீனாட்சம்பாள்
வட்டமுள்ள நடுமையம் தேவஸ்தானம்
வளம்பெரிய வாயிரக்கால் மண்டபந்தானே. 80

தானான மண்டபந்தா னாயக்காலாந்
தாக்கான யடிவாரந் தொடங்கியேதான்
கோனான குருசாமி சொக்கநாதர்
கொற்றவனாா மூலவர் ஸ்தான மட்டும்
மானான மகதேவர் படியனந்தம்
மகாகோடி களஞ்சியங்கள் நாவொண்ணாது
தேனான மனோன்மணியாள் வாசம்பூணும்
தேசொளிவின் நிதியளவு கூறுவேனே. 81

கூறுவேன் பிரமாண மேதென்றாக்கால்
குருபரனே வெள்ளமது வாறேயாகும்
தேறுடைய சங்கமது நாலேயாகும்
லெளிவான பதுமமது மூன்றேயாகும்
வீறுடைய நாகமது பத்தேயாகும்
வித்தகனே யிதிற்பாதி விரையங்கூர்வேன்
ஆறுஸ்தலங் கட்டடங்கள் நிதிகள்பாதி
அப்பனே தேவதா ஸ்தலங்களாச்சே. 82

ஆச்சப்பா சொக்கரிட சன்னிதியுமாகும்
அப்பனே சொர்ணமணி கோபுரந்தான்
மாச்சலெனு மாயிரக்கால் மண்டபந்தான்
மகத்தான கட்டடங்கள் யெண்ணைக்காலாம்
பாச்சலெனு மாஸ்தானம் கூறவொண்ணா
பாருலகில் தேவரிஷி கூட்டத்தார்கள்
மூச்சுடனே தாமிருந்து தருமஞ்செய்து
மூதுலகில் தானமைத்த கோயில்தானே. 83

தானான களஞ்சியங்க ளார்க்குங்கிட்ட
தகைமையுள்ள பாண்டியற்கு நான்காம் பேரன்
கோனான வர்க்கத்தோர் கோடியுண்டு
குருபரனே யவர்தமக்குக் கிட்டுமோசொல்
பானான பரஞ்சுடரி னருளினாலே
பாருலகில் சிவயோகி காணலாகும்
தேனான சித்தர்விட்ட குறையிருந்தால்
தேற்றமுட னவர்தமக்கு தோற்றும்பாரே. 84

## சோழன் நிதியளவு

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே கூறுகிறே னுந்தமக்காய்
நேரப்பா தென்நாடு சோழராஜன்
நெடிதான காவேரி நடுமையந்தான்
ஆரப்பா காதமது முப்பத்தைந்து
அப்பனே யிருபாக முப்பத்தைந்து
கூரப்பா யேழுபத்துக் காதமாகும்
கொற்றவனே நடுமையம் நிதிகள் தானே. 85

நிதியான நிதியதுவைக் காணலாகும்
நிஷ்களங்க மானதொரு பொக்கிஷந்தான்
விதியாடாய் பொக்கிஷங்க ளாருக்கென்றால்
வித்தகனே சோழனுக்கு யெட்டாம்பேரன்
துதியான கரிகாலச் சோழனுக்கு
துப்புரவா யமைக்கு மென்று சாசனந்தான்
பதியோடு தானமர்த்தி மூத்திரையங்கம்
பாங்குடனே நடுநிதியி லமர்த்திட்டாரே. 86

## சேரன் நிதியளவு

இட்டாரே யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
யெழிலான புலஸ்தியனே யெழில் வல்லோய்கேள்
திட்டமுடன் சேரனது பொக்கிஷங்கள்
சிறக்கவே வஞ்சனமாங் கிரியிலிப்பா
சட்டமுடன் றானமர்த்தி மலையோரந்தான்
சாங்கமுடன் நிதியதனைப் பதனஞ்செய்தால்
அட்டபுகழ் பொக்கிஷங்க ளளவுகூர்வேன்
அப்பனே வெள்ளமது நாலதாமே. 87

நாலான பொக்கிஷங்க ளிரண்டேயாகும்
நலமான சங்கமது யெட்டேயாகும்
பாலான பதுமமது வாறேயாகும்
பாங்கான நிதியதுவு மெட்டுமாகும்
காலான விதியாளி யாருக்கானால்
காவலனே சேரனுக்கு யெட்டாம்பேரன்
மாலான சங்கரனார் சேரனானா
மகத்தான நிதியனைத்து மமைக்கும்பாரே. 88

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
பாலகனே சருக்கமது வாறேயாகும்
தேரப்பா சருக்கமது வாருக்குந்தான்
நெடிதான பாடலது வறுநூறாகும்
தேரப்பா காரியமு மைந்தாம்நூலாம்
தெளிவான மாந்திரீக காவியந்தான்
ஆரப்பா சருக்கமது பாடல்நூறாம்
அப்பனே திரட்டிவைத்த குருநூலாச்சே. 88

ஆறாவதுசருக்கம் முற்றுப்பெற்றது.

உ

கடவுள் துணை

## ஏழாவது

### திருங்கருமானச்சருங்கம்

### அஞ்சனபூதம்

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அப்பனே திருக்கருவான அஞ்சனங்கள்
மூச்சப்பா கொள்ளாத பூதமப்பா
மூதுலகி லதர்வணத்திற் கடங்காபூதம்
மாச்சலது கொள்ளாத வஞ்சனமாம்பூத
மகத்தான மந்திரத்தை யெதிக்கும் பூதம்
பாச்சலுடன் பூதமதை வசியஞ்செய்ய
பாருலகி லாராலு முடியாதன்றே. 1

அன்றான வஞ்சனத்தை யறியவேண்டில்
அப்பனே திருக்கருவா மஞ்சனத்தை
குன்றான குருபரனே பூதந்தன்னை
கொற்றவனே கையிலிட்டு பார்க்கக்கூர்வீர்
வென்றிடவே பூதமது வஞ்சனத்கை
வேதாந்தப் பேய்தானுங் கண்டறிந்து
தென்திசையா லோகவதி சயங்களெல்லாம்
தேற்றமுடன் றானுரைக்கும் பண்மைபாரே. 2

### பூதவசியம்

பண்மையாம் பூதமதின் வசியங்கூர்வேன்
பாதாள வஞ்சனமாம் பேயேவாவா
திண்மையாம் லோகமதை மயக்கும்பூதா
தீர்க்கமுள்ள வேதாந்த கிர பாதா
கண்மையாம் ஸ்ரீம்ரிம்ஓம்ரீம் சுவாகா
காவலனே பிடாரகனே வன்மேவாவா
உண்மையா யுச்சாடப் பிரணவத்தால்
வுத்தமனே யுந்தமக்கு வசியம்பாரே. 3

பாரப்பா வேதாளம் வசியமானால்
பாலகனே பாரதனிலே நீயேசித்தன்
ஆரப்பா யுனக்கீடு கூறப்போமோ
அப்பனே நீயுமொரு நாதனாவாய்
வேரப்பா மாந்திரீகக் காரரெல்லாம்
வெறுங்குகையாய் போவார்க ளதீதமெத்த
சாரப்பா சம்பூர்வ நிலையைப்பற்றி
சாங்கமுடன் துவாதமதி லாடுவீரே. 4

ஆடுவீ ரின்ன மொரு மாற்கங்கூர்வேன்
அப்பனே வருணுடைய அண்ணலேகேள்
நீடுபுகழ் மேநகரஞ் செல்வபிள்ளை
நீதியுள்ள ராயரது கோட்டையாகும்
மாடுகன்று தோமரங்கள் பரிஜனங்கள்
மாளாத தேவதா ஸ்தலமுமாகும்
வீடுடனே யான்வாயல் மாளியாகும்
வித்தகனே மடப்பளியைக் கூறுவேனே, 5

கூறுவேன் திருக்கோட்டை தன்னிலையா
கொற்றவனே திருமாளி மடமுமாகும்
வீறுடைய போஜனத்தின் சாலையாகும்
வித்தகனே யதனுடைய மகிகைகேண்மோ
மாறுபடா திருமாளில் பேய்தானப்பா
மன்னவனே சதாகாலம் தேவர்கோயில்
ஆறுதலாய் வீற்றிருக்கும் பேய்தானப்பா
அப்பனே யதினுடைய வளப்பங்கேளே 6

கேளப்பா புலஸ்தியனே சகுணமாறா
கீர்த்தியுள்ள திருமாளி பேய்தானப்பா
தானப்பா திருக்கோயில் சதாகாலந்தான்
சாங்கமுடன் திருமாளி போசனத்தை
நாளப்பா போகாம ளனுதினந்தான்
நாயகனே திரிகால பூசைக்குத்தான்
ஆளப்பா தளிகை யாராதனைக்கு
அப்பனே யேவல்பணி செய்யுந்தானே. 7

செய்யவே தேவதா பூசைக்கல்லோ
தேற்றமுடன் சதாகால பூசைமாற
வையகங்கள் தானறிய மாந்தரன்றி
வளமையுடன் திருப்பணிகள் யாவற்றிற்கும்
மெய்யவே மேன்மையது கொள்ளவேதான்
மேதினியி லாரேனுங் காணாமற்றான்
துய்யநல்ல யோசனங்கள் மிகவாய்ச் செய்து
துப்புரவாய் தானடைக்கும் பூதந்தானே. 8

தானான பூதமதை வசியஞ்செய்ய
தாக்கான பிரணவத்தை மிகவாய்க் கேண்மோ
கோனான பிரணவங்கள் கூறுவேன்யான்
கொற்றவனே தேவதா பூதம்வாவா
மானான மடப்பள்ளி பேயாவாவா
மகத்தான பூசைபோ சன்னமாகு
பானான மாய்கைபூதா பசாசேவாவா
பகலான சூரியபகவதா லாவாயே. 9

தாலாவே தயாபரனே சம்சம்வாவா
தாக்குடைய பிரணவபூதா சங்கேஷா
மாலான மடப்பள்ளி தளிகைபூதா
மகத்தான கில்லாரிகி வாவா
சூலான கெற்பிணியே பாதுகாத்த
சுந்தரனே சுயமோகா மோகாலுவாயே
பாலான பூசைகொள்ளும் பகவாவாவா
பாலகனே எமதூதா வாவென் றோதே. 10

ஓதவே திருமாளிப் பேய்தானப்பா
ஓகோகோ யுந்தமக்கு வசமேயாகும்
நீதமுடன் பூதமது வசமேயானால்
நீடாழி யுலகமெல்லாம் வசமேயாச்சு
தோதமுடன் யேவல்பணி யாவற்றிற்கும்
தோறாத வெற்றியது மிகவாய்க் கொள்வீர்
நாதர்முனி ரிஷிமுதலோ ரும்மைக் கண்டால்
நாதாந்த சித்தெனவு மதிகொள்வாரே. 11

## கள்ளழகர் நிதிப் பிரமாணம்

கொள்வாரே யின்னமொரு கூர்மைகூர்வேன்
மோகனகப் புலஸ்தியனே குணமுள்ளானே
தெள்ளமிர்த மானதொரு கள்ளனாகும்
தெளிவான வழகருட கூட்டமாகும்
வள்ளலுய ரழகரது நிதிகளப்பா
வளமுடனே யாமுரைப்போம் வண்மைகேளீர்
கள்ளழகர் நிதியிருக்கும் ஸ்தானங் கூர்வேன்
காவலனே தென்மதுரைப் பதியுமாச்சே. 12

பதியான பதியதுவு மேதென்றாக்கால்
பாலகனே வையைநதி மேற்பாகந்தான்
மதியுடனே தானமைத்த நிதிகளெல்லா
மன்னவனே வையைநதி மண்டபந்தான்
துதியான மண்டபந்தான் நாற்பாங் கெல்லை
துப்புரவாய் பூமிமட்டம் கெசந்தான்பத்து
விதியான விதிப்படியே யளவுகொண்டால்
வித்தகனே பொருளிருக்கு மிடங்காண்பீரே. 13

காணவே பொருளதுவுங் கள்ளரப்பா
கைலாச கள்ளழகர் தன்றனக்கு
தோணவே யவர்தமக்கு கள்ளர்கூட்டம்
தோறாமல் தான் தான்கொடுத்த நிதிதானாகும்
வேணதொரு நவரத்தின மணிகளப்பா
வித்தகனே சொல்வதற்கு நாவொண்ணாது
பாணமாம் நிதியதுவும் யார்க்குக்கிட்டும்
பாலகனே விதியாளி பெறுவான்பாரே. 14

## தூது பேய்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் தூதுரைக்கும் பூதந்தன்னை
நேரப்பா துலைதூரம் தேசமாகும்
நெடிதான தேசமதில் செய்தியெல்லாம்
ஆரப்பா முத்திரை யோலை தன்னில்
அப்பனே தாமெழுதி யனுப்புங்காலம்
தேரப்பா வப்பூத செய்கைகேண்மோ
தெளிவுடனே முன்சென்று நடக்கும் பாரே. 15

நடக்குமே யவர்தமக்கு செய்தியெல்லாம்
நாயகனே கண்ணதனாற் கண்டாற்போல
தொடக்குமுடன் முன்னதாய் வாய்மை பேசும்
தோராமல் காரியத்தை முடிவாய்ச் செய்யும்
அடக்கமுடன் யெதிராளி நடத்தை யெல்லாம்
அப்போதைக் கப்போது தெறிவதல்லோ
சடக்கமது நேராமல் துய்யபாலா
சாங்கமுடன் தூதுக்கு நிற்கும் பேயே. 16

பேயான பேயதுவின் நடக்கை கூர்வேன்
பேருலகில் தாம் நடக்கும் காரியங்கள்
நாயான சுவானமது நடக்கும் பான்மை
நாயகனே யதுபோல பூதமப்பா
தூயான மார்க்கமெல்லா முடன்பாடாக
துப்புரவாய் தானடக்கும் புதுமைமெத்த
தாயான பூதமதின் வாய்மையெல்லாம்
சாற்றினேன் காவியத்தில் சாற்றினேனே. 17

சாற்றினேன் பூதமதை வசியங்கொள்ள
சாங்கமுடன் பிரணவங்க ளேதென்றாக்கால்
நாற்றிசையும் சித்தர்மெச்சும் மூலமந்திரம்
நவிலவொண்ணா ரீங்காரம் வாதியாக
தூற்றவே ஸ்ரீங்ரிங்கிரி யென்றோது
துப்புரவாய் லயம்வைத்து துரிதபாலா
போற்றவே அம்மென்று கும்பித்தாக்கால்
பொங்கமுடன் தூதுபேய் வசியமாமே. 18

## மலக்குட்டி வித்தை

வசியமாம் லட்சமுரு போடுபோடு
வாகான பசாசதுவு முனக்குள்சித்தி
வசியமா மலக்குட்டி சாலமார்க்கம்
வாகுடனே மாணாக்க னறியவேண்டி
வசியமா மலக்குட்டி பிறந்தமார்க்கம்
வளமுடனே யாமுரைப்போ மகிமைமெத்த
வசியமாம் வாலைவய தேழிலெட்டில்
வண்மையுட னிறந்தொரு பாலனாச்சே. 19

பாலனா மைந்தர்களின் கிரகமப்பா
பாலகனே தானிறந்த காலந்தன்னில்
சீலமுட னாயுறு முடிவுகாலம்
சிற்பரனே நேராத காலமட்டில்
தாலமுடன் சிசுபாலர் தங்களுக்கு
சாங்கமுடன் அகாலமது நேர்ந்ததாலே
காலவய தளவுநாள் வருகுமட்டு
மன்னவனே கிரகமது யிருக்குந்தானே. 20

தானான கிரகமதை வசியஞ்செய்ய
தன்மையுடன் யேவல்பணி கொள்வார்பாரு
தேனான மந்திரங்க ளுபதேசங்கள்
தேற்றமுடன் கொள்பவர்க்கு யுதவியாக
கோனான கிரகமென்ற மலக்குட்டிதன்னைக்
கொற்றவனே பிரணவ யுபதேசத்தால்
பானான யுச்சாடக் குளிகையாலே
பாருலகில் மலக்குட்டி வசியமாமே. 21

## விருட்ச மாரணம்

பாரேதான் புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே ஓரறிவுக் குற்றசாதி
நேரேதான் விருட்சங்க ளேதுவானாலும்
நேர்மையுடன் மார்க்கத்தை விளம்பக்கேண்மோ
தீரேதான் கருவோடும் வுருவோடப்பா
தீர்க்கமுடன் லட்சமுரு வோதுவோது
சீரேதான் பிரணவங்க ளேதென்றாக்கால்
சிற்பரனே நசிமசி யென்றேயோதே. 22

நசிமசி யென்றிடவே நாசமாகி
நலமான விருட்சமது பட்டுப்போகும்
நசிமசி யென்ற தொரு மூலத்தாலே
நாசமாம் விருட்சமது நாசமாகும்
நசிமசி யென்றதொரு பிரணவத்தால்
நாயகனே பச்சைமரம் பட்டுப்போகும்
நசிமசி யென்றதொரு கருவெழுத்தால்
நாட்டிலுள்ள விருட்சமெல்லாம் நசிந்துபோமே. 23

## பஞ்சபூத மந்திரீயக் கருவால் வசியம்

நலியாது புலஸ்தியனே நளினவானே
நாயகனே யதர்வணத்தின் கருவைக்கூர்வேன்
வலியனுட பிச்சுடனே நான்குஞ்சேரு
வாகான கருவெல்லாம் றணுகினாலே
ஒளியான சோதிமயக் கருவினாலே
வுத்தமனே பஞ்சகரு வென்னலாச்சு
கலியான மிடியதுவும் நீங்கலாச்சு
காவலனே கருவறிந்து கூட்டுவாயே. 24

கூட்டுவாய் பஞ்சபூதக் கருவேயாகும்
குருபரனே மாந்திரீக மிதற்குள்ளாச்சு
தாட்டிகமாய் கருவதுவு முருவேயானால்
தண்மையுள்ள வறுபத்து நான்குசித்தும்
மாட்டிமையாய் செய்துமல்லோ வினையங் கொள்வீர்
மன்னவனே நீயுமொரு மாந்திரீகன்
பாட்டிமையாய் முயற்சியது கொண்டபேற்கு
பாலகனே சகலசித்து மிதற்குள்ளாச்சே. 25

ஆச்சப்பா கருவுரு வெல்லா மெய்யாம்
அப்பனே சாற்றுகிற தெய்வமெய்யாம்
மூச்சடங்கி நெடுங்கால மிருத்தல் மெய்யாம்
மூதுலகில் மோகனங்கள் மெய்யேயாகும்
பாச்சலுடன் வசியமுதல் மெய்யேயாகும்
பண்பான ஸ்தம்பனங்கள் மெய்யேயாகும்
மாச்சலென்னு வித்வேஷண மெய்யேயாகும்
மகத்தான வாக்ரோண மெய்யுமாமே. 26

மெய்யான சகலகலைக் கியானமெல்லாம்
விண்ணுலகில் மெய்யாகும் பொய்யேயல்ல
துய்ய நல்ல வாதமது மெய்யேயாகும்
துப்புரவாய் விட்டவற்கு வொன்றுமில்லை
வையகங்கள் தானறிய வுச்சாடனந்தான்
வளமையுடன் மெய்யாகு விண்ணிலோற்கு
பையவே செப்பிடு வித்தைமெய்யாம்
பாருலகில் தூலமென்ற வித்தை மெய்யே. 27

தூலமென்றால் தூலமது யேதென்றாக்கால்
துப்புரவாய் கூடுவிட்டு கூடுபாய்தல்
தாலமென்ற செஜகரண மெய்யேயாகும்
தாரணியில் கோகரண மெய்யேயாகும்
சூலமென்ற கன்னியற்கு குளிஸமெய்யாம்
சுந்தரனே ஜாலமெல்லா மெய்யாம்பாரு
ஆலவிஷ முண்டதொரு வையறாணை
அப்பனே நம்புவற்கு யெல்லாமெய்யே. 28

## டமரக வித்தை மாயா சம்பந்தம்

மெய்யான யின்னமொரு மேன்மை கூர்வேன்
மேதினியில் மானிடர்க ளாடுங்கூத்து
பொய்யான டமரகமா மனந்தங்கோடி
பொங்கமுடன் கருவன்றி யுருவுமன்றி
செய்யநல்ல தந்திரமாம் ஜாலங்கோடி
செப்புவார் கோடிமுறை யனந்தபாகம்
வையகங்கள் தான்மயங்க மாந்தர்தாமும்
வன்பிரட்டாய் கோடிமுறை யாடுவாரே. 29

ஆடுவார் வயர்பிழைக்க வேஷங்கொள்வார்
அப்பனே பிடாரியென்னும் பேய்களோடும்
கூடுவார் முழுமக்க ளானபேர்கள்
கூட்டமிட்டு குறியுரைப்பார் வேசிமாண்பர்
வாடுவார் தெய்வமுதல் சன்னதத்தால்
மயங்குவார் தியங்குவா ராட்டங்கொள்வார்
தேடுவார் மங்கையற்கு குறிதான் கொள்வார்
தேவியரைத் தான்பணிந்து குறிகொள்வாரே. 30

குறியான குறியுரைந் தேவியென்பார்
கொற்றவனே யடுமைகுறி கூறுமென்பான்
முறியான முறியன்போல் மூடங்கொண்டு
முழுமனதாய் யெந்தமக்கு விடைதா வென்பான்
அறியாத பாலனுக்கு யுபதேசங்கள்
அன்புகுறி தாமுரைக்க மனுவே யென்பான்
சிறியனுக்கு மனமுவந்து குதிதான் கொள்வீர்
சிற்றறியே னடிபணிந்தேன் யென்பான்பாரே, 31

பாரப்பா புலஸ்தியனே சாத்திரங்கள்
பலபலவாய் படித்தோருங் கிழ்மைகொண்டு
நேரப்பா யுலகுநடை தெரியாமற்றான்
நேர்மையுடன் கற்றறி மோழையாகுந்
தேரப்பா மனம்வாக்குக் கெட்டாமற்றான்
தேசமதில் மதியீன பாலராகி
ஆரப்பா யிருந்தவர் கோடியுண்டு
அப்பனே நாவுரைக்க நாவொண்ணாதே. 32

ஒண்ணாது மாந்திரீக காவியத்தில்
ஒட்டியமுஞ் சல்லியமு மொழிந்துவிட்டேன்
கண்ணான சித்தர்முனி நாதர்தாமும்
காசினியில் அதர்வணத்தை மறைத்துப்போட்டார்
மண்ணிலுள்ள மாணாக்கள் பிழைக்கவேதான்
மகாதேவர் கருவிகர ணாதியந்தம்
தண்மையுட னுபவாசங் கொண்டுமல்லோ
சாற்றினேன் யுலகத்தோர் பிழைக்கத்தானே. 33

## ஒட்டியம்

தானான யின்னமொரு தகைமைகூர்வேன்
தராதலத்தில் நாதாக்கள் மறைத்தகூத்து
தேனான யெனதைய ரசுவனியாந்தேவர்
தெளிவுடனே யெந்தமக்கு யுரைத்தநீதி
பானான ஒட்டியமாம் வித்தையப்பா
பாலகனே விபரமதை சாற்றக்கேளு
மானான தேவதையாம் சங்கிலிவீரன்
மகத்தான வீராதி வீரன்தானே. 34

தானான வீரனுக்கு வதிகாரங்கேள்
தகைமையுடன் பிரணவத்தை ஓதும்போது
கோனான வீரனப்பா யுந்தமக்கு
கொற்றவனே வசியமதா யிருப்பான்பாரு
தேனான பூங்காவு தோட்டமப்பா
தென்னவனே நவகனிகள் காய்களப்பா
மானான தோட்டமதில் கள்ளரப்பா
மன்னவனே யபகரிப்பார் திண்ணமாமே. 35

திண்ணமாம் அபகரிக்குங் கள்ளர்தம்மை
　　தீரமுடன் பிடிப்பதற்கு மூலத்தாலே
கண்ணான திருமந்திர மோதிவைப்பார்
　　காவலனே திருடவந்த பாலரப்பா
மண்ணோடே மரமாகி தொட்ட கையோடு
　　மகாதேவா தானிருந்து மயங்குவார்பார்
எண்ணாது யெண்ணியல்லோ கள்ளன்தானும்
　　ஏங்கியே பரதவிப்பான் பாருபாரே. 36

பார்த்தவுடன் கள்ளனைத்தான் மாந்திரீகன்
　　பகடியாய் வார்த்தையது மிகவேபேசி
நேர்த்தியாய் சீசீசீ ஓடுஓடு
　　நெடுமையுடல் கில்லாரி கூறுவான்பார்
வார்த்தையது கேட்டவுடன் கள்ளன்கைதான்
　　வண்மையுடன் விட்டுவிடு மகிமையப்பா
தோர்த்ததொரு கைநீங்கி கள்ளனப்பா
　　கொற்றவனே கால்பணிந்து தொழுகுவானே. 37

## சல்லியம்

தொழுகுவான் புலஸ்தியனே மச்சகேந்திரா
　　தொல்லுலகில் சல்லியமாம் வித்தைகேண்மோ
பழுதுபடா கருவதனால் சல்லியத்தை
　　பாருலகில் கண்டிடலாம் பூமிதன்னில்
உழுதுமே சல்லியத்தின் பிரணவத்தால்
　　உத்தமனே நிதியதனைக் காணலாகும்
அழுதாலுங் குருமுறைதான் யார்தான்சொல்வார்
　　அப்பனே யுந்தமக்காய் கூறலாச்சே. 38

கூறவென்றால் கருவான மையினாலே
　　குருபரனே காலமதை மிகவாய்ச் செய்வார்
ஆறவே பூமிதன்னில் கடாரந்தன்னை
　　அப்பனே காட்டிடுவார் கைக்குமெய்யாய்
தேறவே திரவியத்தைக் காட்டுவார்பார்
　　தேற்றமுடன் சல்லியத்தி னருளினாலே
மாறவே மூலமந்திரத்தையோதி
　　மன்னவனே பொருள்தனைக் காண்பிப்பாரே. 39

பாரப்பா பொருளதனைக் காட்டுவார்பார்
பாலகனே யெடுப்பதற்கு முடியாதையா
நேரப்பா யுலகுளோர் சல்லியத்தால்
நேர்மையுடன் வெகுகோடி மாண்பரப்பா
ஆரப்பா யெடுத்தவர்கள் யாருமில்லை
அப்பனே பொய்ப்பகட்டால் பிழைக்குமாண்பர்
தேரப்பா காவியத்தி லொளிப்பு மார்க்கம்
தெளிவுடனே பூட்டிவிட்டேன் தேர்ந்துபாரே. 40

## கர்மந் தொடருதல்

பார்க்கையிலே யின்னமொரு வதிதங்கூர்வேன்
பாவலனே காவலனே பகரக்கேண்மோ
ஏர்க்கையிலே ராஜாதி ராசமன்னர்
யெழிலான மானிடர்க ளெவறானாலும்
சேர்க்கையிலே யவரவர்கள் செய்தகர்மம்
செப்புகிறேன் மாணாக்கள் பிழைக்கவேண்டி
ஆர்க்கையிலே யவரவர்கள் செய்தபுண்ணியம்
அப்பனே விதிபாடு யுரைக்கின்றேனே. 41

உரைக்கிறேன் தடாகமதைத் தடமறைத்தோர்
உத்தமனே யேரிகுள மடைத்தபேரும்
திரைக்கவே பச்சைமரம் வெட்டினோரும்
திரளான கோயில்குள மழித்தபேற்கு
மிறைக்கவே நஞ்சரித்து பாபியோற்கும்
நீடான மடமனை யிடித்தபேற்கும்
விரைக்கவே மண்ணோரஞ் சொன்னபேற்கும்
வித்தகனே கருமமது செனிக்குந்தானே. 42

செனிக்குமே கற்பழித்த பாபியோற்கும்
செப்பவே சிறைகொண்ட கர்மிகட்கும்
தனிக்கவே கருவுதனை யழித்தபேற்கும்
தகைமையுடன் கொலைகார பாபிகட்கும்
வனிக்கவே சகோதரரை வஞ்சித்தோர்கும்
வாகான மனைவியரை துரோகித்தோற்கும்
இனிக்கவே மிகப்பேசி சிநேகிதனை
இழிவான துரோகமதை செய்தபேரே. 43

பேரான நம்பியதோர் மாந்தர் தம்மை
பேருலகில் மோசமது செய்தபேற்கும்
தூரான வார்த்தையுடன் மிகவே பேசி
துரத்தியே பரித்திடுங் கள்ளருக்கு
பாரான சிசுவதை செய்தபேற்கும்
பாலகனே பிரமகத்தி சுத்தும்பாரு
சாரான பட்சிசிறையடைத்த பேற்கும்
பாலகனே கர்மமது செனிக்குந்தானே. 44

தானான புலஸ்தியனே யின்னங்கூர்வேன்
தண்மையுள்ள கர்மமது தொடரும்நேர்மை
பானான பட்சியன்றன் கூடழித்தோர்
பாலகனே வயரெறிய செய்தபேற்கும்
மானான சாபமதுரோகஞ் செய்தபேற்கு
மகத்தான முன்புநயம் பேசிப்பின்பு
கோனான புறங்கழித்த பாபியோர்க்கு
கொடுமையுள்ள கர்மமது நேருந்தானே. 45

நேரான திருவிளக்கை யவித்தபேற்கும்
நெடிதான திருமணத்தைக் கெடுத்தபேற்கும்
பாரான மிருகவதை செய்தபேற்கும்
பாலகனே கன்றுக்குப் பாலீயாமல்
காரான தெய்வமதை பழித்தபேற்கும்
கதிரான பயிர்தனக்கு நீரில்லாமல்
தூராகச் செய்ததொரு துஷ்டருக்கு
துப்புரவாய் சயரோக கர்மந்தானே. 46

கர்மமாங் காவலனே புலஸ்தியாகேள்
காசினியில் கர்மமது யின்னமுண்டு
தர்மமாய்க் கூறுகிறேன் புணர்ச்சிதன்னை
தாக்குடனே கெடுத்ததொரு பாபிகட்கும்
வர்மமுடன் தேவதா ஸ்தானந்தன்னில்
வாகுடனே சம்போகஞ் செய்தபேற்கும்
மர்மமாஞ் சம்போகத் தன்மைதன்னை
மனதுவந்து கண்டாற்கு கருமந்தானே. 47

தானான கர்மமது சாற்றக்கேளிர்
தகைமையுட னின்னமுண்டு கூறொண்ணாது
கோனான யெனதையர் சொன்னநீதி
கொற்றவனே சுருக்கமதாய்க் கூறிவிட்டேன்
தேனான புண்ணியத்தை யானுரைப்பேன்
தேசொளிவின் சின்மயத்தா லறியலாகும்
பானான மாந்திரிய காவியந்தான்
பாருலகில் கண்டவரே புண்ணியோரே. 48

## புண்ணிய சம்பவம்

புண்ணியமா மின்னமொரு புதுமைகூர்வேன்
புகழான புலஸ்தியனே குமுதவானே
தண்மையுள்ள தானமது யேதென்றாக்கால்
தகைமையுடன் சாற்றுகிறே னளினவானே
வண்மையுள்ள தானமது அன்னதானம்
வகுப்பான சொர்னமென்ற தானமாகும்
திண்ணமாம் வஸ்திரத்தின் தானமாகும்
தீர்க்கமுள்ள சிறைநீக்கல் தருமாமே. 49

தருமமாம் குளம்வெட்டல் கடனைத்தீர்த்தல்
தகைமையுள்ள சிசுவுக்கு வமுர்தமீதல்
தருமமாம் பிரசவத்தை நீக்கல்நன்று
தண்மையுள்ள சிறைமீட்டல் மணஞ்செய்வித்தல்
தருமமா மடங்கட்டல் தேவஸ்தானம்
தாக்குடனே கவியருக்குப் பரிசளித்தல்
தருமமா வழிபாடு காட்டல்நன்று
தண்மையுள்ள குருடன்கைக் கோலுமாமே. 50

கோலான வந்தணற்குத் தானமீதல்
கொற்றவனே குருயாகஞ் செய்தல்நன்று
காலான மிருகவதை நீக்கல்நன்று
காவலனே கொலைகளவு தடுத்தல்நன்று
தாலான சத்தியத்தை யுறுதிகொள்ளல்
தாக்கான யெறும்புகடை சீவனுக்கு
மாலான பசிநீக்கல் மிகவும்நன்று
மகத்தான தருமமிது என்னலாமே, 51

என்னவே புலஸ்தியனே யினிமையோனே
யெழிலான பட்சியிறை கொடுத்தல்நன்று
துன்னவே சாபமதை நீக்கல்நன்று
துப்புரவாய் நீதிவழிச் சொல்லல்நன்று
பன்னவே பிணஞ்கடுதல் மெத்தநன்று
பாலகான தேவதா மாளிகைக்கு
துன்னவே திருவிளக்கு ஏற்றல்நன்று
துப்புரவாய் நடத்தவற்குப் புண்ணியம்பாரே. 52

பாரப்பா கோவுக்குப் பசியைநீக்கல்
பாலகனே கருடனுக்கு யிறைச்சியீதல்
நேரப்பா குருவுக்கு யாசீர்மங்கள்
நேர்மையுடன் செய்யுவது மெத்தநன்று
தாரப்பா தன்னுயிர்போல் மன்னரைத்தான்
தகைமையுடன் யெண்ணுவது புண்ணியமாகும்
ஆரப்பா பிரசாதி துரோகமப்பா
அப்பனே நீக்குவது தருமமாமே. 53

நீக்குவது பழிநீக்கல் மெத்தநன்று
நீதியுள்ள சன்மார்க்கப் புருஷருக்கு
நோக்கமுடன் துரோகமது செய்யாமற்றான்
நோன்புடனே மாதர்மிகப் பணிதல்நன்று
ஆக்கமுடன் கற்புடைய மாதர்தாமும்
அன்புடனே யுபசாரங் கொண்டுமேதான்
ஊக்கமுடன் பணிவிடைக்கு முன்னால்நின்று
உத்தமனே நடப்பவற்கு மோட்சந்தானே. 54

தானான புண்ணியங்க ளின்னமுண்டு
தகைமையுடன் கூறுதற்கு யாராலாகும்
கோனான யெனதைய ருரைத்தமட்டும்
கொற்றவனே யானுரைத்தே னுண்மையாக
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேற்றமுடன் காடியத்தைக் கூறலாச்சு
மானான மகதேவர் கடாட்சத்தாலே
மானிலத்தில் பாடிவைத்த காவியமுமாச்சே. 55

## கேசரி மையினால் வசியம்

ஆச்சப்பா யின்னமொரு மகிமைகூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தேனப்பா
மூதுலகில் நாதாக்கள் மறைத்தவண்ணம்
பாச்சலுட னடியேனும் மனதுவந்து
பாரினிலே மறைப்பொருளை விளக்கமாக
மாச்சலது கொள்ளாமல் மாந்தருக்கு
மகாதேவர் பூட்டை மிகத்திறந்திட்டேனே. 56

திறந்தேனே கேசரியின் மைதானப்பா
தீர்க்கமுள்ள கருங்கமுதை கேசரிதானாகும்
சிறந்ததொரு பாஷாண முப்பத்திரண்டு
சிற்பரனே தானெடுத்து செப்பக்கேண்மோ
துறந்ததொரு யிடைபாகஞ் சமனாய்க்கூட்டி
துப்புரவா பெருவாயன வாயிலிட்டு
கறந்ததோர் கருங்கமுதை பெண்ணேயாகும்
காவலனே வாயிலிட்டுத் தயிலம் வாங்கே. 57

வாங்கியே தயிலமதைத் தானெடுத்து
வண்மையுள்ள கருக்குருவாஞ் சரக்கனைத்தும்
ஏங்கியே போகாமல் மைந்தா கேண்மோ
யெழிதான புழுகுடன் சவ்வாதுசேர்த்து
ஓங்கியதோர் கஸ்தூரி பூரஞ்சேர்த்து
வுத்தமனே ரோசனையுங் குங்குமப்பூ
தாங்கியே தானரைப்பாய் தயிலத்தாலே
தகைமையுடன் சிமிழ்தனிலே பதனம்பண்ணே. 58

பண்ணவே முப்பத்திரண்டு தாது
பாலகனே தாதுவென்ற நாதங்கேண்மோ
அண்ணலே பிச்சென்ற தாதுவாகும்
அப்பனே பட்சியிட மிருகம ாகும்
தண்ணமுடன் போகமதில் வசியத்திற்காய்
சாங்கமுடன் நாதாக்கள் கூறிருக்க
வண்ணமுள்ள கருக்களெல்லாந் தனையாராய்ந்து
வாகுடனே செய்தாலே கேசரியுமாமே. 59

ஆமேதான் கேசரியா மையுமாச்சு
அப்பனே அறுபத்து நான்கு சித்தும்
நாமேதான் சொன்னபடி யாடலாகும்
நாட்டிலே கருவறிந்து தொழில்கள் செய்வோன்
தாமேதான் வரைபாடா யறிந்து செய்வான்
தாரணியில் விதியில்லான் செய்யமாட்டான்
போமேதான் விதியாளி செய்வானப்பா
பொங்கமுடன் பாடுடையோர்க் கமையுந்தானே. 60

தானான கேசரியின் மையின் மாற்கம்
தப்பாது செய்வதற்கு யெல்லாஞ்சித்தி
கோனான வாசனைப்போல் சித்தேகொள்வான்
கொற்றவனே நாதாக்க ளாடுங்கூத்து
பானான சூரியன் சந்திரன்றான்
பாருலகில் கேசரியின் மார்க்கத்தாலே
மானான மகவொளிவை மறைக்கலாகும்
மகத்தான கேசரியின் மையுமாமே. 61

மையான மையதுவின் மருத்துவங்கள்
மானிலத்தி லாரறிவா ரதீதமெத்த
மையான சகலகலைக் கியானமெல்லா
மானிலத்தி லாடுதற்கு யெல்லாஞ்சித்தி
மையான மார்க்கத்தாலே யோகஞான
மறப்பில்லை திறப்பில்லை நளினவானே
மையான திலதத்தா லெல்லாஞ்சித்தி
மன்னவனே லோகமெல்லா முனக்குள்ளாச்சே. 62

ஆச்சென்று விடுகாதே அண்ணலேகேள்
அப்பனே பாடுபட்டோர் பலந்தான் காண்பார்
மூச்சடங்கி நெடுங்கால மிருக்கலாகும்
மோனமென்ற மையாலே லோகமப்பா
பாச்சலது கொள்ளாது பகடியல்ல
பார்மகனே விட்டகுறையுனக்கிருந்தால்
மாச்சலது நேராது யெல்லாம் வாய்க்கு
மகதேவா யுமக்குறுதி கூறினேனே. 63

## பட்டுப்பூச்சி யென்னு மிந்திரகோபப் பூச்சி மை வசியம்

கூறினே னின்னமொரு மார்க்கங்கூர்வேன்
குவலயத்தில் நாதாக்கள் மறைத்த மாற்கம்
தேறினதோர் மையொன்று வறையக்கேளீர்
தெளிவான யிந்திர கோபப்பூச்சி
மீறியதோர் பூச்சியது துலாந்தா னொான்று
மிக்கான செந்தீயில் கருக்கிக்கொண்டு
ஆறியே கல்வமிட்டுப் பொடியதாக்கி
அப்பனே வதிற்சேர்க்க மருந்துகேளே. 64

கேளப்பா சவ்வாதுடனே புழுகுசேரு
கெணிதமுடன் கஸ்தூரி பச்சைபூரம்
தாளப்பா வைங்கோலத் தயிலத்தாலே
தகைமையுடன் றானாட்டி மையதாக்கி
நாளப்பா போகாமல் நளினவானே
நலமுடனே மையதனை சிமிழிலப்பா
பாளப்பா போகாமல் பதனம்பண்ணு
பாலகனே பிரணவத்தைக் கூறுவேனே. 65

கூறுவேன் ஓம்பிரகாச பூபா
குறிப்பான ரிங்ரிங்கென்றே யோது
மாறுதலாய் ஓம்சிவயமென்றே யோது
மகத்தான பீசத்தால் வுருவேயேறி
ஆறுதலங் கருவிகா ணாதியந்தம்
அப்பனே கண்டறித லெளிதாகும்
வீறுடைய மையதனால் யெல்லாஞ்சித்தி
வித்தகனே விதன்போக்கு விபரங்காண. 66

காணவென்றால் மையதனை லலாடமிட்டுக்
கருவான பிரணவத்தை யுச்சாடித்து
பூணவே லட்சமுரு வோதுவோது
புகழான லட்சசித்தி யிதனாலாகும்
தோணவே மையினது வேகத்தாலே
தொல்லுலகில் நிதியதனை யெடுக்கலாகும்
பாணமா மைதனக்கு யென்ன கூர்வேன்
பாருலகில் நாதாக்கள் கூறார்தானே. 67

## பஞ்சபூதமை

தானான யின்னமொரு தகைமை கூர்வேன்
தாக்கான புலஸ்தியனே தம்பிரானே
கோனான யெனதைய ரசுவனி யாந்தேவர்
கொற்றவனார் துவாபரமா யுகத்திலையா
தேனான தென்மலையில் பொதியைச் சார்பில்
தேற்றமுட னாடினதோர் திருக்கூத்தப்பா
பானான மலையேறி கருவுகொண்டு
பாலகனே முடித்ததொரு பான்மையாமே. 68

பான்மையாம் பஞ்சு பூதமைதானாகும்
பாலகனே கருவனைத்துங் கூறுவேன்யான்
மேன்மையாம் வல்லூரின் கண்ணேயாகு
மிக்கான செம்போத்துக் கண்ணேயாகும்
கான்மையாந் தேவாங்கின் கண்ணேயாகுங்
கருங்குருவிக் கண்ணாகும் பிச்சுமாகும்
தூன்மையா மாந்தையிடக் கண்ணுமாகுந்
துப்புரவாய்தான் கூட்டி முறைமைபாரே. 69

பாரப்பா கருக்களெல்லாம் ரவியுலர்த்திச்
பாலகனே செப்புகிறேன் முறைபாடோடு
ஆரப்பா செந்தீயில் கருக்கிக் கொண்டு
அப்பனே குழிக்கல்வி விட்டுமேதான்
சூரப்பா மைபோல பொடித்துக் கொண்டு
சுந்தரனே யதிற்சேர்க்கும் பானங்கேண்மோ
நேரப்பா கஸ்தூரி புழுகுசேரு
நெடிதான பச்சையென்ற பூரஞ்சேரே. 70

சேர்த்திடுவாய் ரோசினையுங் குங்குப்பூ
செம்மலுடன் றானரைப்பாய் வைங்கோலத்தால்
ஆர்த்திடுவா யைங்கோல மேதென்றாக்கால்
அப்பனே முன்னுரைத்த கேசரிதானாகும்
பூர்த்ததொரு தயிலத்தால் வெண்ணைபோல
பொங்கமுடன் தானரைப்பாய் சாமம்நான்கு
பேர்த்திடுவாய் சிமிழதனில் பதனம்பண்ணு
பேரான பிரணவத்தை யுருவுபோடே. 71

போடப்பா வுருவதுவு மேதென்றாக்கால்
பொங்கமுடன் சிம்நம்வம் மென்றோது
ஆடப்பா மூலமந் திரமேயாகும்
அப்பனே டுடுடு டாடாடா வென்றேயோது
கூடப்பா லட்சமுரு போடுபோடு
குருபரனே வுருவேரும் கருவுவேகம்
தேடப்பா வாசானைத் தெளிந்துகேளு
தேற்றமுடன் யுந்தமக்குச் செப்புவாரே. 72

செப்புவார் மையினிட மார்க்கமப்பா
செயலான போக்கு வகை கூறக்கேண்மோ
ஒப்புவமை யில்லாத மையைத் தானும்
ஓகோகோ லலாடமதி விட்டாயானால்
தப்பிதங்கள் நேராது தகைமையோடு
தாரணியில் வசியமது யெல்லாஞ்சித்தி
மெப்புடனே பிரணவத்தை யோதிக் கொண்டு
மேதினியில் சாபமதை கழிப்பீர்தாமே. 73

## ஏரழிஞ் சிமை

கழிக்கவே யின்னமொரு காரியங்கேளே
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
சுழிக்கவே யேரழிஞ்சு டையான் மாற்கம்
சுந்தரனே சூட்டுகிறேன் சுளுக்குவேதை
பழிக்கவே போகாது மையின் மாற்கம்
பாலகனே யேரழிஞ்சித் தயிலம் வாங்கி
முழிக்கவே யாகாது தயிலந்தன்னில்
மூதண்ட முப்பு சுன்னங் களஞ்சிபோடே. 74

போட்டுமே தயிலமதைப் பதனம்பண்ணு
பொங்கமுடன் தயிலமதைக் கையில் தொட்டு
நாட்டமுடன் தொட்டதொரு பொருள்களெல்லாம்
நாயகனே பலபலவாஞ் சாலமாகும்
தாட்டிகமாய் சாலமதை யாடலாகும்
தயாபரனே லோகமெல்லாம் பிரமை கொள்வார்
ம்ாட்டிமையாய் பலகோடி சாலமற்க
மன்னவனே யாடிடவா மதீதம் பாரே. 75

## மாந்திரீகன் உடுக்கை உடைக்க மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே மதிவல்லோய் கேள்
பாங்குடனே யெனதைய ருரைத்தநீதி
ஆரப்பா மாந்திரீக னஷ்டாங்கத்தால்
அப்பனே சாலமதா லுடுக்கை தன்னை
நேரப்பா தானுடைப்பான் மாண்பர்மெச்ச
நெடிதான வுடுக்கையது வுடைகொண்டோட
தாரப்பா பிளவையது ரண்டதாக
தாக்குவான் மாந்திரீகன் தாக்குவானே. 76

தாக்குவான் கருவதனா லுடுக்கைதன்னை
தன்மையுடன் தானுடைப்பான் கூருவோமெத்த
போக்குவான் பொருளாசை கொண்டயோகி
பொங்கமுடன் சாலமதை மிகவாய்ச் செய்வான்
ஆக்கமுட னதர்வண மாந்திரீகன்
அப்பனே பிரணவத்தா லோதுவான்பார்
நோக்குவா னுட்பொருளை யுச்சாடித்து
நொடிக்குள்ளே யுடுக்கைதனை பொடி செய்வானே 77

செய்வானே மாந்திரீகன் மகிமை மெத்த
செயலான வேடிக்கை வினோதவித்தை
துய்யநல்ல பாலகர்க்கு தோன்றுவித்தை
துப்புரவாய் செய்துமல்லோ வினையங்கொள்வான்
நையவருங் கோபனுக்கு மாந்திரீகம்
நலமுடனே செய்தாலே பாபம் நேரும்
பையவே லோகபதி மாண்பருக்கு
பகையாவான் மாந்திரீகன் பகையாவானே. 78

## சங்கிலிக் கருப்பன் பிரணவம்

பகையான புலஸ்தியனே பாலா நீ கேள்
பாலகனே யண்ணமார் சோகங்கூர்வேன்
திகையான பாதைவழி தப்பியேதான்
தீரமுடன் கல்லாத விருட்சந்தன்னில்
சிகையான மாமிஷமாங் கையிலேந்தி
சிக்கெனவே தானடைந்த கர்மத்தாலே
தொகையான கூட்டமப்பா வண்ணமார்கள்
தோற்றிடவே கண்மயங்கி கலங்குவாரே. 79

கலங்கியே கால் நடுங்கி மெய்நடுங்கி
காவணத்தின் வழிபாதை சென்றதாலே
தலமதுவுங் காணாமல் தம்பிரானே
தடுமாட்ட மென்றதொரு பான்மையாலே
பலமதுவுந் தானொடுங்கிப் பாலரப்பா
பாருலகில் குளிர்சுரமும் பயமுங்கண்டு
நலமுடனே பிரார்த்தனைகள் கப்பணங்கள்
நாயகனே கட்டிடுவார் மாண்பர்தானே, 80

தானான வஞ்சலிகள் பொங்கல்பூசை
தாக்கான பிடாரிமுகங் கரவுவோடும்
மானான மகாபூசை கொண்ட தீப
மகத்தான வடிகண்டம் பாவணங்கள்
தேனான பலபலவாய் பிடாரிபூசை
தேற்றமுட னண்ணமார் சாங்கியங்கள்
கோனான குருசொன்ன பிரணவங்கள்
கூறிடுவார் மாணாக்கள் பிழைக்கத்தானே. 81

பிழைக்கவே வண்ணமார் பிரணவங்கள்
பீசமென்ற மாந்திரீக மேதென்றாக்கால்
தழைக்கவே காவணத்தின் மலடாவாவா
தகைமையுள்ள கல்லால விருட்சபூதா
கழைக்கவே ஒண்டிசனி தம்பிரானே
தண்மையுள்ள சத்தமன்னா தனிவாவா
சுழைக்கவே பாலனெதிர் பட்டமாடா
சுந்தரனே காவுபொலி கொண்டு போவே. 82

போவென்று லட்சமுரு வோது வோது
பொங்கமுடன் கல்லால மரத்தினண்ணர்
தாவென்று பூசைமுகம் கையிலேந்தி
தண்மையுடன் காவணத்துக் கேகும்பாரு
நாவொன்று தவறாது விடைமாறாமல்
நாயகனே யுத்தாரப் படியேயாகும்
போவென்று சொன்னவுட னண்ணமார்கள்
புகழுடனே தம்மைவிட்டு யேகுவாரே. 83

## பாம்பாலம்மை யுச்சாடப் பிரணவம்

ஏகவே யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
யெழிலான பாதாளத் தண்ணீர் பாங்கில்
நாகமென்னும் பாம்பாலி தெய்வமாகும்
நன்மையுள்ள க்ஷத்திரிய வம்மிஷந்தான்
ஆகமத்தின் பிரகாரம் தொகுப்பு நான்கில்
அப்பனே முதற்சாத் க்ஷத்திரியந்தான்
பாகமுடன் ரதிகாலம் பாதாளத்தில்
பாங்குடனே சமாதிமுக மிருக்குந்தானே. 84

இருக்குமே காற்றதனைப் பட்சணித்து
யெழிலான பாதாளத் தண்ணீர் பாங்கில்
பொருத்துமே சுவாசமதை யுள்ளடக்கி
பொங்கமுடன் மாலையது முடிவுமட்டும்
திருத்தமுட னந்தரங்கள் தாமிருந்து
தீர்க்கமுடன் ராக்காலம் வெளியேயேகி
கருத்துடனே வையகத்தைத் தான்துறந்து
காவலனே புத்ததனில் வாசந்தானே. 85

வாசமாம் புடவிதனிற் வாசமாகி
வாகுடனே தரமிருந்து யுபதேசத்தால்
நேசமுடன் மானிடவர் தங்களுக்கு
நினைத்த குறிதப்பாம் வினையங்கொண்டு
பாசமுடன் கூறுகிற விடைக்கெல்லாந்தான்
பாலகனே யுந்தாரங் குறிமுகத்தில்
பீசமுடன் பிரணவமா முச்சாடத்தால்
பிரியமுடன் தோதுகுறி கூறுவாரே. 86

கூறுவார் குறிமுகத்தில் பிரணவத்தைக்
கொற்றவனே பீசமுட னோதவேண்டும்
ஆறுவார் புத்துமகா தேவியாரே
அப்பனே லகுமாரி ஆடிவாவா
மீறுடைய கோபமதை யடக்கியாடு
மிக்கான வெட்டவெளி தன்னிலாடு
சீறுடைய நாகமே நின்றுவாடு
சின்மயத்தின் பொற்பதமே யாடுவாடே. 87

ஆடென்று பிரணவத்தை யுச்சாடித்தால்
அப்பனே மானிடர்கள் நினைத்தவண்ணம்
மோடென்று சத்தியத்தைப் பாறாமற்றான்
பொங்கமுடன் நின்றுவிளை யாடில்லோ
சாடவே சன்னதமாய்ப் படிகங் கொண்டு
சட்டமுடன் புத்துக்கு ளமர்ந்துக் கொண்டு
நீடவே நெடுங்காலம் சமாதி பூண்டு
நிஷ்களங்கப் பதவிதனில் வாழும்பாரே. 88

## கஞ்சமலை சித்தர் மூலிகையறிய

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே கஞ்சமலை சித்தர்மூலி
நேரப்பா தாள்வணங்கி நின்றுவாடி
நிலையான செங்கோரை சிவந்தநாபி
சாரப்பா சிவந்த சித்திரமாமூலி
சார்பான கருவாழை கருபலாவாகும்
தேரப்பா சிவந்ததொரு குமரியாகும்
தேற்றமுள்ள கருங்குமரி மூலியாமே. 89

மூலியாங் கருவேளை கருநொச்சியாகு
மூதண்ட கருவறுகு கருங்கடுக்காய்
சாலியாங் கருதான்றி கருநெல்லியாகுஞ்
சாங்கமுள்ள கருஞ்சூரை கருவேலியாகும்
வாலியாங் கருவாலை கருபாலையாகும்
வண்மையுள்ள கருவரசு சோகமாகும்
நீலியாஞ் செந்நீலை சிவந்தவேம்பு
நிஷ்களங்க மானதொரு விருட்சந்தானே. 90

## கஞ்சமலை சித்தர் தொகுப்பு

தானான யின்னமொரு தொகுப்புகூர்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே தம்பிரானே
கோனான யெனதையர் சொன்னநீதி
கூறுகிறேன் கஞ்சமலர் தொகுப்புமாற்கம்
தேனான கற்பமது கொண்டநாதர்
தேற்றமுள்ள சித்தர்களோ வறுபத்துநான்கு
மானான ஞானசித்து யெண்பதாகும்
மகத்தான கம்பிளியாஞ் சித்தர்நூறே. 91

நூறான சித்தரப்பா கோனாராகும்
நுட்பமுள்ள சித்தர்களோ யிருநூறாகும்
கானான சித்தரப்பா கன்னடியராகும்
கருவான சித்தர்களோ வாயிரம்பேர்
தாறான ரோமரென்ற சித்தரப்பா
தயாபரனே நாறூறு யென்னலாகும்
ஆறான சித்தரப்பா கொங்கிணியராகும்
அப்பனே யறுநூறு யென்னலாமே. 92

என்னவே யின்னமுண்டு சித்தரப்பா
யெழிலாக கண்டமகா ரிஷியார்தாமும்
துன்னவே தொண்ணூற்றாஞ் சித்தராகும்
துகளற்ற கோத்திரமா மென்னலாகும்
நன்னவே படிகடந்த நாதரப்பா
நாதாந்த சித்தொளிவா மென்னலாகும்
பன்னவே பவுஷமகா ரிஷிகள்கூட்டம்
பாலகனே சின்மயத்தோர் கூட்டமாமே. 93

கூட்டமாங் குணதிசையா மேற்குமாகும்
கொற்றவனே விலாடபுரி சித்துவாகும்
வாட்டமாங் கங்கணத்தில் குளிகைபூண்ட
வளம்பெரிய சித்தர்களோ விருநூறாகும்
தேட்டமுடன் குடகுமலை மூப்பனார்கள்
தெளிவான சித்தர்களோ நானூறாகும்
தாட்டிகமாஞ் சுங்கணத்தின் சித்தேயாகும்
தன்மையுள்ள தொகையதுவு மன்பதாமே. 94

அன்பான சித்தரப்பா வழகர்கூட்டம்
அப்பனே யெழுநூறு யெண்ணலாகும்
தண்மையுள்ள குறும்பரிட கூட்டமப்பா
தாக்கான சித்தர்களோ தொளாயிரந்தான்
மென்மையா மரவரிட கூட்டமப்பா
மேலான சித்தர்களோ முன்னூறாகும்
வண்மையுள்ள நாயனார் கூட்டமப்பா
வாகான சித்தர்களோ நூற்றிரண்டு பத்தே. 95

## ஒச கூட்டத்தார் சிறப்பு

பத்தான சித்தர்களோ ஒசகூட்டம்
பாங்கான கூட்டமது நாலாயிரந்தான்
சித்தான சித்துமலை கஞ்சமேடு
சீரான சீஷர்வர்க்க மனேகமுண்டு
முத்தான முனிகூட்ட மென்பாரப்பா
மூதுலகில் தேவதா காளியற்கு
நித்தமுமே பூசைமுகம் ஏவலுக்கு
நிஷ்களங்க மானதொரு மாண்பராச்சே. 96

ஆச்சப்பா பற்பலவாந் தேவியற்கு
அடுமைதொழில் தான்புரியு மாந்தரப்பா
மூச்சுடைய வாடுபன்றி மாடுகோழி
மூதுலகில் களவுபொலி யேவலுக்கு
மாச்சலில்லா பூசைமுக மதிகள்கூறு
மகத்தான பூசாலி யென்னலாகும்
ஏச்சலில்லா துறவுகோல் கையிற்பூணு
மெழிலான யேவல்புரி சித்தர்காணே. 97

காணவே கஞ்சமலை சிறப்பு சொன்னேன்
காவலனே புலஸ்தியனே கவிவல்லோனே
தோணவே லோகமதி லனேகமேரு
தோறாம லிருப்பதுண்டு நாவொண்ணாது
மாணவே யிக்கோடி மரவசித்தர்
மானிலத்தில் கண்டதுண்டோ மகிமைவானே
பாணப்போ லிக்கிரியில் கூத்தர்கூட்டம்
பார்ப்பதற்கும் பணிவதற்கும் இடங்கொள்ளாதே98

கொள்ளாது சித்தர்களோ மறைத்தமார்க்கம்
குவலயத்தி லாரேனுஞ் சொன்னதுண்டோ
தெள்ளமிர்த மானதொரு யெந்தன்தேவர்
தேற்றமுட னெந்தமக்கு யுரைத்தநீதி
வள்ளலுயர் தெள்ளுதமிழ் சித்துபாலா
வாகுடனே யானுரைத்தே னுந்தமக்கு
தள்ளவே போகாது மாந்திரீகம்
தகைமையுடன் சாதித்தே னுலகுள்ளோற்கே. 99

சாதித்தேன் சருக்கமது யேழுமாச்சு
சதுரான பாடலது வெழுநூறாச்சு
வாதித்தன் சந்திரன் போலிந்தநூலை
வளமையுடன் பாடிவைத்தே னாதியந்தம்
சோதித்த காவியந்தான் வைந்துநூலும்
சுந்தரனே சுருதிபெற்றோன் காண்பான்பாரு
ஆதித்தன் போலாகச் சருக்கம்நூறாம்
அப்பனே சாற்றினேன் முற்றதாமே. 100

ஏழாவது சருக்கம் முற்றுப் பெற்றது.

உ

முருகன் துணை

## எட்டாவது

## சமுத்திரச்சருக்கம்

சாற்றுகிறேன் புலஸ்தியனே தம்பிரானே
சத்த சாகரத்தினிட மகுமைகூர்வேன்
போற்றுகிறேன் எட்டாவது சருக்கமப்பா
பொங்கமுடன் திரேதா யுகத்திலையா
ஆற்றவே தேவாதி ரிஷிகள் தானும்
அப்பனே யவர்கள்வைத்த நிதியனைத்தும்
தூற்றியே கணக்குரைப்பேன் துய்யபாலா
துப்புரவா யதர்வணத்தைக் கேளுகேளே. 1

கேளப்பா வடமேரு தென்சாரலப்பா
கெடியான வாருதியாம் நடுவேவிட்டு
ஆளப்பா கண்டவர்க ளாருமில்லை
அப்பனே யெனதையரசு வனியாந்தேவர்
பாளப்பா போகாமல் குளிகைகொண்டு
பாலகனே கண்டதொரு திசையுமாச்சு
தேளப்பா கொட்டியதோர் நாடுமாகும்
தென்றிசையா யாமுரைப்போம் மர்மம்பாரே. 2

மர்மமாம் பாறைநடு மையமப்பா
மன்னவனே தேவரிஷி வைத்தவைப்பு
தர்மமாய்க் கூறுகிறேன் யேழுவெள்ளம்
தாக்கான நிதியதுவும் நாவொண்ணாது
கர்மமாந் தானகன்ற புண்ணியோர்க்கு
காவலனே கிட்டுமல்லால் மற்றோர்க்கில்லை
வர்மமாம் பொருட்காவல் சக்கரத்தை
மன்னவனே கூறுகிறேன் மகிமைவானே. 3

மகிமையாஞ் சக்கரமுமே தென்றாக்கால்
மன்னவனே பாதாள பூதமப்பா
மகிமையாம் தங்கமென்ற தகடுநேர்மை
மாதவனே கூறுகிறேன் மன்னாபொன்னா
மகிமையாம் நீளமது அடிதானாறு
மாசற்ற அகலமது யிருநூறாகும்
மகிமைபாங் கோணமது அறுபத்துநான்கு
மாட்டுகிறேன் பீசத்தின் வண்மைபாரே. 4

பாரப்பா பிரணவமாம் தும்தும்மாகும்
பாலகனே அம்அம்அம் அம்மென்றோது
நேரப்பா சுமுகாய சுமுகாவென்று
நேர்மையுடன் யோதினதோர் பீசமாகும்
ஆரப்பா டங்டங்டங் டங்கென்றோது
அப்பனே ரிங்ரிங்ரிங் ரிங்கென்றாட்டு
சீரப்பா லட்சணமா முருவேபோடு
சிற்பரனே லட்சமுரு மாட்டுமாட்டே. 5

மாட்டையிலே பூதமது வசியமாகும்
அப்பனே நிதியெடுக்கத் தடைதானில்லை
கோட்டை யென்னும் நிதிக்கோட்டை காணலாகும்
கொற்றவனே யாறனைத்தும் கைக்குள்ளாகும்
சேட்டையா யிருந்தவர்க்கு நிதிகிட்டாது
செப்புகிறேன் மாணாக்கள் பிழைக்கவேண்டி
தாட்டிகமாய் மாந்திரீக காவியந்தான்
சாற்றுகிறேன் நாதாக்கள் பாதங்காணே. 6

### இருளன்மந்திரம்

காணவே யின்னமொரு மாற்கங்கூர்வேன்
கைலாச புலஸ்தியனே கவிராஜேந்திரா
பூணவே யிருளனென்ற மந்திரந்தான்
புகழாகக் கூறுகிறேன் புனிதவானே
நாணவே யிருளனது வசியங்கேண்மோ
நாதாந்த சித்துமுனி நவிலவில்லை
தோணவே மூலமந் திரத்தைகேளீர்
தோறாமல் பிரணவத்தை தொகை கூர்வேனே. 7

கூறவே பிரணவங்கள் சாசாசா
குறிப்பான பதினாறு வீடேயாகும்
மாறேவ லக்கமதைக் கணக்கதாக்கும்
மகத்தான வீடனைத்தும் லக்கங்கூறி
தேறவே யொன்றுதள்ளிப் பதினாறாக்கி
செப்பமுடன் கணக்கோடு மாறலாக்கி
மீறவே லக்கமதை மாறுங்காலம்
வித்தகனே சதுர்முகமும் மாறலன்றே. 8

அன்றான லக்கமதை மாறும்போது
அப்பனே லக்கமது குறைவுமாகா
குன்றான லக்கமது வதிகமாகா
குருபரனே பதினாறு வீடனைத்தும்
தென்றிடவே மாறுதலாய்ப் பார்த்தாயானால்
தேசத்தில் மானிடர்கள் மயங்குவார்கள்
வென்றிடவே பிரணவத்தை மாறுங்காலம்
வித்தகனே நீயுமொரு சித்தனாச்சே. 9

| | | | |
|---|---|---|---|
| 8 | 1 | 30 | 19 |
| 11 | 29 | 4 | 5 |
| 2 | 7 | 9 | 31 |
| 28 | 12 | 6 | 3 |

ஒத்தைலக்க மாறல் அறுசீர்

கூறுவேன் முதலாம் வீட்டில்
குறிப்புடன் யெட்டேயாகும்
மாறுவே னிரண்டாம் வீட்டில்
மன்னவா வொன்றேயாகும்

தேறுவேன் நான்கான் வீட்டில்
தெளிவுடன் தசமே யாகும்
ஆறுவே னைந்தாம் வீட்டில்
அப்பனே பதினொன் றாமே. 10

ஒன்றுமே யேழாம் வீட்டில்
உத்ததோர் நான்கே யாகும்
சென்றுமே யெட்டாம் வீட்டில்
சிறப்புட னைந்தே யாகும்
கொன்றுமே நவமாம் வீட்டில்
குறிப்புட னிரண்டே யாகும்
வென்றிட பத்தாம் வீட்டில்
விளம்பினேன் சத்த மாமே. 11

சத்தமாம் பதினொன் றப்பா
சார்புட னொன்ப தாகும்
சுத்தமாம் பதினான் கப்பா
சுந்தரா பனிரெண் டாகும்
வித்தகா பதினைந் தப்பா
விளம்புவே னாற தாகும்
கத்தனே சோட சத்தில்
கருதுவேன் மூன்ற தாமே. 12

## அட்டாங்க மந்திரம்

மூன்றான யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
மூதுலகோர் தானறிய முதன்மை யோனே
தான்றான அட்டாங்க யோகந் தன்னை
தகைமையுடன் சாற்றுகிறேன் பிரணவத்தை
மான்றான யோகநிலை நிற்கும் போது
மன்னவனே நடுமையம் பதிவுகண்டு
ஆன்றான கும்பகத்தி லடங்கி நின்று
அப்பனே சிம்பகத்தி லடவுகொள்ளே. 13

கொள்ளவே யோகமது வடையுங்காலம்
கொற்றவனே பிரணவத்தை யுச்சாடித்தால்
விள்ளவே கலைநிதியு மாறலாகி
வித்தகனே கபால மதி லயித்து மல்லோ
துள்ளவே கபாடமது வாசல் காணும்
துறையான கும்பகத்தி லடக்கங் கொள்ளும்
மெள்ளவே வாசியது கீழ்நோக் காகும்
மேன்மையுடன் சதாசிவத்தைக் காணலாமே. 14

காணலாம் பரவெளியைக் காணலாகும்
கைலாச நாதருமே கண்ணிற் றோன்றும்
பூணவே பரவெளியைக் கண்டபோதே
புவியெல்லா முந்தமக்குத் துரோணமாகும்
வேணபதி காயாதி கொண்டுமல்லோ
வேதாந்தத் தாயாரின் விளக்கங் காண்பாய்
மாணமருங் கமழ்சூழ்ந்த யடவிதானும்
மன்னவனே வெளிகாடாய்க் காணலாச்சே. 15

ஆமேதான் அடவியது கண்டபோது
அப்பனே ஞானவெளி யலட்சியந்தான்
நாமேதான் சொன்னபடி நடந்தோர்க் கெல்லாம்
நாட்டினிலே சித்தியது யடையலாகும்
போமேதான் குருவருளின் கடாட்சந் தோன்றும்
பொலிவான பேரின்ப மடையலாகும்
வேமேதான் ஞானமென்ற மோட்சவீடு
விண்ணுலகி லுந்தமக்கு வாய்க்குந்தானே. 16

## லாடசங்கிலி வசியம்

தானான யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
தயவுள்ள புலஸ்தியனே தம்பிரானே
கோனான குருவருளா லெந்தனாதர்
கொற்றவனா ரெந்தமக்கு யுபதேசித்த
பானான வசுவனியார் யெந்தன்தேவர்
பட்சமுட னடியேனுக் கிரக்கம்பூண்ட
மானான மந்திரத்தை யுந்தமக்கு
மன்னவனே யுபதேசஞ் செய்வேன் பாரே. 17

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாருலக சித்தாதி நாதர் தாமும்
சீரப்பா யுலகுபதி மானிடற்கு
சிற்பரனே தான்மறைத்தார் கருவுமாற்கம்
வேரப்பா கருவிகர ணாதியந்தம்
வித்தகனே யுந்தமக்கா யோதலாச்சு
ஏரப்பா பிரணவத்தை மாறுமாற்க
மெழிலுடனே பூட்டுவகை யுரைக்கக் கேளே. 18

கேளப்பா பிரணவங்க ளேதென்றாக்கால்
கேண்மைகொண்ட பீசமது கூர்மைசொல்வேன்
ஆளப்பா லாடனுட வசியங் கேண்மோ
அப்பனே டிங்டிங்டிங் டிங்கென்றோது
மீளப்பா ராராரா ரீரீரீ யென்றோது
வித்தகனே பிரணவத்தை மாறலாக்கி
சூளப்பா மாயிரமா முருவேபோடு
சுந்தரனே லாடனவன் வசியங்காணே. 19

காணவே வாடனவன் வசியமானால்
கருவான பூதமெல்லாங் கலங்கியாடும்
தோணவே யறுபத்து நான்குசித்தும்
தோராமல் வையகத்தில் நாட்டலாகும்
வேணதொரு வட்டாங்க சோடசந்தான்
விருப்பமுடன் மாறுதலுக் கையமுண்டோ
நீணவே யுலகுபதி ராசமன்னர்
நிஷ்டாங்க யோகமதை விரும்புவாரே. 20

## சுப்பிரமணியர் வசியம்

வாறான யின்னமொரு மர்மங்கூர்வேன்
வளம்பெரிய நாதாக்கள் கூறவில்லை
கூறான சிவசுப்பிர மணியர் தாமும்
குறிப்புடனே காணுதற்கு மார்கங் கேண்மோ
தாக்கான பிரணவங்க ளேதென் றாக்கால்
தாக்கான வசியமென்ற வட்சரந்தான்
மானான வட்சரமோ ரிங்ரிங்ரிங்
மகத்தான பீசமது சாசாசாவே. 21

சாவென்ற வட்சரந்தான் சர்வபீடம்
சதுரான பீசமது ஹஹஹஹ
கோவென்ற பிரணவங்கள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ
கொற்றவனே பீசமது கம்கம்கம்
ஆமென்ற பிரணவங்கள் அரிஅரிஅரி
அப்பனே பீசமது வாவாவா
நாவென்ற பிரணவங்கள் தும்தும்தும்
நாயகனே பீசமது சவ்வுமாமே. 22

சவ்வான இவ்வெழுத்தைக் கலையில்மாறி
சட்டமுடன் நவ்வெழுத்தைத் தலையில்தாக்கு
மவ்வான பீசமது விண்ணிற்றாக்கு
மகாதேவா குறிப்புடனே யங்கென்றோது
தவ்வான பிரணவத்தை தாக்கிப்பாரு
சதுரான யிடகலையில் பின்கலையால் மாறி
முவ்வான பீசமதை முனைநிறுத்தி
மூஷிகனே கனலேறு நிலையில்நில்லே. 23

நின்றிடவே சண்முகத்தை நிலைநிறுத்தி
நிஷ்களங்க செபமாலை கையிற்பூண்டு
வென்றிடவே வெண்ணீறு தாமெடுத்து
வெத்திபெற லலடாமதில் தளமேயிட்டு
சென்றிடவே சிரமகுடம் தான்குனிந்து
செங்கமலக் கண்ணானே திலதம்பூண்டு
நின்றிடவே யொருகாலிற் றவமிருந்து
நிட்டையிலே தாமிருந்து வினையங் கொள்ளே. 24

## சுப்பிரமணியர் மகத்துவம்

கொள்ளவே லட்சமது யுருவேகொள்ளு
கொற்றவனே மனோன்மணியா னருளினாலே
விள்ளவே சமுதாயங் கொண்டபோது
வித்தகனே வறுமுகனும் வந்துநிற்பார்
தெள்ளமிர்த ஞானமென்ற பானங்கொள்வார்
தெகிட்டாத சிவக்கடலே தேனுமீவார்
உள்ளதொரு கருவிகர ணாதியந்தம்
உத்தமனே உந்தமக்குக் காணலாமே. 25

காணலாம் சுடரொளி சோதிகாண்பாய்
சைலாச புலஸ்தியனே கருவுள்ளானே
தோணவே செகசோதி கண்ணிற் றோன்றும்
சுடர்மதியி லுந்தமக்கு தோற்றலாகும்
மாணதொரு வறுமுகனு முன்னே நிற்பார்
மன்னவனே சுடர்பூண்ட வருளுங் காண்பாய்
ஆணவங்கள் தானொடுங்கி யன்புள்ளானே
அபயமென்று யவர்பாதம் பணிவீர் தாமே. 26

தாமேதான் செகசோதி கண்டபோது
தண்மையுட னம்பாளும் நிர்த்தஞ் செய்வாள்
நாமேதான் சொன்னபடி தாயார்தாமும்
நற்கமலம் வீற்றிருக்கு மம்பாள் பீடம்
வேமேதான் சூடாமணியே விண்ணுள்ளாற்கு
வெற்றியுடன் காட்சிதரும் விமலராணை
ஆமேதா னசுவனியா ராணைகொண்டேன்
அப்பனே சத்தியமா மழிவுமாச்சே. 27

## மகாவிஷ்ணு வசியச் சக்கரப் பிரணவம்

ஆச்சப்பா யின்னமொரு வதீதங் கூர்வேன்
அப்பனே அருட்கடலே யறிவுள்ளானே
மூச்சடங்கி யெனதைய ரசுவனியாந் தேவர்
மூதுலகி விருந்ததொரு காலந்தன்னில்
மாச்சலுடன் தென்பொதிகை யிருந்தேன்யானு
மகதேவ ரெனதையர் சொன்னநீதி
பாச்சலுடன் யானுமல்லோ யோகம் பூண்டு
பாலகனே யானிருந்த மகிமைகேளே. 28

கேளப்பா தவயோகம் பூணுங்காலம்
கெவனமுடன் காயாதி கொண்டபோது
ஆளப்பா தென்பொதிகை வந்தாரையா
அப்பனே யானிருந்த யோகந்தன்னை
மீளப்பா கொள்வதற்கு வடியேன்மீது
வித்தகனே யென்முன்னே நிற்கக்கண்டேன்
சூளப்பா சகலமுனி நாதர்கூட்டம்
சுந்தரனே தாமிருக்க யெனைக்கண்டாரே. 29

கண்டதொரு வசுவனியார் தேவர்பாதம்
காவலனே யான்கண்டு களிப்புண்டாகி
தொண்டுமிகச் செய்வதற்கு வடியோன்றானும்
தொல்லுலகை யான்மறந்து துய்யபாலா
அண்டர்முனி சித்தாதி நாதர்காண
வடியேனுந் தவநிலையை விட்டேயேகி
துண்டரிக மாகவேதான் நிஷ்டைநீங்கி
துப்புரவா வர்பாதந் தொழுதிட்டேனே. 30

இட்டேனே யசுவனியார் பாதங்கண்டேன்
யெழிலான யென்குருவே தேவரென்றேன்
சுட்டமுடன் யவர்பாதந் தலைகுனிந்தேன்
சாஷ்டாங்க முடிபுனைந்தேன் சரணம்பூண்டேன்
திட்டமுட னடியேன்மேல் கிருபைகொண்டு
தீர்க்கமுடன் யெந்தனையு மாசிர்மித்து
விட்டகுறை தனைநீக்கி வினையம்பூண்டு
வேதாந்தத் தாயருளுங் கொண்டார்பாரே. 31

## திருமா லுபதேச மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகர்ந்திட்டார் திருமாலின் பிரணவத்தை
சிரப்பா மாலினிட பிரணவங்கள்
சிற்பரனே ஸ்ரீஓம் பிரணபாதா
கூரப்பா குண்டலியாம் ஸ்ரீஓங்காரா
குருபரனே ஸ்ரீபாதா ஸ்ரீஓங்காரா
நேரப்பா ஹரிநாராயண சங்கத்பாதா
நெடிமாலா தூமவேதா நிமிபரணி. 32

பரணியாம் பத்மநாபா வைகுண்டவாசா
பாங்கான ஹரிகிருஷ்ணா பதாம்புசியானா
தரணியாம் மும்மூர்த்தி பிரணபாதா
தகைமையுள்ள சுயரூப நீலவர்ணா
நிரணியாம் சுடரொளியாம் கஞ்சன்மாரா
நிமிஷ வலங்காரானே நித்யப்ரதஷ்டா
முரணியாம் பூலோக நீலாமேகா
மூதண்டப் பிராண கலைமுகிலே வாவே. 33

வாவென்று லட்சமுரு வோதுவோது
வண்மையுள்ள செகசோதி கண்ணிற்றோற்றும்
தாயென்று பிரணவத்தை யோதும்போது
தளம்பெரிய கருடனவன் கண்ணிற் றோற்றும்
வாவென்று பீஜமதை யுருவே கொள்ள
வாகுடனே சங்குசக்கரமுந் தோற்றும்
வாவென்ன திருமாலு முன்னே நிற்பார்
வதனமுடன் திருமாலைப் பணிகுவீரே. 34

## பாண்டவாள் பிரணவ மந்திரம்

பணியவே பஞ்சவர் கள்வசியங் காண
பாலகனே பகருகிறேன் பண்புள்ளானே
துணிவுடனே யிந்திரமாம் பிரஸ்தந் தன்னில்
தூய்மையுட னசுவனியார் சென்றகாலம்
அணியணியா யாசிர்மந் தன்னைக் கண்டார்
அப்பனே பஞ்சவரின் சேர்வைக்கண்டார்
மணியான பஞ்சவர் பத்மாசனத்தை
மகாதேவர் கண்டல்லோ கனங்கொண்டாரே. 35

கொண்டாரே பாண்டவரின் வசியமாற்கம்
கொற்றவனார் பிரணவத்தை யுச்சரித்தார்
தண்டவனம் சென்றதொரு யைவர்தாமும்
தகைமையுடன் பூசைமுகம் நிற்கக்கண்டார்
புண்டரிக மானதொரு கிருஷ்ணரூபம்
புதுமையுடன் தான்வந்து கூடிநிற்க
கண்டாரே மந்திர வுச்சாடனத்நால்
காவனத்தே யவர்சேவை தோற்றலாச்சே. 36

ஆச்சப்பா புலஸ்தியனே அன்புள்ளானே
அவர்கொண்ட யுபதேசம் யானுங் கொண்டேன்
மூச்சப்பா யுபதேச மேதென்றாக்கால்
முனையான பஞ்சவரின் பிரணவந்தான்
பாச்சலுடன் பீஜமது கூறுவேன் யான்
பாலகனே பஞ்சபூதா பஞ்சகிகா
மாச்சலது கொள்ளாத சத்தியருபா
மகாபஞ்ச மேருவேவா வென்றோதே. 37

ஓதயிலே பீஜமது யேதென்றாக்கால்
உத்தமனே கியானபஞ்ச ரீரீரீ
தோதமுட்ன் தருமவன்னா தயாளாபூபா
தோராத தனஞ்செயனே தாதாதாதா
கிதமுள்ள பீமரிஷ சினமேநீ
கீர்த்தியுள்ள சகாதேவா ருத்ரபாலா
நீதமுள்ள பிரணவமாம் டுடுடு
நிஷ்களங்க மானதொரு நகுலாவென்றோதே. 38

ஓதியே லட்சமுரு வோதும்போது
உத்தமனே பஞ்சவர்க ளைவருந்தான்
ஆதியென்னு மருட்கடலாம் கிருஷ்ணபாலன்
அப்பனே யைவருடன் வருகக்காண்பீர்
சோதியென்னும் பிரகாச யொளியே தோற்றும்
சுந்தரனே யுன்கண்ணின் முன்னேநிற்பார்
பாதிமதி சடையணிந்த தம்பிரான்மேல்
பகர்ந்திட்டே னாணைகண்டீர் பகர்ந்திட்டேனே.39

## இலக்கமாறல்

## சக்கர கிரகம் நீங்க மந்திரம் 24

இட்டேனே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
எழிலான புலஸ்தியனே யெழில்மாராகேள்
திட்டமுட னிருபத்து நான்குலக்கம்
தீர்க்கமுடன் பதினாறு வீட்டுக்குள்ளே
சட்டமுடன் லக்கமதைத் தானடைத்து
சதுராக யீயமென்ற தகட்டிற்கீறி
பட்டயம்போல் சூலமிட்டு வீடடைத்துப்
பாலகனே சோடசமாம் பூசைகொள்ளே. 40

கொள்ளவே நவகிரக பூசைகொண்டு
கொற்றவனே குளிசமது தானேயாடி
விள்ளவே தங்கமென்ற குழாவினுள்ளே
வித்தகனே தானடைத்து வணிந்துகொண்டால்
தெள்ளமிர்த மானதொரு குளிசத்தாலே
தேற்றமுடன் கிரகமது நீங்கும்பாரு
உள்ளபடி யசுவனியார் சொன்னநீதி
யுத்தமனே தப்பாது தப்பாதன்றே. 41

### இலக்கசக்கர மாறல் பிரசவமாக 32

அன்றான யின்னமொரு போக்கு கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே அன்புள்ளானே
குன்றான வீடதுதா னேதென்றாக்கால்
கொற்றவனே யைந்துவரை நேரேகீறி
தென்றிசையா வைந்து வரை குறுக்கேகீறி
தேற்றமுடன் சூலமது தானும்போடு
வென்றிடவே பதினாறு வீடதாச்சு
விருப்பமுடன் வீடடைக்க லக்கங்கேளே. 42

கேளப்பா லக்கமது யேதென்றாக்கால்
கெவனமுடன் முப்பத்தி ரண்டேயாகும்
பாளப்பா போகாமல் வீடனைத்தும்
பக்குவமாய் தானடைத்து செப்பக்கேளு
பாளப்பா பஞ்சலோகத் தகட்டினுள்ளே
பாலகனே தானடைத்து குளிசமாடி
ஆளப்பா லட்சமுரு போட்டாயானால்
அப்பனே பிரசவமு மாகுந்தானே. 43

### இலக்க சக்கரம் தேள் கடிக்கி 40

தானான யின்னமொரு தண்மைகேளு
தகைமையுள்ள புலஸ்தியனே தம்பிரானே
கோனான சக்கரமாம் நாற்பதாகும்
குறிப்பான வீடதுதான் பதினாறாகும்
தேனான குறுக்குவரை வைந்தேயாகும்
தேற்றமுள்ள நெடுக்குவரை யைந்தேயாகும்
பானான வீடதுவும் பதினாறாச்சு
பாலகனே வீடடைக்க லக்கங்கேளே. 44

கேளப்பா லக்கமது நாற்பதாகும்
கெடியான லக்கமதை செம்பில் மாட்டு
தாளப்பா செம்பென்ற தகட்டிலப்பா
தண்மையுடன் றான்மாறி யடைத்துந்தீரு
கேளப்பா நேராமல் குமுதவானே
குறிப்புடனே தானமைத்து லக்கம்போடு
தேளப்பா கொட்டியதோர் பான்மை யொப்பாய்
தேற்றமுள்ள வலியதுவும் நீங்கும்பாரே. 45

பாரப்பா லட்சமுரு வோதுவோது
பாலகனே காக்கையென்ற வலிதாநீங்கும்
நேரப்பா தகடதுவை குளிசமாடி
நேர்மையுடன் அமாவாசை பர்வந்தன்னில்
கூரப்பா நவக்கிரக பூசைமார்க்கம்
குருபரனே பரதேசி ஜங்கமற்கு
நீரப்பா திருவெண்ணீர் தானளித்து
நிர்மலமாய் சோடசமாம் பூசை கொள்ளே. 46

கொண்டபின்பு சங்கமற்கு வன்னமீய்ந்து
குருகாணி செம்பொன்னுந் தானளித்து
அண்டர் முனி சித்தர்பதம் தாள்பணிந்து
அப்பனே யவர்பாதந் தொழுதிறங்கி
தெண்டமுட னுபசார வினயங் கொண்டு
தேராமலு பதேசந் தானடைந்து
சண்டமா ருதம்போல குளிசந்தன்னை
தகைமை யுடன் சீஷவர்க்கந் தன் நீலேயே. 47

## இலக்க சக்கரம் போட 64

ஈயவே யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
யெழிலான புலஸ்தியனே யெழின்மாராகேள்
தூயவே லக்கமது யேதென்றாக்கால்
துப்புரவா யறுபத்து நான்கேயாகும்
பாயவே வீடடைக்க வுபாயங் கேளீர்
பாண்மையுட வைந்துவரை நேரேகீறு
ஆயவே னயந்துவரை குறுக்கே கீறு
அப்பனே சோடசமாம் வீடதாச்சே. 48

ஆச்சப்பா பதினாறு வீட்டுக்குள்ளே
அப்பனே லக்னமதை மாறலாக்கு
மூச்சடங்கி தானிருந்து மூர்க்கம்நீங்கி
முதன்மையுடன் தங்கமென்ற தகட்டிலப்பா
பேச்சறியா மௌனமென்ற நிலையினோடு
பேசவொண்ணா லக்கமதை மாறல் செய்து
ஏச்சலில்லா குளிசமது தானுமாட்டி
என்மகனே பிரணவந்தான் லட்சமோதே. 49

ஓதயிலே வேதாளம் பேய்தானங்கே
வுத்தமனே லாடமென்ற பிரமராசி
நீதமுடன் சக்கரமாம் நிலைமுன்னாக
நின்றுமல்லோ விளையாடி வார்த்தை கூறும்
தோதமுடன் வீடுவிட்டு காடேசெல்லும்
தோராக பிரணவத்தை மாறல்பேசும்
நாதமென்ற வாக்கியமு மிகவே கேட்டு
நடனமுடன் பேயாட்ட மாடுந்தானே. 50

தானான லட்சமது வுருவேபோடு
தாக்கான வுருவதனால் சகலபூதம்
தேனான மனோன்மணியா ளருளினாலே
தேற்றமுட னுந் நமக்கு யெல்லாஞ்சித்தி
பானான பராபரியை மனதிலுன்னி
பாலிப்பாய் என்னாளும் நிர்த்தஞ் செய்வாள்
மானான மகதேவ ரருளுண்டாகு
மன்னவனே நீயுமொரு சித்தனாச்சே. 51

## இலக்க சக்கரம் குழந்தையுண்டாக 80

ஆச்சப்பா யின்னமொரு உதாசினங்கள்
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
மாச்சலுடன் பிரணவமாஞ் சக்கரத்தை
மாறுகிற விதங்கேளு மகிமைவானே
பாச்சலுடன் வைந்துவரை நெடுக்கே கீறி
பாங்குடனே வைந்துவரை குறுக்கே கீறே
ஏச்சலில்லா சோடசமாம் பிரணவத்தை
யெழிலுடனே வரைதோறும் சூலம்போடே. 52

போடப்பா யெட்டுபத்து லக்கந்தன்னை
பொலிவுடனே சோடசமா மாளிக்குள்ளே
நாடப்பா தானடைத்து நளினவானே
நலம் பெறவே லட்சமது வுருவே கொண்டால்
நீடப்பா கைவிலக்க மாகியல்லோ
நீடாழி யுலகுபதி மங்கையற்கு
ஆடப்பா கெற்பமது தானுண்டாகி
அப்பனே மதலைக்கு இடமுண்டாமே. 53

## நினைத்த காரியஞ் சித்தியாகும் மந்திரம் 150

உண்டாமே யின்னமொரு மகிமை சொல்வேன்
வுத்தமனே வுதார மாரா பாலா
அண்டமதில் நாதாக்கள் சித்தர் கூட்டம்
அப்பனே கூறாத மகிமையெல்லாம்
கண்டவர்கள் பார்த்தவர்கள் யாரும்வேண்டி
களிப்புடனே யறிவதற்கு யிந்தபாகம்
தொண்டு செய்து பெற்றேனே துய்யபாலா
துப்புரவா யுந்தமக்கு யோதலாச்சே. 54

ஆச்சப்பா பிரணவமா மேதென்றாக்கால்
அப்பனே யைந்துவரை குறுக்கே கிறி
மாச்சலுடன் யைந்துவரை நெடுக்கேகிறி
மகதேவா சோடசமாம் வீடதாச்சு
ஓச்சலில்லா பதினாறு வீட்டுக்குள்ளே
வுத்தமனே நூற்றியன்பது வேயாகும்
பாச்சலுடன் லக்கமதை மாறிக் கொண்டால்
பாலகனே பதினாறு வீடுமொன்றே. 55

ஒன்றான வீடனைத்து மாறுங்காலம்
ஓகோகோ யெப்பாதை மூலையாவும்
தென்றிசையா யொவ்வொன்றுஞ் சரியாய்க்காணும்
தேற்றமுடன் குறையதுவும் வாராதப்பா
வென்றிடவே லக்கமதை லட்சமோது
வேதாந்தத் தாயருளால் யெல்லாஞ்சித்தி
குன்றாது யொவ்வொன்றுங் குறையாதப்பா
குருபரனே சித்தர்கள்தான் மறைத்தவாறே. 55

வாறான மிடியதுவும் நீங்கிப் போகும்
வகுத்தபிரான் திருவருளால் யெல்லாஞ் சித்தி
கூறான வட்டசெல்வங் குறையாதப்பா
குபேரனா யென்னாளுங் கீர்த்தி கொள்வாய்
தாறான பிரணவமோ ரீங்காரந்தான்
தகைமையுடன் மாறலது மிகவே கொள்வாய்
மாறான சக்கரமோ மகிமைமெத்த
மகாதேவா புண்ணியற்கு வாய்க்குந்தானே, 87

## இலக்க மாறல் 108 — ருத்திரன் வசியம்

தானான யின்னமொரு தன்மை கூர்வேன்
　　தயவுள்ள புலஸ்தியனே தருமபாலா
கோனான யெனதையர் சொன்னநீதி
　　கொற்றவனே யாமுனக்கு வுரைக்கலாச்சு
தேனான சக்கரமா மேதென்றாக்கால்
　　தெளிவுடனே செப்புகிறேன் தேசத்தோற்கு
மானான யைந்துவரை குறுக்கே கீறி
　　மாதவனே யைந்துவரை நெடுக்கே கீறே 58

கீரப்பா பதினாறு வீடதாகும்
　　கீர்த்தியுள்ள பிரகாச மானபூபா
மாரப்பா லக்கமதை மாறுமார்க்க
　　மன்னவனே யானுரைப்பேன் மகிமைவானே
தேரப்பா லக்கமது நூற்றெட்டாகும்
　　தேற்றமுடன் வழியோடும் மாறுமாறு
சீரப்பா கொள்ளாதே தேவிமார்க்கந்
　　தெளிவுடனே மாறுதலே சித்தியாமே. 59

சித்தியாம் ருத்திரனும் வசியமாவான்
　　சிற்பரனே கேட்டதெல்லா முனக்கே யீவான்
முத்தியது யுனக்குண்டா மகிமையுண்டா
　　மூர்க்கமில்ஸல வாழ்வுண்டா மாயுளுண்டாம்
வெத்தியாம் வாழ்நாளு மிகவுண்டாகும்
　　வேதாந்தத் தாயாரி னருளுண்டாகும்
எத்திசையுங் கீர்த்தியுண்டா முந்தமக்கு
　　யெந்நாளும் நற்பதவி கிட்டும்பாரே. 60

## இலக்க மாறல் 2150 சண்டாள பூத மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
　　பாடுகிறேன் மாணாக்கள் பிழைக்க வேண்டி
நேரப்பா யைந்துவரை குறுக்கே கீறி
　　நேர்மையுடன் யைந்துவரை நெடுக்கேகீறி
தீரப்பா சோடசமாம் பதினாறாச்சு
　　சிறப்புடனே பிரணவமா மேதென்றாக்கால்
சீரப்பா லக்கமது யிருநூறாகும்
　　சிற்பரனே சொச்சமது வன்பதாமே. 61

அஃபான லக்கமதை சோடசத்தில்
அப்பனே தானடைத்து மாறுங்காலம்
வன்மையுடன் சதுர்கோணம் நாற்பாகந்தான்
வளமையுடன் மாறிடவே குறையாதொன்றும்
நன்மையாம் லட்சமுரு வோதுங்காகம்
நாயகனே சண்டாள பூதந்தானும்
தென்றிசையா மாடிவிட்டு காடே செல்லும்
தேற்றமுடன் சக்கரத்தை மாறுமாறே. 62

மாறிடவே புலஸ்தியனே மச்சகேந்திரா
மகத்தான பூதமெல்லாஞ் சக்கரத்தில்
தேறிடவே விதிபாடு கண்டறிந்தால்
தேற்றமுடன் சகலசித்து மாடலாகும்
கோறிடவே பிரணவத்தி னளவுகண்டு
பேரின்பப் படிதனையே காணலாகும்
கூறிடவே மாந்திரீக காவியந்தான்
கொற்றவனே மானிடர்க்கு யுரைக்கலாச்சே. 63

## இலக்கமாறல் 500 மசான பூத மந்திரம்

ஆச்சப்பா யின்னமொரு யருமை கூர்வேன்
அப்பனே பிரணவமா மந்திரந்தான்
மூச்சுடனே யெனதைய ரசுவனியாந் தேவர்
முதன்மையுடன் யெந்தமக்கு யுபதேசித்த
மாச்சலில்லா சக்கரந்தா னதீதமார்க்கம்
மன்னவனே யைந்துவரை நேரேகீறி
பாச்சலுடன் யைந்துவரை குறுக்கே கீறி
பாலகனே சோடசமாம் பதினாறாக்கே. 64

ஆக்கவே வீடதனில் லக்கமாறு
அருண்மைந்தா வன்னூறு லக்கமப்பா
நீக்கவே லக்கமது சதுரநான்கும்
நீதியுடன் சதுர்பாக மாறினாலும்
நோக்கவே லக்கமது சரியாய்த் தோன்றும்
நுட்பமுடன் பிரணவந்தா னிதிலடக்கம்
ஊக்கமுடன் பீஜமது யிதிலேதோயும்
வுத்தமனே லட்சமுரு வோதுவோதே. 65

ஓதவே பீஜமது வோதும்போது
வுத்தமனே மசானமென்ற பூதந்தானும்
வாதமிகக் கூறியல்லோ விகடம்பேசி
வலுமையுடன் வீடுவிட்டு காடேசெல்லும்
தூதுடனே தர்க்கமிகக் கூறியல்லோ
துப்புரவாய் யெதிர்நின்று மாறுகூறி
தேறிடவே தேசம்விட்டு தேசஞ்செல்லும்
தேவிமனோன் மணியாளின் சாட்சிகானே 66

## தூமாதேவி சக்கரமந்திரம் 100

காணவே யின்னமொரு கருமானங்கேள்
காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
தோணவே மந்திரமா மேதென்றாக்கால்
தோறாத வைந்துவரை நேரேகீறி
மாணவே வைந்துவரை குறுக்கேகீறி
மகாதேவர் சூலமிட்ட வினயங்கேண்மோ
நாணவே லக்கமதை நூறேபோடு
நலமான பிரணவத்தை யடக்கிமாறே, 67

அடக்கியே லக்கமதை சதமதாக
அன்புடனே யுள்ளடக்கி மாறுமாறு
முடக்கமில்லா மாளிதன்னில் மாறுங்காலம்
முயன்றிடவே சதுர்பாகம் சரியாய்த்தோன்றும்
நடக்கவே லட்சமது வுருவேபோடு
நானிலத்தில் தூமாதா தேவிதானும்
ஓடுக்கமுடன் வீடுவிட்டு காடேசெல்லும்
ஓகோகோ நாதாக்கள் மறைத்தவாரே. 68

## இலக்க சக்கரத்துக்கு மாறல்80

மறப்பான புலஸ்தியனே மதிவல்லோய்கேள்
மகாதேவா அருண்மாறா வதிகாராகேள்
திறப்புடைய சக்கரந்தான் செப்பக்கேண்மோ
தீர்க்கமுட னைந்துவரை நேரேகீறி
சிறப்புடனே யைந்துவரை குறுக்கேகீறி
சிற்பரனே வீடனைத்தும் லக்கமாறு
இறப்பதுவும் நேராமல் யீசன்றன்னை
எழிலுடனே யெண்பதிற் கூட்டுகூட்டே. 69

கூட்டவே பிரணவத்தை மாறும்போது
சூரான காளியது பிரண்டேபோகும்
தாட்டிகமாய் மந்திரவுச் சாடனத்தால்
சாங்கமுடன் காளியது திமில்கண்டேகி
மாட்டியமாய் வீடுவிட்டிக் காடேசெல்லும்
மன்னவனே யுந்தனக்கு யெல்லாஞ்சித்தி
சூட்டினேன் மாந்திரீக காவியத்திலப்பா
சுருதிபொரு ளாதியந்தம் சூட்டக்கேளே. 70

## இலக்கசக்கர மாறல்பூதம்86

கேளப்பா புலஸ்தியனே புண்ணியபாலா
கெவனமுட னெந்திரந்தான் சூட்டக்கேளீர்
பாளப்பா போகாமல் காவியந்தான்
பாடுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
தாளப்பா பூதமது யேகுதற்கு
தன்மையுடன் மாந்திரீகஞ் சாற்றக்கேண்மோ
நாளப்பா போகாமல் நளினவானே
நவிலுகிறேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. 71

தானான பிரணவங்க ளேதென்றாக்கால்
தண்மையுடன் சாற்றுகிறேன் தகைமையோனே
தேனான வைந்துவரை குறுக்கேகீறி
தெளிவான வைந்துவரை நெடுக்கேகீறி
பானான வீடதுவும் பதினாறாக்கி
பாலகனே வரைதோறும் சூலம்போடு
கோனான லக்கமது யெண்பத்தாறு
கொற்றவனே குருபீஜந் தன்னைமாறே. 72

மாறப்பா பீஜமது லட்சமோது
மகாதேவர் பூதமது காடேபோகும்
கூறப்பா சுந்தரனே யோதும்போது
குருபரனே வீடுவிட்டு காடேசெல்லும்
ஆறப்பா பிரணவந்தான் யெல்லாஞ்சித்தி
அப்பனே விதியிருந்தால் கிட்டும்பாரு
தூரப்பா சொல்லாத காவியத்தை
துப்புரவாய் கூறுதற்கு மோட்சங்காணே. 73

## இலக்கமாறல் காட்டேரிமந்திரம் 200

காணவே யின்னமொரு கருமானங்கேள்
கசடகன்ற மச்சகேந்திரா கவிவல்லோனே
பூணவே யைந்துவரை நெடுக்கேகிறி
புகழாக வைந்துவரை குறுக்கேகிறி
மாணவே பதினாறு மாளியாச்சு
மருவியே வரைதோறுஞ் சூலம்போடு
வேணவே யிருநூறு லக்கமய்யா
வித்தகனே மாறிடவே யுவமைகேளே. 74

கேளப்பா பிரணவத்தால் காட்டேரிதானும்
கெடியான துஷ்டதேவதை தானப்பா
ஆளப்பா யடவிவனக் காத்தான் தானு
மப்பனே வீடுவிட்டுக் காடேயேகும்
தாளப்பா மாந்திரீகன் றன்னைத்தானும்
தப்பாமல் கரம்வைத்து யேவல்காட்டும்
சூளப்பா பிரணவத்தை மாறலாக்கும்
சுந்தரனே கல்லெறியுங் காட்டேரிதானே. 75

## மலக்குட்டி மந்திர சக்கரம்42

தானான புலஸ்தியனே தகமையோனே
தயாபரனே யிங்கிதனே தருமசீலா
கோனான யெனதைய ரசுவனியாந் தேவர்
கொற்றவனா ருபதேசங் கொண்டகாதை
மானான மகதேவா யுந்தமக்காய்
மன்னவனே யோதுகிறேன் மகிமைமெத்த
தேனான மனோன்மணியாள் கிருபையாலும்
தேசொளிவின் சின்மயத்தா லோதலாச்சே. 76

ஆச்சப்பா மலக்குட்டி சக்கரந்தான்
அப்பனே கூறுகிறே னன்புள்ளானே
மாச்சலில்லா வைந்துவரை நேரேகீறி
மகதேவா வைந்துவரை குறுக்கேகீறி
மூச்சுடனே சூலமது தானும்போடு
முயற்சியுள்ள மாளியது பதினாறாச்சு
ஏச்சலில்லா லக்கமது நாற்பத்திரெண்டு
யெழிலுடனே போடுவது திண்ணந்தானே. 77

திண்ணமாம் பிரணவத்தை மாறும்போது
 தீக்கமுள்ள சதுர்நான்கு சரியாய்க்காட்டும்
வண்ணமுடன் அட்சரத்தை யோதும்போதும்
 மகத்தான லக்கமது பீஜமப்பா
கண்ணபிரான் ஜெபமாலை கையிலேந்தி
 காவலனே வுருவதுவு மாயிரந்தான்
பண்ணவே பூசைமுகம் புரிந்தாலப்பா
 பாலகனே மலக்குட்டி வசியம்பாரே. 78

வசியமா மெதுகேட்கில் புலஸ்தியாகேள்
 வாண்மையுடன் தான்கொடுக்கும் வதீதமெத்த
நிதிதென்ற வெம்பொருளுங் கண்ணிற்காண்பாய்
 நிர்மலவாய்க் கூச்சலது மிகவேகாட்டும்
கசிதமுடன் பூசைமுகம் யெதுவைத்தாலும்
 காவலனே யுள்ளருந்தும் கண்ணிற்றோன்றா
விசிதமுடன் லோகத்தார் மயங்குவார்கள்
 வித்தகனே மாந்திரீக காவியந்தானாச்சே. 79

## பிடாரிமந்திரம் 160

ஆச்சப்பா புலஸ்தியனே அறிவுள்ளானே
 ஐயனே சிவக்கொழுந்தே கருணைவேளே
மூச்சடங்கி நெடுங்கால மிருந்தசித்து
 முதன்மையுள்ள வசுவனியா ரெந்தனாதர்
பாச்சலுட னெந்தமக்கு யுரைத்தநீதி
 பாலகனே யுந்தயக்காய் ஓதலாச்சு
மாச்சலில்லா காட்டேரி சக்கரந்தான்
 மகிழ்ச்சியுடன் கூறுகிறேன் மன்னாகேளே. 80

மன்னவனே பிடாரியது சக்கரந்தான்
 மானிலத்தில் நாதாக்கள் கூறவில்லை
தென்னவனே யுந்தமக்காய் மனதுவந்து
 தெளிமையுடன் சக்கரத்தை யோதலாச்சு
கன்னவனே யைந்துவரை குறுக்கேகீறி
 காவலனே யைந்துவரை நெடுக்கேகீறி
பன்னவே பதினாறு மாளியாச்சு
 பாலகனே வரைதோறுஞ் சூலம்போடே. 81

போடப்பா லக்கமது நூற்றறுபதாகும்
பொங்கமுடன் சதுர்நான்குஞ் சரியாய்க்காட்டு
பாடப்பா பிரவணமாங் கோசபீசம்
பகரவே மாணாக்கள் பிழைக்கவேண்டி
தேடப்பா ஓங்காரம் நீங்காரந்தான்
தேற்றமுடன் லட்சமுரு வோதுவோது
நாடப்பா கங்குலது விடியுமென்னே
நாடப்பா மேதையின்றன் பொலிதானீயே. 82

ஈயவே பிடாரியற்கு பூசையேத்தி
யெழிலான பூசைக்கு மேதையாகும்
தீயவே பிடாரியற்கு பூசைநைவேத்தியம்
திறமையுள்ள பொலியும் பூசைவேண்டும்
மாயவே பூசைமுகம் கொள்ளவேண்டும்
மகாதேவா மசானமென்று சொல்லவேண்டும்
ஆயவே லோசன துல்லியம்வேண்டும்
அப்பனே கொக்கரிப்பு வேண்டும்பாரே. 83

பாரேதான் பிடாரியர்க்கு தூபதீபம்
பாங்குடனே தான்கொடுக்க வசியமாகும்
நேரேதான் வசியமது கொண்டபோது
நெடிதான வூரிலுள முனிவர்க்கங்கள்
சீரேதான் பிடாரியர்க்கு யஞ்சல்கூறும்
சிற்பரனே மற்றவொரு தெய்வம்யேனோ
கூரேதான் மாந்திரீக காவியத்தில்
கொட்டினே னுளவுகர்மம் பீடந்தானே. 84

## சக்கலா தேவி மந்திரம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
தன்மையுள்ள மாணாக்கள் பிழைக்கவென்று
கோனான யெனதைய ரசுவனியாந் தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்த நீதி
பானான பரஞ்சுடரே திருவிளக்கே
பகருகிறேன் சித்தரெல்லா மறைத்தசேதி
மானான மகாதேவா யுபதேசிப்பேன்
மன்னவனே சமுதாயத்தில் சரியாய் நில்லே. 85

நில்லப்பா வைந்துவரை நேரேகிறி
நீதியுடன் வைந்துவரை குறுக்கேகிறி
சொல்லப்பா பதினாறு மாளியாச்சு
சொற்பெரிய லக்கமது யிருபத்திநான்கு
வெல்லப்பா சதுர்கோண மாறிப்பாரு
வேதாந்தத வித்தானே யென்னகூர்வேன்
மெல்லப்பா வுயிரெழுத்தை மாறிப் போடு
மேன்மையுடன் சக்கலா வசியந்தானே. 86

தானேகேள் வசியமாம் சக்கரத்தால்
சக்கலா தேவி முதல் வசியமாகும்
மானேகேள் வுருவதுவோ லட்சமாகு
மன்னவனே யெதிர்நின்று வார்த்தைகூறும்
தேனேகேள் தென்பொதிகை சிவக் கொழுந்தே
தேர்வேந்தே நவமணியே சுடர் விளக்கே
தானேகேள் சதாசிவமாம் பிரணவத்தை
சாற்றினேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. 87

## சங்கிலி மாடன் வசியச் சக்கரம் 216

காணவே யின்னமொரு கருமாணங்கேள்
காவலனே புலஸ்தியனே மச்சகேந்திரா
பூணவே ரதன்கூடல் பொதிகையப்பா
புகழான நன்னகர மம்பாள்கூடம்
தோணவே துலைதூரம் காடகந்தான்
துறையான பதிமுக மாங் காரந்தான்
நீணவே கல்லால விருட்சமாகும்
நீதியுள்ள மாடனவன் விதி கூர்வேனே. 88

விதியான மாடனவன் சக்கரந்தான்
வீறுடனே யாமுரைப்போம் வினையங்கேண்மோ
பதியான வைந்துவரை குறுக்கே கீறி
பாவலனே யைந்துவரை நெடுக்கே கீறி
மதியோடு மாளியது பதினாறாச்சு
மானிலத்தில் நாதாக்கள் மறைத்த சேதி
துதியோடு சக்கரமா மிருநூறப்பா
துப்புரவாய் பதினாறு யென்னலாச்சே. 89

ஆச்சப்பா பதினாறு மாளிக்குள்ளே
அப்பனே யிருநூற்றிப் பதினாறாகும்
மூச்சுடனே தாமிருந்து பிரணவத்தை
மூதுலகில் மாறுபவன் சித்தன்சித்தன்
மாச்சலில்லா லக்கமதை வுருவோலட்சம்
மகிமையுடன் யாறிடவே மாடனப்பா
பாச்சலுட னுந்தமக்கு வசியமாகும்
பாதாள நிதியனைத்தும் தருகும்பாரே. 90

பாரப்பா மாடனது வசியத்தாலே
பாருலகில் சித்தாதி சித்தரெல்லாம்
நேரப்பா சமுதாய நிலையில்நின்று
நேர்மையுட னஷ்டவித கருமானத்தை
சாரப்பா தவநிலையி லிருந்துக் கொண்டு
சட்டமுடன் வினோதவகை சமுதாயங்கள்
தூரப்பா நேராம லதீதங் கொண்டு
துப்புரவாய் தானடத்தி நிலைகொண்டாரே. 91

கொண்டாரே நாதாந்த ரிஷிகளெல்லாங்
கூட்டமிட்டு சித்துமுனி நாதர்தாமும்
அண்டர்முனி தேவாதி ரிஷிகளோடும்
அம்பரத்தை கையமர்த்தி வதீதங் கொண்டு
தெண்டமுடன் தக்ஷணாநாயன் றன்னை
தெளிவுடனே தன்மனதி லுவந்து கொண்டு
பண்டுளவ சிருஷ்ணமணிப் பிரணவத்தை
பாங்குடனே தான்கூறி வசிகொண்டரே. 92

வசியமா முச்சாடப் பிரணவத்தை
வாகுடனே தாமறிந்து மதியம்பூண்டு
நிசிதமுடன் காயாதி தனையறிந்து
நிஷ்களங்க லக்கமது நினைவாய்க் கொண்டு
கசிதமுடன் ஓங்கார சிகாரமிஞ்சி
காவலனே வையகத்தில் சமாதிபூண்டு
நிசிதமுடன் தனைமறந்து லயித்துநின்று
நீடூழி கோடிவரை யிருந்தார்பாரே. 93

## திருமாளியம்மன் வசியச் சக்கரம் 300

பாரப்பா புலஸ்தியனே தம்பிரானே
பாருலகில் நாதாக்கள் மறைத்ததெல்லாம்
நேரப்பா வெனதைய ரசுவனியாந் தேவர்
நேர்மையுடன் எந்தமக்கு யுறைத்த மாற்கம்
ஆரப்பா யுந்தமக்கு வன்புகூர்ந்து
அப்பனே மகிதுவந்து கூறலாச்சு
தீரப்பா திருவினையே சிவக்கொழுந்தே
தீர்க்கமுடன் சக்கரத்தை செப்பக்கேளே. 94

கேளப்பா வைந்துவரை நேரேகீறி
கெவனமுட னைந்துவரை குறுக்கே கிறி
தாளப்பா வரைதோறுஞ் சூலம்போடு
தாக்கான பதினாறு மாளியாச்ச
பாளப்பா போகாமல் பிரணவத்தை
பாங்குடனே லக்கமதை மாறுமாறு
ஆளப்பா லக்கமதை முன்னூறாக
அப்பனே பூஜமது தானும் போடே. 95

போடப்பா வுருவதுவு மாயிரந்தான்
பொங்கமுடன் தான்போட வசியமாகும்
ஆடப்பா திருமாளி யம்மன்தானும்
அப்பனே வசியமது வுடனேகாணும்
நாடப்பா லோகாதி மாண்பரெல்லாம்
நாயகனே தான்துதிப்பா ராயிதம்மை
கூடப்பா மாந்திரீக காவியந்தான்
குருபரனே யாமுரைத்த நீதியாமே. 96

## பிடாரி மந்திரச் சக்கரம் 500

நீதியா மின்ன மொரு வதீதங்கூர்வேன்
நிஷ்களங்க மானதொரு சக்கரந்தான்
ஆதியாங் குருபீட வதர்வணந்தான்
ஐங்கரனே புலஸ்தியனே யறிவுள்ளானே
சோதியென்னும் சுடர்விளக்காம் பிடாரி மார்கள்
சொற்சொருப நிலையுமதை யுரைப்பேன் பாரீர்
பாதிமதி ஆடையணிந்த பரமனாலே
பாடுகிறேன் மாணாக்கர் பிழைக்கத்தானே. 97

தானான வைந்துவரை நேரே கீறி
  தாக்கான வைந்துவரை குறுக்கே கீறி
பானான மாளியது பதினாறாச்சு
  பாலகனே வைநூறு லக்கமாறு
தேனான லக்கமதை மாறுங்காலம்
  தெற்றமுடன் பிரணவமாம் தூம்தூம்தூம்
கோனான பீஜமது வுயிரேயாகும்
  கொற்றவனே லட்சமுரு வோதுவோதே. 98

ஓதவே சகலவித பிடாரியெல்லாம்
  வுத்தமனே யுந்தமக்கு வசியமாகும்
நீதமுடன் சக்கலா தேவிதானும்
  நிஷ்களங்க மாகவல்லோ வசியமாகும்
தோதமுடன் பிரணவத்தை யுச்சரித்தால்
  தோராம லஷ்டசித்து மடையலாகும்
கீதமுடன் வுடுக்கோசை தன்னிற்பேசும்
  கிருபையுள்ள புலஸ்தியனே யின்னங்கேளே. 99

கேளப்பா சருக்கமது யெட்டதாச்சு
  கெடியான பாடலது யெண்ணூறாச்சு
ஆளப்பா வதர்வணமாஞ் சக்கரந்தான்
  அப்பனே ரெட்டையென்ற லக்கமாகும்
பாளப்பா யெட்டாவது சருக்கமப்பா
  பாலகனே ஒத்தையென்ற கணிதமாகும்
பாளப்பா போகாமல் ஒத்தை மார்க்கம்
  பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கச் சொல்வேன். 100

எட்டாவது சமுத்திரச் சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ

கடவுள் துணை

## ஒன்பதாவது

## இலக்க சக்கர மாறல்

## மோடிச் சக்கரம் 401

### ஒத்தை மாரணம்

சொல்லுகிறேன் ஒன்பதாவது சருக்கமப்பா
தொகைகணக்கை ஒத்தையதாய்க் கூறக்கேண்மோ
வெல்லவே யைந்துவரை நேரேகிறி
வெற்றியுடன் வைந்துவரை குறுக்கே கிறி
புல்லவே சதுர்கோணம் சோடசந்தான்
புகழான மாளியது பதினாறாச்சு
நல்லதொரு மாளிதனில் நானூற்றொன்று
நலமுடனே மாறிவர விபரங் கேளே. 1

கேளப்பா புலஸ்தியனே கெவனவானே
கெடியான லக்கமதை மாறுங்காலம்
தேளப்பா கொட்டியதோர் தன்மைபோல
தெளிவான பிரணவந்தான் கோசபீசம்
நாளப்பா போகாமல் நளினவானே
நாயகனே பீசமது லட்சமோது
ஆளப்பா மோடியென்ற மகிமைதானும்
அப்பனே கண்டறிவார் வுண்மைபாரே. 2

### மோடி வித்தை

உண்மையாம் புலஸ்தியனே வுதாரதீரா
வுத்தமனே மோடியென்ற வாதீனந்தான்
கண்மையாம் சபையோர்கள் மெச்சவேதான்
காவலனே யாச்சரிய மானபேற்கு
வண்மையாம் போக்கதுவு மேதென்றாக்கால்
வளம் பெரிய நாதாக்க ளாடுங் கூத்து
தண்மையாங் காரமது பொரிகாரந்தான்
தகைமையுடன் சாற்றுகிறேன் மாணாக்கற்கே. 3

மாணாக்க ளறியவேண்டி மர்மங்கூர்வேன்
மன்னவனே பொரிகாரக் கட்டிவாங்கி
காணாமல் நெருப்பதனில் பொரித்துமேதான்
காவலனே முட்டைபோல் சீவிக் கொண்டு
தோணாமல் யாருக்கும் புலப்படாமல்
துப்புரவாய் மணல்தனில் மறைத்துமூடி
தூணாக மரமொன்று நாட்டியல்லோ
துப்புரவா யுபதேசங் கொள்ளுவாரே, 4

கொள்ளவே மந்திரமாந் தந்திரந்தான்
கொற்றவனே ஜலமதனை மேலேவூத்து
மெள்ளவே வெண்காரங் கரைந்துபோகும்
வித்தகனே முட்டையது மாயமப்பா
துள்ளவே மெய்யான முட்டைதனை
தூரமதில் புதைத்துவைத்து யெடுத்துக்காட்டு
விள்ளவே முட்டைதனைக் கண்டபோதே
வித்தகனே மோடிவித்தை யதீதமாமே. 5

## சுப்பிரமணியர் மந்திரம்

அதிகமா மின்னமொரு வித்தைகேளு
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
துதிதமுடன் பிரணவமா மந்திரந்தான்
துப்புரவாய்ச் சாற்றுகிறேன் மாணாக்கற்கு
தவிதமுடன் சுப்பிரமண்ய மந்திரந்தான்
சாற்றுகிறேன் லோகபதி மாண்பருக்கு
பதிதமுடன் வைந்துவரை நேரேகீறி
பாலகனே வைந்துவரை குறுக்கேகீறே. 6

கீறியே புலஸ்தியனே மச்சகேந்திரா
கெவனமுடன் லக்கமது செப்பக்கேண்மோ
தேறியதோர் லக்கமது நூறேயாகும்
தேற்றமுடன் லக்கமதைத் தானடைத்து
மீறியே வட்சரமாம் பிரணவந்தான்
மிக்கான பிரணவங்க ளேதென்றாக்கால்
ஆதியே சூலமது போடுபோடு
அப்பனே ரீங்காரம் தன்னில்மாட்டே. 7

மாட்டவே ரீங்கார மோங்காரந்தான்
மகதேவா ஸ்ரீயுடனே லாடமாட்டு
கூட்டியே சவ்வுடனே யவ்வுங்கூட்டி
குருபரனே பிரணவந்தான் லட்சமோது
ஆட்டியே குருபீஜம் கருவினோடு
அப்பனே வுருவுடனே லலாடமிட்டு
நாட்டமுடன் திருவெண்ணீ றதாமணிந்து
நாயகனே வடபாகம் போற்றிடாயே. 8

போற்றியே தூபமொடு நைவேத்தியங்கள்
பொங்கமுடன் றான்கொடுத்து விபூதியாக
மாற்றியே பிரணவத்தை யோதும்போது
மகாதேவர் சுப்பிரமணியார் வசியமாவார்
தேற்றமுட னுந்தமக்கு நினைத்தபோது
தேசொளிவின் சின்மயத்தி னருளினாலே
சாற்றலுட நினைக்குமந்த காலந்தன்னில்
சதாகால முன்னிற்பார் வதீதந்தானே. 9

## அனுமார் மந்திரம்

தானாக யின்னமொரு வதீதங்கூர்வேன்
தயாபரனே புலஸ்தியனே தம்பிரானே
மானாக மந்திரந்தா னனுமார்மந்திரம்
மகாதேவா புண்ணியனே சக்கரங் கேள்
தேனான சக்கரந்தான் மகிமைமெத்த
தேசொளிவின் வனுமாறின் திறமைகேண்மோ
கோனான ராமருக்கு யுதவியாக
கொற்றவனே யுத்தத்திற் காளதாச்சே. 10

ஆச்சப்பா புலஸ்தியனே யன்புள்ளானே
அப்பனே ராமருட காலந்தன்னில்
மூச்சுடனே யுத்தமது புரியுங்கால
மூதாக்கள் நாதாக்க ளிருந்தகாலம்
பாச்சலுட னிராவணன்மேல் யுத்தங்கொண்ட
பாலகனே வனுமாரின் சக்கரந்தான்
மாச்சலில்லா சக்கரந்தா னிருநூறாகும்
மன்னவனே சக்கரத்தைக் கேளுகேளே. 11

கேளப்பா புலஸ்தியனே கணிதவானே
கேண்மையுடன் வைந்துவரை குறுக்கேகீறி
நாளப்பா வைந்துவரை நெடுக்கேகீறி
நாயகனே சோடசமாம் பதினாறாக
ஆளப்பா லக்கமதை யுள்ளடக்கி
அப்பனே பீசமொரு லக்கங்கூறி
தேளப்பா கொட்டியதோர் விஷம்போல
தேற்றமுடன் லக்கமதை மாறுவாயே. 12

மாறுவாய் பிரணவந்தா னேதென்றாக்கால்
மகாதேவா யுபதேச வுண்மைகேளு
கூறுவாய் பிரணவங்க ளேதென்றாக்கால்
கொற்றவனே ஓங்கார பீஜமாகும்
தேறுவாய் சிங்குடனே மங்கென்றோது
சிற்பரனே சண்டைபுரி நாதாபாதா
வீறுவாய் மலைதாங்கி வேர்பிடுங்கி
வித்தகனே சஞ்சீவி விளக்கந்தானே. 13

தானான விளக்கமது யேதென்றாக்கால்
தயாபரனே செஞ்சுடரே குஞ்சுதாகேள்
கோனான ராமருட வசியமந்திரம்
கோவேந்தே ராணுலங்க ளடங்கும்பீஜம்
பானான பரமபத வாசமோகா
பங்கயத்தைக் கட்டறுத்த வனுமானாகும்
தேனான யுத்தபுரி தெளிந்தமாறா
தேசொளிவைக் கண்டதொரு வனுமாறாச்சே. 14

ஆச்சப்பா வனுமாறின் குருபீஜந்தான்
அப்பனே யுத்தகள சங்கதீபா
மூச்சுடனே சஞ்சீவி யுண்டபாலா
மூதுலகில் போர்முகத்தில் வெற்றிகொண்ட
பாச்சலென்னும் வனுமாரே யெந்தன்பக்கல்
பாதருள வேண்டுமென்று லட்சமோது
மாச்சலில்லா மணிமந்திர போசவாசா
மகாதேவா வாவென்று வோதுவோதே. 15

ஓதயிலே வனுமாரும் வசியமாவார்
ஓகோகோ பிரணவத்தா லெல்லாஞ் சித்தி
தோதமுடன் மாண்பர்களோ செய்வாரானால்
தோறாமல் சகலசித்து மாடலாகும்
நீதமுட னனுமானின் குருபீஜத்தை
நிஷகளங்க மாகவல்லோ நியமம்பூண்டு
சாதகமாய் சதாகாலம் வனுமான் பூசை
தப்பாமல் நடத்துபவன் சித்தனாமே. 16

## சுப்பிரமணியருக்கு உபதேசம்

சித்தனா மின்னமொரு சொரூபங் கூர்வேன்
சிற்பரனா ரருன்பெற்ற தீரவானெ
பத்தனாம் சுப்பிரமணிய வடிவேலருக்கும்
பாருலகி லுபதேசம் பெற்றபின்பு
முத்தனா முனிவர்முதல் மூதுலகத்தோர்
மூவேந்தர் பாண்டி சேரச் சோழன்றானும்
நித்தமுமே யுபதேசம் பெற்றார் கன்மர்
நீணிலத்தில் வேந்தர்களு மிதங்கொண்டாரே. 17

## சடாட்சர மாறல் சக்கர மந்திரம்

கொண்டதொரு பந்திரங்க ளேதென்றாக்கால்
கொற்றவனே புலஸ்தியனே மச்சகேந்திரா
சண்டமா ருதம்போல சடாட்சரந்தான்
சாற்றுகிறேன் மாணாக்க ளறியவேண்டி
கண்டிதமாய் சக்கரமா மேதென்றாக்கால்
காவலனே நானூறு லக்கமாறு
விண்டிடவே யைந்துவரை நேரேகிறி
வித்தகனே யைந்துவரை குறுக்கேகீறே. 18

கீறவே சோடசமாம் மதினாறாச்சு
கிருபையுள்ள லக்கமதை மாறுமாறு
ஆறவே லோகமெல்லா வசியமாவா
ரப்பனே சகாரமுட னகாரந்தானும்
மாறவே அகாரந்தான் பகைவோரெல்லாம்
மன்னவனே வசியமது மாவார்பாரு
தூறவே னகாரத்தால் மோகமாகும்
துப்புரவா யகாரத்தால் ஸ்தம்பனமு மாச்சே. 19

ஆச்சப்பா வகாரத்தாலே லோகமெல்லாம்
அப்பனே சடாட்சரத்தா லாடும்பாரு
மூச்சுடனே சரவணபவ ஆக்ருஷணம்
வுத்தமனே ரணபவாச வென்றேயோது
மாச்சலிலலா வுச்சாடன மிதிலேயாகு
மகத்தான அணபவசர மாரணமேயாகும்
பாச்சலுட பைரஹ கோகனமுமாகும்
பதராதே வூமைபோல் மௌனங்கொள்ளே. 20

கொள்ளவே மோகனமும் ஸ்தம்பனமு மாகும்
கொற்றவனே சடாட்சரப் பெருமையப்பா
தெள்ளமிர்த மானதொரு சடாட்சர முமப்பா
தேற்றமுடன் யோகநிலை தனிலிருந்து
வள்ளலுயர் சிவகாமி கடாட்சத்தாலே
மன்னவனே யுந்தமக்கு வஷ்டசித்துங்
கொள்ளைகொள்ளப் போனவற்கு கொடுமைவந்து
கொற்றவனே வாய்த்தது போலமைக்குந்தானே. 21

## பஞ்சபூத மாந்திரியப் பெருமை

தானான யின்னமொரு மகிமைகூர்வேன்
தண்மையுள்ள புலஸ்தியனே மச்சகேந்திரா
கோனான வெனதைய ரசுவனியாந் தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்தவண்ணம்
மானான பஞ்சபூதப் பெருமையப்பா
மானிலத்தில் கூறுவதற்கு நாவோயில்லை
பானான பரஞ்சுடர்போல் பிரணவத்தை
பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கத்தாமே. 22

தாமேதான் பிரணவமா மகுத்துவங்கள்
தண்மையுள்ள நகாரமப்பா பிரமாவாகும்
நாமேதா னுரைத்தபடி மகாரமப்பா
நாயகனே மகாவிஷ்ணு வென்னலாகும்
போமேதான் சிகாரமென்ற பிரணவந்தான்
பொங்கமுட னுருத்திரனா மூர்த்தியாகும்
மேமேதான் வகாரமென்ற குருபீஜந்தான்
வித்தகனே மயேஸ்வரனா ரென்னலாமே. 23

என்னவே யின்னமுந்தான் மகிமைகூர்வேன்
யெழிலான யகாரமது பிரணவந்தான்
துன்னவே சதாசிவ மென்னலாகும்
துப்புரவாய் நகாரமென்ற பிரணவந்தான்
மன்னவே பிரிதிவு யென்னலாகு
மகத்தான பஞ்சபூத மகிமையப்பா
தென்னவனே மகாரமென்ற பிரணவந்தான்
தேற்றமுள்ள அப்புவென்று செப்பலாமே. 24

செப்பவே சிகாரமென்ற பிரணவந்தான்
தெளிகை கொண்ட வாயுவெனச் செப்பலாகும்
ஒப்பமுடன் வகாரமென்ற பிரணவந்தான்
ஒகோகோ தேயுவென்றே சொல்லலாகும்
மெப்புடனே யகாரமென்ற பிரணவந்தான்
மேன்மையுட னாகாய மென்னலாகும்
தப்பிதங்கள் நேராது ஓமூலாதாரம்
தன்மையுடன் நகாரமென்றே சொல்லலாமே. 25

சொல்லவே வகாரமென்றே பிரணவந்தான்
சுந்தரனே சுவாதிஷ்டமான மென்னலாகும்
வெல்லவே மகாரமென்ற பிரணவந்தான்
வேதாந்த அனுஷக்கனா மென்னலாகும்
புல்லவே சிகாரமென்ற பிரணவந்தான்
புகழான மணிபூர மென்னலாகும்
நல்லதொரு வகாரமென்ற பிரணவந்தான்
நாதாக்கள் விசுத்தியென்றே சொல்லலாமே. 26

ஆமேதான் பஞ்சபூத மென்னசொல்வேன்
அப்பனே யதின்மாறல் விபரங்கேளு
நாமேதா னுரைத்தபடி வண்மைகேளீர்
நாயகனே யடக்குமுறை நவிலக்கேண்மோ
போமேதா னுன்னுக்குள் ளஞ்சுபூதம்
புகழான பூதமது யேதென்றாக்கால்
வேமேதா னருளான பஞ்சகர்த்தாள்
வித்தகனே யாடுகின்ற முறைமைபாரே. 27

பாரப்பா பிரிதிவுதான் அப்புக்குள் ளொடுங்கும்
பாலகனே அப்பதுவும் தேய்வதனி லொடுங்கும்
நேரப்பா தேய்வதுவும் வாயுவினிலொடுங்கும்
நெடிதான வாயுவது விண்தனி லொடுங்கும்
ஆரப்பா விண்ணனுவு மாகாய மொடுங்கும்
அப்பனே வாகாயம் சிவன்றனக்கு ளொடுக்கம்
தேரப்பா பூதவகை பிரித்துச் சொன்னேன்
தேற்றமுட ன்றிபவனே சித்தனாமே. 28

சித்தனாம் பூதத்தி னஞ்சஞ்சாக
சிற்பரனே செய்பவற்கு யெல்லாஞ்சித்தி
முத்தனே காரத்தில் பஞ்சபூதம்
முனிவனே பாஷாணம் பஞ்சபூதம்
பத்தனே லோகத்தில் பஞ்சபூதம்
பாலனே மூலிகையில் பஞ்சபூதம்
கத்தனே லவணவகை பஞ்சபூதம்
காவலனே கண்டறிந்தோன் சித்துபாரே. 29

பாரப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
பாலகனே கண்மணியே கவிராஜேந்திரா
நேரப்பா பூசைவகை யறியவேண்டும்
நேர்மையுடன் பூதமது தப்பினாக்கால்
ஆரப்பா வசியமது பொய்யதாகும்
அப்பனே மையதுவும் பொய்யதாகும்
தேரப்பா கருவதுவு மைந்துமாகும்
தேற்றமுடன் கண்டவனே சித்துமாச்சே. 30

ஆச்சப்பா சித்தது மின்னங் கூர்வேன்
அப்பனே நாதாந்த மணிவிளக்கே
மூச்சுடனே நெடுங்கால மிருந்தசித்து
முனையான சுரன்தேவ ரென்னலாகும்
பாச்சலது கொள்ளாத வசுவினியார் தாமும்
பாலகனே கோடிவரை யிருந்தசித்து
மாச்சலில்லா யுகமறிந்த சித்துவாகு
மன்னவனே கலியுகத்து சித்தர்காணே. 31

## மச்சமுனி வித்வேஷண மந்திரம்

காணவே யின்னமொரு மகிமைகூர்வேன்
 காவலனே புலஸ்தியனே கருவுள்ளானே
தோணவே வித்வேஷப் பிரணவந்தான்
 துறையானே ஓம்சவ்வும் கிலியுமாகும்
மாணவே ஓம்கிலியும் ஐயும்
 மகத்தான ஐயனே வித்வேஷணமுமாகும்
பாணமாம் சுவகா வென்று வுருவுமப்பா
 பாலகனே ஆயிரத்தெட் டுருவும்போடே. 32

போடவே பிரணவந்தான் கருபீஜமாகும்
 பொங்கமுட னஷ்டசித்து மிதற்குள்ளாகும்
நாடவே யுனைப்பணிவார் கோடிமாண்பர்
 நாதாந்த சித்தரெல்லா முனைத்துதிப்பார்
கூடவே பிரணவத்தின் மகிமைதன்னை
 குருபரனே கண்டறிந்தோன் யோகியாவான்
ஆடவே வையகத்தி லிப்புதுமை
 ஆராலு முடியாது அளவுகாணே. 33

## கருவூரார் ஆக்ருஷண மந்திரம்

காணவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
 காவலனே பாவலனே கவிவல்லோனே
பூணவே கருவூரா ராக்ருஷணந்தான்
 புகழான மூலமந்திர மேதென்றால்
நாணவே பிரணவத்தின் பெருமையப்பா
 நவிலுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
பாணம்போல் மூலமந்திர மேதென்றாக்கால்
 பாலகனே சூட்டுகிறேன் பண்புள்ளானே. 34

பண்பான ஓரீயும் ஐயுமாகும்
 பாலகனே சவ்வுடனே ஐயுமாகும்
நண்பான கிலியுடனே ஆக்ருஷணமப்பா
 நலமான சுவாகா வென் றுருவு போடு
திண்பான வுருவது வுமாயிரத் தெட்டாகும்
 தீர்க்கமுள்ள பிரணவந்தான் குருபீஜந்தான்
கண்பான பூசைமுகம் நைவேத்தியங்கள்
 கண்மணியே சாற்றுகிறேன் கவிவல்லோனே. 35

வல்லதொரு சஞ்சாய மேதென்றாக்கால்
வண்மையுள்ள பால்பழமுந் தேங்காய்தானும்
நல்லதொரு சர்க்கரையும் வடைசுண்டலப்பா
நலமான தத்திவனஞ் செய்தேயப்பா
மெல்லவே அவல்கடலை சத்திமுத்தி
மேன்மயுள்ள புட்பமலர் நிம்பமாகும்
சல்லாப நைவேத்திய நவதானியங்கள்
சட்டமுடன் செய்பவனே யோகியாமே. 36

கருஹூரார் சொல்லிய மோகன மந்திரம்

ஆமேகே ளின்ன மொரு வதிதங் கூர்வேன்
அப்பனே புலஸ்தியனே யன்புள்ளானே
போமேதான் மோகனமா மந்திரந்தான்
பொங்கமுடன் வைந்துவரை நேரேகிறி
நாமேதா னுரைத்தபடி வைந்துவரையப்பா
நலமுடனே குறுக்கே யப்பா கீறிப்போடு
வேமேதான் சோடசமும் பதினாறாச்சு
வேதாந்தக் கண்மணியே சூலம்போடே. 37

போடப்பா லக்கமது நானூறாகும்
பொங்கமுடன் சதுர்கோண மாறிப்போடு
நாடப்பா குருபீஜந் தன்னைப்போடு
நலமான பீஜமது யேதென்றாக்கால்
தேடப்பா சிவயநம வென்றுபோடு
தேற்றமுடன் சிகாரத்தில் சவ்வும் போடு
ஆடப்பா யகாரத்தில் ஸ்ரீயும் போடு
அப்பனே நகாரத்தில் ஐயும்போடே. 38

போடவே வகாரத்தில் ஸ்ரீயும்போடு
பொங்கமுடன் நகாரத்தில் ஐயும்போடு
நாடயிலே மகாரத்தில் கிலியும்போடு
நலமாக வுயிரெழுத்தை மாறு மாறு
வாடயிலே உ—எ—ஒ—அ இ போடு
வளம்பெறவே நம்லம் சவ்வும் போடு
கூடயிலே ஐம்—நம் என்றேமாறு
குருபரனே சிவசிவா யென்ன கூர்வேன்
தேடயிலே நடுவணையில் பிடித்து மாறு
தேற்றமுடன் யெடுத்ததெல்லாஞ் சித்தியாமே. 39

சித்தியா மானிடர்க்கு யெல்லாஞ் சித்தி
சிதாபாசக் களையகன்ற தீரவானே
முத்தியா மிதிலடக்க மாந்தரப்பா
மூவுலகைக் கட்டறுத்த முனிநாதற்கு
பத்தியுள்ள பூபால வேந்தருக்கும்
பாவாணர் கவிஞர் தவ சிவயோகிக்கும்
எத்திசையு மலைதனிலே யிருக்கும்யோகி
யெழிலான ஞானவான் களறிவார் பாரே. 40

## நூல் சாப நிவர்த்தி மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பாலகனே சிதாபாசங் கட்டறுத்த
வேரப்பா வெகுகோடி மாண்பரப்பா
வித்தகனே நூல்சாப மறியாமற்றான்
தேரப்பா சிவவேடம் பூண்டு கொண்டு
திக்கெல்லாந் தான்திரிந்து வேஷதாகி
ஆரப்பா லபிகடந்த ஞானிபோலும்
அப்பனே தவநிலையை யறியார்காணே. 41

காணவே யின்னமொரு மாற்கங் கூர்வேன்
காவலனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தோணவே யவரவர்கள் மனதுபோல
தோராய மாகவல்லோ நூல்கள் செய்தார்
பூணவே சமுதாய நிலையறிந்து
புகழாகப் பாடிவிட்டார் சித்தரெல்லாம்
ஆணவங்கள் தானொடுங்கி யடியேன்றானும்
அப்பனே தாள்பணிந்து வணங்கினேனே. 42

வணங்கினே னெனதைய ரசுவனியாந்தேவர்
வண்மையுடன் றாள்பணிந்தேன் பாதந்தொட்டு
இணங்கியே யென்மீது கிருபை கூர்ந்து
யெழிலாக வுண்மை யுபதேச மெல்லாம்
சுணங்கமது நேராம லடியேன்மீது
சுந்தரனே கிருபைக்கண் கடைக்கண்ணுக்கு
மணங்கமழுஞ் சித்தாதி சித்தர்முன்னே
மகிமைபெற யெந்தமக்கு யோதினாரே. 43

ஓதியதோர் மாந்திரீக காவியந்தான்
வுத்தமனே லோகபதி மாண்பருக்கு
நீதியுற்ற ராசாதி மன்னவர்க்கும்
நெரிமையுடன் றானடக்கும் யோகிகட்கும்
பாதிமதி சடையணிந்த தம்பிராற்கும்
பாருலகில் ஞானமுள்ள சித்தருக்கும்
ஆதியே மனோன்மணி யாளருளினாலே
அப்பனே யெந்தமக்கு வமைத்தவாறே. 44

வாறான காவியந்தான் பிரணவந்தான்
வளம் பெரிய மாந்திரீக காவியந்தான்
கூறான காவியமா முதற் காவியந்தாங்
குறிப்பான பஞ்ச காவியத்தி லொன்று
மாறான காவியந்தான் பதுமபீடம்
மகத்தான பிரணவங்க ளிதிலடக்கம்
கூறான காவியத்தின் பெருமைதன்னைக்
குருபரனே மதிப்பதற்கு கூடாதன்றே. 45

அன்றான காவியங்க ளனந்தங்கோடி
அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
குன்றான மலைபோல கோபுரம் போல்
கோடிதள மாந்திரீகம் பலவாறாக
தென்றிசையா தென்பொதியில் சமாதி கொண்டார்
தேற்றமுள்ள கிரந்தமது லக்கோயில்லை
வென்றிடவே யெனதைய ரசுவனியாந்தேவர்
வெட்டவெளி பெட்டகம் போல் கூறினாரே. 46

## நூலறியத் தகாத மாந்திரீகர் மதியீனம்

கூறவே யின்னமொரு மார்க்கங் கூர்வேன்
குவலயத்தில் மாண்பரப்பா கோடி சங்கம்
தேறவே மாந்திரீக நூலறிந்து
தேற்றமுடன் கண்டறிந்தார் கோடிசென்மம்
மாறவே பிரணவத்தை சத்தறிந்து
மானிலத்தில் கெட்டவர்கள் கோடி மாண்பர்
மீறவே மதியீனா முழு மக்களப்பா
மிக்கான பாதைவழி சொல்லுவேனே. 47

சொல்லுவே னின்னமொரு சுருதி கூர்வேன்
தோகையென்னும் பீடமதி லிருக்கும்பூபா
வெல்லவே கருவறிந்து வுருவறிந்து
வேதாந்த சுழல்கள் முதல் கருக்கறிந்து
கொல்லவே வனாந்திரமாஞ் சஞ்சீவியப்பா
கொற்றவனே மூலிபெருஞ் சாபமப்பா
புல்லவே தாமறிந்து பூலோகத்தில்
புகழாகக் கருவெல்லாங் கண்டார்தானே. 48

கண்டாரே மாந்தரப்பா காவணத்தில்
கருவறிந்த சிலதுபேர் மாண்பரப்பா
விண்டுமே பலபலவாய் சடக்கறிந்து
விட்டகுறை தொட்டகுறை விதிகாணாமல்
தொண்டுமே செய்யாமல் தன்றமக்குள்
சுருதிபெருஞ் சூத்திரங்க ளறியாமற்றான்
பண்டுபோ விருக்குமந்த தேகிகட்கு
பலபலவாங் கருவாலே யிடர்செய்தாரே. 49

இடரான மோசவழி பாபராகி
யெழிலான கருமத்துக் காளதாகி
அடரான சண்டாளப் பாபிமார்கள்
அப்பனே பொல்லாங்கு செய்தமார்க்கம்
தொடரான கருமங்க ளதிகமப்பா
தொல்லுலகில் மடிந்தவர்கள் கர்மராலே
சடரான பாபிகளால் வையகத்தில்
தாரணியில் கோடிமனு மாண்டார்பாரே. 50

பாரப்பா காவியந்தான் மாந்திரீகம்
பாலகனே புண்ணியற்கு யருளவேண்டும்
சேரப்பா சிவகலையை யடைந்தபேற்கு
சிற்பரனே மெஞ்ஞானி யானவற்கும்
நேரப்பா முகதாவில் கண்டு பேசி
நிஷ்களங்க சமாதிநிலை பதியறிந்து
ஆரப்பா கொடுத்தாலே புண்ணியந்தான்
அப்பனே முழுமனதை யறிந்துக் கொள்ளே. 51

கொள்ளவே முழுமனதை யறியவேண்டும்
குறிப்பறிந்து சுரமறிந்து குணமுங்கண்டு
மெள்ளவே வழிபாடு தேவபாடு
மேன்மையுடன் குணபாடு முறைபாடெல்லாம்
கள்ளமிலா மனதறிந்து கண்ணியவானே
காவலனே யுபதேசங் கொண்டாலப்பா
தெள்ளமிர்த மானதொரு சமாதி கிட்டும்
தேசொளிவின் சின்மயமுங் காணலாமே. 52

காணலாம் பாபிகட்கும் கர்மிகட்கும்
பாலகனே கொடுத்தாலே மோசம் மோசம்
பாணம்போல் தாமிருப்பார் சிலதுமாண்பர்
பாலகனே மனதிலொன்று பகர்வேன்யானும்
மாணவே யுள்வினையை யுள்ளமர்த்தி
மாசற்ற மனம்போல பேசுவார்கள்
ஆணவங்கள் கொண்டதொரு மாந்தரப்பா
அப்பனே நல்லவர்போ லிருப்பார் பாரே. 53

பாரப்பா பாம்பினது படத்தைப் போல
பாலகனே நல்லழகா யிருப்பாரப்பா
ஆரப்பா யெட்டிக்கனி தன்னைப் போல
அப்பனே தாமிருப்பார் விஷமும் போமோ
நேரப்பா படிமுகமாம் நிதானங்கண்டு
நேர்மையுடன் குணபாடு யாவுங் கண்டு
தேரப்பா சுறுக்கறிந்து பாபிகட்கு
தேற்றமுடன் சொல்லாம லிருத்தல் நன்றே. 54

### வீறிமந்திரம் சட்டமுனி நாதருபதேசம்

நன்றாக யின்னமொரு மர்மங்கூர்வேன்
நாதாந்த சித்துமுனி நண்புள்ளானே
குன்றான மலைதனிலே யிருக்கும்பூபா
குருபரனார் தன்னருளால் வதீதம்பெற்ற
தென்றிசையா சித்தர் மெய்ச்சும் ஞானவானே
தேற்றமுடன் வீறி மாகாளி மந்திரம்
வென்றிடவே பிரணவமாம் குருபீசந்தான்
வித்தகனே தாமுரைத்தார் வதீதம்பாரே. 55

பாரப்பா வீறியென்ற காளிமந்திரம்
பாடுகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
ஆரப்பா வீறியென்ற காளிவாவா
அப்பனே தூம்காளி பத்திரகாளி
நேரப்பா ஸ்ரீங்காளி நிறைந்தகாளி
நேர்மையுடன் வடபத்திர காளிசுங்கா
தீரப்பா வங் யங் சிங் கென்றேயப்பா
சிற்பரனே லட்சமுரு போடுபோடே. 56

போடப்பா வுருவதுவும் போட்டாயானால்
பொங்கமுடன் தேவதையும் வசியமாவாள்
தேடப்பா வசியமதா லட்டசித்தும்
தெளிமையுடன் றானாடுங் குருபீசந்தான்
கூடப்பா சஞ்சயா விகுதமப்பா
குருநாதா லட்சணமாம் பதியமர்ந்து
நாடப்பா சோடசமாங் கலையில்நின்று
நலம்பெறவே பூசைமுகம் தன்னிற்கொள்ளே. 57

## திருமூலர் வசிய மந்திரம்

கொள்ளவே யின்னமொரு மகிமைகூர்வேன்
கொற்றவனே தென்பொதிகைக் கரசவேளே
தெள்ளமிர்த மானதொரு புண்ணியவானே
தேற்றமுடன் வசுராஜம் மெய்ச்சும்பாலா
வள்ளலுயர் தெள்ளுதமிழ் கவிவாணரப்பா
வண்மையுடன் கொண்டணையு மதிவல்லோய்கேள்
மெள்ளவே வசியமென்ற பீசமப்பா
மேன்மையுடன் கூறுதற்கு வசியங்கேளே. 58

## உயிர் பீஜம்

கேளப்பா பீசமது யேதென்றாக்கால்
கெவனமுள்ள குருபீசம் கருபீஜந்தான்
தாளப்பா ஓம்கிலியும் லட்சணபாலா
தகைமையுள்ள மந்திரகிரி வசியபூபா
மாளப்பா தூம்மந்திர காவியாசரூபா
மகதேவா பாஷாண்டி யன்னாவாவா
ஆளப்பா சொரூபமல்லி ஓங்காரபாதா
அப்பனே பூலோக வசியங்காணே. 59

காணவே லட்சமது வுருவினோடும்
காவலனே கருவோடும் உச்சாடித்தால்
பூணவே லோகமுதல் வசியமாகும்
பொங்கமுடன் மோகனமு மிதிலேயாடும்
நாணவே ராசாதி ராசர்மன்னர்
நானிலத்தில் வசியமது யாவாரப்பா
மாணவே மணிமந்திர மிதிலடக்க
மகாதேவா யோகரிஷி யாவாய்பாரே. 60

வனத்து மிருக மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே பண்புள்ளானே
பகருகிறேன் மாணாக்க ளறியவேண்டி
தேரப்பா தென்பொதிகை ஞானக்கண்ணே
தெளிமைகொண்ட நாதாந்த சித்துபாலா
ஆரப்பா வசுவனியா ரெந்தன்தேவர்
அப்பனே மனதுவந்து சொன்னநீதி
பாரப்பா யென்மீதில் பட்சம்வைத்து
பகர்ந்திட்டார் மனோன்மணியாள் கடாட்சந்
தானே. 61

தானான கடாட்சமது யேதென்றாக்கால்
தண்மையுடன் கலியுக மாயிரத்தில்
தேனான தென்பொதிகை வடபாகத்தில்
தேற்றமுட னடியேனும் சமாதிகொண்டேன்
பானான சமாதியது யேதென்றாக்கால்
பாவலனே நாவலனே பகர்வேனப்பா
மானான சமாதியது யோகபீடம்
மகத்தான பீடமது தேகந்தானே. 62

தேகமாந் தேகமது வழியாதப்பா
தேற்றமுடன் காயாதி கொண்ட தேகம்
ஆகமாஞ் சாத்திரங்கள் கண்டாராய்ந்து
அப்பனே காயாதி தானுமுண்டு
பாகமாம் சடலமது கற்றூணாக
பாவலனே நெடுங்கால மிருக்கவென்று
சாகமுடன் வரைகோடி காலமப்பா
சதுருகமாங் கொண்டதொரு காயமாச்சே. 63

ஆச்சப்பா தென்பொதிகை வடபாகத்தில்
அப்பனே வசுவன்யார் காலந்தன்னில்
மூச்சுடனே வரைகோடி காலமப்பா
மூதுலகை கட்டறுத்து வினையங்கொண்டு
பாச்சலுடன் தேகமது கற்றூணாகி
பாகமுடன் மூலியென்ற கற்பமுண்டு
மாச்சலது கொள்ளாத மேனியோடு
மானிலத்தில் நெடுங்கால மிகுந்தசித்தே. 64

சித்தான சித்தப்பா தேவசித்து
தேகமது மழியாத கற்றூண்சித்து
பத்தான பதிகடந்த ஞானசித்து
பகவானே தான்மதிக்குங் கருணைக்கண்ணே
முத்தான மூலமது கொண்டசித்து
மூவுலகைக் கட்டறுத்த முனியாஞ்சித்து
முத்தான போதமென்ற கலியின்சித்து
முப்பிறப்பைக் கண்டறிந்த ஞானசித்தே. 65

ஞானமென்ற சித்ததுவைக் கண்டறிந்த
நானிலத்தில் விட்டகுறைக் கட்டறுத்த
மோனமுள்ள முற்கால தேவசித்து
முயலான விக்காலச் சித்துமல்ல
தானமது தாமறிந்த வசியச்சித்து
தற்பரத்தைக் கட்டறுத்த கவனச்சித்து
பானமது கொள்ளாத பாலச்சித்து
பாரினிமே நாதாக்கள் மெச்சுஞ்சித்தே. 66

## சத்துரு செயிக்க மந்திரம்

சித்தப்பா சத்துருவின் பிரணவந்தான்
சிதாபாசக் களையகன்ற தீரவானே
உத்தமர்கள் கொண்டாடும் வசியச்சித்து
வுகந்த பொன்னாவாரையுடன் கையான்வேறும்
பற்திரமாம் வெள்ளெருக்கு விஷ்ணுகாந்தி
பக்குவமாய் கருக்கிநன்றாய் மையேசெய்து
மித்திரமாய் சத்துருவுக் கிட்டேசென்றால்
மேதினியில் வணக்கமது கொள்வார்பாரே. 67

பார்க்கையிலே எதிராளி வணக்கங்கொள்வார்
பாலகனே சகலசெனம் வசியமாகும்
ஏர்க்கவே யின்னமொரு வசியமப்பா
யெழிலான வசியமது யார்தான் சொல்வார்
தீர்க்கமுள்ள நாதாந்த சித்தரப்பா
திறமையுடன் செய்யுகின்ற மார்க்கமப்பா
நார்க்கமலம் வீற்றிருக்கு மம்பாள்பாதம்
நாயகனே பொய்யாது மெய்யுமாமே. 68

## இராஜி வசியம்

மெய்யான வசியமது செய்வேனப்பா
வித்தகனே புலஸ்தியனே மச்சகேந்திரா
பொய்யான வசியமது யென்றெண் ணாதே
பொங்கமுடன் மன்னவர்கள் வசியமப்பா
துய்யநல்ல வணங்கியப்பா காரிவணங்கி
துப்புரவாய் பூனையின்றன் வணங்கியாகும்
பையவே வெள்ளெருக்குத் தொட்டியாகும்
பாங்கான பொன்முசுட்டை மூலியாமே. 69

மூலியா மிவைகளெல்லாம் வசியமூலி
முக்கியமாங் கிராணமதில் வேர்பிடிங்கி
சாலியாய்த் தீக்கொளுத்தி கரியதாக்கிச்
சட்டமுடன் புனுகுடனே ரோசனையுஞ் சேர்த்து
மாலியாய் பூரமுடன் கஸ்தூரியப்பா
மகாதேவா குங்குமமுங் கூடச்சேர்த்து
வாலிபனே யாவிநெய் தன்னிலப்பா
வளமுடனே மையாக்கி பதனங்கொள்ளே. 70

கொள்ளவே மையதனைக் குறிப்பாயப்பா
கொற்றவனே பூசைமுகம் கொலுநிறுத்தி
தெள்ளமிர்த மானதொரு கருவுக்கப்பா
தேற்றமுடன் பிரணவத்தை வுருதானேற்றி
வள்ளலுயர் தெள்ளுமணி யம்பாள்பாதம்
வணக்கமுடன் தியானித்து வுருக்கொண்டேத்தி
கள்ளமில்லாக் கனகரிஷி பாதந்தொட்டுக்
காவலனே யிந்தவித்தை யாடுவாரே. 71

## புருஷ வசிய மந்திரம்

ஆடுவாய் மூலிகை வசியமப்பா
அப்பனே சுந்தரனே மணிமந்திராகேள்
தேடுவாய் செம்முளளி சிவந்தகஞ்சா
தீர்க்கமுள்ள செங்குவளை பொன்னாங்கண்ணி
நாடியே சரக்கையெல்லாம் கறிக்கியப்பா
நலமான சரக்குடனே யொக்கச்சேர்க்க
கூடியதோர் தாரமுடன் கெந்தியப்பா
துப்புரவாய் சேர்த்துமல்லோ துயரம்நீங்கே. 72

நீங்கவே சவ்வாது புனுகுசேரு
நிலையான குங்குமப்பூ மதியஞ் சேரு
ஓங்கியே சரக்கெல்லாம் கல்வமிட்டு
வுத்தமனே தாமரைப்பாய் பன்னிராலே
பாங்குடனே பரணிதனி லடக்கஞ் செய்து
பாலகனே குருவான மையையப்பா
ஓங்கியே லலாடமதில் திலதந்திட்டு
வுன்னுக்குள் சகலமுமே வசியந்தாமே. 73

வசியமாம் லோகபதி மாண்பரெல்லாம்
மகத்தான குருமார்கள் யோகிமார்கள்
நிசிதமுள்ள பகையாளி யோகிதானும்
நிஷ்களங்க மானதொரு சித்தர்தாமும்
உசிதமுட னுன்னுக்குள் வசியமாவார்
வுத்தமனே யுந்தமக்கு யெல்லாஞ் சித்தி
பசிதமுடன் சிவயோகப் பதியில் நின்று
பாலகனே திருவிளையாட் டாடுவாயே. 74

ஆடுவாய் லோகபதி மாண்பர் முன்னே
அப்பனே சக்கரமாம் வித்தைதன்னை
போடுவாய் சபையோர்கள் முன்னதாகப்
பொங்கமுடன் திருவிளையாட் டென்னசொல்வேன்
நாடுவாய் லக்கமதை மாறுமாறு
நாயகனே யுந்தமக்கு யெல்லாஞ் சித்தி
தேடுவாய் கணக்கறிந்து சடக்கறிந்து
தேற்றமுடன் லக்கமதைப் பாருபாரே. 75

## இரட்டை லக்கம்

பாரப்பா வைந்துவரை நேரேகிறு
பாலகனே வைந்து வரை குறுக்கேகிறு
நேரப்பா சோடசமாம் பதினாராச்சு
நெடிதான லக்கமதை மாறக்கேவீர்
தேரப்பா மூன்றாந்தர விட்டிலப்பா
தேற்றமுடன் லக்கமதை யிரண்டே போடு
ஆரப்பா நான்காவ தறையிலப்பா
அப்பனே சத்தமதைப் போடுபோடே. 76

போடப்பா பஞ்சமென்ற விட்டிலப்பா
பொங்கமுடன் லக்கமதை ஆறு போடு
சாடப்பா ஆறாவ தரையிலப்பா
சாங்கமுடன் லக்கமதை மூன்று போடு
தேடப்பா பதினொன்றாம் விட்டிலப்பா
தெளிவுடனே லக்கமதை யெட்டுபோடு
ஆடப்பா ராசிபனி ரெண்டாம் விட்டில்
அப்பனே லக்கமதை வொன்று போடே. 77

ஒன்றான பதிமூன்றாம் விட்டிலப்பா
வுத்தமனே லக்கமதை நான்குபோடு
சென்றிடவே பதினான்காம் விட்டிலப்பா
செங்கமலக் கண்ணானே வைந்துபோடு
வென்றிடவே லக்கமில்லா விட்டிலப்பா
வேதாந்தக் கண்மணியே லக்கங் கூர்வேன்
சென்றிடவே யவரவர்கள் நினைத்த வண்ணம்
சிற்பரனே லக்கமதை யறிந்து சொல்லே. 78

சொல்லவென்றால் கருவாளி யறிந்துசொல்வான்
சுந்தரனே விட்டகுறை யிருந்தால்கிட்டும்
அல்லவென்றால் குருமுறையா யறியவேண்டும்
அப்பனே யவர்பாதந் தொழுதுநின்றால்
வெல்லவே மனதுவந்து வினையஞ் சொல்வார்
வேதாந்தத் தாயார்தன் னருளும் வேண்டும்
புல்லறிவால் மனங்களித்து வன்பானீயும்
புங்கசித்தி யடைவதற்கு மனமுங் கொள்ளே. 79

கொள்ளவே யின்னமொரு மார்க்கங்கூர்வேன்
குவலயத்தில் கணிதமென்ற மார்க்கமப்பா
தெள்ளமிர்த மானதொரு கக்கிஷந்தான்
தேற்றமுட னறிந்தவர்கள சொல்லக்கூடும்
உள்ளபடி மற்றவர்க ளுரைக்கப் போமோ
ஒருக்காலு முடியாது திண்ணமப்பா
எள்ளளவும் பிசகாது லக்கமாறல்
யெளிதான கக்கிஷத்தின் லக்கமாறே. 80

கறுப்பண்ணன் மந்திரம்

ஆச்சப்பா புலஸ்தியனே யிந்திராகேள்
அகிலமெலாங் கொண்டாடு மச்சகேந்திரா
மூச்சுடனே யடியேனும் பொதிகை தன்னில்
மூதுலகைக் கட்டறுத்து யிருக்கும் நாளில்
மாச்சலது கொள்ளாது பொதிகையோரம்
மகதேவா கல்லால விருட்சமுண்டு
பாச்சலுடன் கறுப்பனென்ற முத்துசாமி
பாலித்த மந்திரத்தைப் பகருவேனே. 81

பகருவேன் பிரணவமாம் கறுப்பன் மந்திரம்
பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கவென்று
நகருவேன் பீசமது யேதென்றாக்கால்
நாதாந்த பீசமது பிரணவந்தான்
தகரவே ஓம்கிரிவாச சகாயரூபா
தட்டாத ஆங்கிரியா அம்சவாடா
எகரவே ஏகாந்தப் பீசமப்பா
யெழிலான சுமுகாயா வாவென்றோதே, 82

ஓதயிலே லட்சமுரு வோதுவோது
ஓகோகோ நாதாக்க ளறிந்தசித்து
பாதையிலே கைகண்டப் பிரணவந்தான்
பகர்ந்திட்டேன் மாணாக்கள் பிழைக்கவென்று
தோதமுடன் யானுரைத்தேன் துய்யபாலா
துப்புரவாய் விதியிருந்தால் கிட்டும்பாரு
ஆதமுட னுபதேசப் பிரணவத்தால்
அப்பனே கறுப்பனவன் வசியமாமே. 83

## பேதன மந்திரம்

வசியமாம் புலஸ்தியனே மச்சகேந்திரா
மானிலத்தில் கோடான கோடிமாண்பர்
நிசிதமுடன் கருவு கொண்டு வுருவினோடும்
நிஷ்களங்க மாகவல்லோ வதீதஞ் செய்வார்
பசிதமாம் பேருடனே கருவு தொட்டுப்
பாலகனே யைங்காயந் தொட்டுமேதான்
சசிதமுடன் பிரணவத்தை மாறல் கொண்டு
தண்மைபெற வுருவதுவும் லட்சம் போமே. 84

போடவே வுருவதுவு மேதென்றாக்கால்
பொங்கமுடன் குருபீஜங் கருவுபீஜம்
ஆடவே பேதனமாம் பீஜமப்பா
அப்பனே வைங்காய பீஜமாகும்
கூடவே வங்கென்று நடுவணையை மாறி
சுந்தரனே சிங்கென்று கும்பித்தேதான்
பாடவே நகாரமதில் சிகாரம் நாட்டு
பாலகனே யகாரமதில் பதிவாய்க் கூட்டே. 85

கூட்டயிலே ரீங்கார மோங்காரமப்பா
குருபரனே சிம்பகத்தில் முனையைப் பற்றி
நாட்டமுடன் நடுவணையி லிருந்துக்கொண்டு
நலமுடனே கும்பகத்தை மேலே நோக்கி
நீட்டமுடன் கபாலமென்ற வயிராவதத்தில்
நினைவுபுத்தி மதிதானும் நெகிழ்ந்திடாமல்
வாட்டமுடன் ரேசகமாம் பூரகத்தில்
வண்மையுடன் போதநிலை கொள்ளுவீரே. 86

கொள்ளுவது புலஸ்தியனே மச்சகேந்திரா
கொற்றவனே தென்பொதிகைக் கரசவேளே
தெள்ளமிர்த மானதொரு தேர்வேந்தேகேள்
தேற்றமுள்ள பிரணவத்தை சிக்கென்றோதி
வள்ளலுயர் பாவாணர் சித்தர் யோகி
மகத்தான ஞானமதி கொண்டநாதா
கள்ளமில்லா யோகரிஷி மன்னர்தாமும்
காவணத்தில் சென்றுதலங் கொண்ட நூலே. 87

நூலான நூலிதுவும் பொய்யேயல்ல
நுட்பமுள்ள சடக்கறிந்த பெருநூலப்பா
காலான காலிதுவுங் கடைக் காண்டமப்பா
காவலனே காவியமாம் அஞ்சுமாகும்
பாலான காவியந்தான் மாந்திரீகம்
பாலகனே சித்தாதி முனிவருக்கும்
மேலான நூலிதுவா மாந்திரீக
மேன்மையுட னசுவனியார் விதித்தநூலே. 88

விரிவான நூலிதுதான் பஞ்சகாவியம்
விட்டகுறை யிருந்தவற்கு கிட்டுமப்பா
சரியான காவியந்தான் சடாட்சரந்தான்
தாரணியில் நாதாக்கள் மறைத்த நூலாம்
கருவான நூலிதுதான் முதற்காவியந்தான்
காசினியில் விட்டகுறை யிருந்தபேற்கு
தெருளான காவியந்தான் கிட்டுமப்பா
பாவிகட்கு கிட்டா தன்றே. 89

## லோக மாந்தருக்கு வசியச் சக்கரம்

அன்றான புலஸ்தியனே மச்சகேந்திரா
அருமையுள்ள கண்மணியே கழறக்கேண்மோ
குன்றான பருவதமே குமரவேளே
குவலயத்தின் கொழுஞ்சுடரே வமுர்தத்தேனே
தென்றிசையாம் பொதிகைமலைச் சமாதி கொண்ட
தேற்றமுள்ள வசுவனியார் தேவர்கோவே
வென்றிடவே லோகபதி மாண்பருக்கு
விருப்பமுட னுபதேச கிதங்கேளே 90

கேளப்பா புலஸ்தியனே கெவனவானே
கீர்த்திகொண்ட குஞ்சரமே தேவபாதா
ஆளப்பா பிரணவமா மந்திரந்தான்
அப்பனே யாறுவரை நேரே கிறி
சூளப்பா வாறுவரை குறுக்கே கிறி
சுந்தரனே யிருபத்தைஞ் சறையுமாச்சு
தேளப்பா கொட்டியதோர் விடுமாச்சு
தெளிவுபெற சூலமது போடுபோடே. 91

போடயிலே பிரணவமா மந்திரந்தான்
பொங்கமுடன் வயனமசி யென்றேமாறு
நீடவே சிவயநம வென்றேமாறு
நிஷ்களங்க மாகவல்லோ பிரணவந்தான்
ஆடவே நமசிவய யென்றுமாறு
அப்பனே குருபீஜந் தானுமாகும்
தேடவே வனசியம வென்றுமாறு
தெளிவு கொண்டு பிரணவத்தை மாட்டுவாரே. 92

மாட்டுவாய் வமநசிய யொன்றுமாறு
மன்னவனே லோகமெல்லா முந்தமக்கு
பூட்டுவாய் மதிகொண்டு வினையம் பூண்டு
புகழ்பெறவே மதியமுர்நுங் கொள்வார் கண்டார்
நீட்டுவா யுறவுகொண்டு யுந்தமக்கு
நிசதமுடன் யெந்நாளு மேவல்கொள்வார்
பாட்டதுவும் பிரளாமல் செய்தபேற்குப்
பாலகனே லோகமது வசியந்தானே. 93

## பாதாள அஞ்சன மந்திரம்

தானான வசியமப்பா யின்னமொன்று
தப்பாது புலஸ்தியனே மச்சகேந்திரா
கோனான யெனதையர் சொன்னபாகங்
கொற்றவனே தவறாது யெல்லாஞ்சித்தி
தேனான பாதாள வஞ்சனந்தான்
தேற்றமுள்ள சாதிக்காய் தண்ணீர்மிட்டான்
மானான தும்பையுடன் கையான்றானு
மகத்தான கருந்தும்பை மூலியாமே. 94

மூலியாஞ் சரக்கெல்லாங் கருக்கியப்பா
மூசியாம லாமணக்கு எண்ணை தன்னில்
சாலியாய்த் தானரைப்பாய் சாமம் பத்து
சலியாமல் கஸ்தூரி பச்சைபூரம்
வேலியாங் கொடிவேலித் தயிலமப்பா
விட்டுமே குழப்பியதை மத்தித்தேதான்
பாலியர் மாந்தருக்கு மையையப்பா
பாதாள வஞ்சனமும் போடுவாயே. 95

போடுவாய் அஞ்சனத்தை திலதங் கொண்டு
பொன்னவனே லலாடமதில் வெண்ணீர்பூண்டு
ஆடுவாய் திருக்கூத்தை மையின்வேக
மப்பனே வுலகமதி லென்னசொல்வார்
நீடுபுகழ் வஞ்சனமாம் நிதியுந்தோன்றும்
நீடாழி திகளெல்லாங் கண்ணிற்றோன்றும்
மாடுகண்டு மிருகமெல்லா மெதுவானாலும்
மகாதேவா கண்ணிற்குத் தோன்றும் பாரே. 96

பாரப்பா மூலமந்திர மேதென்றால்
பாலகனே பிரணவமாம் குருபீஜந்தான்
தேரப்பா பீஜமது யேதென்றாக்கால்
தேர்ப்பாகா மணிமகுட சிங்கபூபா
ஆரப்பா கருவறிந்த வனுமார்வாவா
அப்பனே மலைக்குட்டி வாவாவென்பாய்
கூரப்பா குவளைவிழி மாதங்கிவாவா
குருபரனே காளிகா தேவிவாயே. 97

தேவியே மகாபூசை கொண்டகாளி.
தேசொளிவின் சின்மயமே வாவாவா
ஏவியே அனாத ரட்சகனே வாவா
எம்பரத்தே மேலிருந்து ஆபூதிகொண்டு
பாவிகளைக் கொன்றறுத்த கடியநீலி
பாருலகந் தான்துதிக்கும் பகவதிவாவா
சாவியுடன் சங்கிலியு முடியும்பூண்ட
சரகதமே பகவானே வாவென்றோதே. 98

ஓதயிலே பிரணவமா மந்திரந்தா
னுத்தமனே செய்தவற்கு யெல்லாஞ்சித்தி
போதமுட னம்பாளு ருவுகொண்டு
பொங்கமுட னங்கல்லோ யெதிரேநிற்பாள்
தோதமுட னுந்தமக்கு யெல்லாஞ் சித்தி
தோராம லடுத்தோற்கு யிதிகாசங்கள்
சாதகமாய் தினந்தோறுஞ் செய்தாயானால்
சாதுரிய சாதனைக்கு வுள்ளாவாயே. 99

ஆவாயே பாடலது நூறுமாச்சு
அப்பனே சருக்கமது வொன்பதாச்சு
சாவேது சதாகாலந் தானேகொண்டால்
சகலகலைக் கியானமெல்லா மிதிலேதோயும்
நாவேது சருக்கமது வொன்பதாகும்
நாதாக்கள் தான்மறைத்த பெருங்கூத்தப்பா
பாவான பாடலது தொளாயிரந்தான்
பாலகனே சருக்கமது நவமுமுற்றே. 100

ஒன்பதாவது சருக்கம்
முற்றுப் பெற்றது.

உ

கடவுள் துணை

## பத்தாவது சருக்கம்

### மாந்திரியச் சித்து

### பாம்பு கடிக்கு மந்திரம்

முற்றனா சருக்கமது பத்ததாகு
மூதுலகில் நாதாக்கள் மறைத்தகூத்து
கற்றறிந்த தேவமுனி நாதர்தாமும்
கருவிகர ணாதியந்தங் கண்ணிற்றோணார்
வெற்றிபெற மாந்திரீகச் சித்துதன்னை
வெருட்டியே மாணாக்க ளறியக்கூடா
ஒற்றியே ஞானக்கண் விளக்கத்தாலே
ஓதிவைத்தார் வெகுகோடி சிமிட்டுதானே. 1

தானான சிமிட்டிவித்தை யிதிகாசங்கள்
சதுரான பாம்புகடி மந்திரந்தான்
கோனான யெனதையர சுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்நமக்கு யுரைத்தநீதி
தேனான மனோன்மணியாள் சித்தரூபி
தெளிவுடனே யுபதேசஞ் செய்தகூர்மை
கானான காட்டகத்தில் வளர்ந்த சர்ப்பம்
காசினியில் விஷமதனைக் காணார்தாமே. 2

தாமான மாந்தருக்கு சர்ப்பந்தீண்டி
தகைமையுடன் மாளுகிற மாந்தர்க்கப்பா
சாமானிய மூலிகை யனந்தங்கோடி
சாதகமாய் வனத்துரிஷி யுரைத்தார்கண்டீர்
பூமான்க ளறியார்கள் மூலிப்போக்கு
பொங்கமுடன் யாமறிந்த மட்டுமப்பா
சிமானும் ராசாதி ராசர்தாமும்
சிற்பரனே மெய்ச்சுகின்ற திறமைபாரே. 3

பாரப்பா சற்பமது தீண்டினாக்கால்
பாலகனே விஷமதுவுந் தலைக்கேயேறி
நேரப்பா கபாலவழி தன்னிச்சென்று
நிஷ்களங்க மாகவல்லோ மயக்கம் பூண்டு
ஆரப்பா நுரையதுவு மதிகமாகும்
அப்பனே கண்ணிரண்டும் நீலமாகும்
தேரப்பா யிருப்பதற்கு யிடமில்லாமல்
தேற்றமுடன் மரணகுறி காட்டுந்தானே. 4

தானான காலமது தன்னிலப்பா
தயாபரனே யுச்சாடன மேதென்றாக்கால்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்தவண்ணம்
தேனான மனோன்மணியா ளம்பாள்தானுந்
தேசொளிவின் சின்மயத்தி னருளினாலே
பானான பிரணவங்க ளேதென்றாக்கால்
பாலகனே வட்சரத்தைப் பகருவேனே. 5

பகருவேன் மூலமந்திர மேதென்றாக்கால்
பாலகனே சற்பமது வாதிசேடா
நுகருவேன் மதிமயங்கி விஷநீர்போக
நுட்பமுள்ள பதுமசற்ப ராசபோச
தகருவேன் காயாதி மந்திரந்தான்
தன்மையுள்ள பீஜமது குருபீஜந்தான்
நுகருவேன் வேதாந்த பீஜமப்பா
நுட்பமுள்ள விஷபீஜம் குருவுமாச்சே. 6

ஆச்சப்பா குருபீஜ பிரணவந்தான்
அப்பனே சிகாரமென்ற பீஜமாகும்
மூச்சப்பா திருப்புதற்கு முதலாம்பீஜ
முனையான பீஜமடா விஷாதிபீஜம்
பாச்சலுட சுவாசமதை யுள்ளடக்கிப்
பதுங்கியே சிகாரமதை மேலேயுன்னி
பேச்சுடனே மாறல்கொண்டு தானுமல்லோ
பேசாம லுச்சாடம் லட்சமோதே. 7

ஒதயிலே விஷமதுவுங் கபாலம்விட்டு
ஒகோகோ கண்டமதி விறங்கியேதான்
தோதமுடன் சுவாசமது கீழேநோக்கி
தோற்றமுட னுரையதுவும் தெளிந்துகாட்டும்
நீதமுடன் கிலாரிகொண்டு சப்தநாடிங்காட்டும்
நீணிலத்தில் செந்துமுதல் நுகருமானால்
ஆதமுடன் தேகமதை செந்தமோர்ந்தால்
அப்பனே நிசிதமுடன் மாளுந்தானே. 8

தானாகத் தலைகொண்ட விஷமுமப்பா
தண்மையுடன் சடலம்விட்டு வேர்வைபொங்கி
மானாகத் திமிர்கொண்டு கைகாக்தாமும்
மன்னவனே முறுக்கேறி வசதிநீங்குந்
தேனாக மலமதுவு நீருமாகுந்
தேற்றமுடன் கொள்ளன்னங் கஞ்சிகொள்வீர்
ஊனான தேகமது வுறக்கம்நீங்கி
வுத்தமனே சாதுரியம் யெழும்புவானே. 9

எழும்புவான் மானிடனு மிதவுகூறு
யெழிலான வார்த்தையது பேசலாகும்
தழும்பான தேகமது கற்றானாகும்
தயாபரனே நீயுமொரு சித்தனாவாய்
கழும்பான காயமது கசப்புண்டாகும்
காவலனே நாவலனே கருதக்கேண்மோ
வழும்பான சடலமது சட்டைகக்கும்
வையகத்தில் நெடுங்கால மிருப்பார் பாரே. 10

## செய்யான் பூரான் கடிக்கு பிரணவ மந்திரம்

பாரப்பா யின்னமொரு புதுமைகூர்வேன்
பாவலனே புலஸ்தியனே பண்புள்ளானே
ஆரப்பா சித்தர்முனி ரிஷிகள்தேவர்
அப்பனே நாதாந்த போகர்தாமும்
நேரப்பா பலநூலுஞ் சொன்னாரையா
நேர்மையுடன் பிரணவமா மந்திரத்தை
தூரப்பா கூறாமல் சொன்னாருண்டோ
சுந்தரனே யாமறிந்த மட்டுங்கேளே. 11

கேளப்பா புலஸ்தியனே மச்சகேந்திரா
கெணிதமுட னின்னமொரு வதிதங்கூர்வேன்
மாளப்பா தேகமது மாறுமட்டும்
மன்னனே காயாதி யுள்ளமட்டும்
ஆளப்பா வையகங்க ளுள்ளமட்டும்
அப்பனே மானிடற்கு யெல்லாம் வேண்டும்
பாளப்பா போகாமல் மணிமந்திரந்தான்
பாலகனே அஷ்டமா சித்துதானே. 12

சித்தான சித்துமுனி சொன்னமாற்கம்
சிதாபாசக் களையகன்ற திறவானே
முத்தான முத்ததுவு மேதென்றாக்கால்
மூர்க்கமுள்ள பிரணவத்தின் மந்திரந்தான்
புத்தான விஷமதுவு மிருக்கும்ஸ்தானம்
பூவுலகில் செந்துவரைக் கோடியுண்டு
கத்தனைப்போ லிதிகாச நிலையில்நின்று
கண்மணியே யுச்சாடஞ் சாதிப்பாயே. 13

சாதிப்பிர் பிரணவங்க ளேதென்றாக்கால்
சதாகால யோகநிஷ்டை மதியம்பூண்டு
ஆதித்தன் சந்திரனார் முன்பதாக
அப்பனே சிதாபாசக் களையகன்று
பேதிக்க பிரணவமாம் மாந்திரிகம்
பேசரிய பீசமது யுச்சாடந்தான்
சோதியோ வுருவமது தோற்றம்பூண்டு
சொரூபநிலை பதிதனிலே சோர்ந்துநில்லே. 14

நிற்கையிலே வம்பாளும் நிர்த்தஞ்செய்வாள்
நீநினைத்த தோற்றமெல்லாஞ் சித்திகாண்பாய்
துற்கையென்ற பிடாரிமுதல் காளியாவுந்
துறைகோடி தேவாதி தேவரெல்லாம்
அற்பமென்று நினையாதே யறியபாலா
ஆகாகா யென்னசொல்வேன் பிரணவந்தான்
சொற்பெரிய பிரணவத்தை துதித்தோநாளுஞ்
சுந்தரனே யிந்திரனே குட்டியாடே. 15

ஆடையிலே யுந்தமக்கு யெல்லாஞ்சித்தி
ஐங்கரனே சண்முகனே வரியபாலா
தேடையிலே புலிகரடி யேனம்பாம்பு
தேடியே யுந்தமக்கு யேவல்கொள்ளும்
கூடையிலே சித்தர்முனி ரிஷிகள்நாதர்
கொற்றவனே யுன்மீதில் விசேஷங்கொள்வார்
பாடையிலே சென்னாலு முந்தன்தேகம்
பாலகனே மூச்சடங்கி நிற்பாய்காணே. 16

காணவே கைலாசங் காணியாகும்
கண்மணியே விண்மணியே கழறக்கேண்மோ
பூணவே யிதிகாசக் களையகன்ற
பூபாலா மச்சகேந்திரா புண்ணியவானே
மாணமருங் கல்வியுள்ள நாதரெல்லாம்
மானிலத்தி லுந்தனிடம் வினையங்கொள்வார்
ஆணவங்கள் தானொடுங்கி அன்புள்ளானே
அப்பனே பதிபாச நிலையில்நில்லே. 17

நின்றுமே பூரமது தீண்டினோர்க்கும்
நேரான செய்யானின் கடித்தபேர்க்கும்
குன்றான மலைதனிலே கோடிமூலி
கொற்றவனே சித்தர்முனி கோடிகாண்பார்
வென்றிடவே தென்பொதிகைக் கரசவேளே
வேதாந்தக் கண்மணியே விளக்கங்கூர்வேன்
அன்றுரித்த புரிசடையோ னன்புள்ளானே
அப்பனே யெமக்குரைத்த பீஜங்கேளே. 18

கேளப்பா பீஜமது யேதென்றாக்கால்
கெவனமுள்ள பீஜமது பிரணவந்தான்
ஆளப்பா விஷமென்ற செய்யான்பூரான்
அப்பனே தீண்டியதோர் மானிடற்கு
தாளப்பா தறைனிலே காலடியின்மண்ணை
தயாபரனே கும்பித்து தனிமையாக
பாளப்பா போகாமல் நிர்வாணரூபா
பாலகனே யுச்சாடங் கொள்வீர்தானே. 19

## கள்ளர் மந்திரம்

கொள்ளவே பிரணவங்க ளேதென்றாக்கால்
கொற்றவனே புலஸ்தியனே மச்சகேந்திரா
விள்ளவே யுரைக்குகிறேன் விண்ணின்மாறா
வித்தகனே கண்மணியே கவிராஜேந்திரா
கொள்ளைகொள்ளுங் கள்ளருக்கு மிதுவேபீஜம்
கோவேந்தர் மாளிமுதல் சோரஞ்செய்யும்
தெள்ளுதமிழ்ப் பாவாணர் முத லார்சொன்ன
சொர்னமொழிப் பிரணவமா மிதுவுமாச்சே. 20

ஆச்சப்பா பிரணவங்க ளேதென்றாக்கால்
அப்பனே பிரிதிவியின் பீஜமாகும்
மூச்சுடனே வரைகோடி நெடுங்காலந்தான்
முயலாமல் பூமிதனி லிருந்தபீஜம்
மாச்சலது கொள்ளாத பிரணவந்தான்
மகதேவா புலஸ்தியனே மகிமைமெத்த
பாச்சலெனுங் குருபீஜ லலாடபீஜம்
பகருகிறேன் மாணாக்கள் பிழைக்கத்தானே. 21

தானான பிரணவமா மந்திரங்கேள்
தாக்கான விஷகடியா மண்ணேயாகும்
கோனான வசுவனியார் நூலேபாதம்
கொற்றவனார் கேஷய்மாம் ரோமம்போபோ
தேனான மனோன்மணியாள் தேவிபீடம்
திரண்டெழுந்த மன்தூசி யணுவேபோபோ
மானான மகதேவா புஷ்பபாலா
மண்டலத்தி லுந்தனிட தூசிபோவே. 22

போவென்று லட்சமுரு வோதும்போது
போக்கான கடிவிஷமு மகன்றுபோகும்
ஆவென்றால் நாடசையும் வினையும்நீங்கும்
அப்பனே வாளறாக் கடியும்போகும்
சாவென்றால் விஷமதுவுஞ் சாகும்சாகும்
தப்பாது பிரணவத்தி னுருவுமாற்கம்
கோவென்ற பசுவின்பால் தன்னையப்பா
கொடுத்திடவே விஷமதுவும் நீங்கும்பாரே. 23

## தேள்கடிக்கு மந்திரம்

பாரப்பா புலஸ்தியனே பாவலோய்கேள்
பாருலகில் நாதாக்கள் மறைத்தகூத்து
ஆரப்பா யெனதைய ரசுவனியாந்தேவர்
அப்பனே யெந்தமக்கு யுரைத்தபாகம்
தேரப்பா வுச்சிலிங்க தேள்தானப்பா
தேற்றமுள்ள தென்பொதிகை சாரல்தன்னில்
கூறப்பா மலைவாசம் சதாகாலந்தான்
குருபரனே பனிரெண்டு வாண்டுமட்டே. 24

மட்டான வாசமாம் பனிரண்டாண்டு
வண்மையுடன் யுகமதுவும் கண்டகாலி
திட்டமுடன் பிரணவங்க ளேதென்றால்
தீர்க்கமுள்ள வட்சரமாம் சிவாயமாகும்
சட்டமுடன் சிவாயமாம் பூதமாகும்
சகஸ்திரமாம் லட்சமுரு ஓதுஓது
பட்டயம்போல் திருவெண்ணீர் தானணிந்து
பாலகனே பிரணவத்தை யோதுவீரே. 25

ஓதயிலே விஷமதுவும் தாழேநோக்கும்
உத்தமனே சுவாசமென்ற விஷமும்போகும்
தோதமுட னம்பாளின் பாதம்போற்றி
துப்புரவாய் மௌனநிலை தன்னிற்சென்று
சாதகமாய் சதாகாலம் பிரணவத்தை
சாற்றலுட னுபதேச நைவேத்தியங்கள்
போதமுட னுச்சாடக் கிருத்தியத்தில்
பொங்கமுடன் சாதித்தல் யோகவானே. 26

## எலிகடிக்கு மந்திரம்

சாதிப்பே னின்னமொரு மாற்கங்கேளு
சதாகாலம் யோகநிஷ்டை கொள்ளும்பாலா
ஆதித்தன் சூரியன்போ லவதரித்த
அசுவனியார் தாள்பணிந்து வடிமையாகி
வாதித்த சித்தர்முனி நாதயோகி
வண்மையுள்ள தேவாதி ரிஷிகள்பாதம்
சோதித்தே சென்மனது துயரகன்று
சொற்பெரிய பிரணவத்தை சாற்றுவேனே. 27

சாற்றுவேன் யெலிகடியாம் பதினெட்டிற்கு
சட்டமுடன் பிரணவமாம் மந்திரங்கள்
போற்றலுட னுபதேசம் பூண்டமச்சா
புகலரிய வுச்சாட பீஜமப்பா
தேற்றமுடன் போரிட்டு மாந்தர்பேரில்
தேடியேதான் விழுந்து கடிக்குமானால்
ஆற்றலென்றும் விஷமதுவு மதிகமாகி
அப்பனே பல்லூன்று குருதிகாணே. 28

காணவே குருதியது மிகவுண்டாகி
காவலனே கண்மணியே கண்ணீரோடும்
பூணவே விஷமதுவுஞ் சிரசைப்பற்றி
பொங்கமுடன் மதிமயக்கம் நுரையுண்டாகி
தோணவே கண்ணிரண்டுஞ் சிவந்துகாட்டித்
தோராமல் வேர்வையது மிகவுமாகி
ஆணவங்கள் தானடங்கி சோபமாகி
அதட்டியே பற்கடியு மிகவுண்டாமே. 29

உண்டான குறிகண்ட போதேயப்பா
உத்தமனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தெண்டமுட னசுவனியார் பாதந்தொட்டு
தேற்றமுள்ள வுச்சாடப் பிரணவத்தை
கண்டவுடன் மனந்தனிலே தியானித்தல்லோ
காவலனே பீஜமதை யோதுவோது
தண்டுளவ மாலையணி கிருஷ்ணபூபன்
காவியத்தி னுச்சரித்த பீஜந்தானே. 30

தானான பீஜமது யேதென்றாக்கால்
தண்மையுள்ள பிரணவமாங் கிருஷ்ணபீஜம்
கோனான கோவர்த்தன கிரியாவாசா
கொற்றவனே வெண்ணையுண்ட ராஜபூபா
தேனான வெண்ணைதனை யுரியிலப்பா
தேற்றமுடன் வாரியுண்ட யெலிகள்தன்னை
பானான பகவதியா ளசோதையப்பா
பாலகனே முறையிடவே சாபந்தானே. 31

தானேகேள் வெண்ணையது யெலிகள்கொள்ள
தகைமையுடன் கண்ணபிரான் சினமுமாகி
மானேகேள் யென்தாயே மகிமைகூர்வேன்
மாசற்ற மந்திரத்தை யென்னசொல்வேன்
தேனான வெண்ணையது கொண்டதோஷந்
தெளிவுடனே யெலிகளெல்லா மயக்கமாக
பானான சூரியன்முன் சுருண்டேபோக
பாலித்த யுபதேச பீஜமாமே. 32

ஆமேதான் பீஜமது யேதென்றாக்கால்
அப்பனே சக்கரமாம் பீஜமாகும்
ஓமே மந்திரதூபம் பிரணவந்தான்
வுத்தமனே டாகினியு மலைக்காமடெல்லாம்
நாமேதான் சொன்னபடி மச்சுமாளி
நாயகனே நரசெந்து நசிக்குஞ்சீவா
போமேதான் விஷமதுவும் பொங்கிநீரில்
பொங்கமுட னனேகபுகழ் கொள்ளுவீரே. 33

கொள்ளவே யிப்படியே லட்சமோது
குருவான கிருஷ்ணமணி மந்திரத்தை
எள்ளளவும் பிசகாம லட்சமோது
யெலிகடிகள் பதினெட்டு மெங்கேபோச்சு
தெள்ளமிர்த மானதொரு பீசாட்சரந்தான்
தேற்றமுடன் லட்சமுரு வோதுவோது
கள்ளமில்லா வெலிகடியும் விஷமும் போகும்
காவலனே யசுவனியார் வாக்குதானே, 34

## நண்டு துரக்கா வேன்னும் நட்டுவாக்காலி மந்திரம்

வாக்கான யின்னமொரு மாற்கங்.கூர்வேன்
வலதுபுஜ சிகாமணியே வள்ளலே கேள்
தூக்கான மணிமந்திர மச்சகேந்திரா
துப்புரவாய் நண்டுதுரக் காவேதானும்
ஆக்கமுடன் மானிடரைத் தீண்டுமானால்
அப்பனே பிரணவங்கள் வோதுவோது
காக்கவே முழுங்கி கல்லில் வாசா
கடூரமாம் விஷம்போக்கி தூம்பிராபோ போ. 35

போவென்று வுருவதுவும் லட்சமோது
புகழான விஷமதுவு மகன்றுபோகும்
வாவென்று லட்சமுரு கூறும்போது
வண்மையுள்ள தேன்காலி யெங்கேபோச்சு
தாவென்று பிரணவங்கள் தாக்கும்போது
தயாபரனே மாளிடற்கு விஷமிறங்கும்
கூவென்று சப்தமது கூறும்போது
கொற்றவனே தயாபரனே தீருந்தானே. 36

## பஞ்சாட்சர மந்திரம்

தானான யின்னமொரு மாற்கங்கேளு
தயாபரனே புலஸ்தியனே மச்சகேந்திரா
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
கொற்றவனா ரெந்தமக்கு யுரைத்தநீதி
தேனான மனோன்மணியாள் தாயாரம்பாள்
தேற்றமுட னுச்சரித்த பிரணவந்தான்
மானான மகதேவர் புண்ஷரியத்தால்
மானிடற்கு போதித்த சடாட்சரந்தானே. 37

தானான வாறுவரை நேரேகிறி
தாக்கான வாறுவரை குறுக்கேகிறி
மானான யிருபத்தைந் தறையுமாச்சு
மகத்தான சிதம்பரமாஞ் சக்கரந்தான்
கோனான பஞ்சாட்சரப் பிரணவந்தான்
கொற்றவனே பீஜமது யேதென்றாக்கால்
பானான நமசிவய வென்னலாகும்
பாலகனே மசிநவய வென்னலாமே. 38

என்னவே சிவயநம வென்னலாகும்
யெழிலான வயநமசி யென்னலாகும்
துன்னவே யநமசிவ வென்னலாகும்
துப்புரவாய் வழிபாடு தானறிந்து
மன்னவனே குணபாடு விதியறிந்து
மகதேவா முறைபாடு யாவுங்கற்று
தென்னவனே தேவபக்தி தானறிந்து
தேற்றமுடன் நடுவணையைப் பிடித்துமாறே. 39

மாறப்பா ஓம்ஐயும் கிலியும்
    சௌவும் மகத்தான றீயும் ஸ்ரீயுந்
தேறப்பா சகலலோக ஸ்தம்பனாம
    தேற்றமுட னுருவதுவு மாயிரந்தான்
கூறப்பா பூசைமுகம் நவதானியங்கள்
    குருபரனே பால்பழமுந் தேங்காய்தானும்
தூரப்பா அவலுடனே கடலையப்பா
    துப்புரவாய் பொங்கலுடன் தேங்காய்தானே. 40

தானேகேள் சத்திசிவ முதலதாக
    தயாபரனே தானமைத்து தண்மையாக
மானேகே ளிருபத்தைந் தரையிலப்பா
    மன்னவனே பீஜமென்ற பிரணவத்தை
தேனேகேள் வொவ்வொன்றில் கணிதத்தோடு
    தேற்றமுடன் றானமைத்துச் சூலம்போடு
கோனேகேள் பதிபாச நிலையில்நின்று
    கொற்றவனே வஷ்டசித்து மாடுவீரே. 41

## காளி மந்திரம்

ஆடவே யின்னமொரு மாற்கங்கேளு
    அப்பனே புலஸ்தியனே மச்சகேந்திரா
தேடவே பிடாரிமுதல் கன்னிகா தேவி
    தேற்றமுள்ள சக்கலா தேவியப்பா
பாடவே லோகபதி மாண்பருக்கு
    பாருலகி லனேகவித பிடாரியுண்டு
நாடவே யுண்டான தெய்வமப்பா
    நாயகனே பலகோடி தெய்வந்தானே. 42

தானான தெய்வமப்பா பூவாடைக்காரி
    சாற்றவொண்ணா பிரமலபி கடந்தயோகி
தேனான தெய்வமப்பா கூறொண்ணாது
    தேவபரி யாகாச பிதிர்களாகும்
பானான குலதெய்வ பூங்கன்னியாகும்
    புகழான பாடை கன்னியாகும்
மானான மகதேவி பச்சைமாதேவி
    மகத்தான பூமாது பொற்கொடியுமாமே. 43

கொடியான கொடியல்லோ பிடாரியாகும்
கோமகனே நாமகனே குமரவேளே
தேடியே லோகபதி மாண்பரெல்லாம்
தேற்றமுட னாராய்ந்து காணாமற்றான்
ஓடியே மலைநாடு குகைவனங்கள்
வுத்தமனே நாதரடி தாள்பணிந்து
நாடியே யவர்களுக்குத் தொண்டு செய்து
நாதாந்த நன்னிலையை யறியார்காணே. 44

காணாமற் கெட்டலைந்து வழிதடங்கள்
காவலனே யறியாமல் பதாதியாகி
தோணாமல் பயித்தியமாம் விகாரங் கொண்டு
துப்புரவாய் மாந்திரீக மறியாமற்றான்
வீணாகி வேஷமது மிகவும் பூண்டு
வித்தகனே விட்டகுறை யில்லாமற்றான்
காணாமற் றான்கலங்கி மதியம்பூண்டு
காசினியில் கெட்டவர்கள் கோடிபாரே. 45

பாரப்பா காளிகா தேவிமந்திரம்
பா கிறேன் மாணாக்க ளறியவேண்டி
நேரப்பா நயவசிம மநயவசியமாகும்
நெடிதான வசிமநய ஐயுமாகும்
ஆரப்பா ஐயுடனே கிலியுமாகும்
அப்பனே சவ்வுடனே ஒவ்வுமாகும்
தேரப்பா ஓங்கார பதுமரூபி
தேர்ந்தநவ சொரூபவலி ஓங்கிலியுமாமே. 46

ஆமேதான் கிலியுடனே சிங்கென்றோது
ஆங்கார ரீங்கார ஐயுங்கூட்டி
ஓமேதான் ஸ்ரீகிலிநங் கென்றோது
ஓகோகோ பிரணவமாங் குருபீஜமாமே
நாமேதான் ஸ்ரீயும்ரீயும் ஸ்ரீயும் கிரியுமாகி
நன்மையுடன் தேவிகா ளம்பாளாயி
போமேதான் பொலிவாங்கும் பிடாரிதேவி
பொங்கமுடன் நயினாரும் போற்றுந்தேவே. 47

தேவியென்று பிரணவந்தான் லட்சமோது
 தேவிகா லோத்திரியும் நிர்த்தஞ் செய்வாள்
பாவியா யிருந்தாலு மம்பாள்காளி
 பாலகனே பட்சம்வைத்து பாதுகொள்வாள்
ஆவியுடன் கருவிகர ணாதியந்தம்
 அப்பனே மேதியுடன் பலியுங்கொள்வாள்
பூவிதழாள் மங்கையவள் பிடாரிதானும்
 பொங்கமுடன் முன்னின்று காப்பாள்தானே. 48

தானான பிரணவமாம் லட்சமோது
 தாக்கான பிஜமது தப்பாமற்றான்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
 கொற்றவனார் புண்ணியத்தா லெல்லாஞ்சித்தி
மானான மனோன்மணியா ளிருந்தபீடம்
 மாசற்ற தாமரையின் பீடந்தன்னில்
கோனானைப் போலிருந்து பிரணவத்தைக்
 கொற்றவனே யுச்சரித்து யோதுவீரே. 49

போற்றிடவே காளிகா தேவிதானும்
 பொங்கமுடன் பிடாரிமுதல் கன்னிமார்கள்
ஆற்றவொண்ணா மாளிதனி லிருக்குந்தெய்வம்
 அப்பனே பிரணவத்தால் வசியமாகும்
கூற்றனுக்கு யிடமுமல்லை அப்பா சொன்னேன்
 குவலயத்தில் நீயுமொரு சித்தனாவாய்
வேற்றுமைகள் கொள்ளாத மைந்தாகேண்மோ
 வேதாந்த சரிதைநிலை கொள்ளுவீரே. 50

## லோக வசிய மூலி மந்திரம்

கொள்ளாதே லோகமென்ற வசியங்கேளு
 கோவர்த்தன கிரிதனிலே யிருக்கும்பூபன்
தெள்ளமிர்த மானதொரு கிருஷ்ணபூபன்
 தேற்றமுட னாடியதோர் திருக்கூத்தப்பா
வள்ளலுயர் மாதர்தம்மை மயக்கும் மைதான்
 மகாதேவா விபரமது சாற்றக்கேளும்
மெள்ளவே கருமூலி யேதென்றாக்கால்
 மேலான சித்தர் கண்ட மூலியாச்சே. 51

ஆச்சப்பர் மூலியது விபரங் கேண்மோ
அப்பனே சடாயுவென்ற மூலிதானும்
மூச்சுடனே கண்ணனவ னுண்டமூலி
மூதண்ட கரும்பசளை யென்னலாகும்
பேச்சரியா திருமூலர் பாட்டனப்பா
திரேதா யுகத்திலையா கண்டறிந்த
மாச்சரிய மானதொரு செம்பாளையப்பா
மகாதேவா பொன்னினா வாரைதானே. 52

தானான ஆவாரையொடு சிவந்தவேலி
தாக்கான தும்பலென்ற கொடிமூலமப்பா
தேனான மனோன்மணியாள்-அம்பாள்தானும்
தேற்றமுடன் கொலுவிருந்த வெண்டாமரைதானும்
பானான பரமசிவன் வீற்றிருந்த
பாங்கான கருங்கொன்றை மூலமப்பா
மானான மகதேவர் சூண்டமூலி
மாசற்ற கருங்கஞ்சா மூலமாமே. 53

மூலமாம் வெள்ளகத்தி மூலமப்பா
முதிர்ந்ததொரு கூந்தலது கருந்தாளியாகும்
ஞாலமாஞ் செங்கன்னி குமரியாகும்
நலமான கருவூமத் தன்றன்மூலம்
சாலமது ஆடுகின்ற நத்தைச் சூரி
சதாசிவனார் மாலைகொண்ட சஞ்சிதமுமாகும்
ஆலவிஷ முண்டதொரு மித்துருமூலி
அருமைகொண்ட பாதாள மூலியாமே. 54

ஆமேதான் மூலியப்பா யிவைகளெல்லாம்
அப்பனே சிர் தூக்கி கருக்கியல்லோ
நாமேதான் சொன்னபடி கல்வமிட்டு
நாயகனே பசுநெய்யால் ஐங்கோலத்தால்
வேமேதான் நாற்சாம மறைத்துமேதான்
வித்தகனே சிமிழ்தனிலே பதனங்கொள்ளு
ஆமேதா னசுவனியார் வாக்குப்போலே
அய்யனே லலாடமதில் மையைத்தீட்டே. 55

## பிரணவ பீஜம்

திட்டயிலே மந்திரமாம் பிரணவந்தான்
திக்குசெயங் கொண்டதொரு பீஜமாகும்
நாட்டமுள்ள குருபீஜ மேதென்றாக்கால்
நாயகனே லோகபதி ராஜபீஜம்
தேட்டமுள்ள பீஜமது கருபீஜமாகும்
தெளிவான லாடமென்னும் பீஜமப்பா
கூட்டமதைத் தான்மயக்குங் கொடியபீஜம்
குவலயத்தோர் கொண்டாடும் பீஜம்பாரே. 56

பாரப்பா ஓங்கார பீஜமாகும்
பாலகனே ரீங்காரப் பிரணவந்தான்
ஆரப்பா ஸ்ரீங்கார ஆங்காரமப்பா
அப்பனே யவ்வுடனே சவ்வுமாகும்
தேரப்பா லீங்கடாங்கு யென்னலாகும்
தெளிவான ஓம்பிரணவ பீஜமாகும்
வேரப்பா கிலாரிகொண்ட சவ்வுமாகும்
வேதாந்த மனோன்மணியாள் பீசங்காணே. 57

காணவே மசானமாம் வெண்ணீறோடும்
கருவான வெங்கோலக் கருவினோடும்
பூணவே ருத்திராட்க மாலைபூண்டு
புகழான புலித்தோலி னாசனந்தான்
வேணபடி சூலமுட னாராட்சியப்பா
வித்தகனே மண்டலமுஞ் சேமந்தானும்
மாணவே உருவோடும் திலதங் கொண்டால்
மானிலத்தில் எல்லவரும் வசியங்காணே. 58

காணப்பா புலஸ்தியனே கருவுள்ளானே
காவலனே நாவலனே கண்ணியவானே
தோணப்பா இவ்வேதை கருவுமார்க்கம்
தோராமல் நீமுடித்தால் எல்லாஞ்சித்தி
பூணப்பா மறைவுமைதான் இதற்குள்ளாகும்
புகழ்பெறவே லோகமெல்லாம் இதிலடக்கம்
வீணப்பா மற்றதெல்லாம் பொய்ந்தேபோகும்
வித்தியாசம் இதிலொன்றும் பொய்யாகாதே. 59

ஆகாது புலஸ்தியனே அய்யர்வாக்கு
அப்பனே தென்பொதிகைக் கமலபாதா
போகாது என்தேவர் சொன்னநீதி
பொய்க்காது உலகபதி மாண்பருக்கு
சாகாது சடலமப்பா காயம் மெய்யாம்
சட்டமுடன் நா தாக்கள் கூறவில்லை
வேகாது மற்றொருத்தர் சொன்னநீதி
வித்தகனே பொய்க்காது மெய்யுமாமே. 60

## அகஸ்தியர் புலஸ்தியருக்கு உபதேச புத்தி கூறல்

மெய்யான நூலப்பா இந்நூலப்பா
வேதாந்தக் கண்மணியே விளக்கமெத்த
துய்யநல்ல தேன்போன்ற பாலுமாகும்
துப்புரவாய் எனதையர் சொன்னநீதி
பொய்யான பாதைவழி இதிலே கூறோம்
பொங்கமுடன் அசுவனியார் ஆணைகண்டீர்
வையகங்கள் தான்மதிக்கு மகிமைவானே
மகாதேவா கர்மமெல்லாம் அகலுந்தானே. 61

தானாகக் கேசரம்போல் சொல்லலாகும்
தண்மையுள்ள பெருமந்திரம் இதுதானாகும்
மானாக பேய்பில்லி சூனியங்கள்
மகத்தான வைப்புமுதல் இதிலேநீங்கும்
வேனாக கைண்ட முறைதானப்பா
வித்தகனே ஒருவருக்கும் பகரவேண்டாம்
தேனாக இந்நூலைப் பதனம்பண்ணு
தேசொளிவின் சின்மயமுங் காண்பாய்தானே. 62

தானேதான் சந்திரனை அடக்கியப்பா
சாதகமாஞ் சூரியனை எதிர்முன்னாக
பானேதான் ரவிதனிலே நின்றுகொண்டு
பாலகனே அஷ்டமா சித்தும்ஆடு
மானேகேள் பொய்களவு கபடுதந்திர
மன்னவனே சூதுமுதல் அகலத்தள்ளு
தேனேகேள் சன்மார்கப் பதியில்நின்று
தேற்றமுடன் உபவாசங் கொள்ளல் நன்றே. 63

## நூல் உபதேச மந்திரம்

நன்றான காவலனே நாவலோய் கேள்
    நலம்பெறவே கருத்திலுன்னி நன்மையாகக்
குன்றான குணக்குன்றே தெய்வமே கேள்
    கொற்றவனே வைந்தெழுத்தில் ஐந்துபீசம்
தென்றிசையாய் உந்தமக்கு இன்னங்கூறுவேன்
    தேசொளிவின் கடாட்சமது சுகிர்தத்தாலே
வென்றிடவே யக்கரத்திற் சமாதி கூர்வேன்
    வேதாந்த வெட்டவெளி காணுவாயே. 64

காணுவாய் உந்தமக்கு இந்திரபீடங்
    கைலாசம் உந்தமக்குக் கண்ணிற்றோன்றும்
பூணுவாய் அந்தரத்தின் அளவுபார்த்துப்
    பொங்கமுடன் திக்குதிசை யாவுங்கண்டு
ஆணுவத்தை உள்ளடக்கி அப்பாகேண்மோ
    ஐங்கரனே மணியோடு பூசை கொண்டு
வேணவுப சாரமுடன் வினையங் கொண்டு
    வேதாந்த மணியோடு பூசை கொள்ளே. 65

கொள்ளவே உந்தமக்கு எல்லாஞ்சித்தி
    கோபாலா தேவரிஷி புலஸ்தியாகேள்
தெள்ளமிர்த மானதொரு சிங்கவேளே
    தேசொளிவின் சின்மயமே தீரவானே
வள்ளலுயர் பாவாணர் சித்தர்தாமும்
    வையகத்தில் கொண்டாடு மகமேரேகேள்
கள்ளமில்லாக் காவியந்தான் பெருநூலப்பா
    கண்மணியே இந்நூலின் விளக்கந்தானே. 66

### மந்திரம்

தானான புலஸ்தியனே தம்பிரானே
    தண்மையுள்ள கண்மணியே சாற்றக்கேண்மோ
கோனான எனதையர் அசுவனியாந்தேவர்
    கொற்றவனார் மானுடர்க்கு உபதேசித்த
தேனான மந்திரமாம் சாலப் போக்கு
    தேற்றமுடன் உலகுபதி மாந்திரீகர்
பானான உபதேசம் ஏதென்றாக்கால்
    பாலகனே உலகமெல்லாம் என்வசியங்காணே. 67

காணவே சகலவித பூதமெல்லாம்
கருவான என் கண்ணில் கண்டேனென்பார்
பூணவே சகலவித கணங்களெல்லாம்
புகழாக எந்தமக்கு வசமேயென்பார்
தோணவே பலவித தெய்வமெல்லாம்
நோராமல் கண்ணிலே கண்டேனென்பார்
ஆணவங்கள் கொண்டதொரு பில்லிவஞ்சம்
அப்பனே கண்டேனென்று புகட்டுவாரே. 68

புகட்டுவார் அட்சரத்தின் மாறலெல்லாம்
புகழுடனே குறிகண்டு சொல்வேனென்பான்
பகட்டுடனே இணங்காத தெய்வமெல்லாம்
பாலகனே நொடிக்குள்ளே பகட்டி வைப்பேன்
தகட்டுடனே வட்சரங்கள் கோடிசங்கம்
தட்டாமல் மாறிவைப்பேன் சடக்கறுப்பேன்
சகட்டுடனே மந்திரத்தின் போக்கைக் காணார்
சண்டாளப் பேயன்றன் வசமுமாமே. 69

வசமாச்சு யென்றுரைப்பார் வையகத்தில்
வளமுடனே பேயதனை யோட்டி வைப்பேன்
நிசமுடனே தூளிதமாம் திருவெண்ணீற்றை
நிட்சயமாய் மந்திரிப்பார் பிர்மிக்கத்தான்
தசமுடனே நன்மைகண்டு சோருவார் போல்
சுந்தரனே அபிநயிப்பர் சோதிபாதம்
கசமதுவாஞ் சண்டாளப் பேய்தானப்பா
காலிலே தான்விழுந்து கதறலாச்சே. 70

ஆச்சப்பா வெண்ணீறுஞ் சாத்துமைகள்
அப்பனே குங்குமமு மணிந்துக் கொண்டு
மூச்சப்பா நெடுங்காலஞ் சமாதி கொண்டேன்
மூதுலகைக் கட்டறுத்தேன் முதிர்ந்தேனப்பா
பேச்சரியா பிரமமுனி சிஷனென்பான்
பேருலகில் மாண்பரெல்லாம் நடுங்குவார்கள்
பாச்சலுடன் வைரவற்குப் பொய்யாதென்பார்
பாலகனே யாடிவந்தா லென்னைப் போற்றே. 71

போற்றுகையி லுந்தமக்கு யுபதேசங்கள்
பொங்கமுடன் யான்கொடுப்பேன்தவறொண்ணாது
சாற்றுதலாம் நினைத்போதே யுந்தமக்கு
சகலவித கலைக்கியான மெல்லாந்தோணும்
ஆற்றுதலாம் கண்டறிந்து விளக்கமுற்று
அப்பனே யெந்தனைப்போல் நீயுமாவாய்
தூற்றுதலைக் கட்டறுத்து துய்யபாலா
தூய்மையுடன் மௌனநிலை கொள்ளென்பாரே. 72

கொள்ளென்று மௌனநிலை தன்னிற்சென்று
கொற்றவனே தொல்லையற்று ஞானந்தன்னில்
எள்ளளவும் பிசகாமல் சன்மார்க்கத்தி
லெழிலாகத் தானிருந்தா லெல்லாஞ்சித்தி
உள்ளபடி யாமுரைத்தோ முதாரதீரா
உத்தமனே பதிகண்டு மௌனங்கண்டு
கள்ளமில்லாக் காவியந்தா னைந்தாம்பாகம்
காவலனே சொக்காதே யென்பான்றானே. 73

என்பானே யென்றுரைப்பான் யிந்திரசாலம்
யெழிலாகத் தானெடுத்து மிகவுங்கூர்வான்
அன்புடனே லோகத்தின் மாய்கைதன்னை
அப்பனே கட்டறுத்து மதியம்பூண்டு
தென்புடனே லட்சணத்தின் ரூபங்கண்டு
தேற்றமுடன் மாய்கைதன்னைக் கட்டறுத்து
நண்புடனே லோகபதி மாண்பருக்கு
நயமுடனே புகட்டிடுவன் நண்புள்ளோர்க்கே. 74

நண்பான யின்னமொரு மார்க்கங்கேளு
நலமுடனே நாதாக்கள் மறைத்தகூத்து
தண்பான மந்திரத்தி னுளவுமார்க்கந்
தப்பாது பார்த்தவற்கு முறைமைகேண்மோ
கண்பான வித்தைதன்னைக் கண்டேனப்பா
கனமுடனே தொடுகுறிபோல் செய்வானப்பா
பண்பாக யெந்தவிதஞ் செய்தாலுந்தான்
பாலகனே தொட்டதெல்லாஞ் சித்தியாமே. 75

சித்தியாங் கோடிமுறை தெரிந்திட்டாலும்
சிதாபாசக் கட்டளையை யறிந்திட்டாலும்
சத்தியத்தின் முறைப்படியே வெளிகாணார்கள்
தகைமையுடன் மனம்விட்டு யாதுங்கூறார்
முத்திபெறும் பாதையிலே முயன்றுநிற்பார்
மூதுலகைக் கட்டறுத்து முயன்றுநிற்பார்
அத்திசையும் போற்றியல்லோ வினிமையாக
யேகாந்த வழிதனிலே சார்வார்பாரே. 76

பாரப்பா பொய்கூறார் பகடுகூறார்
பாலகனே சத்தியத்தை கைவிடார்கள்
ஆரப்பா சற்குணமாம் பெரியோர்தம்மை
அடிதொழுது வணங்கிநிற்பார் பாதந்தொட்டு
காரப்பா மனோன்மணியாள் பாதந்தொட்டுக்
கண்மணியே சதாகாலந் தொழுதுநிற்பார்
சேரப்பா மாந்திரீகப் பதியிலப்பா
சிற்பரனே நிற்பதுவு முண்மையாமே. 77

சீடனுக்கு உண்மை மந்திர உபதேசம்

உண்மையாம் யின்னமொரு யுபதேசங்கேள்
உத்தமனே புலஸ்தியனே வுதாரதீரா
வண்மையா முபதேச மேதென்றாக்கால்
மாசற்ற புத்தியுடன் சார்புவேண்டும்
தண்மையா முபதேசப் பரிசம்வேண்டுந்
தகைமையுடன் சதாகாலம் நிஷ்டைவேண்டும்
கண்மையாம் யோகமுடன் சமாதிவேண்டுங்
காவலனே நிஷ்டைமுதல் யோகந்தானே, 78

தானான பூசை மடதடமும் வேண்டுந்
தாக்கான பன்னகசாலை வேண்டும்
மானான மடந்தனிலே மறைப்புவீடு
மகத்தான வந்தப்புர மடாதி வேண்டும்
தேனான மாளிகைக்கு வடிசல்கொள்ள
தேற்றமுள்ள சிவயோகி யடிமைவேண்டும்
கானான வடிசலுக்கு கைபாகந்தான்
கைகண்ட போசனமாம் விதிபாடாமே. 79

பாடான பாடறிந்த சுயம்பாகியப்பா
பாலகனே சகலகலை யறிந்தசித்தாய்
கோடான கோடிமுறை யறிந்தபாகங்
கொற்றவனார் முறைபாடாய் வழிபாடாக
தேடான தேட்டமுதல் கண்டயோகி
தெளிவுடனே தாமறிந்த யோகவானாய்
வீடான பதிதனிலே யிருக்கவேண்டும்
வித்தகனே யோகிக்கு வேண்டுந்தானே. 80

வேண்டுமே படித்தளமா மின்னங்கூர்வேன்
வேதாந்தக் கண்மணியே விளக்கமாக
தாண்டவமா மடந்தனிலே அபானம் வேண்டுந்
தயாபரனே காவலுட னாள்காரன்தான்
ஆண்டகையார் யோகிக்கு மஞ்ச வேண்டும்
அப்பனே பல்லக்குத் தானும் வேண்டுந்
தூண்டகமாங் காவலுடன் பணிதிவேண்டும்
துப்புரவாய் விதிபாடு மின்னங்கேளே. 81

கேளப்பா கிழக்குமுகஞ் சமாதிவேண்டும்
கிருபையுள்ள சமாதிமுகம் அறையாம்வீடு
தாளப்பா வறைதனிலே பள்ளமப்பா
தயாபரனே கட்டட மாமறைதானப்பா
ஆளப்பா வாள்மட்டம் வீடாய் வேண்டும்
அப்பனே கதவுடனே தானும் வேண்டும்
பாளப்பா போகாமல் மச்சிப் போலாம்
பாங்குடனே சமைந்திருக்க வேண்டுமாமே. 82

வேண்டுமாஞ் சமாதிக்கு யிடமும் வேண்டும்
வெகுளாதே நெடுநாளாய் சமாதி வேண்டும்
தாண்டவம்போல் ஐயாண்டு யோகம் வேண்டுந்
தயாபரனே போசனத்தை நீக்க வேண்டும்
தூண்டு கோலாய் சீடவை னிருக்க வேண்டும்
துப்புரவாய் காற்றதுவுங் கொள்ளலாகா
பாண்டுவம்போல் தேகமதை மூடவேண்டும்
பாலகனே யிருவேளை பாலுண்மீரே. 83

உண்பீரே பாலதனை யிரண்டுவேளை
வுத்தமனே தானருந்தல் மிகவாய் வேண்டும்
நண்பான வாய்மொழிகள் கூறலாகா
நாயகனே தவநிலைபோ லிருக்கவேண்டும்
கண்பான கசடகற்றிப் பூநீரப்பா
காவலனே யிருபோது முண்ண வேண்டும்
பண்பான சட்டையது தள்ளுமப்பா
பாலகனே காயாதிக் காளாவாயே. 84

ஆவாயே காயாதி தேகமப்பா
அப்பனே உப்பேது துப்புமில்லை
சாவேது யுந்தமக்கு வரைகோடியப்பா
சட்டமுட நெடுங்கால மிருக்கலாம்
பூவான வழலையது வுண்டபோது
புகழான வாசியது கீழ்நோக்காகும்
நாவான சத்துமது கபமுமில்லை
நாதாக்கள் போலே யல்லோ நீயாவாயே. 85

நீயான தேகமது கோபங்கூடா
நிஷ்டூர வார்த்தையது கூறலாகா
மாயான நினைவதுவுங் கொள்ளலாகா
மகத்தான தேகமது யோகம் வேண்டும்
தாயான மனோன்மணியை நண்ணல் வேண்டும்
தகைமையுட னிஷ்டைதனி லிருக்க வேண்டும்
பாயான சுவாசமதை மாற்றல் வேண்டும்
பான்மையுடன் ரேசகத்தை மாறல் கொள்ளே. 86

கொள்ளவே பூதமதை யொடுக்க வேண்டும்
கொற்றவனே யொடுக்கியல்லோ யோகம் பூண்டு
விள்ளவே கபாலமது மூச்சையப்பா
விடாமலே் கும்பகத்தில் நிறுத்தவேண்டும்
தெள்ளமிர்த மானதொரு ஞானப்பாலை
தெகிட்டாம லண்ணத்தால் நண்ணல் வேண்டும்
கள்ளமில்லாக் கவனமதை செல்லாகா
கண்மணியே யோகத்தி னுறுதிகாணே. 87

காணவே யுறுதியுடன் பாக்கியங்கள்
கருவான நல்லொழுக்கம் நண்ணலொப்பாய்
மாணவே ஆணவத்தை யொடுக்க வேண்டும்
மகாதேவா பொய்களவு நீக்க வேண்டும்
தோணவே யிறுமாப்பை நீக்கல் வேண்டும்
தோறாத கபடுதன்னை மாற்றல் வேண்டும்
பாணமாங் கோபமதை யடக்கவேண்டும்
பாலகனே நல்லொழுக்கம் பதியில் நில்லே. 88

நில்லென்றால் வாசியென்னுங் குதிரைதன்னை
நினைவுடனே நிறுத்துதற்கு முயலவேண்டும்
சொல்லென்ற மொழியதனில் உறுதிவேண்டும்
சுந்தரனே யிந்திரனே சூட்சங் காண்பீர்
பல்லறிவால் மனம்வாக்கு அறிதல்வேண்டும்
பொல்லாத் பவக்கடலை நீக்கல் வேண்டும்
நல்லறிவால் கியானமது கொள்ளல் வேண்டும்
நாதாந்த வெட்டவெளி நண்ணலொப்பே. 89

ஒப்பான பாதையது ஞானப்பாதை
ஓகோகோ பாதையப்பா யாருங் காணார்
தப்பான பாதைவழி செல்லலாகா
தயாபரனே மோனமென்ற மௌனப்பாதை
அப்பான பஞ்சமென்ற பாவிதன்னில்
அய்யனே கண்டறிந்தா லெல்லாஞ்சித்தி
செப்பாதே யொருவருக்குங் கூறவேண்டாம்
செங்கமலக் கண்ணானே செப்பிடாதே. 90

செப்பினால் யாருக்குச் செப்ப வேண்டும்
செயலான நன்னடக்கை சீஷனுக்கு
தப்பிதங்கள் நேரான சன்மார்க்கருக்கு
சட்டமுட னுபதேசங் கொண்டால்நன்று
ஒப்பான புண்ணியத்தோர் சிவயோகியப்பா
உத்தமர்கள் கண்டறிந்தா லுனக்குமோட்சம்
அப்பாதை தானறிந்து நடந்தாலப்பா
அஷ்டசித்தி தன்றனக்குள் ளாளாவாயே. 91

ஆளான பதினெண்பேர் சித்தர்க்கப்பா
அப்பனே காலாங்கி சரணஞ் சொன்னேன்
தாளான போகருக்குச் சரணஞ் சொன்னேன்
தகைமையுள்ள கமலருக்குஞ் சரணஞ் சொன்னேன்
மாளான சனகருக்குச் சரணஞ் சொன்னேன்
மகத்தான வசுவனிக்குச் சரணஞ் சொன்னேன்
ஆளான சட்டைமுனி சரணஞ் சொன்னேன்
அப்பனே யூகி முனி சரணந்தானே. 92

தானான மச்சமுனி சரணமப்பா
தயாபரனே பிரமமுனி சரணமப்பா
கோனான நந்திக்குச் சரணமப்பா
கொற்றவனே வரரிஷி சரணமப்பா
தேனான தன்வந்திரி சரணமப்பா
தேற்றமுள்ள இராமருக்குச் சரணமப்பா
பானான பராசருக்குச் சரணமப்பா
பாலகனே வியாசருக்கு சரணமம்பா. 93

பாரப்பா கும்பமுனி சரணமப்பா
பாடுகிறேன் கொங்கணர்க்குச் சரணமப்பா
நேரப்பா சிவவாக்கியர் சரணமப்பா
நேர்மையுடன் புசுண்டருக்குச் சரணஞ் சொன்னேன்
தீரப்பா வியாக்கிரமற்குச் சரணமப்பா
சிற்பரனே சுந்தரற்குச் சரணமப்பா
ஆரப்பா ரோமரிஷி சரணமப்பா
அப்பனே தட்சணாயன் சரணங்காணே. 94

காணவே திருமூலர் சரணஞ் சொன்னேன்
கருவான சோதிரிஷிச் சரணஞ் சொன்னேன்
பூணவே சித்தரெல்லா மென்மீதிற்றான்
பொங்கமுடன் சினமதுவுங் கொள்ளாமற்றான்
மாணவே சதாகால மிந்த நூலை
மன்னவனே சமாதிதனில் வைத்துக் கொண்டு
நீணவே படிமுகமா மிருந்துகொண்டு
நீனிலத்தில் சித்தனா யிருப்பீர்தாமே. 95

இருக்கவே யின்னூலைப் பதனம்பண்ணு
    யெழிலான குகைதனிலே வைத்துப் பூட்டு
செருக்கதுவுங் கொள்ளாதே யூகமாகத்
    தேசமதில் நீயுமொரு சித்தனாக
பெருக்கவே ச்மாதிமுகம் பூண்டுமல்லோ
    பேருலகி லின்னூலை பெருநூலாக
விருப்பமுட னுபதேச வுண்மையோடும்
    வீராக யெந்நேரந் தொழுது போற்றே. 96

போற்றியே யிந்நூல்தான் குருநூலாகும்
    பொங்கமுடன் சதாகாலம் போற்று போற்று
சாற்றலுடன் யின்நூல்தான் யெவர்க்குக் கிட்டும்
    சட்டமுடன் சிவயோகி நாதர்கிட்டும்
ஆற்றலடி போகாது அப்பா சொன்னேன்
    அண்ணலா வாக்கதுவும் பொய்யாதப்பா
மாற்றமது கொள்ளாது யின்நூலப்பா
    மன்னவனே வஷ்டசித்து மாடலாமே. 97

ஆடலா மிந்நூல்தா னாயிரந்தான்
    அப்பனே மாந்திரிக காவியந்தான்
பாடலாம் சருக்கமது பத்துமாகும்
    பாலகனே பாட்டது நூறுமாகும்
கூடவே பத்தாவது சருக்கமப்பா
    குருவான வசுவனியார் சொன்னநீதி
தேடவே போகாது வையகத்தில்
    தேற்றமுடன் பாடிவைத்தேன் மாந்திரீகந்தானே. 98

தானான காவியந்தா னைந்துமாகும்
    தாக்கான காவியமுதற் காவியமாம்
கோனான யெனதைய ரசுவனியாந்தேவர்
    கொற்றவனே யெந்தமக்கு யுரைத்தநீதி
மானான காவியமா மகுத்துவந்தான்
    மானிலத்தி லாரறிவார் யோகி காண்பான்
தேனான காவியத்தை வெளிவிடாதே
    தேற்றமுட னின்நூலைப் பதனம் பண்ணே. 99

பண்ணவே பஞ்சகா வியந்தானாகும்
பாலகனே காவியந்தா னைந்துக்குள்ளே
நண்ணவே லோகாதி வதிசயங்கள்
நாடோறும் சிவயோகி ஞானிமார்கள்
திண்ணமுட னறிவதற்கு யிந்தநூலைத்
திரட்டி வைத்தேன் கலியுக மாமானிடற்கு
வண்ணமுள்ள காவியமா மாந்திரிகந்தான்
மகத்தான வாயிரமும் முற்றுமாமே. 100

மாக மகத்துவம் பொருந்திய
அகத்தியமா முனிவர் திருவாய் மலர்ந்தருளிய
பஞ்ச காவியங்களில் முதற்காவியமாகிய

**மாந்திரீக காவியம்**

முற்றுப் பெற்றது.

தாமரை
நூலகம்